# இறை நியதி

## (தக்தீரே இலாஹி)

உருது மூலம்

ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது (ரலி)

இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ்

தமிழாக்கம்

மவ்லவி O.M. முஸ்ஸம்மில் அஹ்மத் H.A


வெளியிடுவோர்

தமிழக புத்தக வெளியீட்டுக் குழு (வடமண்டலம்)

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்**

11, முதல் பிரதான சாலை, யு.இ. காலனி,

கோடம்பாக்கம், சென்னை- 600 024.



Copyrights Reserved


**Erai Niyathi**

Tamil version of

**'Thaqdheer-e-Ilaahi' (Urdu)**

By Hadhrath Mirza Basheerudeen Mahmood Ahmad
(Second Khalifa of the Promised Massiah)

Translated By
**Moulavi O.M. Muzzammil Ahmad H.A.**


**First Edition January 2012**

**ISBN : 978 81 7912 341 6**

Published by :

**Tamilnadu Book Publishing Committee (North Zone)**
**AHMADIYYA MUSLIM JAMA'ATH**
No. 11, First Main Road,
United India Colony, Kodambakkam,
Chennai - 600 024. Tamilnadu.
**Website: www.alislam.org\tamil**
**E-mail: amjchennai@yahoo.in**

For:
**NAZAARAT NASHR-O-ISHAAT**
Sadr Anjuman Ahmadiyya, Qadian

بسم الله الرحمن الرحيم

# முன்னுரை

தலைவிதி என்றும், தலையெழுத்து என்றும் பொதுவாக பாமர மக்களால் தவறாகப் பேசப்படுகின்றதைத்தான் இஸ்லாம் 'தக்தீர்' என்ற சொல்லால் குறிப்பிடுகின்றது. தக்தீரே இலாஹி என்றால் இறைவன் வகுத்த நியதி என்று பொருள். ஒருவர் நன்மை, தீமையின் நியதியை அறிந்து அதன்மீது நம்பிக்கை கொள்ளாதவரை உண்மையான இறை நம்பிக்கை கொண்டவராக மாட்டார் என ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

இந்த இறை நியதியை சரியாக புரியாததன் காரணமாகத்தான் இந்துக்களிடம் மறுபிறவிக் கொள்கையும், கிறித்தவர்களிடம் பாவமன்னிப்புக்கு இயேசு பலியானார் என்ற கொள்கையும், ஐரோப்பிய தத்துவவாதிகளிடம் நாத்திகக் கொள்கையும் உருவானது.

இறைநியதி பற்றிய இஸ்லாத்தின் அறிவுப்பூர்வமான போதனைகளை இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது (ரலி)அவர்கள் 1919ஆம் ஆண்டு காதியானில் நடைபெற்ற ஆண்டு மாநாட்டில் உரையாற்றும்போது மிக அருமையாக விளக்கிக் கூறினார்கள்.

தற்போது அதனை நூல் வடிவில் வெளியிட்டுள்ளோம். இதனைப் படிப்பவர்களுக்கு தலைவிதி பற்றிய சந்தேகங்கள் நீங்குவது மட்டுமல்லாமல் அதன் உண்மை நிலையும் புரியும் என்பதில் ஐயமில்லை. இதனை கவனமாகப் படித்து பயனடையுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தமிழ் கூறும் நல்லுலகம் இந்நூலின் வாயிலாக பயன் பெறும் வகையில், இந்நூலை உருது மொழியிலிருந்து மவ்லவி O.M. முஸ்ஸம்மில் அஹ்மது அவர்கள் தமிழாக்கம் செய்து அதனை தமிழக புத்தக சரிபார்ப்புக் குழுவினால் சரிபார்க்கப்பட்டு வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறோம்.

**- வெளியீட்டாளர்**

# பொருளடக்கம்


| எண் பொருள் | பக்கம் |
|---|---|
| 1. தக்தீரை (இறை நியதியை) நம்பாதவர் நம்பிக்கை யாளராகமாட்டார் | 11 |
| 2. இறை பண்புகள் வெளிப்படுவதற்குப் பெயர்தான் தக்தீர் (இறை நியதி) | 13 |
| 3. தக்தீர் பற்றி வாக்குவாதம் செய்வது கூடுமா? | 15 |
| 4. மறுபிரவிக் கொள்கையும் பாவ மீட்புக் கொள்கையும் 'விதி' பற்றி சரியாக புரியாததன் விளைவே | 18 |
| 5. விதி பற்றி முஸ்லிம்களின் தவறான கொள்கைக்கு அடிப்படை | 23 |
| 6. எல்லா செயலையும் இறைவனே செய்ய வைக்கிறானெ என்ற சிந்தனைக்கு மறுப்பு | 26 |
| 7. தலைவிதி பற்றி மக்கள் தவறாகப் புரிந்த இரண்டாவது வசனமும் அதன் உண்மையான விளக்கமும் | 28 |
| 8. தலைவிதி பற்றி மக்கள் தவறாகப் புரிந்த மூன்றாவது வசனமும் அதன் உண்மையான விளக்கமும் | 30 |
| 9. தலைவிதி பற்றி மக்கள் தவறாகப் புரிந்த நான்காவது வசனமும் அதன் உண்மையான விளக்கமும் | 33 |
| 10. தலைவிதி பற்றி மக்கள் தவறாகப் புரிந்த ஐந்தாவது வசனமும் அதன் உண்மையான விளக்கமும் | 34 |
| 11. தலைவிதி பற்றி மக்கள் தவறாகப் புரிந்த ஆறாவது வசனமும் அதன் உண்மையான விளக்கமும் | 37 |
| 12. இறைஞானத்தையும் விதியையும் ஒன்றோடொன்று கலத்தல் | 40 |
| 13. தீமை செய்யும் மனிதனை இறைவன் ஏன் தடுப்பதில்லை? | 42 |
| 14. சூஃபி (இறை ஞானி) களின் கூற்று | 44 |
| 15. சூஃபி (இறை ஞானி) களின் கூற்றுக்கு பதில் | 48 |
| 16. விதி பற்றிய விவகாரத்தில் தவறான பெயர்கள் | 51 |
| 17. விதி பற்றி திருக்குர்ஆனிலிருந்து நிரூபணமாகும் 4 பெயர்கள் | 53 |
| 18. ஒவ்வொரு செயலும் இறைவன் செய்ய வைக்கிறானா? | 57 |
| 19. விதி பற்றி தத்பீர் வாதிகளின் தவறான கருத்து | 58 |
| 20. தக்தீரே ஆம் தப்யீ (பொதுவான இயற்கை விதி) | 60 |
| 21. தக்தீரே காஸ் தப்யீ (சிறப்பான இயற்கை விதி) | 61 |
| 22. தக்தீரே ஆம் ஷர்யீ (சாதாரண மார்க்க விதி) | 62 |
| 23. தக்தீரே காஸ் ஷர்யீ (சிறப்பான விதி)யின் இரண்டு வகை | 62 |

24. மக்காவைப் பற்றி தக்தீரே காஸ் (சிறப்பு விதி) 65
25. காதியான் முன்னேற்றமடையும் என்ற தக்தீரே காஸ் (சிறப்பு விதி) 66
26. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்காக வெளிப்பட்ட தக்தீரே காஸ் (சிறப்பு விதி) 68
27. ஹஸ்ரத் ஷுஅய்ப் நபி (அலை) அவர்களுக்காக வெளிப்பட்ட சிறப்பு விதி 72
28. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்காக அஹ்ஸாப் போரில் வெளிப்பட்ட சிறப்பு விதி 73
29. பிளேக் நோய் பரவியபோது அஹ்மதிகள் காப்பாற்றப்பட்டது காரணியின்றி வெளியான சிறப்பு விதி 76
30. ஆன்மீகக் காட்சியில் கண்ட மைத்துளி வெளிப்படையிலும் காணப்பட்டது காரணிகளின்றி வெளியான சிறப்பு விதி 77
31. ஸவ்ர் குகையில் மறைந்திருந்த ஹஸ்ரத் நபி (ஸல்), அபூபக்கர் (ரலி) ஆகியோரை காஃபிர்கள் குனிந்து பார்க்காமற் போனதும் சிறப்பு விதியே 79
32. ஹஸ்ரத் உமர் (ரலி) கூறிய சொல் பல மைல் தொலைவில் இருந்தவருக்குக் கேட்ட தக்தீர் 83
33. சில நேரத்தில் குறிப்பிட்ட உலலுறுப்பின் மீது தக்தீர் வெளிப்படுகிறது என்பதற்கான சம்பவம் 84
34. யூதர்கள் தம் வாயினாலேயே தண்டனைக்குரிய தக்தீரை (விதியை)ப் பெற்ற சம்பவம் 86
35. இறை நியதியின் படி ஒன்று நடந்து கொண்டிருக்கும் போது காரணிகளை பயன் படுத்தலாமா ? கூடாதா? 87
36. சில நேரங்களில் காரணிகளை உபயோகம் செய்ய வைக்கப்படுவது ஏன் ? 90
37. விதி மாறுமா ? 94
38. சாதாரண விதி மற்றொரு சாதாரண இயற்கை விதியால் நீங்குதல் 94
39. சாதாரண இயற்கை விதி சிறப்பான இயற்கை விதியால் நீங்குதல் 97
40. சிறப்பான இயற்கை விதி மற்றொரு சிறப்பான இயற்கை விதியால் நீங்குதல் 98
41. முற்பிறவியில் செய்த தீமையினாலேயே குழந்தை ஊனமாகப் பிறக்கிறது என்ற ஆட்சேபணைக்கு விடை 100
42. முன்னறிவிப்புகள் ஏன் நீங்குகின்றன? 103
43. தக்தீரே முப்ரம் (நீங்காத விதி) 109
44. தக்தீர் (இறை நியதி) நீங்குவதால் இறிவைனின் மகிமையில் குறைபாடு ஏற்படாது 110
45. முன்னறிவிப்புகள் மாறினால் அவை உண்மை என்பதற்கு என்ன ஆதாரம் இருக்க முடியும்? என்பதற்கான மூன்று பதில்கள் 112
46. எச்சரிக்கை வகையிலான முன்னறிவிப்பு மாறுவதைப் புரிந்து கொள்ள எளிதான இரு உதாரணங்கள் 116
47. அல்லாஹ் விரும்புவதையேயன்றி நீங்கள் வேறு எதனையும் விரும்புவதில்லை (81:30) என்ற வசனத்தின் விளக்கம் 124
48. துஆ செய்ததால் மழை பொழிந்தது என்பதை மறுக்கும் இயற்கை வாதிகளுக்கு தக்க பதில் 128
49. தக்தீர் விவகாரத்தைத் தவறாகப் புரிந்ததால் ஏற்பட்ட பாதிப்புகள் 129
50. இறைவனின் பொது விதி இல்லாவிட்டால் உண்டாகும் இழப்புகள் 135
51. ‘சிறப்பு விதி’ இல்லாவிட்டால் ஏற்படும் நஷ்டங்கள் 139
52. சிறைப்பிடிக்கப்பட்ட நபித்தோழர் சிறப்பு விதியால் விடுவிக்கப்பட்ட சம்பவம் 145
53. மூஸா (அலை) அவர்களுக்காகவும் அவர்களின் தோழர்களுக்காகவும் நீரூற்று வெளியானதும் சிறப்பு விதியினால்தான் 147
54. இறை நியதி மீது நம்பிக்கை கொள்வதால் கிடைக்கும் முதல் ஆன்மீக படித்தரம் 150
55. இறை நியதி மீது நம்பிக்கை கொள்வதால் கிடைக்கும் இரண்டாம் ஆன்மீக படித்தரம் 151
56. சோதனைகள் ஏன் வருகின்றன? என்பதற்கான விடை 155
57. இமாம் மஹ்தி (அலை) அவர்கள் ஹுஸைன் (ரலி) அவர்களை அவமதித்துவிட்டார்கள் என்ற ஆட்சேபணைக்கு பதில் 157
58. இறை நியதி மீது நம்பிக்கை கொள்வதால் கிடைக்கும் மூன்றாம் படித்தரம் 159
59. இறை நியதி மீது நம்பிக்கை கொள்வதால் கிடைக்கும் நான்காவது படித்தரம் 164
60. இறை நியதி மீது நம்பிக்கை கொள்வதால் கிடைக்கும் ஐந்தாவது படித்தரம் 166
61. அப்து (இறையடிமை) என்பதே ஆன்மீகத்தின் மிக உயர்ந்த பதவி; இப்னுல்லாஹ் எனக் கூறுபவர்கள் பொய்யர்களே! 168
63. இறை நியதி மீது நம்பிக்கை கொள்வதால் கிடைக்கும் ஆறாவது படித்தரம் 170
64. இறை நியதி மீது நம்பிக்கை கொள்வதால் கிடைக்கும் ஏழாவது படித்தரம் 174

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

نَحْمَدُهُ وَ نُصَلِّى عَلٰى رَسُوْلِهِ الْكَرِيْمِ

# இறை நியதி

أشهد أن لا إله الله وحده لا شريك له وأشهد أن محمدا عبده ورسوله .أما بعد فأعوذ با لله من الشيطان الرجيم .

بسم الله الرحمن الرحيمo

الْحَمْدُ لِلَّهِ رَبِّ الْعَالَمِينَo الرَّحْمَٰنِ الرَّحِيمِo مَالِكِ يَوْمِ الدِّينِo إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِينُ ط o اهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيمَo صِرَاطَ الَّذِينَ أَنْعَمْتَ عَلَيْهِمْ لا غَيْرِ الْمَغْضُوبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّينَo (آمين)

وَمَنْ يَتَّقِ اللَّهَ يَجْعَلْ لَهُ مَخْرَجًا لا o وَيَرْزُقْهُ مِنْ حَيْثُ لَا يَحْتَسِبُ ط وَمَنْ يَتَوَكَّلْ عَلَى اللَّهِ فَهُوَ حَسْبُهُ ط إِنَّ اللَّهَ بَالِغُ أَمْرِهِ ط قَدْ جَعَلَ اللَّهُ لِكُلِّ شَيْءٍ قَدْرًاo

وَقَالَ الَّذِينَ أَشْرَكُوا لَوْ شَآءَ اللَّهُ مَا عَبَدْنَا مِنْ دُونِهِ مِنْ شَيْءٍ
نَحْنُ وَلَآ آبَاؤُنَا وَلَا حَرَّمْنَا مِنْ دُونِهِ مِنْ شَيْءٍ ۚ كَذَٰلِكَ فَعَلَ
الَّذِينَ مِنْ قَبْلِهِمْ ۚ فَهَلْ عَلَى الرُّسُلِ إِلَّا الْبَلَاغُ الْمُبِينُ ۝

وَلَقَدْ بَعَثْنَا فِي كُلِّ أُمَّةٍ رَسُولًا أَنِ اعْبُدُوا اللَّهَ وَاجْتَنِبُوا الطَّاغُوتَ ۖ
فَمِنْهُمْ مَنْ هَدَى اللَّهُ وَمِنْهُمْ مَنْ حَقَّتْ عَلَيْهِ الضَّلَالَةُ ۚ فَسِيرُوا
فِي الْأَرْضِ فَانْظُرُوا كَيْفَ كَانَ عَاقِبَةُ الْمُكَذِّبِينَ ۝

"அல்லாஹ்வுக்கு அஞ்சி நடப்பவருக்கு அவன் ஏதேனும் ஒரு வழியை ஏற்படுத்துவான். அவர் எதிர்பாராத இடத்திலிருந்து அவன் அவருக்கு உணவு அளிப்பான். அல்லாஹ்விடம் நம்பிக்கை வைப்பவருக்கு அவனே போதுமானவன். நிச்சயமாக அல்லாஹ் தனது நோக்கத்தை நிறைவேற்றுவான். அல்லாஹ் ஒவ்வொன்றிற்கும் ஓர் அளவை நியமித்துள்ளான்". *(திருக்குர்ஆன் 65:3,4)*

"இணைவைப்பவர்கள் (இவ்வாறும்) கூறினார்:அல்லாஹ் நாடியிருப்பின், நாங்களும் எங்கள் மூதாதையர்களும் அவனைத் தவிர வேறெதனையும் வணங்கியிருக்கமாட்டோம். மேலும் நாங்கள் அவன்(கட்டளை) இன்றி எதனையும் விலக்கியிருக்க மாட்டோம். அவர்களுக்கு முன் (உண்மையின் பகைவர்களாக) இருந்தவர்களும் அவ்வாறே செய்தனர். (இறைதூதை) மிகத்தெளிவாக எடுத்துரைப்பதைத் தவிர தூதர்களுக்கு வேறென்ன பொறுப்புள்ளது?

நீங்கள் அல்லாஹ்வை வணங்குங்கள். தீயவர்களை விட்டு விலகுங்கள் என்ற கட்டளையுடன் ஒவ்வொரு சமுதாயத்திற்கும் நிச்சயமாக நாம் தூதரை அனுப்பினோம். அவர்களுள் சிலருக்கு அல்லாஹ் நேர்வழியை வழங்கினான். மற்றும் சிலருக்கு அழிவு உறுதியாகிவிட்டது. எனவே நீங்கள் பூமியில் பயணம் செய்து (நபிமார்களைப்) பொய்ப்படுத்தியவர்களின் முடிவு என்னவாயிற்று என்பதைப் பாருங்கள்". *(திருக்குர்ஆன் 16:36-37)*





## தக்தீரின் முக்கியத்துவம்

நான் ஒரு முக்கியமான விஷயம் பற்றி உங்களுக்கு எடுத்துக்கூற விரும்புகிறேன் என்று நான் நேற்று கூறியிருந்தேன். அந்த விஷயம் ஈமானோடு தொடர்புடையது என்றும் கூறியிருந்தேன். கடந்த மாநாடுகளில் நான் எனது சொற்பொழிவில் அமல்கள் (செயல்களைப்) பற்றி அதிகமாகக் கூறினேன். ஆனால் இப்போது ஈமான் சம்பந்தப்பட்ட விஷயங்களைப் பற்றி எடுத்துரைக்க எண்ணியுள்ளேன். எனது பார்வையில் ஈமான் கொள்ள வேண்டிய விஷயங்களில் முக்கியமானதாக இருக்கும் ஒரு விஷயத்தை நான் தேர்ந்தெடுத்துள்ளேன். அது மிகவும் கடினமான ஒரு விவகாரமாகும். எதுவரை எனில், மக்களின் செயல்களில் அது அபாயகரமான விளைவை ஏற்படுத்தியுள்ளது. அது என்ன விஷயம்? அதுதான் தக்தீர் என்றும், அதிர்ஷ்டம் என்றும், தலைவிதி என்றும் பொதுவாக அழைக்கப்படுகின்ற 'கஸா-வ-கத்ர்' விவகாரமாகும். மேலும் அதற்கு பல பெயர்கள் வைக்கப்பட்டுள்ளன. இந்த தக்தீரைப் புரியாததனால் பலர் அழிவுக்காளாயிருக்கின்றனர். பல சமுதாயங்கள் இதுபற்றி தெரியாததன் காரணமாக நாசமாகிவிட்டன. பல சமயங்கள் இதனை அறியாத காரணத்தால் நாசமடைந்தன. இன்னும் சொல்லப்போனால் இந்த 'தக்தீர்' விவகாரத்தை புரியாத காரணத்தினாலே மனிதனுடைய ஒழுக்கங்களையும் செயல்களையும் அழித்து நாசமாக்கக்கூடிய போதனைகள் மார்க்கங்களில் நுழைந்து விட்டன என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

இந்த பிரச்சனையினாலேயே ஐரோப்பிய மக்கள் முஸ்லிம்களைப் பார்த்து பொதுவாக நகைக்கிறார்கள். ஆயினும் அவர்கள் காரணமின்றி நகைக்கவில்லை. மாறாக, அவர்கள் நகைப்பது சரிதான். ஏனென்றால், முஸ்லிம்களே தம்மைப்பார்த்து நகைப்பதற்கு அவர்களுக்கு வாய்ப்பளித்து விடுகிறார்கள்.

உதாரணமாக, முஸ்லிம்களின் போர்கள் பற்றிய பேச்சு வந்தால், ஐரோப்பிய எழுத்தாளர்கள், 'அந்த இடத்தில் பயங்கர மான முறையில் குண்டுகள் வெடித்தன. எனினும் முஸ்லிம்கள் பின்வாங்கவில்லை; மாறாக முன்னேறிச் சென்றனர்' என்று எழுதிவிட்டு, அடுத்து இது அவர்களுடைய வீரத்தையும்,

தீரத்தையும் காட்டுகின்றது என்று எழுத மாட்டார்கள். மாறாக 'ஏனெனில் சாகவேண்டும் என்றிருந்தால் செத்து விடுவோம்; சாகக் கூடா தென்றிருந்தால் சாகமாட்டோம் என்ற தமது தலைவிதியின் மீது அவர்களுக்கு நம்பிக்கையிருந்தது?' என்று எழுதுவார்கள். இந்த (நம்பிக்கையின்) காரணத்தால் எதிரிகளை எதிர்த்து போரிடுவதில் நிலைத்து நின்றாலாவது பரவாயில்லை; ஆனால் குண்டுகள் தொடர்ந்து அதிகநேரம் வெடித்துக் கொண்டிருந்தால் அவர்கள் அங்கு நிற்கமாட்டார்கள்; ஓடிவிடுவார்கள் என்றும் எழுதுவார்கள்.

**தக்தீரைப் பற்றி ரஸூலே கரீம் (ஸல்) அவர்களின் கூற்று**

சுருக்கமாக, இறை நியதியின் மீது ஈமான் கொள்ளுதல் மிக முக்கியமான விஷயமாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

لَا يُؤْمِنُ عَبْدٌ حَتّٰى يُؤْمِنَ بِالْقَدَرِ خَيْرِهٖ وَشَرِّهٖ.

(லா யுஃமினு அப்துன் ஹத்தா யுஃமின பில் கத்ரி கய்ரிஹீ வஷர்ரிஹீ)

அதாவது, நன்மை, தீமைகள் பற்றிய இறை நியதியின் மீது நம்பிக்கை கொள்ளாதவரை எந்தவொரு அடியாரும் நம்பிக்கையாளராக இருக்க முடியாது. மேலும் கூறினார்கள்:

مَنْ لَمْ يُؤْمِنْ بِالْقَدَرِ خَيْرِهٖ وَشَرِّهٖ فَأَنَا بَرِيْءٌ مِنْهُ

(மன் லம்யுஃமின் பில்கத்ரி கைரிஹீ வ ஷர்ரிஹீ ஃபஅநா பரியும் மின்ஹு)

பொருள் : எவர் நன்மை தீமைகளின் நியதியின்மீது ஈமான் கொள்வதில்லையோ அவரை விட்டும் நான் விலகியிருக்கிறேன்.

ஆக, இறைநியதிக்கு பெரும் முக்கியத்துவம் கொடுக்கப் பட்டுள்ளது. ஆகவே 'விதி' யின் விவகாரம் ஒரு முக்கியமான விவகாரம் ஆகும். நம்பிக்கை கொண்டவர்களுடன் தமக்கு இடம் கிடைக்க வேண்டும் என்று விரும்புபவருக்கு தக்தீரின் மீது நம்பிக்கை கொள்வது மிக அவசியம்.





ஒருவர் தாம் முஸ்லிம் என்று வாதித்து தக்தீரின் மீது நம்பிக்கை கொள்ள வில்லையாயின் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் போதனையின்படி அவர் முஸ்லிமாக மாட்டார். ஏனெனில் நபி (ஸல்) அவர்களின் சேவகர்கள் மற்றும் அன்னாரைப் பின்பற்றுபவர்களுக்குப் பெயர்தான் முஸ்லிம். எனவே யார் முஸ்லிம், யார் முஸ்லிம் அல்ல என்பது பற்றி நபி (ஸல்) அவர்களிடத்திலிருந்தே தீர்ப்பு வேண்டப்படும். ஆகவே இறை நியதியின் மீது நம்பிக்கை கொள்ளாதவர் முஸ்லிம் ஆக முடியாது. ஏனென்றால் இறைநியதியின் மீது நம்பிக்கை கொள்ளதவரை எந்தவொரு மனிதரும் முஸ்லிம் ஆக மாட்டார் என்று நபி (ஸல்) கூறியிருக்கிறார்கள்.

**தக்தீர் ஈமான் கொள்ள வேண்டிய விஷயங்களுள் ஒன்றாகும்**

எவ்வாறு ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் வேறு சில விஷயங்களை அவசியம் என்று கருதி அதில் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்பதற்காக அவ்விஷயங்களை ஈமான் கொள்ள வேண்டிய விஷயங்களில் உள்ள ஒன்றாக சேர்த்துக்கொண்டார் களோ அவ்வாறே தக்தீரையும் சேர்த்துக் கொண்டார்கள் என்று சிலர் நினைக்கலாம். உதாரணமாக, 'எவர் பிற சமுதாயத்தினரைச் சார்ந்தவராக தன்னை பறைச்சாற்றிக் கொள்வாரோ - அதாவது ஸய்யத் குடும்பத்தைச் சாராதவராயிருந்து, தன்னை ஸய்யத் என்று கூறுவாரோ அவர் முஃமின் ஆகமாட்டார்' என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். முஸ்லிமைக் கொலை செய்வது 'குஃபர்' ஆகும் என்றும் கூறியுள்ளார்கள். அவ்வாறே இன்னும் பல விஷயங்களைக் குறித்து, எவர் இவ்வாறு செய்வதில்லையோ அல்லது எவர் இவ்வாறு செய்வாரோ அவர் நம்பிக்கை கொண்டவர் (முஃமின்) ஆகமாட்டார் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். உதாரணமாக பட்டான் சமூகத்தைச் சார்ந்த ஒருவர் தம்மை ஸய்யத் என்றோ, முகலாயர் பரம்பரை என்றோ அல்லது பெரிய குடும்பத்தைச் சாராதிருந்து அக் குடும்பத்தைச் சார்ந்தவராக வாதிப்பார் என்றால் அவர் முஃமின் ஆகமாட்டார் என்றும் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். அதுபோலவே இறை நியதி (தக்தீரைப்) பற்றியும்

கூறியிருக்கிறார்கள். இதன் பொருள், அதனை நம்ப வேண்டும். நம்பாதிருப்பது பாவமாகும். ஆனாலும் அதனை நம்பாதிருப்பது நம்மை ஈமானை விட்டும், இஸ்லாத்தை விட்டும் வெளி யேற்றிவிடாது என்று சிலர் கருதுகின்றனர்.

இதுபற்றி ஒன்றை நினைவில் கொள்ளவேண்டும். அதாவது, ஈமான் கொள்ளவேண்டிய விஷயங்கள் எத்தனை உள்ளனவோ, எவற்றின்மீது ஈமான் கொள்ளாமல் ஒருவர் முஸ்லிமாக ஆக முடியாதோ அவையனைத்தும் திருக்குர் ஆனில் உள்ளன. அவை ஹதீதுகளைச் சார்ந்திருக்கவில்லை. ஏனெனில் ஹதீதுகள் பற்றிய ஞானம் அனுமானத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். உறுதி யானவை அல்ல.

எனவே, எந்த விஷயம் ஈமானைச் சார்ந்தது என்பதை அறிவதற்கு நாம் திருக்குர்ஆனின் பக்கம் திரும்ப வேண்டும். எவ்விஷயத்தைப் பற்றி – அதனை ஏற்றுக்கொள்ளாதிருப்பது குஃபர் (நிராகரிப்பு) என்று திருக்குர்ஆனிலிருந்து தெரிய வருகிறதோ அது ஈமான் கொள்ள வேண்டிய விஷயங்களுள் அடங்கிய ஒன்றாகும். மேலும் எவ்விஷயங்களைப் பற்றி திருக்குர்ஆனில் சாட்சி கிடைப்பதில்லையோ, அவை பற்றி அவற்றிற்காக கையாளப்பட்ட சொற்கள் வலியுறுத்துவதற்காக மட்டுமே வந்துள்ளன என்று புரிந்து கொள்ளவேண்டும்.

இப்போது இந்த விதிமுறைப்படி, தக்தீர் (இறை நியதி) மீது ஈமான் கொள்வது பற்றி திருக்குர்ஆனில் என்ன வந்துள்ளது என்று பார்க்கும்போது ஈமான் பில் கத்ர் (இறைநியதியின் மீது நம்பிக்கை கொள்ளுதல்) என்ற வார்த்தையை நாம் அதில் காணாவிட்டாலும், அதன் மீது ஈமான் கொள்ளுதல் அவசியம் என்பது கண்டிப்பாகத் தெரிகிறது.

ஏனெனில் திருக்குர்ஆனில் அல்லாஹ்விடத்து நம்பிக்கை கொள்வது எல்லாவற்றையும் விட முதல் கட்டளையாக கூறப்பட்டுள்ளது. மேலும் இறை நியதியின் மீது ஈமான் கொள்ளுதல் என்பது இறைவனின் மீது ஈமான் கொள்வதன் ஒரு பகுதியாகும். தக்தீர் என்பது என்ன? இறைவனுடைய பண்புகள் வெளிப்படுத்துவதற்குப் பெயர்தான் தக்தீர். உதாரணமாக,





இறைவன் இருக்கிறான் என்று ஒருவர் நம்பும்போது, அந்த இறைவன் செயல்படுகிறான்; அவன் செயலற்றவனாக இருக்கவில்லை என்றும் நம்பவேண்டியது அவசியம். சுருங்கக்கூறின் இறைவனிடம் என்ன பண்புகள் இருக்கின்றன என்று நம்பப்படுகிறதோ அவற்றை ஏற்றுக்கொள்வதற்குப் பெயர்தான் கத்ரை (இறைநியதியை) நம்புதலாகும். எனவே, அல்லாஹ்விடத்து நம்பிக்கை கொள்வதிலேயே இறை நியதியினிடத்து நம்பிக்கை கொள்வதும் அடங்கும்.

எனவே, ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் இறை நியதியின் மீது ஈமான் கொள்வது பற்றி வலியுறுத்திக் கூறியிருப்பது மாபெரும் பாவங்களைப் பற்றி எச்சரித்திருப்பதைப் போன்றதல்ல. மாறாக, கத்ர் பற்றி கூறியிருப்பதெல்லாம் உண்மையான முறையிலுமாகும்.

## இறைவன் மீது நம்பிக்கை கொள்வதற்கு தக்தீரின் மீது நம்பிக்கை கொள்ள வேண்டியது அவசியம்

திருக்குர்ஆனில் இது பற்றி தனித் தனியாகக் குறிப்பிடப்படாமல் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்வதிலேயே இணைத்துக் கூறப்பட்டுள்ளது என்றாலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இதனைத் தனியாக எடுத்துரைத்துள்ளார்கள். இறைவனின் பண்புகளையும் ஏற்றுக் கொண்டால்தான், அவனை உண்மையான முறையில் ஏற்றுகொண்டதாக ஆகும். அவ்வாறில்லாமல் இறைவனை மட்டும் ஏற்றுக் கொள்வதில் எந்த அர்த்தமும் இல்லை. அப்படிப் பார்த்தால், பல நாத்திகர்களும் இறைவனை ஏற்றுக் கொள்கிறார்கள். ஏனெனில், ‘நாங்கள் இறைவனை நம்புவதில்லை என்று கூறுவது தவறாகும். நாங்கள் இறைவனை ஏற்றுக்கொள்கிறோம். ஆனால், அவன் வானவர்களை இறக்குகிறான்; நபியை அனுப்புகிறான்; அவன் புறமிருந்து தூது வருகிறது. மேலும் வேதங்கள் கொடுக்கப்படுகின்றன போன்றவற்றை நாங்கள் ஏற்பதில்லை. ஆயினும் இந்த உலகத்தை ஆளுகின்ற ஒரு மாபெரும் சக்தி இருக்கிறது என்று நம்புகிறோம். அதனை நாங்கள் இயற்கையின் ஆற்றல் என்கிறோம்’ என்று நாத்திகர்களும் கூறுகிறார்கள்.

ஆக, நாத்திகர்களும் வெளிப்படையான முறையில் இறைவனை மறுக்கவில்லை. ஆனால் அவர்கள் எப்படிப்பட்ட

இறைவனை நம்புகிறார்கள்? தமக்கு எந்தவித சம்பந்தமும் இல்லாத இறைவனை நம்புகிறார்கள். அவர்கள் இறைவனை நம்புவதென்பது எப்படிபட்ட தென்றால், ஒருவர் இன்னொருவரிடம் எங்கள் பணம் உங்கள் பணம்தான் என்று கூறினாராம். ஆனால் தன் பணத்தை மற்றவர் எடுத்தும் கொள்வார் என்பதை அவர் ஒருபோதும் எண்ணிப் பார்க்கவில்லை. நாத்திகர்கள் இறைவனை நம்புவது இப்படிப்பட்டதுதான்.

அவ்வாறே, சிலர் 'ஓர் இருப்பு, ஒரு சக்தி, ஓர் ஆவி இருக்கிறது என்பதை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். ஆனால், 'இப்படிச் செய்யுங்கள்; இப்படிச் செய்யாதீர்கள் என்று எங்களுக்குக் கட்டளையிடக்கூடிய இறைவன் இருக்கிறான் என்பதை நாங்கள் ஏற்றுக் கொள்வதில்லை' என்று கூறுகின்றனர். நாத்திகர்களிடம் இப்படிப்பட்ட கொள்கைகள் உள்ளன. இவ்வாறே ஒருவருக்கு இறைவன் மீது ஈமான் இருக்கு மென்றால், அவ்வாறான ஈமான் நாத்திகர்களிடமும் இருக்கிறது எனலாம். ஆனால் அது போதுமானதல்ல. இறைவன் மீது ஈமான் கொள்ளுதல் என்பதன் பொருள் இறைவன் என்று ஒருவன் இருக்கிறான் என்று நம்புவதை மட்டும் குறிப்பிடாது. மாறாக, அவனது பண்புகளையும் நம்ப வேண்டும். இறைபண்புகளை நம்பினால் மட்டும் போதாது; அவை வெளிப்படுகின்றன என்றும் நம்ப வேண்டும். இதற்குப் பெயர்தான் தக்தீரை (இறை நியதியை) நம்புதல் என்பதாகும்.

சுருக்கமாக, இறைவன் மீது ஈமான் கொள்ள வேண்டுமென்றால்,

1. அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வேண்டும்.
2. அல்லாஹ்வின் பண்புகளை நம்ப வேண்டும்.
3. இறை பண்புகள் வெளிப்படுகின்றன என்பதை நம்ப வேண்டும்.

இந்த மூன்றாவது அம்சத்தைத்தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் 'கத்ர்' (விதி) என்று பெயர் வைத்து தனியாக எடுத்துரைத்தார்கள். அடியார்களுடன் தொடர்புள்ள இறைபண்புகளின் வெளிப்பாடே 'கத்ர்' எனப் பெயர் பெறும் என்றும் குறிப்பிட்டுள்ளார்கள்.





## விதி பற்றி வாக்குவாதம் செய்தல்

தக்தீர் மீது ஈமான் கொள்ளுதல் எவ்வளவு அவசியமென்றால், அதன் மீது நம்பிக்கை கொள்ளாதவரை ஒருவர் நம்பிக்கையாள ராகவே ஆக மாட்டார் என்று ஒருபுறம் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள். இது வெறும் அழுத்தம் கொடுப்பதற்காக மட்டும் கூறவில்லை. மாறாக, இறை பண்புகளின் மீது ஈமான் கொள்ளுதல் ஈமானின் ஒரு பகுதியாகும் என்று திருக்குர்ஆன் கூறுகிறது. அத்துடன் மறுபுறம் இன்னொரு கடினமான விஷயமும் உள்ளது. அதாவது, விதியின் மீது ஈமான் கொள்வது எவ்வளவு கடினமானதென்றால், அது பற்றி வாக்குவாதம் செய்தல் மனிதனை அழிவுக்குள்ளாகி விடுகிறது என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள். ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

خَرَجَ عَلَيْنَا رَسُولُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ وَنَحْنُ نَتَنَازَعُ فِي
الْقَدَرِ فَغَضِبَ حَتّٰى احْمَرَّ وَجْهُهُ حَتّٰى كَأَنَّمَا فُقِئَ فِي وَجْنَتَيْهِ الرُّمَّانُ
فَقَالَ أَبِهٰذَا أُمِرْتُمْ أَمْ بِهٰذَا أُرْسِلْتُ إِلَيْكُمْ إِنَّمَا هَلَكَ مَنْ كَانَ قَبْلَكُمْ
حِينَ تَنَازَعُوا فِي هٰذَا الْأَمْرِ عَزَمْتُ عَلَيْكُمْ أَلَّا تَتَنَازَعُوا فِيهِ.

''நாங்கள் விதி பற்றி வாதித்துக் கொண்டிருந்தோம். ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் வெளியே வந்தார்கள். எங்களுடைய வாதங்களைக் கேட்டு அவர்களின் திருமுகம் சிவந்தது. எதுவரையென்றால், அவர்களின் முகத்தில் மாதுளம் பழத்தை உடைத்தது போன்று தென்பட்டது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், உங்களுக்கு இது குறித்து கட்டளையிடப்பட்டுள்ளதா? இறைவன் என்னை இதற்காகவா அனுப்பியுள்ளான்? உங்களுக்கு முன்னுள்ள சமுதாயங்கள் 'விதி'யின் மீது வாக்குவாதம் செய்ததனாலேயே அழிவுக்காளாயின. நான் உங்களுக்கு வலியுறுத்திக் கட்டளை யிடுகிறேன். ஆம் நான் உங்களுக்கு வலியுறுத்திக் கட்டளை யிடுகிறேன். இதுபற்றி சண்டையிடுதல், வாக்குவாதம் செய்தல்

ஆகியவற்றை விட்டு விடுங்கள் எனக் கூறினார்கள்.'' *(ஜாமிவுத் திர்மிதி அதிகாரம் : அல் கத்ர்)*

அவ்வாறே இன்னொரு ஹதீஸில் இவ்வாறு வருகிறது:

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்களிடம் ஒருவர் வந்து, உங்களுக்கு ஒருவர் சலாம் கூறினார் என்று சொன்னார். இதனைக் கேட்ட ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள், அந்த மனிதர் இஸ்லாத்தில் சில பித்அத்துகளை ஏற்படுத்தியிருப்பதாக நான் அறிகிறேன். இது உண்மையென்றால், என் தரப்பிலிருந்து அவருடைய சலாத்திற்கு பதில் கூற வேண்டாம். ஏனெனில், ஹஸ்ரத் ரஸுலே கரீம் (ஸல்) அவர்கள், தமது உம்மத்தில் தலைவிதி (தக்தீர்) பற்றி தர்க்கம் செய்கின்ற சிலர் மீது தண்டனை இறங்கும் என்று சொல்லக் கேட்டிருக்கிறேன் எனக் கூறினார்கள். *(திர்மிதி அதிகாரம் : அல் கத்ர்)*

'கத்ர்' என்பது ஒரு கடினமான விவகாரம் என்பதும், அது குறித்து வாக்குவாதம் செய்வதால் ஈமான் போய் விடக் கூடிய அபாயமும் உண்டு என்பதும் இந்த நபிமொழிகளிலிருந்து தெரிய வருகிறது. இன்னும் சொல்லப் போனால், இந்த சமுதாயத்தில் ஒரு பிரிவினரின் மீது இதன் காரணத்தால் தண்டனை வரும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன்னறிவித்துள்ளார்கள். ஆனால் அதே சமயத்தில் இந்த விவகாரத்தின் மீது ஈமான் கொள்ள வேண்டும் என்றும் உறுதியாக கட்டளையிடப்பட்டுள்ளது. இதனை ஏற்றுக் கொள்ளாதவர்கள் 'காஃபிர்' என கூறப்பட்டுள்ளார்கள். மேலும் ஒரு விஷயத்தைப் புரிந்து கொள்ளாமல் அதன் மீது ஈமான் கொள்வதென்பது முடியாத ஒன்று. ஏனெனில், தான் எதன் மீது ஈமான் கொள்ள வேண்டும் என்பதே ஒருவருக்கு தெரியாதபோது அவர் என்ன ஈமான் கொள்வார்? புரிந்து கொள்ளாத ஒன்றின் மீது மனிதனை ஈமான் கொள்ள வைப்பதால் அவனுக்கு என்ன பயன் கிடைக்க முடியும்?

எனவே இறை நியதி பற்றி நாம் மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இதுபற்றி வாக்குவாதம் செய்வதிலிருந்து ஷரீஅத் தடுத்துள்ளதென்றால் அதன் பொருள் என்ன? அதன்மீது ஈமான் கொள்ள வேண்டும் என்று கட்டளையிருக்கிறதென்றால்





அதற்கென்ன பொருள்? என்பதை நாம் சிந்தித்துணர வேண்டும். இதனைப் பொருட்படுத்தாததன் விளைவாக அழிவுக்கும் நாசத்திற்கும் ஆளாகி விடக் கூடாது.

இந்த விவகாரம் உண்மையில் உலகத்தில் உள்ள 'புலே சிராத்' (நேரான பாலம்) எனலாம். அதில் கால் வைக்காவிட்டால் சுவர்க்கத்தை இழந்து விடலாம்; கால் வைத்தால் (பாலம்) உடைந்து நரகத்தின் படு குழியில் விழுந்து விடக் கூடாதே என்ற பயமும் ஏற்படுகிறது. 'புலே சிராத்' என்றழைக்கப்படும் பாலத்தைக் கடக்காமல் எந்த மனிதனும் சுவர்க்கத்தில் நுழையவே முடியாது. அதைக் கடந்து செல்வதில் இரு சாத்தியக் கூறுகளும் இருக்கின்றன. ஒன்று, கீழே விழுந்து விடலாம் அல்லது தப்பித்து விடலாம். இது போன்றே தக்தீர் பற்றிய விவகாரத்தின் நிலையும். இதனை புரியவில்லையாயின், ஈமான் முழுக்க முழுக்க போய்விடும். இது குறித்து வாதித்தால், இரண்டும் நடக்கலாம். ஒன்று சரியான முறையில் புரிந்து இறை நெருக்கத்தைப் பெறலாம் அல்லது இதனைப் புரிவதில் தவறிழைத்து அழிவுக்கும் நாசத்திற்கும் ஆளாகலாம்.

அப்படியானால் இதுகுறித்து வாதம் செய்யாதீர்கள் என்று ஹஸ்ரத் ரஸுல் கரீம் (ஸல்) அவர்கள் ஏன் கூறினார்கள் என்ற கேள்வி இங்கு எழுகிறது. இதற்குரிய விடை, முற்றிலும் வாதம் செய்யாதீர்கள் என்று அதற்குப் பொருளல்ல. இது விஷயத்தில் யூகங்களை கைக்கொள்ளாதீர்கள். இந்த விவகாரத்தை எப்பொழுதும் ஷரீஅத்தின் ஒளியில் சீர்தூக்கிப் பாருங்கள் என்பதே அதற்குப் பொருள்.

அவ்வாறில்லையென்றால் இந்த விவகாரம் பற்றி பல்வேறு நேரங்களில் விளக்கமாக ஹஸ்ரத் ரஸுல் கரீம் (ஸல்) அவர்கள் கூறக் கேட்டிருக்க மாட்டோம். அவர்கள், தாமே இந்த விவகாரம் பற்றி விளக்கியிருப்பதும், இது குறித்து எழுகின்ற ஆட்சேபணைகளுக்கு விடை கூறியிருப்பதும், திருக்குர்ஆன் இது பற்றி விளக்கமாக எடுத்துரைத்திருப்பதும் தெரிவிப்பதாவது, தடுக்கப்பட்டது தக்தீர் பற்றிய ஆய்வு அன்று. மாறாக, ஷரீஅத்தின் துணையின்றி இந்த விவகாரத்திற்கு தீர்வு காண்பதே

தடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறு தீர்வு காண்பதால் நாத்திகமும், மார்க்கத்தை இழக்கும் அபாய நிலையும் தவிர வேறெந்த விளைவும் ஏற்படுவதில்லை.

விதி எனும் கத்ர் விவகாரம் இறைவனுடைய பண்புகளோடு தொடர்புடையதாகும். எனவே எவராவது இந்த விவகாரத்திற்கு தீர்வு காண முடியுமென்றால் அது அல்லாஹ்தான். எனவே, இறைவனையும், இறை தூதரையும் தவிர வேறு எவராலும் இந்த விவகாரத்தின் உண்மை நிலையை எடுத்துரைக்க முடியாது. ஆறு மாத அல்லது ஒரு வருட குழந்தை ஒரு பயங்கரமான காட்டில் செயலற்றிருப்பது போலவே அறிவு இந்த களத்தில் செயலற்றிருக்கிறது. அதனை அந்த காட்டிலிருந்து ஒன்று வெளியேற்ற முடியுமென்றால் அது ஷரீஅத்தின் வழிகாட்டல்தான். இந்த விவகாரத்தை அறிவால் புரிந்து கொள்ளவே முடியாது என்பது என் கருத்தன்று; மாறாக, ஷரீஅத்தின் வழிகாட்டலின்றி அறிவு இந்த விவகாரத்தை புரிந்து கொள்ள முடியாது என்பதே என் கருத்தாகும். அல்லாஹ் விளக்குவதனால் – அவனுடைய வழிகாட்டலால் அறிவு இந்த விவகாரத்தை நன்றாக புரிய முடியும். அல்லாஹ்வின் வழிகாட்டலினாலும் மனித மூளை அதனைப் புரிய முடியாது என்றால் பிறகு அதன் மீது நம்பிக்கை கொள்ளும்படி கட்டளையும் வந்திருக்காது.

எவர்கள் இந்தப் விவகாரத்திற்கு அறிவின் மூலமாக தீர்வு காண விரும்பினார்களோ அவர்கள் மாபெரும் பயங்கரமான வழிகேடுகளுக்கு பலியானார்கள்; பிறரையும் வழி கெடுக்கக் காரணமானார்கள்.

### தக்தீர் விவகாரத்தை புரிந்து கொள்ளாததன் விளைவு

இந்துக்களில் மறுபிறவிக் கொள்கை 'விதி' பற்றிய விவகாரத்தைப் புரிந்து கொள்ளாத காரணத்தாலேயே உருவானது. மேலும் இதனைப் புரியாததனாலேயே கிறித்தவர்களிடத்தில் பாவ மன்னிப்புக் கொள்கை உருவாக்கப்பட்டது. முதலில் இறைவனின் கருணை எனும் பண்பு மறுக்கப்பட்டது. அதன் விளைவாக பாவ மன்னிப்புக் கொள்கை (அதாவது மனித பாவங்களுக்காக இயேசு பலியானவர் என்ற கொள்கை) உருவானது. மேலும் பாவ





மன்னிப்புக் கொள்கையின் விளைவாக தேவ குமாரன் மற்றும் ஷரீஅத்தை சாபமாகக் கூறும் கொள்கைகள் உருவாயின. பின்னர் அதன் கட்டாய விளைவாக 'இபாஹத்' என்ற கொள்கையும் தோன்றியது.

('இபாஹத்' என்பது பாவங்களை விட்டு தவிர்ந்து கொள்வதற்கான ஆற்றலும், கடமைகளை நிறைவேற்றுவதற்கான ஆற்றலும் மனிதனிடம் இல்லை என்று நம்புகின்ற ஒரு பிரிவினரின் பெயராகும்.)

இவ்வாறே விதியை புரியாமலேயே ஐரோப்பாவிலுள்ள தற்போதைய அறிவியல் அறிஞர்களிடத்தில் நாத்திகம் தோன்றியது. மேலும் இதனை அறியாத காரணத்தாலேயே யூதர்களிடத்தில் 'தமக்கு மட்டுமே இரட்சிப்பு' என்ற கொள்கை உருவாகியது. முஸ்லிம்களில் நன்மையை செய்யும் ஆற்றல் தீமையை செய்யும் சக்தி நம்மிடம் இல்லை. எல்லாம் தலைவிதிப்படிதான் நடக்கும் என்ற தவறான கொள்கை உருவானது.

இவர்கள் இந்த விவகாரத்தைப் புரிந்திருந்தால் ஒருபோதும் தடுமாறியிருக்க மாட்டார்கள். எனவேதான் பல்வேறு சமுதாயங்களின் வழிகேட்டைப் பற்றி திருக்குர்ஆன் பின்வருமாறு கூறுகிறது:

وَمَا قَدَرُوا اللّٰهَ حَقَّ قَدْرِهٖ

(வமா கதருல்லாஹ ஹக்க கத்ரிஹீ )

பொருள் : அவர்கள் அல்லாஹ்வை மதிக்க வேண்டிய விதத்தில் மதிக்கவில்லை (6:92). அதாவது இறை பண்புகளை புரியவேண்டிய விதத்தில் புரியவில்லை. அதைப் புரியாமல் தடுமாறிப்போனதன் காரணமாக புதிய புதிய கொள்கைகள் உருவெடுத்தன.

சுருக்கமாக, எல்லா மார்க்கங்களும் தமது உண்மையை – அசலை விட்டுப் பிரிந்து விட்டதற்குக் காரணமே அவற்றைப் பின்பற்றுபவர்கள் இறை பண்புகளின் வெளிப்பாட்டினை–அதாவது தக்தீரை–சரியான முறையில் புரியாததுதான்.

இது மிக நுட்பமான விவகாரமாகும். இதுபற்றி அதிகம் கவனம் செலுத்துவதும், ஆய்வு செய்வதும், எச்சரிக்கையாக இருப்பதும் மிக அவசியமாகும். அப்போதுதான் மனிதன் ஒருபுறம் நம்பிக்கையில் நிலைத்திருந்து, மறுபுறம் இறை கோபத்திலிருந்தும் தப்பித்திருக்க முடியும். மற்றபடி, அதனை ஆய்வு செய்யாமலும் அறிந்து கொள்ளாமலும் இருந்தால் அதனை எப்படி ஏற்றுக் கொள்வதாக ஆகும்? இமய மலையை மலையென்றும், ராவி நதியை நதியென்றும், லாகூர் நகரத்தை நகரம் என்றும் நம்பினால் நீங்கள் ஈடேற்றம் பெறுவீர்கள் என்று எங்காவது இறைவன் கூறியிருக்கிறானா? ஒருபோதும் கூறவில்லை. ஏனென்றால் இவற்றின் மீது நம்பிக்கை கொள்வது ஈடேற்றத்திற்கு வழிகோலாது. ஆன்மீக முன்னேற்றம், ஆன்மீகத்தோடு தொடர்புடையவற்றினா லேயே ஏற்பட முடியும். அவற்றை நம்புதல் என்பது அவற்றின் உண்மை நிலைமையை நன்றாக புரிவதாகும். அதன் உண்மைத் தன்மையைப் புரியவில்லை யென்றால், அதனை நம்புதல் என்று எப்படிக் கூற முடியும்?

**தக்தீர் விவகாரத்தில் முஸ்லிம்களின் மூடத்தனமாக குறுக்கீடு**

இந்த விவகாரத்தை ஏற்றுக் கொள்வதற்கு இதைப் பற்றி மிகவும் சிந்திப்பது அவசியம். இந்த விவகாரத்தில் தர்க்கம் செய்த சமுதாயங்கள் அழிவுக்குள்ளாக்கப்பட்டன; என் சமுதாயத்திலும் ஒரு பிரிவினர் இதன் காரணமாக அழிவுக்குள்ளாக்கப்படுவார்கள் என்று ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் முன்னறிவித்திருக்கிறார்கள். இது பற்றி வாக்குவாதம் செய்யக் கூடாதென்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் வலியுறுத்தியிருந்தும், இதனை ஈமானின் ஒரு பகுதியாகக் குறிப்பிட்டிருந்தும் முஸ்லிம்கள் இதில் மூடத்தனமாகக் குறுக்கிட்டிருப்பது வருந்தத்தக்கதாகும். தனது கொள்கைக்கு திருக்குர்ஆனை அடிப்படையாகக் கொள்ளாமல் தன் மூளையை அடிப்படையாகக் கொண்டு அதற்கான ஆதாரத்தை திருக்குர்ஆனில் காண முற்பட்டார்கள். ஆனால் திருக்குர்ஆனோ,

كُلًّا نُّمِدُّ هٰٓؤُلَآءِ وَهٰٓؤُلَآءِ مِنْ عَطَآءِ رَبِّكَ ؕ





(குல்லன் நுமித்து ஹாஉலாயி வ ஹாவுலாயி மின் அதாயி ரப்பிக்) என்றே கூறுகிறது.

பொருள் : (மறுமையை நாடும்) இவர்களுக்கும் (இம்மையை மட்டும் நாடும்) அவர்களுக்கும் எல்லாருக்கும் உம்முடைய இறைவனின் கொடையிலிருந்தும் நாம் உதவி அளிக்கிறோம். (17:21)

பின்னர் திருக்குர்ஆன் எல்லா விவகாரங்களின் அனைத்து அம்சங்களையும் தெளிவாக விளக்குகிறது. இப்போது ஒருவர் ஏதாவதொரு விவகாரத்தின் ஓர் அம்சத்தை எடுத்துக் கொண்டு, மற்றவற்றை விட்டு விட்டால் இதனை நான் குர்ஆனிலிருந்து எடுத்துள்ளேன் என்றுதான் அவர் கூறுவார். ஆனால் உண்மையில் அவர் அதனைக் குர்ஆனி லிருந்து எடுக்கவில்லை. மாறாக, தன் சொந்த கருத்திற்கு திருக்குர்ஆனின் துணையை அவர் நாடியிருக்கிறார். அவர் திருக்குர்ஆனிலிருந்து கருத்தை எடுக்கிறார் என்றால் அதன் எல்லா அம்சங்களையும் கருத்தில் கொள்வார். ஓர் அம்சத்தை எடுத்துவிட்டு, மற்றவற்றை விட்டுவிட மாட்டார்.

ஒரு முறை நான் ஓரிடத்திற்குச் சென்றேன். அப்போது நான் மதரஸாவில் படித்துக் கொண்டிருக்கும் சிறுவனாக இருந்தேன். மாணவர் விடுதியில் ஒரு பையன் எள்ளு மிட்டாய் சாப்பிட்டுக் கொண்டிருந்ததைப் பார்த்தேன். அவன் சாப்பிட்டுக் கொண்டிருந்த முறை நகைப்புக்குரியதாக இருந்தது. அதாவது வேறு யாரும் பார்த்துவிடக் கூடாதே என்று பயப்படுபவனைப் போல அந்த பையன் எள்ளு மிட்டாயை மறைத்து வைத்திருந்தான். எனக்கு சிரிப்பு வந்து விட்டது. என்ன செய்கிறாய்? என்று நான் கேட்டேன். அப்போது அவன், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு எள்ளு மிட்டாய் மிகவும் பிடித்தமானது என நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அந்த சுன்னத்தை (நடைமுறையை) முழுமை செய்கிறேன் என்று கூறினான். அதற்கு நான், ‘அவர்கள் Quinine (கொய்னா எனும் கசப்பு மருந்து) கூடத்தான் சாப்பிட்டிருக் கிறார்கள். அதனையும் சாப்பிடேன்’ என்று கூறினேன்.

## ஓர் அம்சத்தை எடுத்துக் கொண்டு மற்றதை விட்டு விடுதல்

மனிதன் தன்னைத்தானே காப்பாற்ற நினைக்கும்போது தனக்கு பயனளிக்கக் கூடியதை எடுத்துக் கொண்டு, பிறவற்றை விட்டு விடுகிறான். ஆனால் உண்மையை தேடுபவர்கள் எல்லா அம்சங்களையும் கவனத்தில் கொள்கிறார்கள். இதனால் நமது எண்ணம் அல்லது கவனத்திற்கு மாற்றமான ஒரு விளைவு ஏற்படுமே என்பதைப் பற்றி அவர்கள் பொருட்படுத்துவதில்லை.

நமது ஜமாஅத்தில் ஏற்பட்ட கருத்து வேற்றுமையையே எடுத்துக் கொள்ளுங்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், நான் ஷரீஅத்துடைய நபி அல்லன். ஆயினும் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் ஊழியன் ஆன காரணத்தால் நுபுவ்வத்தின் அந்தஸ்தைப் பெற்றேன். எனவே நான் உம்மத்தி நபியாவேன் என்று கூறினார்கள். இப்போது ஒரு நபிக்கு ஷரீஅத் கொண்டு வரவேண்டியது கட்டாயமென்றால், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூட நான் ஷரீஅத்தின் கட்டளைகளைக் கொண்டு வந்துள்ளேன் என்று கூறுகிறார்கள். எனவே அவர்கள் ஷரீஅத்துடைய நபியாவார்கள் என்று ஒன்றிரண்டு பேர் எழுந்து கூறுகிறார்கள். இவர்கள் மற்றொரு அம்சத்தை விட்டு விட்டார்கள். இன்னும் சிலர் இருக்கிறார்கள். அவர்கள், நான் நபி அல்லன் என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அலை) அவர்கள் எழுதியுள்ளார்கள்; எனவே அவர்கள் எந்தவித நபியும் இல்லை என்று கூறுகிறார்கள். இவர்களும் இரண்டாவது அம்சத்தை விட்டு விட்டார்கள். **ஆனால் நாம் இரண்டு அம்சங்களையும் எடுக்கிறோம். அதாவது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஷரீஅத்துடைய நபியல்லர்; ஆனால் உம்மத்தி நபியாவார்கள்.**

கருத்து வேறுபாடு கொள்பவர்கள் இருவித அம்சங்களையும் எடுத்தால் தவறிழைக்க மாட்டார்கள். நாம் இரண்டு அம்சங்களையும் எடுத்துள்ளோம். அவர்கள் நபியுமாவார்கள்; அதே சமயத்தில் உம்மத்தியும் ஆவார்கள்.

எவர்களிடம் தக்வா மற்றும் நேர்மை இருப்பதில்லையோ





மேலும் தெளிவான முறையில் மறுப்பதற்கு தைரியமில்லையோ அவர்கள்தான் ஒரு பகுதியை எடுத்துக் கொண்டு பிறவற்றை விட்டுவிடக் கூடிய இந்த முறையை கையாள்கிறார்கள் என்பது பொதுவான விதியாகும். ஒரு பகுதியை எடுத்துக் கொண்டு, நாங்கள் இதனை ஏற்றுக் கொள்கிறோமே என்று கூறுகிறார்கள். ஆனால் உண்மையில் அவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை. முஸ்லிம்கள் என்று அழைக்கப்படுகின்ற சிலர், தொழுகையின் பக்கம் நெருங்காதீர்கள்(4:44) என்ற திருக்குர்ஆனின் கட்டளையின் படி நடக்கிறோம் என்று கூறிவிடுகிறார்கள். (மயக்க நிலையில் இருக்கும்போது என்ற) வசனத்தின் மறு பகுதியை ஏன் விட்டு விடுகிறீர்கள் என்று கேட்டால், முழு குர்ஆன்படி யார் செயல்பட முடியும்? என்று கூறுகின்றனர்.

## விதியைப் பற்றிய முஸ்லிம்களின் தவறான கொள்கைகளுக்கு அடிப்படை

ஆக, இது ஒரு குழப்பத்தை ஏற்படுத்தும் முறையாகும். இதனையே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தடை செய்தார்கள். ஆனால் முஸ்லிம்கள் தடை செய்ததை கவனத்திற் கொள்ளாதது வருத்தத்திற்குரியதாகும். தடை செய்தவற்றின் மீது செயல்பட்டு மாபெரும் தடுமாற்றங்களை அவர்கள் அடைந்தனர். அவர்களில் சிலரோ தம் கொள்கைகளுக்கு யூனானி தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டார்கள். சிலர் இந்தியாவிலுள்ள தத்துவ வாதிகளின் கொள்கையை அதாவது, ‘வஹ்ததுல் வஜூத்’ எனும் அத்வைதக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டார்கள். இன்னும் சிலர் நாத்திகக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டார்கள். இந்தியாவில் வஹ்ததுல் வஜூத் எனும் அத்வைதக் கொள்கை மிகப் பரவலாகக் காணப்பட்டது. இதற்கும் விதிக்கும் இடையே எந்தவொரு வேறுபாடும் இருப்பதாகக் கருதப்படவில்லை. அதனையே ‘விதி’ என்று கூறப்பட்டுவிட்டது. தம் கொள்கைக்கு இதனை அடிப்படையாக வைத்து நாம் செய்வதெல்லாம் இறைவனே செய்ய வைக்கிறான்; இறையடியானுக்கும் அதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என கருதப்பட்டது. அடியான் அடியானே அல்ல; மாறாக இறைவனாவான் எனக் கூறத் தலைப்பட்டு விட்டனர்.

இதற்கு மாற்றமாக, இன்னொரு பிரிவினரோ, மனிதன் செய்யும் செயலில் இறைவனுக்கு எவ்வித தொடர்பும் இல்லை. எல்லாம் மனிதனுடைய அதிகாரத்திற்குட்பட்டதுதான் எனக் கூறினர். இந்தக் கொள்கைக்கு அடிப்படை யூனானி தத்துவ வாதமாகும். முஸ்லிம்கள் விதி பற்றிய தனது கொள்கைக்கு இந்த இரண்டு தத்துவங்களையே அடிப்படையாக கொண்டார்கள். உண்மைக்குப் புறம்பான இந்த கொள்கைகளை திருக்குர்ஆனின் மூலம் உறுதிப்படுத்த அவர்கள் விரும்பினார்கள். நமது நடத்தல், சுற்றித் திரிதல், எழுதல், உட்காருதல், சாப்பிடுதல், குடித்தல், திருடுதல், கற்பழித்தல், சூறையாடுதல், கொள்ளையடித்தல் இவையனைத்தும் இறைவனுடைய செயல் தான்; நமது செயலல்ல எனக் கூறுபவர்கள் திருக்குர் ஆனிலிருந்து இதுவே நிரூபணமாகிறது என்று கூறுகின்றனர்.

மேலும் பாராளுமன்ற ஆட்சியில் உள்ள அரசனுக்கு இருக்கும் உரிமை கூட இறைவனுக்கு நமது செயல்களில் உரிமை இல்லை. ஏனெனில் அந்த மன்னராவது சட்டங்களின் மீது கையெழுத்திடுகிறார். ஆனால் இறைவன் இந்த அளவு கூட செய்வதில்லை. உலகின் நடைமுறைகளில் எந்தவித தொடர்பும் இல்லாத ஒருவன்தான் இறைவன் என்று கூறுகின்ற இவர்களும் இது திருக்குர்ஆனிலிருந்து நிரூபணமாகிறது என்றே கூறுகின்றனர்; ஆனால் உண்மையில் இரண்டும் தவறானவையாகும்.

### திருக்குர்ஆன் இவ்விஷயங்களை ரத்து செய்கிறது:

மனிதன் எதையெல்லாம் செய்கிறானோ அது மனிதன் செய்வதல்ல; மாறாக, இறைவனே செய்கிறான் என்று கூறுவதும், நாம் எதையெல்லாம் செய்கின்றோமோ அது நாமே செய்வதுதான்; அதில் இறைவனுக்கு எந்தத் தொடர்பும் இல்லை என்று கூறுவதும் அறிவால் ஒரு நிமிடத்திற்காக கூட ஏற்றுக் கொள்ள முடியாத போதனைகளாகும்.

இவ்விரண்டில் ஒரு போதனையையாவது அது திருக்குர்ஆனில் காணப்படுகிறது என திருக்குர்ஆனைப் படிக்கும் எவராவது நினைப்பாராயின் அது ஒரு மூடத்தனமானதாகும். தக்தீர் பற்றி திருக்குர்ஆன் என்ன கூறுகிறது என்பதைக் கண்டறியும்





நோக்கத்துடன், திருக்குர்ஆனின் ‘அல்ஹம்து லில்லாஹ்’ வின் அலிஃப் என்பதிலிருந்து ‘வன்னாஸ்’ என்பதன் (கடைசி எழுத்தான) ‘சீன்’ வரை நான் படித்தேன். ஆனால் அல்ஹம்து என்பதன் (முதல் எழுத்தான) ‘அலிஃப்’ என்பதிலிருந்து வன்னாஸ் என்பதன் (கடைசி எழுத்தான) ‘சீன்’ வரையுள்ள ஒவ்வொரு சொல்லும் மேற்கண்ட இரண்டு கூற்றையும் மறுக்கிறது என்ற உறுதியான முடிவுக்கு நான் வந்துள்ளேன். திருக்குர்ஆனைப் படிக்கும் பிறரும் இதே முடிவுக்குத்தான் வருவார்கள். மேலும் திருக்குர்ஆன் இவற்றை எவ்வாறு ஆகுமானதாக ஆக்கியிருக்கும்? ஏனெனில் இவையிரண்டும் தவறானது மட்டுமல்லாமல், ஒழுக்கத்தை கொலை செய்யக் கூடியதும் ஆன்மீகத்தை அழிக்கக் கூடியதுமாகும். இஸ்லாம் இந்த விவகாரம் தொடர்பாக எத்தகைய போதனையை வழங்கியிருக்கிறதென்றால் அதை ஒருவர் புரிந்து கொண்டால், அவர் இறை நெருக்கத்தையுடையவராக - ஏன் - மாபெரும் இறை நெருக்கத்தையுடையவராக ஆகலாம்.

எந்தவோர் அறிவும், எந்தவொரு தத்துவ வாதமும் அது குறித்து ஆட்சேபிக்க முடியாத அளவுக்கு இஸ்லாம் விதி பற்றி தெளிவுபடுத்தியுள்ளது. மேலும் அது மிகவும் பயனுள்ள போதனையாகும்.

1. தக்தீர் (விதி) என்பது அவர்கள் செய்வதையெல்லாம் இறைவனே செய்ய வைக்கிறான் என சிலர் கூறுகின்றனர். உதாரணமாக, நாம் எவரையாவது கொலை செய்தால் அது இறைவனே செய்ய வைக்கிறான். நாம் என்ன செய்ய முடியும்? என்று கூறுகின்றனர்.

2. சின்னச் சின்ன விஷயங்களில் குறுக்கிடுவதற்கு இறைவனுக்கு என்ன அவசியம் வந்து விட்டது? என வேறு சிலர் கூறுகின்றனர். உதாரணமாக, துப்புதல், சிறுநீர் கழித்தல் போன்ற காரியங்களில் இறைவனுக்கு என்ன சம்பந்தம்? இவற்றில் இறைவனுக்கு சம்பந்தம் இருக்கிறது என்று நம்புவது இறைவனுக்கு இழுக்காகும் என்று கூறுகின்றனர். இவ்விரு பிரிவினரும் தமது கருத்துகளுக்கு திருக்குர் ஆனின் எந்தெந்த வசனங்களை அடிப்படையாகக் கொண்டார் களோ அவற்றில் சிலவற்றைப் பற்றி

இப்போது நான் கூறுகிறேன். அப்போதுதான் இவர்களின் அடிப்படை எவ்வளவு பலவீனமானது என்பதை உங்களால் புரிந்து கொள்ள முடியும்.

### எல்லா செயலையும் இறைவனே செய்ய வைக்கிறான் என்ற சிந்தனைக்கு மறுப்பு

எவர்கள், மனிதன் செய்வதையெல்லாம் இறைவனே செய்ய வைக்கிறான்; மனிதனுக்கு அதில் எந்த அதிகாரமும் இல்லை என்று கூறுகிறார்களோ அவர்கள் தமக்கு சாதகமாக திருக்குர்ஆனிலுள்ள சூரா சாஃப்பாத் என்பதன் பின்வரும் வசனங்களை எடுத்து வைக்கிறார்கள்:

وَاللّٰهُ خَلَقَكُمْ وَمَا تَعْمَلُوْنَ○

(வல்லாஹு கலககும் வமா தஃமலூன்)

பொருள் : அல்லாஹ்தான் உங்களையும், உங்கள் செயலையும் படைத்துள்ளான். *(37:97)*

நம்மையும், நமது செயல்களையும் இறைவனே படைத்திருக்கும்போது, செய்வதெல்லாம் இறைவனே செய்கிறான். இதற்குப் பிறகும் நான் ஒன்றைச் செய்கிறேன் என்று யார் கூற முடியும்? அவர்களின் கருத்தின்படி இந்த வசனம் இந்த விவகாரத்தை தெளிவான முறையில் தீர்த்துவிட்டது என்று அவர்கள் கருதுகின்றனர். ஆனால் உண்மையில் இவர்கள், நான் இப்போது கூறிய அதே தவற்றைத்தான் செய்துள்ளார்கள். அதாவது, அவர்கள் வசனத்தின் ஒரு பகுதியை மட்டும் எடுத்துக் கொண்டார்கள். மற்றதை அத்துடன் இணைத்துப் பார்க்கவில்லை.

ஏனெனில் இந்த வசனத்திற்கு முந்தைய வசனம் இதுவாகும்:

قَالَ أَتَعْبُدُوْنَ مَا تَنْحِتُوْنَ ۙ○

(கால அதஃபுதூன மா தன்ஹிதூன்)

பொருள்: நீங்களே செதுக்கிக் கொண்டவற்றை நீங்கள் வணங்குகின்றீர்களா? *(திருக்குர்ஆன் 37:96)*

அரபி இலக்கண விதிப்படி, ‘மா’ என்ற சொல் சில நேரத்தில்





வினைச் சொல்லுடன் சேர்ந்து வரும்போது பெயர் உரிச்சொல்லின் பொருளைத் தருகிறது. சில நேரங்களில் செயப்படு பொருளின் பொருளைத் தருகிறது.

எவர்கள் وَاللّٰهُ خَلَقَكُمْ وَمَا تَعْمَلُوْنَ○ (வல்லாஹு கலககும் வமா தஃமலூன்) என்ற வசனத்திற்கு அல்லாஹ் உங்களையும் படைத்துள்ளான்; உங்களது செயல்களையும் படைத்துள்ளான் என பொருள் கொள்கிறார்களோ அவர்கள் இந்த இடத்தில் பெயர் உரிச் சொல்லின் பொருளைக் கொடுக்கிறார்கள். ஆனால் இங்கு பெயர் உரிச் சொல்லின் பொருளைத் தராது என்பது முந்தைய வசனத்திலிருந்து தெளிவாகிறது. ஏனெனில் முந்தைய வசனமாகிய ‘அதஃபுதுனமா தன் ஹிதூன்’ என்பதை சேர்த்து படித்தால் - அதற்கு அல்லாஹ் உங்களையும், உங்களது செயல்களையும் படைத்துள்ளான் என பொருள் கொடுத்தால் இந்த வசனம் அர்த்தமில்லாது போய்விடும். மேலும் அடுத்துள்ள வசனம் முன்னுள்ள வசனத்தை மறுக்கிறது. ஏனெனில் முன்னுள்ள வசனத்தில், நீங்களே செதுக்கிக் கொண்டவற்றை நீங்கள் ஏன் வணங்குகின்றீர்கள் என வினவப்பட்டுள்ளது. பின்னுள்ள வசனத்தில், உங்களையும், உங்களின் செயல்களையும் இறைவன் படைத்துள்ளான் என கூறப்பட்டுள்ளது. இந்த சொற்றொடர் சம்பந்தமில்லாதது மட்டுமில்லாமல் நேர்மாறானதுமாகும். ஏனென்றால், இறைவனே அவர்களின் செயல்களைப் படைத்திருக்கும் போது, நீங்கள் சிலைகளை ஏன் வணங்குகின்றீர்கள் என அவர்களிடம் ஏன் வினவப்படவேண்டும்?

எனவே இந்த வசனத்திற்கு இந்த பொருள் இருக்கவே முடியாது. மாறாக, இந்த இரண்டு வசனங்களின் பொருள், நீங்கள் உங்கள் கைகளினாலேயே செதுக்கி உருவாக்குகின்றவற்றை நீங்கள் வணங்குகின்றீர்களா என்ன? ஆனால் அல்லாஹ்வோ உங்களையும் படைத்துள்ளான்; நீங்கள் செதுக்குகின்றவற்றையும் - அதாவது சிலைகளையும்- படைத்துள்ளான் என்பதாகும். மேலும் ‘மா’ எனும் உருபு முதல் வசனத்தில் தனக்குப் பின்னுள்ள வினைச் சொல்லுடன் சேர்ந்து செயப்படுபொருளின் அர்த்தத்தைக் கொடுப்பது போன்றே அடுத்துள்ள வசனத்திலும் செயப்படுபொருளின் அர்த்தத்தைக்

கொடுக்கிறது. அதாவது மா தஃமலூன்’ என்பது ‘மஃமூலுக்கும்’ என்பதாகும். அதாவது ‘நீங்கள் செதுக்குபவற்றையும்.

(அல்லாஹ்தான் உங்களையும் படைத்துள்ளான்; நீங்கள் செதுக்குகின்ற சிலைகளையும் படைத்துள்ளான் என்பது இந்த (37:96-97) வசனங்களின் கருத்தாகும்.)

சுருக்கமாக, இந்த வசனத்திற்கு தவறான பொருள் கொடுக்கப்படுகிறது. இந்த வசனத்திற்கு முன்னுள்ள வசனமே இதற்கான அர்த்தங்களைத் தீர்த்து வைக்கிறது. இந்த வசனத்தில் மனித செயல்கள் (இறைவனால்) உருவாக்கப்படுவது பற்றிய எந்த குறிப்பும் இல்லை.

**இரண்டாவது வசனத்தின் சரியான பொருள்**

இந்த வசனத்தைத் தவிர வேறு சில வசனங்களையும் இம்மக்கள் எடுத்து வைக்கிறார்கள். அவற்றில் ஒன்றிரண்டு பெரிய வசனங்களைப் பற்றி இப்போது நான் கூறுகிறேன். (விதிக்கு சான்றாக) மக்கள் இந்த வசனத்தையும் எடுத்து வைக்கிறார்கள்:

قُل لَّن يُصِيبَنَآ إِلَّا مَا كَتَبَ ٱللَّهُ لَنَا هُوَ مَوْلَىٰنَا ۚ وَعَلَى
ٱللَّهِ فَلْيَتَوَكَّلِ ٱلْمُؤْمِنُونَ ○

“நீர் (அவர்களிடம்) கூறுவீராக: அல்லாஹ் எங்களுக்கு விதித்திருப்பதுதான் எங்களுக்கு ஏற்படும். அல்லாஹ்வே எங்கள் பாதுகாவலனாவான். மேலும் நம்பிக்கையாளர்கள் அல்லாஹ்விடத்தி லேயே நம்பிக்கை வைத்தல் வேண்டும்.” (9:51)

ஏற்கனவே மனிதனுடைய தலையெழுத்தில் எழுதப்பட்டது தான் அவனுக்குக் கிடைக்கிறது என இறைவனே (இவ்வசனத்தில்) கூறுவதாக அவர்கள் கூறுகின்றார்கள். உணவு, உடை, செல்வம் போன்றவை இன்னாருக்கு இவ்வளவு, இவ்வளவு கிடைக்க வேண்டும் என இறைவன் எழுதியதை விட குறைவாகவோ அல்லது அதிகமாகவோ மனிதனுக்கு கிடைப்பதில்லை.

அல்லது இன்னின்ன ஆட்களை இன்னின்ன வழிகளில் கொலை செய்ய வேண்டும் என்றோ, இன்னின்ன இடங்களில் இந்த





ஆள் மூலமாக தூக்கில் தொங்க வேண்டும் என்றோ எழுதப்பட்டிருக்கும் போது மனிதனுக்கு என்ன அதிகாரம் உள்ளது? என அவர்கள் கூறுகிறார்கள்.

ஆனால் உண்மையில் இங்கு கூறப்பட்ட விஷயமே வேறாகும். இந்த இடத்தில் நிராகரிக்கப்பவர்களுடனுள்ள போர் பற்றி இறைவன் குறிப்பிடுகிறான். போரின் விளைவாக முஸ்லிம்களுக்கு ஏதாவது துன்பம் ஏற்பட்டால் நயவஞ்சகர்கள் மகிழ்ச்சியடைகிறார்கள். மேலும் நாம் ஏற்கெனவே நமது பாதுகாப்பிற்கான ஏற்பாட்டை செய்து விட்டிருந்தோம்; எனவே நாம் துன்பத்திலிருந்து தப்பி விட்டோம் என்றும், தன்னை விட வலிமை மிக்கவர்களுடன் போரிடுகின்ற முஸ்லிம்கள் மடையர்களாவர் என்றும் அந்நயவஞ்சகர்கள் கூறுகின்றனர். அல்லாஹ் கூறுவதாவது, நீங்கள்தான் மடையர்கள்; குருடர்கள். முஸ்லிம்கள் தோல்வி யடைவார்கள். மேலும் நிராகரிப்பவர்கள் வெற்றி பெற்று விடுவார்கள் என நீங்கள் நினைக்கின்றீர்கள். ஆனால் அது நடக்காது. ஏன்? ஏனெனில் தனது தூதர் எப்பொழுதும் வெற்றிபெறுவார் என்று இறைவன் நியமிக்கப்பட்ட நடைமுறையின்படி, முஸ்லிம்கள் வெற்றி பெறுவார்கள் என்று அவன் விதித்துள்ளான்.

எனவே, ஒவ்வொரு செயலும் இறைவனின் கட்டளைக்கேற்ப நடக்கிறது என்பது இங்கு குறிப்பிடப்படவில்லை. மாறாக, நம்பிக்கையாளர்கள், நிராகரிப்போரை முறியடிப்பர்; மேலும் வெற்றி பெறுவர் என்ற விஷயம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்பதை மட்டுமே குறிப்பிடுகிறது. அவ்வாறல்லாமல் வழிப்பறி செய்தல், திருடுதல், கொள்ளையடித்தல், பொய்யுரைத்தல் ஆகியவை குறித்து இறைவன் எழுதி விட்டிருக்கிறான் என்பதல்ல. (அல்லாஹ் எங்களுக்கு விதித்திருப்பதுதான் எங்களுக்கு ஏற்படும் என்ற 9:51-ல் உள்ள) இ(க் கருத்)தினை இறைவனே திருக்குர்ஆனின் பிறிதோரிடத்தில், كَتَبَ ٱللَّهُ لَأَغْلِبَنَّ أَنَا۠ وَرُسُلِىٓ ‘நானும் எனது தூதர்களும் கண்டிப்பாக வெற்றி பெற்றே தீருவோம் என அல்லாஹ் எழுதியுள்ளான்’ என்று கூறியுள்ளான். *(காண்க 58 : 22)*

ஆகவே, இந்த வசனத்தில் ‘எழுதியுள்ளான்’ என்பது மனித செயல்களைக் குறித்ததல்ல. மாறாக, இறைதூதர் மற்றும் நம்பிக்கையாளர்களின் வெற்றியை குறித்ததாகும்.

### மூன்றாவது வசனத்தின் சரியான பொருள்

பின்னர் (விதிக்கு சான்றாக) அவர்கள் இன்னொரு வசனத்தையும் முன் வைக்கின்றனர்.

وَلَقَدْ ذَرَأْنَا لِجَهَنَّمَ كَثِيرًا مِّنَ الْجِنِّ وَالْإِنسِ ۖ لَهُمْ قُلُوبٌ
لَّا يَفْقَهُونَ بِهَا وَلَهُمْ أَعْيُنٌ لَّا يُبْصِرُونَ بِهَا وَلَهُمْ آذَانٌ
لَّا يَسْمَعُونَ بِهَا ۚ أُولَٰئِكَ كَالْأَنْعَامِ بَلْ هُمْ أَضَلُّ ۚ أُولَٰئِكَ
هُمُ الْغَافِلُونَ ○

"நிச்சயமாக நாம் ஜின்களிலும் மனிதர்களிலும் பெரும்பாலானவர்களை **நரகத்திற்காகப் படைத்திருக்கிறோம்.** அவர்களைப் புரிந்துகொள்ளும் அடையாளங்கள் என்னவெனில், அவர்களுக்கு உள்ளங்கள் இருந்தும் அவற்றால் அவர்கள் புரிந்து கொள்வதில்லை. அவர்களுக்குக் கண்கள் உண்டு; ஆயினும் அவர்கள் காண்பதில்லை. அவர்களுக்குக் காதுகள் உண்டு; ஆயினும் அவர்கள் கேட்பதில்லை. அவர்கள் கால் நடைகளைப் போன்றவர்களாவர். இன்னும் சொல்லப் போனால், அவர்கள் அவற்றை விடவும் மிகக் கெட்டவர்களாவர். உண்மையில் அவர்கள் கவனமற்றவர்களே ஆவர்." *(7:180)*

இந்த வசனத்தை எடுத்துக் கொண்டு அவர்கள், பாருங்கள்! நரகத்திற்காக ஜின்களையும், மனிதர்களையும் நான் படைத்துள்ளேன் என இறைவனே கூறுகின்றான். இறைவனே பலரை நரகத்திற்காகப் படைத்திருக்கும்போது அவர்களை தீய செயல்கள் செய்வதை விட்டும் யாரால் தடுத்து நிறுத்த முடியும்? நரகத்தின் பக்கம் அவர்களை இழுத்துச் செல்லும் செயல்களைச் செய்வது அவர்களுக்கு கட்டாயமாகி விட்டது எனக் கூறுகின்றனர்.

ஆனால் இந்த வசனத்திற்குக் கொடுக்கப்படும் பொருளும் தவறானதாகும். அரபி மொழியில் 'லாம்' என்ற எழுத்து சில நேரத்தில் காரணத்தைத் தெரிவிப்பதற்கும், இன்னும் சில நேரத்தில் விளைவைத் தெரிவிப்பதற்கும் பயன்படுத்தப்படுகிறது. மொழி வழக்கில் அதனை 'லாமுல் ஆகிபா' என்பர். இங்கு 'லி ஜஹன்னம' என்பதில் உள்ள 'லாம்' இந்த நோக்கத்திற்காகவே வந்துள்ளது. நரகத்தில் நுழைப்பதற்காகவே நாம் ஜின்னையும் மனிதனையும் படைத்துள்ளோம் என்பது அதற்குப் பொருளல்ல. ஏனெனில் இந்தப் பொருள், மற்ற வசனங்களுக்கு நேர் மாற்றமானதாகும். உதாரணமாக, وَمَا خَلَقْتُ الْجِنَّ وَالْإِنسَ إِلَّا لِيَعْبُدُونِ ○ நான் ஜின்களையும், மனிதனையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன் என அல்லாஹ் கூறுகிறான். *(காண்க 51 : 57)*





இறை அடியாரைக் குறித்து, வத்குலீ ஜன்னதீ இறை அடியாரின் தங்குமிடம் சுவர்க்கமாகும் என்று அல்லாஹ் கூறுகிறான். *(காண்க 89 : 30-31)*

ஆகவே இந்த வசனங்கள் இருக்கும்போது, 'வலகத் ஸரஃனா லிஜஹன்னம' என்பதற்கு, அல்லாஹ் பலரை நரகத்திற்காகப் படைத்துள்ளான் என்று பொருள் கொள்ளவே முடியாது.

மனிதன் இறைவனின் அடியானாக ஆகுவதற்கும், சுவர்க்கத்திற்கு உரியவனாக ஆகுவதற்குமே படைக்கப்பட்டுள்ளான். (அல்லாஹ் நரகத்திற்காகப் படைத்துள்ளான் என்ற) இந்தப் பொருள் சரியில்லையென்றால் வேறொரு பொருள் கொடுக்க வேண்டியது வரும். இங்கு வந்துள்ள 'லாம்' என்பதும் லாமுல் ஆகிபா (விளைவைக் குறிப்பிடும் லாம்) என்ற பொருளில்தான் வந்துள்ளது. எனவே இந்த வசனத்தின் பொருள் நாம் மனிதனைப் படைத்துள்ளோம். ஆனால் அவன் சுவர்க்கவாசியாக ஆகுவதற்குப் பதிலாக நரகத்திற்கு உரியவனாக ஆகிவிட்டான் என்பதாகும். இந்த பொருளில் 'லாம்' அரபி மொழியில் அதிகமாக பயன்படுத்தப்படுகிறது. மேலும் திருக்குர்ஆனிலும் மற்ற இடங்களில் இந்த பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

அரபி மொழி நடையில் அதற்கு பின்வரும் கவிதை ஓர் உதாரணமாகும்:

أَمْوَالُنَا لِذَوِي الْمِيرَاثِ نَجْمَعُهَا        وَدُورُنَا لِخَرَابِ الدَّهْرِ نَبْنِيهَا

(அமவாலுனா லி ஸவில மராஸி நஜமவுஹா. வதுவரனா லி கராபித்தஹ்ரு நப்னீஹா)

பொருள்: வாரிசுகள் எடுத்துச் செல்வதற்**காக** நாம் செல்வங்களைச் சேகரிக்கிறோம். காலம் நாசமாக்க வேண்டும் என்பதற்**காக** நாம் வீடுகளைக் கட்டுகிறோம்.

செல்வங்களை சேகரிப்பதற்கும் வீடுகளைக் கட்டுவதற்கும் உள்ள நோக்கம் இதுவல்ல என்பது வெளிப்படை. ஆயினும் ஏற்படும் விளைவு இதுதான்.

கவிஞரின் நோக்கம், மக்கள் செல்வங்களை சேகரிக்கிறார்கள். ஆனால் உறவினர்கள் அவற்றை எடுத்துச் செல்கின்றனர். அவ்வாறே மக்கள் வீடுகளைக் கட்டுகின்றனர். ஆனால் விளைவோ, காலங்கள் அந்த வீடுகளை நாசமாக்கி விடுகின்றன என்பதாகும்.

திருக்குர்ஆனில் மிகவும் தெளிவான உதாரணம் கஸஸ் எனும் அதிகாரத்தில் வந்துள்ளது. அங்கு இறைவன் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் குறித்து இவ்வாறு கூறுகின்றான்:

فَالْتَقَطَهٗۤ اٰلُ فِرْعَوْنَ لِيَكُوْنَ لَهُمْ عَدُوًّا وَّحَزَنًا ؕ

(ஃபல்தகதஹூ ஆலுஃபிர்அவ்ன லியகூன
லஹூம் அதுவ்வன்வ்வ ஹஸனா - *28:9)*

அதாவது ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களை அவரது தாயார் நதியில் போட்ட போது, அவரை ஃபிர்அவ்னின் மக்கள், அவர் பெரியவராகி அவர்களுக்கு **விரோதியாக ஆகுவதற்காகவும், அவர்களின் துயரத்துக்குக் காரணமாக ஆகுவதற்காகவும்** எடுத்துக் கொண்டனர்.

ஆனால் ஃபிர்அவ்னின் குடும்பத்தவர்கள் மூஸாவை எடுத்துக் கொண்டபோது அவர்களின் நோக்கம் இதுவாக இருந்திருக்க முடியாது என்பது தெளிவான விஷயம். அடுத்த வசனத்திலிருந்தே தெரிவதைப் போன்று, அவர்களின் நோக்கம் இதுவாக இல்லாதிருந்தது மட்டுமல்லாது அதற்கு மாற்றமாக இருந்தது. ஏனெனில் அடுத்த வசனத்திலேயே, ஃபிர்அவ்னின் மனைவி ஃபிர்அவ்னிடம் இவ்வாறு கூறியதாக அல்லாஹ் கூறுகின்றான்:

عَسٰۤى اَنْ يَّنْفَعَنَاۤ اَوْ نَتَّخِذَهٗ وَلَدًا وَّهُمْ لَا يَشْعُرُوْنَ ○





“இவன் நமக்குப் பயனளிக்கலாம்: அல்லது நாம் இவனை மகனாக ஆக்கிக் கொள்ளலாம் என்றாள். ஆனால் அவர் பெரியவராகி, அவர்களின் அழிவிற்குக் காரணமாவார் என்பதை அவர்கள் அறிந்திருக்கவில்லை.” *(28:10)*

எனவே இந்த வசனத்தின் பொருள், ஃபிர்அவ்னின் குடும்பத்தினர் அவரை எடுத்துக் கொண்டனர். ஆனால் கடைசியில் அந்த குழந்தை அவர்களுக்கு எதிரியானது. மேலும் அவர்களின் துயரத்திற்கு காரணமாக அமைந்தது என்பதாகும். மேலும் இதே பொருள்தான் நரகத்திற்காக நாம் படைத்திருக்கிறோம் என்பதில் ‘லாம்’ என்ற சொல்லுக்கு உண்டு.

(அதாவது, மனிதன் இறை நெருக்கத்தைப் பெற்று சுவர்க்கத்தை அடைய வேண்டும் என்பதற்காக நாம் அவனைப் படைத்தோம். ஆனால் அவன் தன் தீய செயலின் காரணமாக நரகத்திற்குக் காரணமாகி விட்டான். )

ஆகவே இந்த வசனத்திலிருந்து இறைவன் சிலரை நரகவாசிகளாகவும், இன்னும் சிலரை சொர்க்கவாசிகளாகவும் வலுக்கட்டாயமாக ஆக்குகிறான் என்று ஆதாரம் எடுப்பது சரியல்ல.

**நான்காவது வசனத்தின் சரியான பொருள்**

இவ்வாறே (விதிக்கு சான்றாக அவர்கள்) இந்த வசனத்தையும் எடுத்து வைக்கிறார்கள்:

وَقَالَ مُوْسٰى رَبَّنَاۤ اِنَّكَ اٰتَيْتَ فِرْعَوْنَ وَمَلَاَهٗ زِيْنَةً وَّاَمْوَالًا فِى
الْحَيٰوةِ الدُّنْيَا ۙ رَبَّنَا لِيُضِلُّوْا عَنْ سَبِيْلِكَ ۚ

மேலும் மூஸா கூறினார்: எங்கள் இறைவா! நீ ஃபிர்அவ்னுக்கும் அவனுடைய சமுதாயத் தலைவர்களுக்கும் **அவர்கள் மக்களை வழி கெடுக்க வேண்டும் என்பதற்காக** உலக வாழ்க்கையில் அலங்காரத்தையும் செல்வங்களையும் வழங்கியுள்ளாய். (10:89)

இந்த வசனத்திலும் **மக்களை வழிகெடுப்பதற்காக** அவர்களுக்கு செல்வங்கள் கொடுக்கப்பட்டன **என்பது பொருளல்ல**. மாறாக, சென்ற வசனங்களைப் பற்றி நான் கூறி

வந்துள்ளதைப் போன்று இங்கும் லாம் என்பது லாமுல் ஆகிபா (விளைவைத் தெரிவிக்கக் கூடிய லாம்) ஆகும். அதாவது, இறைவா! மக்களை வழிகெடுக்க வேண்டும் என்பதற்காக நீ அவர்களுக்கு செல்வங்களை வழங்கவில்லை. எனினும் அவர்கள் அப்படியே செய்கிறார்கள்.

**ஐந்தாவது வசனத்தின் சரியான பொருள்**

பின்னர் அவர்கள் கூறுகின்றார்கள். ஒரு வசனம் (விதிப்படிதான் எல்லாம் நடக்கும் என்ற) எங்களது கூற்றை முற்றிலும் தெளிவாக்கிவிட்டது. அது வருமாறு:

أَيْنَ مَا تَكُونُوا يُدْرِككُّمُ الْمَوْتُ وَلَوْ كُنتُمْ فِي بُرُوجٍ مُّشَيَّدَةٍ ۗ
وَإِن تُصِبْهُمْ حَسَنَةٌ يَقُولُوا هَٰذِهِ مِنْ عِندِ اللَّهِ ۖ وَإِن تُصِبْهُمْ
سَيِّئَةٌ يَقُولُوا هَٰذِهِ مِنْ عِندِكَ ۚ قُلْ كُلٌّ مِّنْ عِندِ اللَّهِ ۖ فَمَالِ
هَٰؤُلَاءِ الْقَوْمِ لَا يَكَادُونَ يَفْقَهُونَ حَدِيثًا

“நீங்கள் எங்கிருந்தாலும் – வலிமை வாய்ந்த கோட்டைகளில் நீங்கள் இருந்தாலும் சரியே – மரணம் வந்து உங்களைப் பிடித்துக் கொள்ளும். (மேற்கூறப்பட்ட) அவர்களுக்கு ஏதேனும் நன்மை ஏற்பட்டால், இது அல்லாஹ் விடமிருந்து வந்ததென்று கூறுகின்றனர். அவர்களுக்கு ஏதேனும் தீமை ஏற்பட்டால் இது உம்மிடமிருந்து (முஹம்மதிடமிருந்து) வந்ததென்று கூறுகின்றனர். எல்லாமே, அல்லாஹ்விடமிருந்து வந்தவை என்று நீர் கூறுவீராக. இந்த விஷயத்தைக் கூட இவர்கள் புரிந்து கொள்ளவில்லையே! இவர்களுக்கு என்ன நேர்ந்தது?” (4:79)

பாருங்கள். நன்மை, தீமை எல்லாமே இறைவன் புறமிருந்து வருகின்றன என்பது இந்த வசனத்திலிருந்து தெரிகிறது என்று அவர்கள் கூறுகின்றனர். ஆனால், ஒவ்வொரு செயலின் – அது நல்லதாயினும், தீயதாயினும் – விளைவு அல்லாஹ்விடமிருந்தே கிடைக்கின்றன என்பதை அவர்கள் புரியவில்லை.

ஒவ்வொரு செயலின் நற்கூலியோ, தண்டனையோ இறைவன் புறமிருந்தே கிடைக்கின்றன என்பதை யார்





மறுக்கிறார்கள்? அப்படியே நன்மையும் தீமையும் இறைவன் புறமிருந்தே வருகின்றன என ஏற்றுக் கொண்டாலும், அதில் எவ்வித குற்றமும் இல்லை. உண்மை என்னவென்றால் சில நேரங்களில் ஊழியரின் செயலும் எஜமானின் செயலாகவே கருதப்படுகிறது. அச்செயலைப் பற்றிய நோக்கம் எஜமானுக்கு இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரியே. உதாரணமாக, ஓர் எஜமானரின் ஊழியர் ஒருவருக்கு துன்பம் இழைத்தால் தன் ஊழியர் பிறருக்கு துன்பம் கொடுக்க வேண்டும் என்பது எஜமானனின் நோக்கம் இல்லையென்றாலும் உங்களால் எங்களுக்கு துன்பம் வந்தது என்று நாம் சில நேரத்தில் எஜமானரைப் பார்த்துக் கூறிவிடுகிறோம். இவ்விதமாக ஊழியரின் துன்பம் இழைக்கும் செயலை எஜமானரின் செயலாக கூறிவிடுகிறோம்.

இந்த விதிமுறைப்படி இந்த வசனத்திற்கு பொருள் கொடுப்போமாயின் எந்த பொருட்களை தவறாக பயன்படுத்துவதன் காரணமாக பாவங்கள் பிறக்கின்றனவோ அப்பொருட்கள் இறைவனால் படைக்கப்பட்டவையாகும். எனவேதான் இறைவனைக் குறித்து நன்மையும் தீமையும் அவன் புறமிருந்தே வருகின்றன என கூறப்பட்டது என்று பொருள்படும். இவ்விதமாக பொருள் கொள்வதால் செயல்களில் பலவந்தம் உண்டு என நிரூபணமாகாது. இறைவன் வலுக்கட்டாயமாகப் பிடித்து தீமையைச் செய்ய வைக்கிறான் என்ற முடிவுக்கு ஒருபோதும் நாம் வரவேண்டியதில்லை. மாறாக, இறைவன் மனிதனிடத்தில் சில ஆற்றல்களைப் படைத்துள்ளான்: அவற்றைத் தவறாகப் பயன்படுத்தி மனிதன், கற்பழிப்பு, திருட்டு ஆகியவற்றைச் செய்கிறான் என்றே பொருள் கொள்ள வேண்டும்.

இந்த வசனத்திற்கும் நான் முன்னர் கூறிய அதே பொருள்தான். அதாவது, இங்கு செயல்கள் பற்றி குறிப்பிடவில்லை. இன்ப துன்பங்களைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. முதலில் இறைவன் நயவஞ்சகர்களிடம், நீங்கள் எங்கிருந்த போதிலும் மரணம் உங்களை வந்தடையும் என்று கூறுகிறான். அதாவது உங்களின் தீய செயல்களின் காரணமாக உங்களுக்காக அழிவின் தண்டனையை இறைவன் ஏற்படுத்தியுள்ளான். இப்போது இது தீர்மானிக்கப்பட்டு

விட்டதால், நீங்கள் எவ்வளவு எச்சரிக்கையாக இருந்தாலும் ஒன்றும் செய்ய முடியாது.

பின்னர் கூறுகிறான். நன்மை இறைவன் புறமிருந்தும் தீமை உம்மிடமிருந்தும் வருவதாக இவர்கள் கூறுகின்றனர். இது இவர்களின் அறிவீனமாகும். நற்கூலி, தண்டனை கொடுப்பதில் உமக்கு என்ன தொடர்பு இருக்கிறது? இன்பமும் துன்பமும் செயலின் விளைவுகள் என்ற முறையில் அல்லாஹ்வின் புறமிருந்து வருகின்றன. அதாவது இன்னாருக்கு இன்ன செயலின் விளைவாக இன்ன நன்மை அல்லது இன்ன தீமை ஏற்பட வேண்டும் என்பதை அல்லாஹ் தீர்மானிக்கின்றான். இதில் உமக்கு என்ன தொடர்பிருக்கிறது? இது இறைவனுடைய வல்லமையாகும். இதனை அவன் எந்த அடியாருக்கும் கொடுக்கவில்லை. எனவேதான், இவர்கள் இந்த சிறு விஷயத்தைக் கூட புரிந்துகொள்ள வில்லையே. இவர்களுக்கு என்ன நேர்ந்தது என்று இறைவன் கூறுகிறான். அடுத்த வசனத்திலேயே இதனை மேலும் விளக்கிக் கூறுகிறான்:

مَآ أَصَابَكَ مِنْ حَسَنَةٍ فَمِنَ اللَّهِ ۖ وَمَآ أَصَابَكَ مِن سَيِّئَةٍ فَمِن نَّفْسِكَ ۚ

ஏதேனும் நன்மை உமக்குக் கிடைத்தால் அது அல்லாஹ்விடமிருந்தே கிடைக்கிறது. மேலும் ஏதேனும் தீமை உமக்குக் கிடைத்தால் அது உம்மிடமிருந்தே. (4:80)

இப்போது, எல்லா செயல்களும் இறைவன் புறமிருந்தே உருவாகின்றன என்று முதல் வசனத்திற்குப் பொருள் கொண்டால், இந்த வசனத்திற்கு எந்த பொருளும் கொள்ள முடியாது. நான் கொடுத்த பொருளையே முதல் வசனத்திற்குக் கொடுத்தால்தான் இந்த வசனத்திற்கு அர்த்தம் ஏற்பட முடியும். இந்த விதத்தில் பார்க்கும்போது இரண்டாவது வசனம் இவ்வாறு பொருள்படும்:

நல்ல பிரதிபலன் இறைவன் புறமிருந்தாகும். ஏனெனில் நன்மையைப் பற்றிய தூண்டுதல் அவன் புறமிருந்தே வருகிறது. துன்பம் ஏற்பட்டால் அது மனிதன் புறமிருந்து ஏற்படுவதாகும். ஏனென்றால் தீமை தவற்றினால் ஏற்படும் விளைவாகும். மேலும்





தவறு பற்றிய தூண்டுதல் அல்லாஹ்வின் புறமிருந்து ஏற்பட வாய்ப்பில்லை.

### ஆறாவது வசனத்தின் சரியான பொருள்

மேலும் (விதிப்படியே எல்லாம் நடக்கும் என வாதிடும்) அவர்கள் கூறுவதாவது, இன்னொரு வசனம் பொருளை மிகவும் தெளிவு படுத்திவிட்டது. அது வருமாறு:

قُل لَّوْ كُنتُمْ فِي بُيُوتِكُمْ لَبَرَزَ الَّذِينَ كُتِبَ عَلَيْهِمُ الْقَتْلُ إِلَىٰ مَضَاجِعِهِمْ ۖ

நீங்கள் உங்கள் வீடுகளில் இருந்தாலும் எவர்களைப் பற்றி கொலையுண்டு போக வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளதோ அவர்கள், தாம் கொலையுண்டு கிடக்க வேண்டிய இடங்களை நோக்கிக் கட்டாயம் வெளியேறியிருப்பார்கள். (3:155)

எல்லாம் இறைவனே செய்கிறான் என்பது இதிலிருந்து தெளிவாகிறது (என்கின்றனர்).

இதற்குரிய விடையாவது, முதலில் முந்தைய வசனங்களைப்பற்றி நான் ஏற்கனவே கூறியிருப்பதைப் போன்று இங்கும் செயலின் விளைவைப் பற்றித்தான் கூறப்பட்டுள்ளது; செயலைக் குறித்து கூறப்படவில்லை. இந்த வசனம் உஹது போர் பற்றியதாகும். இந்தப் போரில் நயவஞ்சகர்கள் ஆரம்பத்தில் போர் செய்வதற்காக முஸ்லிம்களுடன் வெளியேறினார்கள். ஆனால் ஆயிரம் பேர்களில் முந்நூறு பேர்கள் போருக்கான தகுந்த நேரத்தில் திரும்பி வந்து விட்டார்கள். இவ்வாறு அவர்கள், நாம் முஸ்லிம்களை ஏமாற்றி போரில் சிக்க வைத்து விட்டு வந்து விட்டோம் என தாமாகவே கருதினார்கள். எதிரிகளின் முன் சென்று திரும்பி விடுதல் கடினமான விளைவை ஏற்படுத்துவதாகும். மேலும் போருக்குப் பிறகு, நீங்கள் தேவையில்லாமல் தம்மைத் தாமே அபாயத்தில் ஆழ்த்தி விட்டீர்கள் எனக் கூறி அந்நயவஞ்சகர்கள் முஸ்லிம்களை கிண்டலடிக்க ஆரம்பித்தார்கள். இதற்கு விடையாகவே இறைவன் கூறுகிறான்: மூடர்களே! நாம் முஸ்லிம்களுடன் சென்று அவர்களை சிக்க வைத்து விட்டு

வந்துவிட்டோம். நம் உதவியின் மீது நம்பிக்கை வைத்துதான் இவர்கள் (முஸ்லிம்கள்) போரிடச் சென்றார்கள் எனக் கருதுகின்றீர்கள் என்றால், நன்றாகக் கேட்டுக் கொள்ளுங்கள். நீங்கள் பாதுகாப்பான கோட்டைகளில் இருந்தாலும் - அதாவது மதீனா போன்ற பாதுகாப்பற்ற இடம் ஒருபுறமிருக்கட்டும்-கோட்டைகளின் பாதுகாப்பு இருந்தாலும் கூட எவர்களின் மீது போர் செய்வது கடமையாக்கப்பட்டுள்ளதோ அவர்கள் நிராகரிக்கப்போரை எதிர்த்துப் போரிட பயப்படுவதில்லை. வெளியே சென்று எதிரிகளுடன் கண்டிப்பாகப் போரிடுவார்கள்.

ஆகவே இங்கு கூறப்பட்டுள்ள 'கு(த்)திப' என்பதற்கு விதிக்கப் பட்டுள்ளது என்று பொருளாகாது. மாறாக கடமையாக்கப்பட்டுள் ளது என்று பொருள்படும்.

كُتِبَ عَلَيْكُمُ الصِّيَامُ 'கு(த்)திப அலைக்குமு ஸ்ஸியாமு' (நோன்பு உங்கள் மீது கடமையாக்கப்பட்டுள்ளது) என்பதிலும் இதே பொருளைத்தான் கொடுக்கிறோம். மேலும் 'அல்கத்ல்' என்பதற்கு (தலைவிதிப்படி) கொலையுண்டு போதல் என்று பொருளல்ல; மாறாக கொலை செய்தல் என்று பொருளாகும். இந்த பொருளில் இந்த சொல் குர்ஆனில் பல இடங்களில் வந்துள்ளது. உதாரணமாக,

اَلْفِتْنَةُ اَشَدُّ مِنَ الْقَتْلِ (அல்ஃபித்னது அஷத்து மினல் கத்ல்) கலகம், கொலை செய்வதை விட மிகவும் கொடியது (2:192),

فَلَا يُسْرِفْ فِي الْقَتْلِ (ஃபலாயுஸ்ரிஃப், ஃபில்கத்ல்) கொல்லப்பட்டவரின் வாரிசான அவர் (கொலை செய்தவரைக்) கொன்று விடுவதில் எல்லையைக் கடந்து விடக் கூடாது (17:34)

மற்றும் اِنَّ قَتْلَهُمْ كَانَ خِطْاً كَبِيْرًا (இன்ன கத்லஹு௱ம் கான கித்அன் கபீரா) அவர்களைக் கொலை செய்வது நிச்சயமாக பெரும் குற்றமாகும். (17:32) ஆகியவை.

சுருக்கமாக, இந்த வசனத்தில் கூறப்பட்டிருப்பது என்னவென்றால், நம்பிக்கையாளர் அல்லாஹ்வின் கட்டளை களை ஏற்றுக் கொள்வதில் மகிழ்ச்சியடைகிறார்; ஒரு போதும் சோம்பேறித்தனம் காட்டமாட்டார். மதீனா நகரம் ஒன்றும் பாதுகாப்பான கோட்டையல்ல. முஸ்லிம்கள் வெளியில்





செல்லாமலிருந்தாலும் நிராகரிப்பவர்கள் அங்கு வரமுடியும். கோட்டைகளின் பாதுகாப்பு இருந்தாலும் வெளியில் சென்று தாக்குதல் நடத்துமாறு முஸ்லிம்களுக்காக கட்டளையிடப்பட்டால் அப்போதும் கூட அவர்கள் அதனைத் தவறாகக் கருதமாட்டார்கள். ஆர்வத்துடன் தமது கடமையைச் செய்வார்கள்.

## இறைவன் ஒன்றும் செய்வதில்லை என்ற கருத்திற்கு மறுப்பு

மேற்கூறப்பட்ட வசனங்களில், இறைவன் மனிதனை பலவந்தப்படுத்தி அவன் மூலம் எல்லா செயலையும் செய்ய வைக்கிறான் என்ற பொருள் எந்த வசனத்திலிருந்தும் புலவனாவதில்லை. அவ்வாறு புலனாகாதிருக்கும்போது, ஒவ்வொரு செயலையும் இறைவனே செய்ய வைக்கிறான் என்று அம்மக்கள் ஆதாரம் காட்டுவது முற்றிலும் தவறாகிவிட்டது.

மேலும் எவர்கள், இறைவன் ஒன்றும் செய்வதில்லை; அவனுக்கு எந்தவிதமான தொடர்பும் இல்லை என்று கூறுகிறார்களோ அவர்களின் கொள்கையும் தவறென திருக்குர்ஆனிலிருந்தே நிரூபணமாகிறது. உதாரணமாக, இந்த வசனத்தை எடுத்துக் கொள்ளுங்கள். இறைவன் கூறுகிறான்:

كَتَبَ اللّٰهُ لَاَغْلِبَنَّ اَنَا وَرُسُلِيْ

நிச்சயமாக நானும் என் தூதர்களும் வெற்றி பெற்றே தீருவோம் என அல்லாஹ் விதித்துள்ளான். *(திருக்குர்ஆன் 58:22)*

இப்போது பாருங்கள். ஒரு நபி உலகத்தில் தோன்றும் போது அவருடைய நிலைமை உலகியலைப் பொருத்தவரை மிகவும் பலவீனமாக இருக்கிறது. ஆனால் முழு உலகமும் அவருக்கு எதிராக உறுதியாக நின்றாலும் அவரை (அந்நபியை) வெற்றி கொள்ள முடியாது என இறைவன் கூறுகிறான். இன்று வரை அவ்வாறே நடந்து வருகிறது. உலகம் ஒருபோதும் இறைவனின் ஏதாவதொரு தூதரின் மீது வெற்றி கொள்ள முடிந்ததில்லை. இதில் இறைவனுக்கு சம்பந்தம் உண்டு; கண்டிப்பாக உண்டு என்பது இதிலிருந்து தெரிகிறது. இல்லையென்றால் உலகத்தால் இறைதூதர்களை ஏன் வெற்றி கொள்ள முடிவதில்லை? எனவே இவ்வுலக விஷயத்தில்

இறைவனுக்கு யாதொரு தொடர்பும் இல்லை என்பது தவறு என நிரூபணமாகிவிட்டது.

## இறையறிவையும், விதி விவகாரத்தையும் ஒன்றோடொன்று கலத்தல்

உண்மை என்னவெனில், தக்தீர் என்பது, நடப்பதெல்லாம் இறைவனே செய்ய வைக்கிறான்; நமக்கு இதில் எந்த தொடர்பும் இல்லை என்று குறிப்பிடுபவர்களின் கருத்து வஹ்தத்துல் வஜூத் எனும் (அத்வைதக்) கொள்கையை அடிப்படையாகக் கொண்டதென்றாலும் அவர்களுக்கு இன்னொரு விவகாரத்தால் தடுமாற்றம் ஏற்பட்டுள்ளது. மேலும் இதுவே முஸ்லிம்களை அதிக குழப்பத்தில் ஆழ்த்திவிட்டது. அதாவது, அவர்கள் இறையறிவையும், விதியையும் ஒன்றுடன் ஒன்று இணைத்து விட்டார்கள். ஆனால் இவ்விரு விவகாரங்களும் முற்றிலும் தனித்தனியானவையாகும். இதற்குரிய தெளிவான சான்று என்னவென்றால், இறைவனின் ஒரு பெயர் ‘அலீம்’ (அறிந்தவன்), மற்றொரு பெயர் ‘கதீர்’ (ஆற்றல் மிக்கவன்) என்பதாகும். இங்கு எழும் கேள்வி, இறை அறிவும், விதியும் (தக்தீரும்) ஒன்றுதான் என்றால் இறைவனுக்கு தனித்தனியாக இவ்விரு பெயர்கள் ஏன் வழங்கப்பட வேண்டும்?

கத்ர் (விதி) என்பது கதீர் என்ற பண்புப் பெயருடன் தொடர்புடையது. அதாவது ஆற்றல் பெற்றவன். மேலும் இல்ம் (அறிவு) என்பது ‘அலீம்’ என்ற பண்புப் பெயருடன் தொடர்புடையது. அதாவது எல்லாம் அறிந்தவன். ஆனால் அவர்கள் இதனைப் புரியவில்லை.

அவர்கள் கூறுகிறார்கள்: ஸய்த் திருடப்போகும் போது, ஸய்த் திருடப் போவான் என்று இறைவனுக்குத் தெரியுமா தெரியாதா? தெரியுமென்றால், ஸய்த் திருடவில்லையென்றால் இறைவனின் அறிவு பொய்யாகிவிடும். எனவே, ஸய்த் திருடுவதற்கு கட்டாயப்படுத்தப்பட்டான் என்று தெரிகிறது. மேலும் இறைவனே அவனை அவ்வாறு செய்வதற்குக் கட்டாயப்படுத்துகிறான் என்பதும் தெரிகிறது. அவன் அவ்வாறு செய்யவில்லை யென்றால், இறைவனின் அறிவு பொய்யாகிவிடும். இவ்விதமாக இவர்கள் பொது மக்களை கருத்தில் வெற்றிகொண்டு விடுகிறார்கள்.





ஒவ்வொரு செயலும் இறைவனே செய்ய வைக்கிறான் என்று மக்களை நம்ப வைக்கிறார்கள். ஆனால் உண்மையில் இந்த அறிவிலிகள் விஷயத்தை நேர்மாறாக எடுத்துச் செல்கிறார்கள்.

நாம் கூறுகிறோம்: ஸய்த் திருடுவான் என்று இறைவனுக்கு தெரிந்துவிட்டதால் அவன் திருடாமல் இருக்க முடியாது என்று கருதுவது தவறாகும். மாறாக, ஸய்த் திருட்டை விடுவதாக இல்லை. எனவே அவன் திருடுவான் என்பது இறைவனுக்குத் தெரிய வந்தது.

இதற்குரிய உதாரணமாவது, ஒருவர் நம்மிடம் வருகிறார். அவர் இந்த இடத்தில் கொள்ளையடிக்கப்போகிறார் என்று அவருடைய பேச்சிலிருந்து நமக்குத் தெரிய வருகிறது. அவர் இந்த இடத்தில் கொள்ளையடிக்கப் போகிறார் என்று நாம் தெரிந்து கொண்டதனால் அவர் கொள்ளையடிக்குமாறு பலவந்தப்படுத்தப் பட்டார் என்றும் நாம்தான் அவரைக் கொள்ளையடிக்க வைத்தோம் என்றும் எந்தவொரு அறிவாளியாவது கூறுவாரா? ஒருபோதும் கூறமாட்டார். இதே நிலைமைதான் இறைவன் அலீம் (அறிந்தவன்) ஆக இருப்பதிலும் இருக்கிறது. ஸய்த் என்பவன் இன்று செய்ய வேண்டிய வேலையை இறைவனின் பலவந்தம் இல்லாமலேயே செய்யவிருந்தான். ஆனால் இறைவன், எல்லாம் நன்கு அறிந்தவன். ஒவ்வொரு விஷயத்தைப் பற்றியும் அவனுக்குத் தெரியும். எனவே ஸய்தைப் பற்றியும், அவன் அவ்வாறு செய்வான் என்பது அவனுக்குத் தெரியவந்தது.

அவ்வாறே ஸய்த் திருட்டை விட்டுவிடுவதாக இல்லை. மாறாக திருட்டை செய்யவிருந்தான். எனவேதான் அவன் திருடுவான் என்று இறைவன் அறிந்துகொண்டான். மேலும் எவன் திருட்டை விட்டுவிடுவானோ அவனைப்பற்றி, அவன் திருட்டை விட்டு விடுவான் என்ற இல்ம் (அறிவு) இறைவனுக்கு இருக்கிறது.

ஆக, இறையறிவு எந்தவொரு செயலையும் செய்வதற்கு காரணமாக இருக்காது. மாறாக, நடக்க விருக்கும் ஒரு செயல்தான் இறையறிவின் கீழ் வரக் காரணமாக இருக்கிறது.

## மேலும் தெளிவான விளக்கம்

விவசாய சகோதரர்கள் இதனைப் புரியாமலிருக்கலாம். எனவே மீண்டும் கூறுகிறேன். ஒவ்வொரு செயலையும் இறைவனே செய்ய

வைக்கிறான் என்று கூறும் சிலர் அதற்கு ஆதாரமாகக் கூறுவதாவது, அப்துல்லாஹ் இன்ன நாளைக்கு திருடுவான் அல்லது கொள்ளையடிப்பான் என்பது இறைவனுக்குத் தெரியுமா தெரியாதா? இறைவனே இல்லை என்ற நாத்திகர்களின் வாதத்தை சரி என ஏற்றுக் கொண்டால், அப்துல்லாஹ் எது செய்தாலும் அவர் அதை தனது சொந்த விருப்பத்தால் செய்வார் என்று கூற முடியும். ஆனால் இறைவனோ இருக்கிறான். எனவே அப்துல்லாஹ் இன்ன நாளைக்கு இந்த வேலையைச் செய்வான் என்பதும் அவனுக்குத் தெரியும். அப்படியிருக்கையில் அந்த நாளில் அவர் அந்த வேலையைச் செய்யவில்லை யென்றால் இறைவன் அறிந்து கொண்டது தவறானதாகிவிடும். எனவே அவர் அந்த நாளில் திருடுவதற்கும், கொள்ளையடிப்பதற்கும், கற்பழிப்பதற்கும் இறைவனே அவரை கட்டாயப்படுத்துகிறான்.

**நாம் கூறுவதாவது, அப்துல்லாஹ் இந்த நாளில் திருடுவான் என்று இறைவன் அறிந்து கொண்டதால் அவர் திருடுவதில்லை. மாறாக, அப்துல்லாஹ் அந்த நாளில் திருட இருந்ததால்தான் அது பற்றிய அறிவு இறைவனுக்குக் கிடைத்தது.**

இதற்கு மாறாக, அவர் திருட வேண்டும் என இல்லாதிருந்து, அவர் திருடுவார் என இறைவனின் அறிவுக்கு வந்திருந்தால் அது அறிவீனம் என்று அழைக்கப்படுமே தவிர 'அறிவு' என்று அழைக்கப்படமாட்டாது.

ஆகவே, திருடன் திருடுவான் என்ற செய்தி இறையறிவுக்குக் கிட்டியதால் திருடன் திருட்டை செய்வதில்லை; இதற்கு மாற்றமாக திருடன் திருடவிருந்ததாலேயே அதுபற்றிய அறிவு இறைவனுக்குக் கிடைத்தது.

சுருங்கக் கூறின், இந்த ஏமாற்றம் இறையறிவையும், இறை நியதியையும் இணைத்ததன் காரணமாக ஏற்பட்டுள்ளது. ஆனால் இந்த இரண்டும் தனித்தனியான பண்புகளாகும். மேலும் ஒன்றிலிருந்து ஒன்று முற்றிலும் மாறுபட்டதாகும்.

## தீமை செய்வதிலிருந்து இறைவன் ஏன் தடுப்பதில்லை?

இந்த மனிதர் இந்த நேரத்தில் இந்த தீயவேலை செய்வார்





என்று இறைவனுக்குத் தெரிந்திருக்கும்போது அவன் ஏன் அந்த மனிதரைத் தடுப்பதில்லை? என்ற கேள்வி இங்கு எழுகிறது.

உதாரணமாக, இந்த மனிதர் திருடுவார் என்பது இறைவனுக்குத் தெரிந்திருக்கிறது என்றால், திருடுவதிலிருந்து அவரை அவன் ஏன் தடுப்பதில்லை?

சுந்தர் சிங் என்ற கொள்ளையடிப்பவர் ஒருவர் நம்மிடம் வந்து, நான் இந்த நேரத்தில் ஜீவன்லால் என்பவரின் வீட்டில் கொள்ளையடிப்பேன் என்று கூறுகிறார். இதனை அறிந்திருந்த போதிலும், நாம் பேசாமல் அமைதியாக இருப்போமானால் நாம் குற்றவாளியாவோமா இல்லையா? மார்க்க, நல்லொழுக்க, சமுதாய மற்றும் நாட்டின் சட்டத்தின்படி நாம் கண்டிப்பாக குற்றவாளியாவோம். நமக்காவது ஜீவன்லால் வீடு இந்த நேரத்தில் கொள்ளையடிக்கப்படும் என்பதை அவரிடம் சொல்ல முடியாத அளவுக்கு வேறு வேலைகள் இருக்கலாம் அல்லது நாம் அவரிடம் சொல்லி விட்டால் கொள்ளையடிப்பவர்கள் நம்மைக் கொன்று விடுவார்கள் என்ற அபாயம் இருக்கலாம். இவ்வாறு கொள்ளையடிப்பவரின் அந்த எண்ணத்திலிருந்து அவரை தடுத்து நிறுத்துவதற்கு நமக்கு அபாயங்கள் இருப்பினும் நாம் அவரை தடுக்கவில்லையென்றால் சம்பந்தப்பட்டவருக்கு அறிவிப்பு கொடுக்காமலிருந்தால் நாம் குற்றவாளியாவோம். அப்படியிருக்கும் போது, ஆற்றல் உடையவனும், வல்லமை பெற்றவனுமாகிய இறைவனுக்கு யாரைப் பற்றிய பயமும் இல்லை. யாரும் அவனுக்கு நஷ்டமிழைக்க முடியாது. அவன் அறிந்திருந்தும் ஏன் கொள்ளைக்காரனைத் தடுத்து நிறுத்துவதில்லை என்ற குற்றம் அவன் மீது விழுகிறது அல்லது ஏன் அவன் கொள்ளை நடக்க வேண்டிய வீட்டுக்காரருக்கு அவர் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் வகையில் இதுபற்றி அறிவிப்பதில்லை?

மனிதனாவது கட்டாயத்திற்குட்பட்டிருக்கலாம். அவ்வாறு கட்டாயத்திற்குட்படுவதற்கு ஏதாவதொரு காரணமும் இருக்கலாம். அப்படியிருந்தும் அவன் (குற்றத்துக்குள்ளாகி) பிடிக்கப்படுகிறான். அப்படி இருக்கும்போது இறைவன் வல்லமையுடையவனா யிருந்தும் அவன் மீது எந்த குற்றச்சாட்டும் இல்லாமலிருப்பதா? இது ஆச்சரியமானதே.

இந்த குற்றச்சாட்டு சிந்தனைக்குறைவால் தோன்றியதாகும். ஏனெனில் இறைவனைப் பற்றி இந்த உதாரணத்தை எடுத்து வைப்பதே தவறாகும். உலகத்தில் மனித படைப்பின் நோக்கத்தைப் புரியாததனாலேயே இந்த உதாரணம் கூறப்பட்டுள்ளது.

அடியார்களுடன் இறைவனுக்குள்ள தொடர்புக்கு சரியான உதாரணம், மாணவர்களுக்குத் தேர்வு நடைபெறும்போது கண்காணிப்பாளர் அவர்களைக் கண்காணிப்பது போன்றதாகும். தவறாக விடையெழுதும் மாணவனுக்குச் சொல்லிக் கொடுப்பது அவருக்கு ஆகுமானதா? ஆகுமானதல்ல.

ஆகவே சோதனைக்கு ஆளாக்கி அருட்கொடைக்கு வாரிசாக்குவதற்காக மனிதன் இந்த உலகத்தில் படைக்கப்பட்டிருக்கும்போது, அவன் தவறிழைக்கும்போது நீ இந்த தவற்றைச் செய்கிறாய் என்று அவனிடம் கூறினால் அது எவ்வாறு தேர்வு ஆகும்? அதற்கு ஏன் கூலி கொடுக்க வேண்டும்? தேர்வுக் கூடத்தில் சரியான விடைகளையும், தவறான விடைகளையும் எழுதிக் கொண்டிருக்கும் மாணவர்களைச் சுற்றி வரும் கண்காணிப்பாளர் போன்ற ஒரு தொடர்புதான் இந்த விஷயத்தில் இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையே இருக்கிறது.

எனவே அல்லாஹ்வுக்குத் தெரிந்திருந்தும், அவன் ஒவ்வொருவரையும் தனித்தனியாகத் தடுத்து நிறுத்தாதிருப்பது அவனுடைய மகத்துவத்திற்கு மாறானதல்ல; இன்னும் சொல்லப்போனால், மனிதன் எந்த நோக்கத்திற்காகப் படைக்கப்பட்டுள்ளானோ அந்த நோக்கத்திற்கு முற்றிலும் ஏற்றதாகும்.

### சூஃபிகளின் (இறைஞானிகளின்) கூற்று

இல்ம் (இறையறிவு) மற்றும் கத்ர் (இறை வல்லமை) இவ்விரண்டையும் புரிந்து கொள்ளாத காரணத்தால் இன்றைய சூஃபிகளிடம் பல வினோதனமான எண்ணங்கள் பரவியுள்ளன. சில குறிப்பிட்ட வாக்கியங்களே இன்றைய சூஃபிகளின் வாயிலிருந்து வெளியாகின்றன. அவை இறைவணக்கத்தின் குறிப்பிட்ட அடையாளங்களாகக் கருதப்படுகின்றன. அவற்றின் மூலமாக அறிவற்றவர்களை அவர்கள் பயமுறுத்துகின்றனர். ஆனால்





அறிவுள்ள மனிதர் அவர்களின் பிடியில் சிக்கமாட்டார். இதுபற்றி நான் எனது சொந்த அனுபவம் ஒன்றைக் கூறுகிறேன். இது ஒரு நகைச் சுவையை விட குறைந்ததல்ல.

நான் ஒருமுறை லாஹூரிலிருந்து வந்து கொண்டிருந்தேன். இரண்டு மூன்று பேர் என்னை வழியனுப்ப இரயில் நிலையத்திற்கு வந்தார்கள். இது 1910ல் நடந்த சம்பவமாகும். தொடர் வண்டியில் நாங்கள் நுழைந்தபோது அங்கே சிலர் நின்று கொண்டிருந்தனர். இன்று அமிர்தசரசில் ஐ.ஏ.சி.ஆக இருக்கும் மியான் முஹம்மத் ஷரீஃப் சாஹிப் என்னிடம், நீங்கள் அங்கு உட்காராதீர்கள். அங்கு ஒரு பீர் சாஹிபும், அவருடைய முரீதுகளும் உள்ளனர். (இந்த பீர் சாஹிப் பஞ்சாபிலுள்ள பிரசித்தி பெற்ற பீர் சாஹிப் ஆவார். இந்த காலத்தில் நமது மாநிலத்தில் உள்ள பீர்மார்களில் இவர்தான் பெரியவர்) அவர்கள் உங்களுக்கு நஷ்டமிழைக்கக் கூடும் எனக் கூறினார். இதனால் வேறொரு அறை தேடப்பட்டது. ஆனால் கிடைக்கவில்லை. இரண்டாம் வகுப்புப் பெட்டியில் இடம் கிடைக்கவில்லையாயின் இன்டரிலேயே உட்காருங்கள் என்று மியான் சாஹிப் ஆலோசனை கூறினார். டாக்டர் ரஷீதுத்தீன் சாஹிப் இருந்தார். அவர், இல்லை; இதே பெட்டியில்தான் உட்கார வேண்டும். அவர்களுக்காக ஏன் பயப்பட வேண்டும்? எனக் கூறினார்.

நான் ஆரம்பத்திலேயே மனத்தால் இதைத்தான் விரும்பியிருந்தேன். எனவே அந்த அறையிலேயே போய் உட்கார்ந்து கொண்டேன். சில நேரத்திற்குப் பிறகு தொடர்வண்டி புறப்பட்டது. எல்லாரும் சென்று விட்டனர். பீர் சாஹிப் மட்டுமே என்னுடன் பயணமாவது தெரிய வந்தது. இரயில் நிலையத்தில் இருக்கும் போதே பீர் சாஹிபிடம் நீங்கள் ஏதாவது சாப்பிடுவீர்களா? என்று மக்கள் கேட்டனர். எனக்கு இப்போது பசியில்லை. நான் அமிர்தசரஸ் சென்றுதான் சாப்பிடுவேன் என்று கூறி, பீர் சாஹிப் மறுத்து விட்டார். ஆனால் தொடர்வண்டி சென்றதும் தலைப்பாகையின் மேல் சுற்றியிருந்த ஒரு பச்சைத் துணியை கழற்றினார். ஜன்னலுக்கு வெளியே முகத்தை நீட்டி வேலையாட்களின் அறையிலிருந்த தனது சேவகரைக் கூப்பிட்டு, சாப்பிடுவதற்கு ஏதாவது இருக்கிறதா? என்று கேட்டார்.

சாப்பிடுவதற்கு எதுவுமில்லையே என்று சேவகர் பதில் கூறினார். எனக்கு ரொம்ப பசிக்கிறது என்று பீர் சாஹிப் கூறினார். இதனைக் கேட்ட சேவகர், நல்லது மியான் பீர்! நான் தேநீருக்கு ஏற்பாடு செய்கிறேன் என்றார். உன்னிடமிருந்த அந்த உலர்ந்த பழத்தையாவது கொடு என்று பீர் சாஹிப் கூறினார். அவன் அந்தப் பழத்தைப் பீர் சாஹிபிடம் கொடுக்க அதனை அவர் வாங்கிக் கொண்டார்.

இதன் பிறகு அவர் என்னை நோக்கி, நீங்கள் யார்? என்று கேட்டார். என்னுடைய பெயர் மஹ்மூது அஹ்மது என்று நான் கூறினேன். பின்னர் அவர், 'நீங்கள் எங்கே போகிறீர்கள்? என்று வினவ, நான் காதியான் போகிறேன் என்று பதில் கூறினேன். இதனைக் கேட்ட அவர் நீங்கள் காதியானைச் சார்ந்தவரா? அல்லது ஏதாவது வேலைக்காக காதியான் போகிறீர்களா? எனக் கேட்டார். நான் காதியானைச் சார்ந்தவன் என்று பதில் கூறினேன். இதனைக் கேட்ட அவர் கொஞ்சம் உஷாரானார். உங்களுக்கு மிர்ஸா சாஹிபோடு ஏதேனும் தொடர்புண்டா? என்று வினவினார். ஆம்! எனக்கு அவரோடு தொடர்புண்டு என்று நான் பதிலளித்தேன். அதற்கு அவர் என்ன தொடர்பு? என்று கேட்டார். நான் அவருடைய மகன் என்று கூறினேன். ஓஹோ! அப்படியா! எனக்கு உங்களை சந்தித்ததில் மிக்க மகிழ்ச்சி. ஏனென்றால் எனக்கு நீண்ட காலமாக உங்களை சந்திக்க வேண்டும் என்று ஆசையிருந்தது எனக் கூறினார். அவருடைய இந்த பேச்சைக் கேட்டு எனக்கு மிகவும் ஆச்சரியம் ஏற்பட்டது. ஏனென்றால், அந்த பீர் சாஹிப்புக்கு நம் ஜமாஅத்தோடு கடுமையான பகைமை இருந்தது. ஒருவர் அஹ்மதியுடன் பேசினாலும் அவருடைய மனைவிக்கு தலாக் ஆகிவிடுகிறது என்பது பீர் சாஹிபின் ஃபத்வா (மார்க்கத் தீர்ப்பு) ஆகும். இருந்தாலும் நான் மவுனமாக இருந்தேன். அடுத்து அவர் பேச்சு எந்த திசையை நோக்கி செல்கிறது என்பதை எதிர்பார்த்திருந்தேன்.

இதற்குப் பிறகு அவர் ஒரு கைக்குட்டையைத் திறந்தார். அதில் பழங்கள் இருந்தன. தான் இருந்த இடத்திலிருந்து எழுந்து எனக்கும் அவருக்குமிடையே இருந்த பெஞ்சில் வந்து உட்கார்ந்தார். நீங்களும் சாப்பிடுங்கள் என்று கூறி அந்தக் கைக்குட்டையை எனக்கு முன்னால் விரித்தார். எனக்கு இருமலும், ஜலதோஷமுமாக





இருந்ததால் நான் தின்பதற்கு மறுத்து விட்டேன். எனக்கு தொண்டையில் வலியிருக்கிறது. எனவே என்னை மன்னியுங்கள் என்றேன். இல்லை ஒன்றும் ஆகாது. நீங்கள் சாப்பிடுங்களேன் என்று கூறினார் பீர் சாஹிப். இந்த நிலைமையில் நான் சாப்பிட்டால் அதிகம் கஷ்டம் ஏற்பட்டு விடும் என்றேன். இதனைக் கேட்ட பீர் சாஹிப், அல்லாஹ் செய்வதுதான் நடக்கப்போகிறது; இதெல்லாம் வீண் பேச்சுகள்தான் என்றார். பீர் சாஹிப் தனது சிறப்பான ஞானத்தை (?) வெளிப்படுத்தட்டும். அவர்களின் நிலையை நாம் தெரிந்து கொள்ளலாம் என்ற இந்த சந்தர்ப்பத்திற்காகவே நான் காத்திருந்தேன்.

நான் அவருக்கு பதில் கூறினேன்: பீர் சாஹிப்! நீங்கள் இந்த விஷயத்தைத் தாமதமாகக் கூறியிருக்கிறீர்கள். நீங்கள் (அல்லாஹ் செய்வதுதான் நடக்கப் போகிறது என்ற) இந்த விஷயத்தை லாஹூரில் வைத்தே கூறியிருந்தால் நாம் இருவரும் நஷ்டத்தி லிருந்து தப்பித்திருப்போம். நானும் நீங்களும் பயணச் சீட்டு எடுப்பதில் பணத்தை வீணாக்கியிருகின்றோம். நீங்கள் அமிர்தசரஸ் செல்ல வேண்டும் என்றும், நான் காதியான் செல்ல வேண்டும் என்றும் விதியில் எழுதப்பட்டிருந்தால் நம்மை அல்லாஹ், தானே கொண்டு சேர்ந்திருப்பான். பயணச் சீட்டிற்காக பணத்தை செலவிட என்ன தேவை வந்து விட்டது? என்றேன். இதனைக் கேட்ட பீர் சாஹிப், இல்லை; காரணிகளை கையாளவும் வேண்டுமல்லவா? என்றார். இதே காரணிகளை கவனத்திற்கொண்டுதான் நானும் பழம் சாப்பிட மறுத்தேன் என நான் கூறினேன். நான் சொன்னதன் நோக்கமும் இதுதான் என பீர் சாஹிப் கூறினார். ஆனால் அவருடைய பொருளும் என்னுடைய பொருளும் எவ்வாறு ஒன்றாக இருக்க முடியும் என்பது இன்றுவரை எனக்குப் புரியவில்லை.

இதைத் தவிர இன்னும் பல விஷயங்கள் பீர் சாஹிபுடன் பேசினேன். ஆனால் 'விதி'யைப் பற்றி இந்த அளவுக்கே பீர் சாஹிபுடன் பேச்சு நடந்தது. இந்த காலத்து பீர்கள் இந்த விவகாரம் குறித்து எந்த அளவுக்கு தவறான எண்ணங்களில் மூழ்கியுள்ளார்கள் என்பது இதிலிருந்து தெரிய வருகிறது. ஆனால் நான் கூறியிருப்பதைப் போன்று திருக்குர்ஆனின்படி இவர்களின் இந்த எண்ணங்கள் தவறானவையாகும்.

### சிலருடைய கூற்றின் பொருள்

சிலருடைய கூற்று இவ்வாறும் இருக்கிறது. பயனற்ற முயற்சியில் உங்களது நேரத்தை வீணாக்காதீர்கள்; எது கிடைக்க வேண்டுமோ, அது கிடைத்தே தீரும் என்கின்றனர்.✸

இந்த மாதிரியான கூற்றுகளிலிருந்து சிலர், எல்லா விஷயத்திலும் முயற்சி செய்வது தடுக்கப்பட்டுள்ளது என்று கருதுகிறார்கள். அவர்களின் கூற்றுக்கு இதுதான் பொருள் என்றால் நான் கேட்கிறேன்: அவர்கள் உண்பதற்காக உணவை எடுப்பதில்லையா? வாயில் போடுவதில்லையா? அதனை மென்று விழுங்குகின்றார்களா இல்லையா? பின்னர் உறங்குவதற்காக படுப்பதில்லையா? அல்லது இரவும் பகலும் ஒரு நிலைமையில் உட்கார்ந்திருக்கிறார்களா?

எல்லா வேலையும் இறைவனே செய்ய வைக்கிறான் என்றால், ‘முயற்சி செய்யாதீர்கள்’ என்ற அவர்களின் கூற்றுக்கு என்ன பொருள்? ஒருவர் முயற்சி செய்கிறார் என்றால் அந்த முயற்சியையும் இறைவன்தானே அவர் மூலமாக செய்ய வைக்கிறான்? பின்னர் ஏன் தடுக்கப்பட வேண்டும்?

### சூஃபிகளின் கூற்றுக்கு சரியான பொருள்

ஆனால் உண்மை என்னவென்றால், இப்படிப்பட்ட கூற்றுகளின் பொருளை மக்கள் புரியவில்லை. உண்மை என்னவென்றால் சிலர் உலக வேலைகளிலேயே

✸ **அடிக்குறிப்பு:**

***இறைவனின் நிலை தேர்வு நடத்துபவரைப் போன்று மட்டும் அல்ல. மாறாக கருணையாளன்; அருள்பாலிப்பவன் என ஒருவர் கேள்வி கேட்கிறார். அவர் நினைவில் கொள்ளட்டும்: அது சரிதான். ஆனால் கருணையாளன் என்ற இந்த நிலை, தேர்வு நடத்திய பிறகு மதிப்பெண் வழங்கும்போது வெளிப்படுவதாகும். அவ்வாறல்லாமல் தேர்வு எழுதிக் கொண்டிருக்கும்போதே இந்த கேள்விக்கு இந்த பதிலை எழுது; இந்த கேள்விக்கு அந்த பதிலை எழுது என சொல்லிக் கொண்டே போவதல்ல.***





மூழ்கியிருக்கின்றனர். எல்லா முயற்சிகளையும் அதற்காகவே செலவு செய்து விடுகின்றனர். உதாரணமாக, 8,9 மணி நேரம் கடையில் உட்கார்ந்திருக்கின்றனர். ஆனால் வீட்டிற்கு வந்தால் அங்கும் கடையின் கணக்கு வழக்குகளைத்தான் பார்த்துக் கொண்டிருக்கின்றனர் அல்லது ஒரு விவசாயியானால் அவர் எப்போதும், ‘இப்படி ஆகிவிட்டால் என்னவாகும்? அப்படி நடந்தால் என்னவாகும்?’ என்றே சிந்தித்துக் கொண்டிருக்கிறார். சான்றோர்கள் இந்த மாதிரியான சிந்தனைகளைத் தடுத்திருக்கிறார்கள். இந்த மாதிரியான பயனற்ற முயற்சிகளை தடை செய்துள்ளார்கள். ஆனால் உண்மையான முயற்சிகளை அவர்கள் தடுக்கவில்லை. பயனற்ற முயற்சி என்றால், உதாரணமாக, குளிர் காலத்தில் மெத்தையை தன்னுடன் வைத்திருப்பது அவசியம். இப்போது ஒருவர் முப்பது கனமான மெத்தைகளையும் பத்து போர்வைகளையும் போர்த்திக் கொண்டால், இது வீணானவை; ஒரு போர்வை எடுத்துக் கொண்டாலே போதுமானது என்று நாம் கூறுவோம். இது போன்றே அவர்களும் கூறுகின்றனர். மற்றபடி அவர்களும் உண்மையான முயற்சியை மேற்கொள்ளத்தான் செய்கிறார்கள்.

### இன்னொரு பிரிவினர்

இப்போது நான் கூறிய இந்த இரு பிரிவினரைத் தவிர இன்னொரு மூன்றாவது பிரிவினரும் உள்ளனர். அவர்கள் இவ்விரண்டுக்கும் இடைப்பட்ட வழிமுறையைத் தாமாகக் கையாண்டுள்ளனர். ஆனால் அதுவும் இஸ்லாத்திற்கு மாற்றமானதே.

அவர்கள் கூறுவதாவது, ஒவ்வொரு செயலிலும் விதியும் செயல்படுகிறது; திட்டமும் செயல்படுகிறது. எல்லா பொருட்களிலும் இறைவன் ஆற்றலை வைத்துள்ளான். உதாரணமாக, நெருப்பில் எரியும் ஆற்றலையும், தண்ணீரில் தாகத்தைத் தணிக்கும் ஆற்றலையும் இறைவன் உருவாக்கி வைத்துள்ளான்; எந்தவொரு மனிதனும் உருவாக்கவில்லை. நெருப்பில் விறகு எரிய வேண்டும் என்றும், இரும்பு, பித்தளை, வெள்ளி, தங்கம் முதலியவை உருக வேண்டும் என்றும் இறைவன் விதித்துள்ளான். அடுத்து அதனை சீரமைத்தல் அவற்றை குறிப்பிட்ட உருவத்தில் அமைத்தல் கொல்லன் அல்லது பொற்கொல்லனின் வேலையாகும். இதுவே திட்டம் என்பது.

ஆக, எல்லாவற்றிலும் இறைவன் சக்தியை வைத்துள்ளான். இது விதியாகும். அடுத்து அந்த சக்திகளைக் கொண்டு மனிதன் வேலை செய்கின்றான். இது திட்டம் ஆகும். மேலும் ஒவ்வொரு வேலையிலும் இந்த இரண்டு விஷயமும் நடைபெறுகிறது.

இந்த கூற்று சரியானது தான். ஆனால் அவர்கள் இத்துடன் நின்று விடுகின்றனர். மேலும் இதன் மீதே தமது சிந்தனைகளின் அடிப்படையை வைக்கின்றனர். எனவே இந்த வழியும் சரியான வழியல்ல என்று நாம் கூறுகிறோம். உண்மையில் ஓர் அறிவியல் அறிஞர் கூறுவதையே இவர்களும் கூறுகிறார்கள். ஆயினும் ஓரளவு வித்தியாசம் உள்ளது. அறிவியல் அறிஞர் இந்த விஷயத்தை இன்னும் வெகுதூரத்திற்கு எடுத்துச் செல்கின்றார். உதாரணமாக, வெள்ளி உருகுவதற்கு என்ன காரணம்? அது எவ்வாறு உருகுகிறது? பின்னர் அதற்கு என்ன காரணம் என்பது எனக்குத் தெரியாது என்று அவரே கடைசியில் கூறிவிடுவார். எல்லாவற்றையும் சூழ்ந்துள்ள ஒரு மாறுதலடையாத சட்டத்தின் கீழ் இந்த எல்லா வேலைகளும் நடைபெறுகின்றன என்பது மட்டுமே எனக்குத் தெரியும் என்பார். ஆனால் இந்த பிரிவில் உள்ள மக்கள் முழு உலகத்தையும் ஒரு சட்டத்தின் கீழ் உள்ளதாகக் கருதுகின்றனர். அதனை இயற்கைச் சட்டம் என்கின்றனர்.

## தவறான பெயரின் காரணமாக ஏமாற்றம்

நான் ஆராய்ந்தவரை அவர்கள் இந்த விவகாரத்திற்கு தவறான பெயர் வைத்துள்ளனர். எனவே விதி பற்றிய விவகாரத்தில் சிக்கலும், குளறுபடியும் எற்பட்டு விட்டது. தவறான பெயர் வைப்பதனால் ஏமாற்றம் ஏற்பட்டு விடுகிறது. இவ்வாறு பலமுறை நிகழ்ந்துள்ளது.

உதாரணமாக, ஒருவருடைய பெயர் நல்லடியாராயிருந்து, அந்த நல்லடியார் மிகவும் தீய வேலையைச் செய்தார் என்று கூறப்பட்டால், கேட்பவர் இவர் என்ன கூறுகிறார்? என்று ஆச்சரியப்படுவார். ஒருபுறம் இவர் அவரை நல்லடியார் என்று கூறுகிறார்; மறுபுறம் அவர் மீது குறை கூறுகிறார்.

ஆக, ஒருவருடைய தவறான பெயர் அர்த்தத்துடன் இருக்குமாயின், அதனால் அதிக தவறுகள் ஏற்பட்டுவிடுகின்றன. ஆயினும் அர்த்தமில்லா பெயராயிருந்தால் ஏமாற்றம் ஏற்படாது.





உதாரணமாக, ருல்தூ என்பவர் திருடினார்; அல்லது கொள்ளையடித்தார் என்று கூறினால் இந்த வாக்கியத்தைக் கேட்டு ஆச்சரியம் ஏற்படுவதில்லை. அவ்வாறே ருல்தூ என்பவர் இறைநேசமுடையவர், நல்லவர் என்று கூறினாலும் யாதொரு ஆச்சரியமும் ஏற்படாது. ஆனால், அந்த இறை அடியார் (அப்துல்லாஹ் என்பதன் பொருள்) ஷிர்க் செய்தார் என்று கூறப்பட்டால் மாபெரும் ஆச்சரியம் ஏற்படும்.

## விதி விவகாரத்தில் தவறான பெயர்

அர்த்தமுள்ள பெயர்கள் தவறாக வைக்கப்பட்டால் அவற்றால் ஏமாற்றம் ஏற்பட வாய்ப்புண்டு. அவ்வாறே இம்மக்களுக்கும் ஏற்பட்டிருக்கிறது. ‘தக்தீர்’ என்ற சொல் சரியானதுதான். ஆனால் அதற்கு எதிராக அவர்கள் வைக்கின்ற பெயர்களுக்குரிய பொருள்கள் முற்றிலும் நேர்மாறானதாகும். உதாரணமாக சிலர் ‘தக்தீர்’க்கு(இறை நியதிக்கு) நேர் எதிராக செய்யப்படும் மனித செயலுக்கு ‘தத்பீர்’(திட்டம்) என்று பெயர் வைக்கிறார்கள். இன்னும் சிலரோ இவ்விரண்டிற்கும் ஜபர் (பலவந்தம்) என்றும் இக்தியார் (உரிமை-சுதந்திரம்) என்றும் பெயர் வைத்துள்ளனர். ஆனால் உண்மையில் இவ்விரு பெயர்களும் தவறானவையாகும். இந்த சொற்களுக்குரிய பொருட்கள் உண்மையான விவகாரத்தின் மீது பாதிப்பை ஏற்படுத்தி விட்டது. இதன் காரணமாகவே இந்த பிரச்சனை தவறானதாக ஆகிவிட்டது.

பெயரைத் தவறாக வைத்தது அவர்கள் செய்த முதல் தவறாகும். இந்தப் பெயர்கள் மட்டுமல்ல, இவ்விரண்டிற்கும் எத்தனை பெயர்களை அவர்கள் வைத்துள்ளார்களோ அத்தனையும் தவறானவையாகும். உதாரணமாக, 1. தக்தீர் மற்றும் தத்பீர் 2. ஜபர் - இக்தியார், 3. குத்ரதே கதீமா - குத்ரதே ஹாதிஸா. ஆனால் இந்த பெயர்கள் முழுமையான முறையில் அதன் முழு பொருளையும் சூழ்ந்திருப்பதில்லை.

## தக்தீருக்கு எதிராக திட்டமிடுவதை தத்பீர் எனக்குறிப்பிடுவது தவறு

தக்தீர் (இறைநியதி) என்பது சரியே. ஆனால் அதற்கு நேர் மாறாகச் செய்யும் மனித செயலை தத்பீர் (திட்டம்) என்று கூறுவது

தவறாகும். ஏனெனில் இறைவனும் தத்பீர் செய்கிறான். அவன் கூறுவதாவது:

يُدَبِّرُ الْأَمْرَ مِنَ السَّمَآءِ إِلَى الْأَرْضِ ثُمَّ يَعْرُجُ إِلَيْهِ فِي
يَوْمٍ كَانَ مِقْدَارُهُ أَلْفَ سَنَةٍ مِّمَّا تَعُدُّونَ ۝

''அவன் விண்ணிலிருந்து பூமி வரையிலும் தன் கட்டளையைத் தன் திட்டத்திற்கேற்ப நிலைநாட்டுவான். பின்னர் (ஒரு சுற்றை முடித்த பின்னர்) அது ஒருநாளில் அவனை நோக்கி மேலே செல்ல ஆரம்பித்து விடுகிறது. அந்த நாளின் அளவு, உங்கள் கணிப்பிற்கேற்ப ஓராயிரம் ஆண்டுகளாகும்.'' (32:6)

தத்பீர் (திட்டம்) அல்லாஹ்வும் செய்கிறான் என்பது இதிலிருந்து தெரிகிறது. ஆனால் இவர்களோ, தத்பீர் (திட்டம்) என்பது இறைவனோடு சம்பந்தமில்லாத ஒன்றாகும் என்கின்றனர். இதைவிட அதிகமாக ஜபர் (பலவந்தம்) மற்றும் இக்தியார் (நினைத்ததை செய்யும் அதிகாரம்) என்ற சொற்கள் பாவிக்கப்படுகின்றன. ஆனால் உண்மையில் இவ்விரண்டு சொற்களுக்கும் திருக்குர்ஆனில் ஆதாரம் இல்லை.

இறைவன் 'ஜப்பார்' ஆக இருக்கிறான் என்று திருக்குர்ஆனிலிருந்து விளங்குகிறது (59:24). ஆனால் அதற்குப் பொருள் சீர்திருத்தம் செய்யக் கூடியவன் என்பதாகும். இவர்கள் கூறுவதோ, ஜபர் என்பது வலுக்கட்டாயமாக வேலை செய்ய வைப்பதைக் குறிக்கும். (எனவே ஜப்பார் என்றால் மனிதனை பலவந்தமாக வேலை செய்ய வைப்பவன் என்று பொருள் கொடுக்கிறார்கள்.) ஆனால் உண்மையில் எவ்விதத்திலும் இது சரியாகாது. அரபிமொழியில் 'ஜபர்' என்பது உடைந்து போன எலும்பை சரி செய்வதற்குச் சொல்லப்படும். மேலும் இச்சொல் இறைவனுக்காக பயன்படுத்தப்படும் போது அதன் பொருள், அடியார்களின் மோசமான வேலைகளை சரி செய்பவன் என்பதாகும்.

இதன் மற்றொரு பொருளாவது, பிறருடைய உரிமையை பறித்து தன்னுடைய மதிப்பை நிலை நாட்டுபவன் என்பதாகும். ஆனால் இந்தச் சொல் அடியார்களை குறித்து





பயன்படுத்தப்படும்போதுதான் இந்தப் பொருள் கொடுக்கப்படுமே தவிர இறைவனை குறித்து இந்த பொருளில் பயன்படுத்தப்படமாட்டாது; பயன்படுத்தப் படவும் முடியாது. ஏனெனில் எல்லாமே இறைவனுடையதுதான். எனவே அவன் பிறருடைய உரிமைகளைப் பறித்து தன்னுடைய மதிப்பையும் மரியாதையையும் நிலைநாட்டுகிறான் என்று கூறவே முடியாது.

அதுமட்டுமல்லாமல், தத்பீர் என்ற சொல், தான் வெளிப்படுத்த வேண்டிய அளவுக்கு தனது முழுமையான பொருளை வெளிப் படுத்துவதில்லை. ஏனெனில் தத்பீர் என்பதன் பொருள் அரபி மொழியில், ஒரு பொருளை முன்னால், பின்னால் நகர்த்துதல் என்பதாகும். இதன் கருத்து ஏற்பாடு, அமைப்பு என்று கொள்ளப் படுகிறது. ஆனால் ஏற்பாடு, அமைப்பு என்ற சொல் இங்கு எழுந்த பிரச்சனையை பற்றி ஒன்றும் விளக்கவில்லை.

இப்போது 'இக்தியார்' (அதிகாரம்) என்ற சொல் எஞ்சியுள்ளது. இதன் பொருள், பிடித்தமானதை எடுத்துக் கொள்ளுதல் என்பதாகும். இதன்படி அல்லாஹ் மனிதனுக்கு அதிகாரம், அனுமதி கொடுத்துள்ளான் என்றால், எவருக்கு எது பிடித்ததோ அதனை அவர் எடுத்துக் கொள்வார். தனக்கு நல்லதாகப் பட்டதை செய்வார். அப்படியிருக்க அவர் செய்த ஏதாவதொரு செயலுக்காக தண்டனை ஏன் கொடுக்கப்பட வேண்டும்? எனவே 'இக்தியார் (அதிகாரம்) என்ற இந்த சொல்லை பயன்படுத்துவதும் தவறாகும்.

**சரியான பெயர்கள்**

உண்மையில் திருக்குர்ஆனிலிருந்து நிரூபணமாகும் பெயர்களாவன:

1. கத்ர், 2. தக்தீர் 3. கஸா, 4. தத்பீரே இலாஹி

மேலும் இவற்றிற்கு நேர்மாறாக கஸப் (சம்பாதித்தல்) மற்றும் இக்திஸாப் (கஷ்டப்பட்டு உழைத்தல்) என்ற சொற்களை இறைவன் வைத்துள்ளான். எனவே திருக்குர்ஆனின் படி இந்த விவகாரம், தக்தீரே இலாஹி என்றும், இக்திஸாப் அல்லது குத்ரத்தே இலாஹி என்றும், கஸப் அல்லது கழாயே இலாஹி என்றெல்லாம் பெயர் பெறும். இப்போது இந்த பெயர்களின் கீழ் இந்த விவகாரத்தை நான் விளக்கிக் கூறுகிறேன்.

திருக்குர்ஆன் தக்தீரே இலாஹிக்கு நேர்மாறாக கஸப் (உழைத்தல்) இக்திஸாப் (கடினமாக உழைத்தல்) ஆகிய சொற்களை அடியாருக்காக பயன்படுத்தியுள்ளது. இந்த சொல்லை மனிதனுக்காக மட்டுமே உபயோகப்படுத்த முடியும். இறைவனுக்காக உபயோகப்படுத்த முடியாது. ஏனெனில் கஸப் என்பதற்கு ஒரு பொருளைத் தேடுதல் மற்றும் முயற்சித்து அதனை அடைதல் என்று பொருள். ஆனால் அல்லாஹ்வோ தேடுவதுமில்லை; ஒன்றை உழைத்து முயற்சித்து பெறுவது மில்லை. எல்லா பொருட்களும் அவனது கட்டளையைப் பின்பற்றக் கூடியவையாகும். மேலும் அவை அவனுடைய அணுவளவு சைகையினால் அவனது விருப்பத்தை நிறைவேற்றுவதற்குத் தயாராக இருக்கின்றன. பின்னர் அவனோ துன்பத்தை விட்டும் தூய்மையானவன். இவ்வாறு ஆகுக என்று அவன் கூறியதும் அது அவ்வாறு ஆகிவிடுகிறது. எனவே அவனுக்காக கஸப் (உழைப்பு) என்ற சொல்லை உபயோகிக்க முடியாது. (தக்தீர் என்ற)இந்த சொல்லைக் கையாண்டதன் மூலம் ஏற்பட்ட தனிச்சிறப்பு வேறெந்த சொல்லின் மூலமும் ஏற்பட்டிருக்க முடியாது.

இச் சொற்களைப் பற்றி சுருக்கமாகக் கூறிய பின்னர், திருக்குர்ஆனின் மூலம் நிரூபணமாவது என்ன என்ற கேள்வியின் பக்கம் திரும்பு கிறேன். இறைவன் அடியார்களுடன் எவ்வாறு நடந்து கொள்கிறான். அவர்களுடைய ஒவ்வொரு செய்கையும் அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப நடக்கின்றதா? அதாவது தானதர்மம் செய்தல், நல்லொழுக்கம், அநுதாபம் அல்லது திருட்டு, கொள்ளையடித்தல் இவையனைத்தையும் இறைவனே செய்ய வைக்கிறானா? அல்லது அடியார்கள் சம்பாதிக்கட்டும்; எவ்விதம் அவர்கள் சம்பாதிப்பார்களோ அவ்விதமே அவர்கள் பிரதிபலனைப் பெறுவார்கள் என்று அவன் விட்டு வைத்துள்ளானா? என்ற கேள்வியின் பக்கம் வருகிறேன். திருக்குர் ஆனிலிருந்து இரண்டு விஷயமும் நிரூபணமாகின்றன.

## விதி விவகாரத்தின் மீது சொல்லளவில் நம்பிக்கை கொள்வது போதாது

இது குறித்து நான் விளக்கப் போகுமுன் ஒன்றைக் குறிப்பிடுவது அவசியமென கருதுகிறேன். முஸ்லிம்கள் ‘விதி





விவகாரத்தில்’ அதிகமாக ஏமாற்றம் அடைந்துள்ளார்கள். வெறும் விதியின் மீது நம்பிக்கை கொண்டால் மட்டும் போதும் என்று நினைத்து விட்டார்கள். ஆனால் உண்மையில் அதனைப் புரிவதும், அறிவதும் மிக அவசியம். ஏனெனில் இறைவன் அதனை ஈமானின் ஒரு நிபந்தனையாகக் குறிப்பிட்டுள்ளான். நம்பிக்கை கொள்வதற்கு அது கட்டாய விதியாக இருப்பதால், அது நமக்கு பயனுள்ளது என்பதும் தெரிய வருகிறது. இல்லையாயின் அதன் மீது நம்பிக்கை கொள்வது கட்டாயமாக்கப்பட்டிருக்காது.

உதாரணமாக, அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்ள வேண்டுமென்று கட்டளையுள்ளது. இதனால் ஏற்படும் பயனாவது, மனிதனுக்கு தனது அருளாளனைப் பற்றிய அறிவு கிடைக்கிறது. மனிதனின் முன்னேற்றத்திற்குக் காரணமாகவும், அவனுடைய பிறப்பின் குறிக்கோளாகவும் விளங்குகின்ற இறைவனுடன் தொடர்பு கொள்ளுதல் என்பது அந்த நம்பிக்கையின் விளைவாகவே கிடைக்க முடியும். இன்னொரு பயனும் உள்ளது. அந்த அறிவு மற்றும் ஈமானின் மூலமாக, ஓர் இறைவன் இருக்கின்றான். அவனுக்கு முன்னால் நான் எனது செயல்களுக்கு பதில் சொல்ல வேண்டியது இருக்கிறது என்று மனிதன் கருதுகிறான்.

அவ்வாறே நபிமார்களின் மீது ஈமான் கொள்ள வேண்டும் என்று கட்டளை உள்ளது. அதற்குரிய பயனாவது, அவர்களின் மூலமாக இறைவனை சென்றடையும் வழியை மனிதன் அறிய முடிகிறது. அவ்வாறே வானவர்களின் மீது ஈமான் கொள்ள வேண்டுமென்று கட்டளையுள்ளது. அதனால் ஏற்படும் பயன் என்னவெனில், அந்த வானவர்கள் நல்ல எண்ணங்களைத் தோற்றுவிக்கிறார்கள் என்று மனிதன் நம்புகிறான். மேலும் அந்த நல்ல எண்ணங்களின்படி மனிதன் செயல்புரிய முயற்சி செய்கிறான். அந்த வானவர்களோடு அவன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டு, நேரான பாதையில் அடியெடுத்து வைப்பதற்காக அவர்களை உதவியாளர்களாகவும், நண்பர்களாகவும், மனிதன் ஆக்கிக் கொள்கிறான்.

இது போன்றே இறை வேதங்களின் மீது ஈமான் கொள்ள வேண்டும் என்று கட்டளையுள்ளது. அவற்றின் மூலமாக அல்லாஹ்வின் விருப்பத்தை மனிதனால் அறிய முடிகிறது.

அழிவிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கான பாதைகளைக் கண்டு கொள்ள முடிகிறது.

அவ்வாறே மரணத்திற்குப் பின்னுள்ள வாழ்வின் மீது ஈமான் கொள்ள வேண்டும். இதன் பயன் என்னவென்றால், மனிதனுடைய வாழ்வும் வீணானதல்ல; மாறாக எப்போதும் நிலைத்து நிற்கக் கூடியது என்று மனிதன் உணர்ந்து கொள்கிறான். மேலும் அதற்காக முயற்சி செய்கிறான். இது போலவே ஈமான் கொள்ள வேண்டியது அவசியம் என கூறப்பட்டவை ஒவ்வொன்றிலும் ஏதாவதொரு பயன் கண்டிப்பாக இருக்கிறது. ஆனால் தக்தீர் மீது ஈமான் கொள்வதால் என்ன பயன்? என்பது பற்றி முஸ்லிம்கள் சிந்திக்கவேயில்லை. விதியை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று கம்பை எடுத்துக் கொண்டு நிற்கிறார்கள். இதைக் கேட்டு, ‘அப்படியா!’ சரி ஏற்றுக் கொள்கிறோம். இதுவே எமது தலைவிதி’ என்று கூறுவதைத் தவிர அவர்கள் வேறு என்ன பதில் கூற முடியும்?

ஆக, தக்தீரை நம்புவதால் ஏற்படும் பயன்களை சிந்திக்காமல், மூடத்தனமான கொள்கைகளின் பக்கம் முஸ்லிம்கள் சென்றுவிட்டனர். தக்தீரை நம்புவதால் என்ன நன்மை என்று அவர்கள் சிந்தித்திருக்க வேண்டும். அவ்வாறு சிந்தித்திருந்தால் விதிக்கு அவர்கள் கொடுத்த வரையறை தவறென தானாகவே நிரூபணமாகியிருக்கும். தாம் சொல்வதெல்லாம் வீணானவை என்பது அவர்களுக்கு தெளிவாகியிருக்கும். ஆனால் தக்தீரை நம்புவது வீணானதாக இருக்க முடியாது. ஆன்மீகத்துடன் அதற்கு மிகுந்த தொடர்புண்டு. அதனால் மனிதனுக்கு மாபெரும் நன்மை கிடைக்கிறது. ஏனெனில் மனிதனுடைய ஆன்மீகத்தோடு தொடர்புடையதும், அவனது ஆன்மீக வளர்ச்சிக்குக் காரணமாக இருப்பதுமாகிய விஷயங்களின் மீதே ஈமான் கொள்வது அவசியமாக்கப்பட்டுள்ளது.

தக்தீரை நம்புவது கடமையாக்கப்பட்டதிலிருந்து அதற்கும் ஆன்மீகத்திற்கும் தொடர்புண்டு என்றும், அதனால் ஆன்மாவுக்கு பயன் கிடைக்கிறது என்றும் தெரிந்து கொள்கிறோம். இது நிரூபணமாகி விட்ட பிறகு அந்த பயன்கள் யாவை என்பதை அறிந்து கொள்வதன் பக்கமும் நாம் கவனம் செலுத்த வேண்டும். ஏனெனில் அதன் பயன்களை அறிந்து கொள்ளாதவரை நாம்





அதிலிருந்து என்ன பயன்களைப் பெற முடியும்?

ஆனால் தத்துவ வாதிகள் (தத்துவ ஞானிகள் அல்ல) கத்ர் (விதி), ஜப்ர் (நிர்பந்தித்தல்) போன்ற வாதங்களில் தம் வாழ்நாளையே வீணாக்கி விட்டனர். ஒரு நிமிடம் கூட இது பற்றி சிந்திக்கவில்லை. அவர்கள் ஒருவரையொருவர் தேவையில்லாமல் தலையைப் பிய்த்துக் கொள்வதற்கு இதுவே காரணம். இதன் மூலம் அவர்கள் எந்தவொரு பயனையும் பெறவில்லை. ஆனால் இந்த விவகாரம் குறித்து அவர்கள் சிந்தித்து செயல்பட்டிருந்தால் கண்டிப்பாக பயன் பெற்றிருப்பார்கள்.

இந்த தத்துவவாதிகள் ஒருபுறமிருக்க, தக்தீர் நமது ஆன்மீக வளர்ச்சிக்கு மிக அவசியமென்று நம்பிக்கை கொண்டவர்கள், அது குறித்து– அதனை நம்பாமலிருப்பதால் என்ன நஷ்டம்? நம்புவதால் என்ன லாபம் என்றெல்லாம் சிந்தித்துணர்ந்து அந்த அறிவின் மூலமாக பயனைப் பெற்றார்கள். அவர்கள் எதுவரை முன்னேற்றமடைந்தார்கள் என்றால், அந்த அறிவின் மூலம் அவர்கள் இறைவனை அடைந்தார்கள். ஆனால் இன்னொரு பிரிவினரோ என்ன செயல் வெளிப்படுகிறதோ அதை நாம் செய்கிறோமா? அல்லது இறைவன் செய்ய வைக்கிறானா? என்று வீண்வாதம் செய்தே நேரத்தை வீணடித்து விட்டார்கள்.

சுருக்கமாக, இந்த விவகாரம் குறித்து வீண்வாதம் செய்பவர்களிடம் பெரும் தவறு ஏற்பட்டுவிட்டது. எனது சமுதாயத்தில் சிலர் விதி விவகாரத்தின் காரணமாக அழித்து நாசமாக்கப்படுவார்கள் என்ற நபி (ஸல்) அவர்களின் கூற்றுக்கு அவர்கள் இலக்காகிவிட்டார்கள்.

## ஒவ்வொரு செயலையும் இறைவன் செய்ய வைக்கிறானா?

இந்த விதி விவகாரத்தால் என்ன பயன்? என்று அவர்கள் சிந்தித்திருக்க வேண்டும். ஆனால் அவர்கள் அதனை சிந்திக்கவில்லை. பயன் பெறுவதற்குப் பதிலாக நஷ்டமடையும் விதத்தில் அவர்கள் இந்த விவகாரத்தை ஏற்றுக் கொண்டனர். அவர்கள் கூறுகின்ற வகையில் எவரெல்லாம் ஏற்றுக் கொள்வாரோ அவரெல்லாம் நஷ்டமே அடைவார்.

உதாரணமாக, அவர்களில் ஒரு பிரிவினர், மனிதன் செய்வதெல்லாம் இறைவன் செய்ய வைப்பதுதான் என்கின்றனர். இப்போது நாம் கேட்கிறோம்: இது சரியென்றால், ஒரு புறம் இறைவனே தீமையிலும் தீமையான காரியங்களைச் செய்ய வைக்கிறான். மறுபுறம், நீங்கள் ஏன் அப்படிச் செய்கிறீர்கள்? என்று திருக்குர்ஆனில் கண்டிக்கின்றான். இறைவன் தானாகவே மனிதனைப் பிடித்து கற்பழிக்க வைத்துவிட்டு, அவன் கற்பழிப்பு செய்யும் போது ஏன் கற்பழிக்கிறாய்? என்று கேட்பது விந்தைக்குரியதுதான். பின்னர் இறைவனே, ஆபூஜஹ்லின் உள்ளத்தில் முஹம்மது (ஸல்) பொய்யர் என்ற எண்ணத்தை தோற்றுவிக்கிறான். ரஸூலே கரீம் (ஸல்) அவர்களுக்கு விரோதமாக கை நீட்டுவதற்கு அவனே கூறுகின்றான். பின்னர் இவனுக்கு என்ன நேர்ந்தது? இவனுடைய அறிவு ஏன் மங்கிப் போயிற்று? என்று தானே கேள்வியும் கேட்கிறான்.

நாம் கூறுவதாவது, இவ்வாறு கூறுவது அநியாயமாகும். இறைவன், தானாகவே மனிதனின் மூலம் ஒரு தீய செயலைச் செய்ய வைத்து, தானே அம்மனிதனை கண்டித்துக் கேட்பது அநியாயம் மட்டுமல்ல; அறிவீனமுமாகும்.

இப்போது பாருங்கள்! இறைவனைப் பற்றி இந்த மாதிரியான கொள்கைகளைக் கொண்டிருப்பது எவ்வளவு நஷ்டத்தைக் கொடுக்கிறது? இந்த கொள்கையுடன் மனிதனுடைய ஈமான் ஒரு நிமிடத்திற்குக் கூட நிலைத்து நிற்க முடியாது. இதுதான் கத்ர் (விதி) வாதிகளின் நிலைமை!

## தத்பீர்வாதிகளின் தவறு

தத்பீர்வாதிகள் தாம் முன்வைத்துள்ள கொள்கையைப் பற்றி தாமே சிந்தித்தால், அவர்கள் மனிதனுக்கும் இறைவனுக்குமுள்ள தொடர்புகளைத் துண்டித்து விட்டிருப்பது அவர்களுக்குத் தெரியவரும். ஏனெனில் தொடர்புகள் வலுப்பெறுவதும், அதிகமாவதும் அன்பின் காரணமாகவே ஏற்படுகிறது. இவர்களின் கொள்கையோ, மனிதனுக்கும் இறைவனுக்குமுள்ள அன்பையே முறித்து விடுகிறது.

தொடர்புகள் எவ்வாறு அன்புக்குக் காரணமாக அமைகின்றன என்பது குறித்து எனக்கு ஒரு சம்பவம் நினைவிற்கு வருகிறது.





ஒருமுறை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பத்திரிகை படித்துக் கொண்டிருந்தார்கள். மஹ்மூது, மஹ்மூது, மஹ்மூது என்று என்னை கூப்பிட்டார்கள். நான் அருகே சென்றதும், கொல்கத்தாவில் ஒரு மனிதர் இறந்து விட்டார் என்றார்கள். அவர் இறந்தால் எனக்கென்ன? என்று ஆச்சரியப்பட்டு நான் கேட்டேன். அப்போது அவர்கள் இது தொடர்பின்மையின் விளைவாகும். அம்மனித ருடைய வீட்டிலோ அழுதுபுலம்பிக் கொண்டிருப்பார்கள். நீயோ, எனக்கென்ன? என்று கூறுகிறாய் என்றார்கள்.

ஆக, தொடர்பினால் அன்பு உருவாகிறது என்பது புலனாகிறது. ஆனால் தத்பீர் வாதிகளின் கொள்கை இதற்கு மாற்றமாக இருக்கிறது. அவர்கள் கூறுவதாவது, இறைவன் பொருட்களைப் படைத்தான்; மனிதனைப் படைத்தான். தான் விரும்பியபடி செய்யுமாறு அவர்களை விட்டுவிட்டான். இது சரியானதென்றால், அடியாருக்கும் இறைவனுக்குமிடையே எவ்வாறு தொடர்பு நிலைபெற முடியும்? இறைவன் படைத்தவற்றுள் பயன்கள் இருக்கின்றனவென்றாலும், அவற்றில் நஷ்டங்களும்தான் இருக்கின்றன. உதாரணமாக இறைவன் நெருப்பைப் படைத்தான். அதில் சில நன்மைகள் இருக்கின்றனவென்றால் தீமைகளும் இருக்கின்றன. நெருப்பால் உணவு சமைகிறதென்றாலும், இலட்சக்கணக்கான ரூபாய்களையும், வீட்டையும் அது எரித்து சாம்பலாக்கியும் விடுகிறது என்றெல்லாம் கூறுகிறார்கள்.

இவர்கள் விதியை பற்றி இவ்விதமாகத்தான் நம்ப வைத்திருக்கிறார்கள். இதனால் எல்லா அறிவுகளையும் படைக்கின்றவனாகிய இறைவன் மீது, அவன் அறிவுக்குப் புறம்பான வேலை செய்கிறான் என்ற பழி சுமத்தப்படுகிறது. (நவூது பில்லாஹ்-நவூது பில்லாஹ்) இரண்டாவது இறைவனுடன் மனிதனுக்கு இருக்கும் அன்பின் தொடர்பு முற்றிலும் முறிந்து விடுகிறது. ஏனெனில், இறைவன் படைத்த நெருப்பில் பயன்கள் இருந்தபோதிலும், அவற்றில் தீமைகளும்தான் இருக்கின்றன. பின்னர் நெருப்பை படைத்ததில் இறைவன் என்ன நன்மை செய்து விட்டான்? இவ்விதமான எண்ணங்கள் தோன்றினால் இறைவனுடன் அன்பான தொடர்புகள் ஏற்பட முடியாது. இங்குள்ள

மக்களுக்கு அமெரிக்கா விலுள்ளவர்களோடுள்ள மக்களுடன் என்ன தொடர்பு இருக்குமோ அதே போன்ற தொடர்புதான் எஞ்சியிருக்கும். இன்னும் சொல்லப்போனால், அதைவிட குறைவாகத்தான் இருக்கும். ஏனெனில் அமெரிக்காவிலிருந்தாவது பொருட்கள் வரவழைக்கப்படுகின்றன.ஆனால் இறைவனிடம் அந்த அளவுக்கு நம்பிக்கையும் இல்லை. சுருக்கமாக இம்மாதிரியான எண்ணங்கள் ஆன்மீகத்திற்கு எல்லைமீறிய நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளன.

இப்போது நான் இந்த பிரச்சனை குறித்து திருக்குர்ஆனிலிருந்து நிரூபண மாகும் உண்மையைப் பற்றி கூறுகிறேன். முதலில் நான் அதனை விளக்குவேன். பின்னர் அதன் பயன்களைக் குறித்து எடுத்துரைப்பேன். ஆனால் விதி பிரச்சனையின் சில அம்சங்களை மார்க்கப் பெரியார்களால் கூட எடுத்துரைக்க முடியவுமில்லை; எடுத்துரைக்க அவர்கள் முயற்சிக்கவுமில்லை என்பதை நினைவிற்கொள்ள வேண்டும். ஏனெனில் சில நுட்பமான விஷயங்கள் வெறும் ரசனையாகவே இருக்கின்றன. ரசனை என்று நான் சொன்னதன் கருத்து சாதாரணமாக மக்கள் கூறுகின்ற ரசனை அல்ல. அதாவது உண்மையுடன் எவ்வித தொடர்புமில்லாத ஆதாரமற்ற கூற்றுகள் என்ற கருத்தில் நான் கூறவில்லை. நான் கூற வந்ததன் கருத்து, மனிதன் அனுபவிக்காமல் அதனைப் பற்றி அறிந்து கொள்ள முடியாத விஷயங்கள் என்பதாகும். எனவே அந்த விஷயங்களை எனக்கு முன்னுள்ளவர்களாலும் எடுத்துரைக்க முடியவில்லை. என்னாலும் எடுத்துரைக்க முடியாது.

**தக்தீரின் வகைகள்**

விதி பிரச்சனையை விரிவாக எடுத்துக் கூறுமுன் இன்னொன்றை நான் கூற விரும்புகிறேன். அதாவது தக்தீர் பலவகைப்படும். அவற்றில் நான்கு வகையை மட்டும் இப்போது நான் கூறுகிறேன்.

இவை சாதாரண மக்களோடு தொடர்புடைவையாக இருப்பதால் மக்கள் அவற்றைப் புரிந்து கொள்ள முடியும். மேலும் அவற்றைப் புரிய வைக்கவும் முடியும்.

அவற்றில் ஒன்றுக்கு **'தக்தீரே ஆம் தப்யீ'** என்று நான் பெயர் வைக்கிறேன். அதாவது உலக நடப்புகளில் இறைவன்





புறமிருந்துள்ளவை. உதாரணமாக, நெருப்பின் தனிச் சிறப்பு எரிப்பதாகும். தண்ணீரின் தனிச் சிறப்பு தாகத்தைத் தணிப்பதாகும். அவ்வாறே விறகின் தனிச் சிறப்பு எரிதல். மேலும் நூலின் சிறப்பு அதனை குறிப்பிட்ட விதத்தில் பயன்படுத்தினால் ஆடையை உருவாக்கலாம். உணவு வயிற்றில் சென்றால் வயிறு நிரம்ப வேண்டும். இவை அனைத்தும் இறைவன் புறமிருந்துள்ள விதிமுறைகளாகும். மனித னுக்கு இதில் எந்த அதிகாரமும் இல்லை. இந்த தக்தீர் பொதுவானதாகும். மேலும் இயல்பான விவகாரங்களுடன் தொடர்புடையதாகும். ஆன்மாவுடன் இதற்கு எவ்வித தொடர்பும் இல்லை. மாறாக உடலுடன் தொடர்புடையது.

நெருப்பு எரிவதும், திராட்சை மரக்கொடியில் திராட்சைப் பழம் உருவாகுதல், பேரீச்ச மரத்தில் பேரீச்ச பழம் தோன்றுதல் சில மரங்கள் ஒன்றுடன் ஒன்று இணைதல், குழந்தை ஒன்பது மாதத்தில் அல்லது ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் பிறத்தல் இவை அனைத்தும் சாதாரணமாக நிகழக்கூடிய இயற்கைச் சட்டங்களாகும். இவற்றிற்கு தக்தீரே ஆம் தப்யீ (பொதுவான இயற்கை விதி) என்று நான் பெயர் வைக்கின்றேன்.

இரண்டாவது வகை **'தக்தீரே காஸ் தப்யீ'** (சிறப்பான இயற்கை விதி) ஆகும். நான் கூறியதுபோன்று ஒன்று சாதாரண சட்டங்கள். உதாரணமாக, நெருப்பு எரிய வேண்டும் என்பதும், சூரிய கதிர்களினால் வெப்பம் ஏற்பட வேண்டும் என்பதும், சூரிய வெப்பத்தினால் காய்கள் பழுக்க வேண்டும் என்பதும், இன்ன பொருள்களினால் உடல் சுகம் கிடைக்க வேண்டும்; இன்ன பொருட்களினால் நோய் உண்டாக வேண்டும் என்பதும் ஆகிய இவையனைத்தும் சாதாரண இயற்கை சட்டங்களாகும். ஆனால் இன்னொன்று, சிறப்பான இயற்கை சட்டமாகும். அதாவது, இந்த நபருக்கு செல்வம் கிடைக்க வேண்டும் என்றும், இந்த பொருளை எரித்து விட வேண்டும் என்றும், இவர் கொல்லப்பட வேண்டும், இவருக்கு குழந்தை பிறக்க வேண்டும் (அவருடைய மனைவி மலடியாக இருப்பினும் சரியே) என்றும் சிலவேளை குறிப்பாக அல்லாஹ்விடமிருந்து கட்டளைகள் இறங்குகின்றன. இவை சிறப்பான சட்டங்களாகும். சாதாரண இயற்கைச் சட்டத்தின் கீழ் இவை நடப்பதில்லை. அதாவது ஒரு குறிப்பிட்ட நபருக்காக

அல்லாஹ்வின் புறமிருந்து எப்படி வெளியாகியிருக்கிறதோ அவ்விதத்தில் சாதாரண இயற்கைச் சட்டத்தின் படி நடைபெறுவதில்லை. (அதாவது சாதாரண இயற்கைச் சட்டத்தின்படி நடைபெறுவதை விட சற்று வழக்கத்திற்கு மாற்றமான முறையில் குறிப்பிட்ட நபருக்காக வெளிப்படுகிறது.)

தக்தீரின் மூன்றாவது வகை **தக்தீரே ஆம் ஷர்யீ** (சாதாரண மார்க்க விதி) என்பதாகும். உதாரணமாக, மனிதன் இவ்விதமாக தொழுதால் அதற்கு இவ்வாறு பயன் கிடைக்க வேண்டும். இவ்வாறு தொழுதால் இவ்விதமாக விளைவு ஏற்பட வேண்டும். நோன்பு வைத்தால் இந்த சிறப்பான ஆன்மீக மாற்றம் ஏற்பட வேண்டும் ஆகியவை.

தக்தீரின் நான்காவது வகை, **தக்தீரே காஸ் ஷர்யீ** (சிறப்பான மார்க்க விதி). அதன் பொருள், சிறப்பாகவும் குறிப்பாகவும் ஓர் அடியாரின் மீது அல்லாஹ் அருள் செய்வது. உதாரணமாக, இறை வசனங்கள் இறங்குதல். அது குறித்து அல்லாஹ் கூறுகின்றான் :

الرَّحْمٰنُ ۝١ عَلَّمَ الْقُرْاٰنَ ۝٢

(அர்ரஹ்மான் அல்லமல் குர்ஆன்)

பொருள் : அளவற்ற அருளாளனாகிய இறைவன் குர்ஆனைக் கற்றுக் கொடுத்தான். (55:1-2)

இவை தக்தீரின் நான்கு வகையாகும். அவற்றை புரிய வைப்பதற்காகவும், மனதில் பதியவைப்பதற்காகவும் நான் அதற்கு தனித்தனி பெயரை வைத்துள்ளேன். அதாவது:

1. சாதாரண இயற்கை விதி
2. சிறப்பான இயற்கை விதி
3. சாதாரண மார்க்க விதி
4. சிறப்பான மார்க்க விதி

இன்னொன்றையும் நினைவிற் கொள்ள வேண்டும். சாதாரண இயற்கை விதி மட்டுமே பௌதீக தொடர்புகளால் வெளிப்படுகிறது. மற்றெல்லா வகையான விதிகளும் – அது சிறப்பான இயற்கை





விதியாயினும், சாதாரண மார்க்க விதியாயினும், சிறப்பான மார்க்க விதியாயினும் அவையனைத்தும் ஆன்மீக தொடர்புகளின் மூலம் வெளிப்படுகின்றன. அதாவது அவை உலகியல் காரணிகளால் வெளியாவதில்லை. மாறாக, அடியாருக்கு இறைவனோடுள்ள ஆன்மீகத் தொடர்பின் காரணமாக வெளியாகின்றன. எனவே இந்த தக்தீர் நம்பிக்கையாளரின் முன்னேற்றத்திற்காக வெளிப்படுகிறது; அல்லது நிராகரிப்பவர்களை இழிவுபடுத்துவதற்காகவோ அல்லது பொது மக்களுக்கு கருணையாகவோ வெளிப்படுகின்றன.

தக்தீரின் இந்த வகைகளைத் தவிர திருடவோ, கொள்ளை யடிக்கவோ, கற்பழிக்க வோ மனிதனை கட்டாயப்படுத்துகின்ற வேறு எந்த தக்தீரும் கிடையாது. இறைவன் பலவந்தமாக அவ்வாறு செய்ய வைக்கிறான் என்று கூறுபவர்கள் பொய் கூறுகின்றனர். மேலும் இறைவன் மீது குற்றம் சுமத்துகின்றனர்.

**விதியின் வெளிப்பாடு**

தக்தீர் எத்தனை வகைப்படும் என்பதை அறிந்த பின்னர், சிறப்பான தக்தீர் வெளிப்படுவதற்கு என்ன மூலகாரணங்கள் உள்ளன என்பதை அறிவது அவசியம். இதனைப் புரிந்து கொள்ளாத காரணத்தினால் தான், நாம் செய்வதெல்லாம் இறைவன் செய்ய வைப்பதுதான் என்று சிலர் கூறத் தொடங்கி விட்டனர். இறைவன் ஒருவரை வலுக்கட்டாயமாக ஒன்றைச் செய்ய வைப்பதில்லை என்பதை அவர்கள் உணர்வதில்லை. இறைவனின் சிறப்பான விதிகள் இறங்குவதற்கு குறிப்பிட்ட விதிமுறைகள் உள்ளன. இந்த ஏமாற்றம் உண்மையில் கர்வத்தினால் ஏற்பட்டதாகும். அப்படிப்பட்டவர்கள், நாமும் சிறப்பானவர்கள் தாம்; நம்மையும் இறைவன் வேலை செய்ய வைக்கிறான் என்று நினைக்கிறார்கள். ஆனால் உண்மை என்னவென்றால், இறைவனின் குறிப்பிட்ட சில கட்டளைகள் குறிப்பிட்ட சிலருக்காகவே வெளிப்படுகின்றன. அவர்கள் குறிப்பான முறையில் நல்லவர்களாக இருந்தாலும் சரி – அல்லது குறிப்பான முறையில் தீயவர்களாக இருந்தாலும் சரியே.

**சிறப்பான விதியின் விளக்கம்**

விதியின் வகைகளை சுருக்கமாக எடுத்துரைத்த நான் இப்போது அவற்றைக் கொஞ்சம் விளக்கமாக கூறுகிறேன். தக்தீரே

ஆம் எனும் சாதாரண விதி குறிப்பிட்ட சட்டங்களின்படி நடைபெறுகிறது. எனவே அது பற்றி விளக்கத் தேவையில்லை. தக்தீரே காஸ் (சிறப்பான விதி) பற்றி மட்டும் விளக்கிக் கூறுவதே போதுமானது.

தக்தீரே காஸ் இருவகைப்படும் 1. அவற்றில் சில அடிப்படைச் சட்டங்களின்படி இறைவன் புறமிருந்து கட்டளைகள் பிறக்கின்றன. உதாரணமாக, நபியும், நபியுடைய ஜமாஅத்தும் தமது எதிரிகளின் மீது வெற்றி கொள்வார்கள் என்று இறைவன் நிர்ணயித்துள்ளான். திருக்குர்ஆனில் இறைவன் கூறுவதாவது:

كَتَبَ اللّٰهُ لَأَغْلِبَنَّ أَنَا وَرُسُلِي ؕ

நிச்சயமாக நானும் என் தூதர்களும் வெற்றி பெற்றே தீருவோம் என அல்லாஹ் விதித்துள்ளான். (58:22)

وَكَانَ حَقًّا عَلَيْنَا نَصْرُ الْمُؤْمِنِينَ ○

மேலும் கூறுகிறான்: நம்பிக்கை கொண்டவர்களுக்கு உதவுவது நிச்சயமாக எமது கடமையாகவே இருக்கிறது. (30:48)

இதன்படி இறைதூதர்கள் மற்றும் அவர்களது ஜமாஅத்துகள் தமது எதிரிகளை வெற்றி கொள்வதை சாதாரண மார்க்க சட்டத்தின்கீழ் குறிப்பிட முடியாது. ஏனெனில் இது சிறப்பான அடிப்படைச் சட்டத்தின்கீழ் உள்ள சிறப்புக் கட்டளையாகும். சிலநேரத்தில் இயற்கை விதிகள் அதற்கு மாற்றமாகவே இருக்கின்றன.

2. இரண்டாம் வகை: குறிப்பிட்ட நேரங்களில் குறிப்பிட்ட நபருக்காக வெளியாகும் சிறப்பான விதிகள். மேலும் இவை ஏதாவது அடிப்படைச் சட்டத்தின் கீழ் வெளியாவதில்லை. இதற்கு ஹஸ்ரத் ரஸூல் கரீம் (ஸல்) அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட மக்கா வெற்றி குறித்த வாக்குறுதியை எடுத்துக்காட்டாக கூறலாம்.

ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்கள் எதிரிகளை வெற்றி கொள்ளுதல் என்பது பொதுவான சட்டத்தின் அடிப்படையில்தான் விதிக்கப்பட்டிருந்தது என்றாலும் நபியாக இருப்பவர் தம் ஊருக்கு





மன்னராகவும் ஆக வேண்டும் என்று இறைவன் சட்டம் ஏற்படுத்தவில்லை. ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு தாம் முதலில் மக்காவிலிருந்து ஹிஜ்ரத் (இடம் பெயர்ந்து செல்ல) செய்ய வேண்டும் என்றும், பிறகு மக்காவை வென்று அதன் மன்னராக வேண்டும் என்றும் குறிப்பாக கட்டளையிடப்பட்டிருந்தது. இது ஹஸ்ரத் ரஸூல் கரீம் (ஸல்) அவர்களுக்காக மட்டும் இருந்த சிறப்புக் கட்டளையாகும்.

இக்கட்டளை பிறந்த பின்னர் உலகம் என்ன செய்தாலும் சரியே - முழு உலகமும் சேர்ந்து அவர்களை மக்காவின் மன்னராக ஆகுவதிலிருந்து தடுக்க விரும்பினாலும் அவர்களைத் தடுக்க முடியாது.

திருட்டை இறைவன் செய்ய வைக்கிறான் என்று அறிவற்றவர்கள் கூறுகின்றனர். நாம் கூறுகிறோம்: திருட்டையாவது மக்களால் தடுத்து நிறுத்த முடியம். ஆனால் இறைவன் எதை செய்ய வைக்கிறானோ அதனை யாரும் தடுத்து நிறுத்தவே முடியாது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மக்காவில் இருந்தபோது இவ்வாறு வஹீ இறங்கியது:

إِنَّ الَّذِي فَرَضَ عَلَيْكَ الْقُرْآنَ لَرَادُّكَ إِلَى مَعَادٍ ؕ

“இந்தக் குர்ஆ(னின் போதனையி)னை உமக்குக் கடமையாக்கியவன் (உம்முடைய) திரும்புமிடத்திற்கு உம்மை நிச்சயமாக மீண்டும் கொண்டு வருவான்.” (28:86)

இதில் இரண்டு முன்னறிவிப்புகள் இருந்தன. ஒன்று, மக்காவிலிருந்து வெளியேற வேண்டிவரும்; இரண்டாவது, மீண்டும் திரும்பி வர வேண்டியதும் வரும். அவ்வாறே நடந்தது. எவராலும் அதனைத் தடுக்க முடியவில்லை.

இவ்வாறே ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுக்காகவும், ‘அவரது எதிரிகளின் சந்ததிகள் அனைவரும் கொல்லப்பட வேண்டும்’ என்ற தக்தீரே காஸ் (சிறப்பு விதி) வெளிப்பட்டது. ஆக, நபிமார்கள் வெற்றி பெறுவார்கள் என்பது பொது விதியாகும். ஆனால், இவர் எவ்வாறு வெற்றி பெறுவார்; அவர் எவ்வாறு வெற்றியடைவார் என்பது சிறப்பு விதியாகும்.

இவ்வாறே 'காதியான் முன்னேற்ற மடையும்' என இறைவன் ஹஸ்ரத் மிர்ஸா சாஹிப் அவர்களுக்கு வாக்குறுதியளித்துள்ளான். மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், காதியான் பத்து மைல் தூரம் வரை பரவிக் கொண்டே செல்லும் என்று கூறியிருக்கிறார்கள். இன்று சொற்பொழிவு நடந்து கொண்டிருக்கும் இந்த இடம் (அதாவது மஸ்ஜித் நூர் இருக்கும் இடம்) இதற்கு முன்னர் சொற்பொழிவு நடந்து வந்த இடத்திலிருந்து ஒரு மைல் தொலைவில் உள்ளது என்பதை நீங்கள் அறிவீர்கள். எனவே நபிமார்கள் வெற்றி பெறுவது சில அடிப்படைச் சட்டங்களின் கீழ் நடைபெறும் ஒரு பொது விதியாகும். ஆனால் அவர்கள் வெற்றி பெறும் முறை ஒரு சிறப்பு விதியாகும். அச்சிறப்பு விதி ஒவ்வொரு காலத்தின் நிலைமைக்கேற்ப மாறுபடக் கூடியது. அது ஒரு குறிப்பிட்ட விதிமுறையின் படி வெளியாவதில்லை. உதாரணமாக, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வாழ்ந்து வந்த இடத்தை விரிவுபடுத்த வேண்டும் என கட்டளையிடப்பட்டதென்றால் அதற்குக் காரணம், இன்றைய காலத்தில் பெரும் பெரும் நகரங்கள் உருவாகுவது வழக்கமாகவிட்டது. பெரிய நகரம் என்பது உலகின் புதுமை ஆகிவிட்டது. எனவே இறைவன் இக்காலத்திற்கென்று இந்த சிறப்பு விதியையே வெளிப்படுத்தியிருக்கிறான்.

## தக்தீருக்கு அதன் காரணிகளுடன் உள்ள தொடர்பு

தக்தீர் எவ்வாறு வெளிப்படுகிறது என்பதை நான் இப்போது கூறுகிறேன். இறைவன் ஒருவரைப் பற்றி 'எரிந்துவிடு' என்று கூறுகிறான் என்றால் அவர் அப்படியே எரிந்து விடுகிறாரா? அங்கேயே அவரை நெருப்பு பற்றிக்கொள்ளுமா? அல்லது அதற்காக ஏதாவது காரணிகள் வெளியாகின்றனவா?

விதிக்கு காரணிகளுடன் உள்ள தொடர்பு பலவகைப்படும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

(1) காரணிகளுடனேயே வெளியாகும் விதி. பொதுவான இயற்கை விதி எப்பொழுதும் இவ்விதமே வெளியாகின்றது. எடுத்துக்காட்டாக, தீ எரிதல். தீ எரிகின்றதென்றால், தீயை உருவாக்க வேண்டும் என்ற சிறப்புத்தன்மையை இறைவன்





எப்பொருள்களில் வைத்துள்ளானோ அப்பொருள்கள் இருக்கும் போதுதான் தீ எரியும். உதாரணமாக, எரியும் ஆற்றல் பெற்ற பொருளுடன் நெருப்பை வைத்தல், அல்லது இருபொருள்களோ அல்லது இரு பொருள்களில் ஒன்றோ எரியக்கூடிய தகுதியைப் பெற்றிருந்து அவற்றுள் உராய்வு ஏற்படும்போது தீ எரியும்.

சிறப்பு விதிகள் இருவிதத்தில் வெளியாகின்றன.

(1) அதனுடன் காரணிகள் சேர்ந்திருக்கும்போது

(2) அதனுடன் காரணிகள் சேராமல் இருக்கும்போது

காரணிகளுடன் சேர்ந்து வெளியாகும் சிறப்பு விதி பலவிதங்களில் வெளியாகின்றது.

1. காரணிகள் தென்படுகின்றன. இதற்கு இவையே காரணிகள் என்பது தெளிவாகத் தெரியும். மேலும் இவற்றில் தக்தீரின் அம்சம் மிகவும் மறைவாக இருக்கும். இவை அடுத்து இன்னும் பலவிதமாக வெளியாகின்றன.

2. தீய காரணிகளுக்கு எதிராக நல்ல காரணிகள் உருவாகின்றன. உதாரணமாக, கிராமத்தில் வசித்து வரும் ஒருவரை அங்குள்ள முக்கியப்புள்ளி ஒருவர் விரோதம் காரணமாக துன்புறுத்தி வருகிறார். அப்போது இறைவன் ஏதோ ஒரு காரணத்தால் (என்ன காரணம் என்பதைப் பின்னர் எடுத்துரைப்பேன்) அந்த நபருக்கு துன்பம் ஏற்படக் கூடாது என்று தீர்மானித்துள்ளான் என்றால் அதற்குரிய வழி, தாசில்தாரின் உள்ளத்தில் அந்த நபரைப் பற்றிய அன்பை இறைவன் ஏற்படுத்தி விடுவான். இதனால் தாசில்தார் அந்த நபருடன் நண்பனைப் போல் நடந்து கொள்ள ஆரம்பித்து விடுகிறார். இதனைப் பார்த்த முக்கியப் புள்ளி, 'இந்த நபருக்கு தாசில்தாருடன் தொடர்பிருக்கிறது. என்மீது வழக்கு ஏதும் போட்டு விடக் கூடாது என்று பயந்து அவரை எதிர்ப்பதிலிருந்து விலகிக் கொள்வார்.

2. தீய காரணிகளே நல்ல காரணிகளாக ஆகிவிடுதல். உதாரணமாக, ஒரு நபரின் எதிரி அவரோடு பகைமை கொண்டு அவரை நஷ்டத்திற்குள்ளாக விரும்புகிறார். இறைவன் சில காரணிகளை ஏற்படுத்தி விடுகின்றான். இதனால் அந்த எதிரி

நண்பராகிவிடுகிறார். ஹென்றி மார்டின் கிளார்க் என்பவரின் வழக்கில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன் இவ்வாறே நடந்தது. அப்போது குர்தாஸ்பூர் மாவட்ட டிபுடி கமிஷனராக கேப்டன் டக்லஸ் இருந்தார். ஆரம்பத்தில் இவர் மிகவும் காழ்ப்புணர்ச்சி கொண்டவராக இருந்தார். அவர் குர்தாஸ்பூர் வந்ததும், இங்கு ஒருவர் மஸீஹ் மஹ்தி என வாதம் செய்கிறாரே அவரை ஒடுக்க எந்த ஏற்பாடும் இதுவரை செய்யப்படவில்லையா? என பலரிடம் அவர் கேட்டார். அப்படிப்பட்டவருக்கு தண்டனை கொடுக்க வேண்டும்; ஏனெனில் அப்படிப்பட்ட வாதம் அமைதியை குலைக்கக் கூடியது என்றெல்லாம் கூறினார்.

இந்த வழக்கு முக்கியமானதாக இருந்ததால் அவர் இருக்கும் நீதிமன்றத்திலேயே எடுத்து வைக்கப்பட்டது. அவர் ஏற்கனவே தமக்கிருந்த குரோதமனப்பான்மையினால் வாரண்ட் மூலம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களைக் கைது செய்யுமாறு கட்டளையிட விரும்பினார். ஆனால் போலீஸ் அதிகாரிகளும் அவரின் கீழ் வேலை செய்தவர்களும், மிர்ஸா சாஹிப் மாபெரும் மதிப்பிற்குரிய ஒரு ஜமாஅத்தின் தலைவராவார். அவரோடு இவ்வாறு நடந்து கொள்வது குழப்பத்தை ஏற்படுத்தும். எனவே முதலில் சாதாரணமான முறையில் கூப்பிட வேண்டும். பின்னர் வழக்கின் நிலைமைகளைக் கண்டுணர்ந்த பிறகு நீங்கள் விரும்பும் கட்டளையை இடுங்கள் என ஆலோசனை கூறவே, அவர்களின் ஆலோசனையின்படியே ஹஸ்ரத் சாஹிபை அழைத்து வர ஒரு போலீஸ் அதிகாரி அனுப்பப்பட்டார். அந்த போலீஸ் அதிகாரி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களைத் தம்முடன் கூட்டிச் சென்றார்.

இதுவரை மிர்ஸா சாஹிப்புக்கு ஏன் தண்டனை கொடுக்கப்படவில்லை என்று கேட்ட அதே அதிகாரியின் உள்ளத்தில் இறைவன் ஒரு மாறுதலை ஏற்படுத்தி விட்டான். ஹஸ்ரத் சாஹிப் அவர்களை அவர் தன் அருகில் உட்கார வைத்தார். நீதிமன்றத்திற்கு ஹஸ்ரத் சாஹிப் சென்றதும் எழுந்து நின்று கை குலுக்கினார். மிகவும் மரியாதையுடன் நடந்து கொண்டார்.

சில தந்திரக்கார மனிதர்கள் முதலில் வெளிப்படையாக இவ்வாறு தான் அன்பாகப் பழகுவார்கள். ஆனால் பின்னர்





கடைசியில் நஷ்டத்தை ஏற்படுத்தி விடுவார்கள். அதுபோலதான் இந்த அதிகாரியும் செய்திருக்கிறார் என எவராவது கூறக் கூடும். ஆனால் அடுத்து என்ன நடந்தது என்பதைப் பாருங்கள். வழக்கு ஆரம்பிக்கப்பட்டது. இவ்வழக்கில் ஆங்கிலேய பாதிரி இருந்தார். வழக்கும் சாதாரண வழக்கல்ல; கொலை வழக்காக இருந்தது. (மிர்ஸா சாஹிப் ஒருவரைக் கொலை செய்து விட்டார் என்பது குற்றச்சாட்டு.) சாட்சிகள் தயார் படுத்தப்பட்டிருந்தன. குற்றம் சாட்டியவர் தாம்சாட்டும் குற்றம் உண்மையானதே என வாதிட்டார். இப்படியெல்லாம் இருந்தும் விசாரணையைக் கேட்ட நீதிபதி, ‘இந்த வழக்கு உண்மையானது என்று என் மனசாட்சி சொல்லவில்லை’ என்று கூறினார். அவருடைய உள்ளத்தை ஆட்கொண்டிருந்தது யார்? என்பதை நீங்களே இப்போது சொல்லுங்கள். இறைவன்தான். இல்லையென்றால் கேப்டன் டக்ளஸின் சொந்த தீர்ப்பாக இருந்தால் வெளிப்படைக்கு ஏற்றவாறு அமைந்திருக்க வேண்டும்.

ஆனால் வெளிப்படையான முறையில் அனைத்து விஷயங்களும் ஹஸ்ரத் சாஹிபுக்கு எதிராக அவர் பெற்றிருந்தும் அந்த கேப்டன் போலீஸிடம், ‘உண்மை என்ன என்று அந்த குற்றம் சாட்டுபவரிடம் சென்று கேள் என கட்டளையிடுகிறார். நான் கூறியதே சரியானது என குற்றம் சாட்டுபவர் (வாதி) கூறுவதாக போலீஸ் அதிகாரி வந்து கூறினார். இதனை என் உள்ளம் நம்ப வில்லை என்று கேப்டன் டக்ளஸ் கூறுகிறார். இதனைக் கண்ட கேப்டன் போலீஸுக்கு ஒன்று தோன்றியது. குற்றம் சாட்டுபவரை (வாதியை) பாதிரிகள் மத்தியில் வைப்பதற்குப் பதிலாக போலீஸ் காவலில் வைக்க வேண்டும். அப்போதுதான் சூழ்ச்சிகள் பற்றிய சந்தேகம் இல்லாமல் இருக்கும் என போலீஸ் கூற, அவ்வாறே செய்யப்பட்டது. போலீஸ் காவலில் வைத்து அவனை விசாரித்ததும் குற்றம் சாட்டியவர் மிர்ஸா சாஹிபின் காலடியில் விழுந்தார். எல்லா உண்மைகளையும் தெரிவித்து விட்டார். எனக்கு ஒரு பாதிரிதான் இவ்வாறெல்லாம் கற்றுக் கொடுத்தார்; அந்த பாதிரி சிக்கவைக்க விரும்பிய சில அஹ்மதிகளின் பெயர்களை எனக்கு நினைவில்லாமல் போனால், நீதிமன்றத்தில் என் உள்ளங்கைகளைப் பார்த்து நினைவூட்டிக் கொள்வதற்காக அந்த பாதிரி என் உள்ளங்கைகளில் பென்சிலால் எழுதிக் கொடுத்தார் என்று தெளிவாக அந்த வாதி கூறிவிட்டார்.

இவ்வாறு இறைவன் ஒருபுறம் ஒரு குற்றவாளியின் உள்ளத்தை மாற்றி அவருடைய வாயினாலேயே உண்மையைக் கூற வைத்தான். அதே சமயத்தில் மறுபுறம் டிபுடி கமிஷனரின் உள்ளத்தையும்மாற்றி விட்டான். முதலில் எதிரியாக இருந்த அவர் சாதகமானவராக ஆகிவிட்டார். ஹஸ்ரத் மிர்ஸா சாஹிப் நிரபராதி எனத் தீர்ப்பளித்து விட்டார். நீங்கள் விரும்பினால் உங்களுக்கு எதிராக சூழ்ச்சி செய்தவர்களின் மீது நீங்கள் வழக்குத் தொடுக்கலாம் என்றும் கூறினார். இது ‘தக்தீரே காஸ்’ (சிறப்பு விதி) ஆகும். ஆனால் எப்படி வெளிப்பட்டது? எப்படியென்றால், தீய காரணிகளை இறைவன் நல்ல காரணிகளாக மாற்றிவிட்டான். தண்டனை கொடுக்க வேண்டும் என எண்ணியவரே, மிர்ஸா சாஹிபின் மீதுள்ள இந்த குற்றச்சாட்டு உண்மையாக இருக்கும் என்பதை என் மனம் ஏற்றுக் கொள்ளவில்லை எனக் கூறினார்.

3. தக்தீர் வெளியாவதற்கான மூன்றாவது முறையாவது, தீய காரணிகளின் தீய விளைவிலிருந்து வேறொரு காரணிகள் உருவாக்கப்பட்டு அவற்றின் மூலமாகவே காப்பாற்றுதலாகும். உதாரணமாக, ஒருவர் இன்னொருவரைக் கொல்லவேண்டும் என்பதற்காக அவருடைய வீட்டிற்குச் செல்கிறார்; அவர் மீது வாளையும் வீசுகிறார். ஆனால் வாள் குறி தவறி விடுகிறது அல்லது இடையில் வேறொரு பொருள் குறுக்கிட்டு விடுகிறது. அதனால் அவர் அதிலிருந்து காப்பாற்றப்படுகிறார். இச்சம்பவத்தில் கையாளப்பட்ட தீய காரணிகள் தீயவையாக இருந்தன. அவை நல்ல காரணியாக மாறி விடவில்லை. ஆனாலும் அதன் தீய விளைவிலிருந்து மனிதன் தப்பித்து விட்டான்.

4. நான்காவது, தக்தீர் இவ்வாறும் வெளிப்படுகிறது. தீய காரணிகளுக்கு எதிராக நல்ல முயற்சியை மேற்கொள்வதற்கான வாய்ப்பு கிடைத்து விடுகிறது. உதாரணமாக, எதிரி தாக்குகிறான். அவனுடைய தாக்குதலிலிருந்து தப்பிப்பதற்குள்ள ஒரு வழி நான் முன்னர் கூறியதைப் போன்று, இறைவன் வேறொரு ஆற்றல் வாய்ந்த மனிதனை அவரைக் காப்பாற்றுவதற்காக ஏற்படுத்திவிடுவதாகும். மற்றொரு வழி என்னவெனில், அவருக்கே தமது எதிரியை எதிர்க்கும் ஆற்றல் வழங்கப்படுவதாகும். இவ்வாறு நன்முயற்சிக்கான வாய்ப்பு வழங்கப்பட்டு அவருக்கு எதிராக ஒன்று கூடிய தீய காரணிகளின் தீய விளைவுகளிலிருந்து அவர் காப்பாற்றப்படுகிறார்.





இந்த நான்கு முறைகளிலும் காரணிகளைக் கொண்டே பொதுவிதியை அகற்றிவிடுவதன் மூலம் சிறப்புவிதி வெளியாகின்றது. மேலும் அக்காரணிப் பொருட்கள் கண்ணுக்குப் புலனாகவும் செய்கின்றன.

**விதியுடன் மறைவான காரணிகள்**

தக்தீர் வெளியாவதற்கான இன்னொரு வழிமுறை என்னவென்றால், அதற்காக (விதி வெளிப்படுவதற்காக) காரணிகள் தோற்றுவிக்கப்படுகின்றன என்றாலும் அவை மறைவானவையாக இருக்கின்றன. இறைவன் கூறாதவரை அல்லது மிக நுட்பமாக கவனிக்காத வரை அவை புலனாவதில்லை. எனவேதான், அவை காரணிகளின்றியே வெளிப்பட்டன என நம்பப்படுகிறது. ஆனால், உண்மையில் அவை காரணப்பொருள்களின் துணை கொண்டே வெளியாகின்றன.

உதாரணமாக, ஒருவர் தமது விரோதிக்கு எல்லாவிதமான தொல்லைகளும் கொடுக்க முயற்சி செய்து வருகிறார். தான் விரும்பினால் கொலை செய்துவிடும் அளவுக்கு ஒரு சந்தர்ப்பம் அவருக்குக் கிடைத்திருந்தும், அவருக்கு நீண்டகால ஆசை இருந்தும் அவ்விரோதியைக் கொல்லாமல் விட்டுவிடுகிறார். இப்போது வெளிப்படை யாகப் பார்க்கும்போது அவர் செய்த அந்த செயலுக்கு எவ்வித காரணமும் இல்லை எனத் தெரிகிறது. ஆனால் காரணம் இருக்கவும் செய்யலாம். உதாரணமாக என்னை யாரும் பார்க்கிறார்களோ என்னவோ என்ற பயம் தோன்றியிருக்கலாம் அல்லது இவருடைய உறவினர்களுக்குத் தெரிந்துவிட்டால் என்னைப் பழிவாங்கிவிடுவார்கள் என்று அஞ்சியிருக்கலாம் அல்லது இதுபோன்ற வேறு ஏதாவது காரணத்தை இறைவன் குறிப்பாக ஏற்படுத்தியிருக்கக் கூடும். இவ்வாறான சம்பவம் குறித்து திருக்குர்ஆனிலும் ஓரிடத்தில் வருகிறது. ஹஸ்ரத் ஷுஅய்ப் (அலை) அவர்களை நோக்கி அவருடைய எதிரிகள் இவ்வாறு கூறுகிறார்கள்:

وَلَوْلَا رَهْطُكَ لَرَجَمْنٰكَ ۡ

“நிச்சயமாக நாங்கள் உம்மை எங்களுக்கிடையே பலவீனமான ஒருவராகவே காண்கிறோம். உம்முடைய கூட்டத்தினர்

இல்லாதிருப்பின் நாங்கள் உம்மைக் கல்லெறிந்தே கொன்றிருப்போம்.” (11:92)

அவர்கள் ஹஸ்ரத் ஷுஅய்ப் (அலை) அவர்களைக் கொல்ல விரும்பிய போதிலும் அவரைக் கொல்ல முடியவில்லை. ஏனெனில், அவருடைய உறவினர்கள் கோபமடைந்து பழிவாங்குவார்கள் என அவர்கள் பயந்தார்கள். ஆயினும் அவர்கள் இந்த ஆசையை வெளிப்படுத்தாதவரை, இவர்கள் ஆவேசம் அடைந்தும் ஏன் கொல்லாமல் இருக்கிறார்கள் என்பது மக்களுக்கு ஆச்சரியமாகத்தான் இருந்திருக்கும். கொலை செய்ய விரும்பியதை அவர்கள் வெளிப்படுத்தியதிலிருந்தே, இந்த தக்தீரும் (விதியும்) ஒரு குறிப்பிட்ட காரணத்தின் மூலம் வெளியாகிக் கொண்டிருந்தது என்பது தெரிகிறது.

இது எவ்வாறு சிறப்பு விதியாகும் என்று இங்கு நாம் சந்தேகப்படக் கூடாது. எவருக்கு அதிகமான உறவினர்கள் உள்ளார்களோ மக்கள் அவருக்குப் பயப்படவே செய்கிறார்கள். எனவே இது சாதாரண இயற்கை விதியின் கீழ் நடைபெறவில்லை; மாறாக, சிறப்பு விதியின் கீழ் நடைபெற்றுள்ளது. ஏனெனில் ஹஸ்ரத் ஷுஅய்ப் (அலை) தம்மை நபியாக வாதித்ததுடன் தாம் வெற்றி பெறுவதாகவும், விரோதிகள் தம்மை வெற்றிக் கொள்ள முடியாது என்றும் பகிரங்கமாக அறிவித்திருந்தார்கள். ஆகவே அவருடைய விரோதிகள் அவரை வெற்றி கொள்ள முடியாமற்போனது, சாதாரண இயற்கைச் சட்டத்தின் விளைவு என்று கூறிவிட முடியாது. மாறாக, இது சிறப்பு விதியாகும். மேலும் அல்லாஹ்வின் கை எதிரிகளின் கைகளை தடுத்துக் கொண்டிருந்தது. அதுவும் குறிப்பாக, ஹஸ்ரத் ஷுஅய்ப் (அலை) அவர்களின் உறவினர்களும் எதிரிகளின் கூட்டத்திலேயே இருந்தார்கள். ஷுஅய்ப் நபியின் கூட்டத்தில் இருக்கவில்லை என்பதை நாம் பார்க்கிறோம். மாபெரும் மன்னர்களைக் கூட மக்கள் சிலநேரத்தில் பயப்படாமல் கொன்று விடுவதைப் பார்க்கிறோம். இவையெல்லாம் வைத்துப் பார்க்கும்போது இது இறைவனின் சிறப்பு விதிதான் என்பது மேலும் தெளிவாகிறது.

இவ்வகையான (சிறப்பு) விதிக்கான உதாரணத்தை ஹஸ்ரத் ரஸூல் கரீம் (ஸல்) அவர்களின் வாழ்வில் அஹ்ஸாப் போரில்





வெளியானதைக் காணலாம். அஹ்ஸாப் போரில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் எதிரிகள் தாக்குவதற்கென பலமான ஆயத்தங்களைச் செய்திருந்தார்கள். எவ்வளவு முயற்சித்தும் அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அவர்கள் அச்சமயம் 10,000 படை வீரர்களை அழைத்து வந்திருந்தனர். முஸ்லிம்கள் வெளியே சென்று மலம் கழிக்கக் கூட இடமில்லாத அளவுக்கு அபாயகரமான சூழ்நிலை உருவாகியிருந்தது. திருக்குர்ஆன் அச்சூழ்நிலையைப் பின்வருமாறு படம் பிடித்துக் காட்டுகிறது:

يَآ أَيُّهَا الَّذِينَ آمَنُوا اذْكُرُوْا نِعْمَةَ اللّٰهِ عَلَيْكُمْ إِذْ جَآءَتْكُمْ
جُنُودٌ فَأَرْسَلْنَا عَلَيْهِمْ رِيحًا وَّجُنُودًا لَّمْ تَرَوْهَا ۚ وَكَانَ اللّٰهُ بِمَا
تَعْمَلُونَ بَصِيرًا ۝
إِذْ جَآءُوكُمْ مِنْ فَوْقِكُمْ وَمِنْ أَسْفَلَ مِنْكُمْ وَإِذْ زَاغَتِ الْأَبْصَارُ
وَبَلَغَتِ الْقُلُوبُ الْحَنَاجِرَ وَتَظُنُّونَ بِاللّٰهِ الظُّنُونَا ۝
هُنَالِكَ ابْتُلِيَ الْمُؤْمِنُونَ وَزُلْزِلُوا زِلْزَالًا شَدِيدًا ۝
وَإِذْ يَقُولُ الْمُنٰفِقُونَ وَالَّذِينَ فِي قُلُوبِهِمْ مَّرَضٌ مَّا وَعَدَنَا اللّٰهُ
وَرَسُولُهُ إِلَّا غُرُورًا ۝

“நம்பிக்கை கொண்டவர்களே! உங்களை எதிர்த்துப் படைகள் வந்தபோது, அல்லாஹ் உங்களுக்குச் செய்த அருளை நினைத்துப் பாருங்கள். அப்போது நாம் அவர்களுக்கு எதிராகக் காற்றையும், நீங்கள் காணாத படைகளையும் அனுப்பினோம். மேலும் அல்லாஹ் உங்கள் செயல்களை நன்கு பார்க்கிறான். அவர்கள் உங்களிடம் உங்களுக்கு மேலிருந்தும் (அதாவது மலை வழியாகவும்) உங்களுக்கு கீழேயிருந்தும் (தரை வழியாகவும்) வந்த நேரத்தையும் (உங்கள்) இதயங்கள் உங்கள் தொண்டைகளை அடைத்த நேரத்தையும் நீங்கள் அல்லாஹ்வைக் குறித்து சந்தேகமான எண்ணங்களைக் கொண்ட நேரத்தையும் (நினைத்துப் பாருங்கள்). அந்நேரத்தில் நம்பிக்கை கொண்டவர்கள் பெரும் சோதனைக்கு ஆளாக்கப்பட்டு, கடுமையான அதிர்ச்சிக்குள்ளாக்கப் பட்டனர்.

மேலும் அல்லாஹ்வும் அவனது தூதரும் ஏமாற்றத்தைத் தவிர வேறெதையும் எங்களிடம் வாக்குறுதியளிக்கவில்லை என்று நயவஞ்சகர் களும், உள்ளங்களில் நோயுடையோரும் கூறிய நேரத்தையும் (நினைத்துப் பாருங்கள்)". *(திருக்குர்ஆன் 33: 10-13)*

அஹ்ஸாப் போரில் இறைவன் முஸ்லிம்களுக்கு அவர்கள் காணாதவற்றின் மூலம் உதவி புரிந்திருக்கிறான் என்பது இந்த வசனத்திலிருந்து நிரூபணமாகிறது. அதுவும் இயல்பாகவே பயப்படுபவர்களாக இருக்கும் நயவஞ்சகர்கள், முஸ்லிம்கள் வலுவிழந்து விட்டதைப் பார்த்து தைரியமடைந்து, முஸ்லிம்களின் இறைவனும், அவர்களுடைய தூதரும் நம்மிடம் ஏமாற்றத்தையும் பொய்யையுமே வாக்குறுதியளித்தார்கள் என்று கூறத் தொடங்கி விட்டபோது இறைவன் முஸ்லிம்களுக்கு உதவி புரிந்தான்.

அஹ்ஸாப் போரில் இறைவன் மறைவான காரணிகளைக் கொண்டு முஸ்லிம்களுக்கு உதவி புரிந்திருக்கிறான். இதனைக் கண்டு முஸ்லிம்களே ஆச்சரியமடைந்தார்கள். எதிரிகள் மேலோங்கியிருந்த - முஸ்லிம்களைச் சுற்றி வளைத்துக் கொண்ட நாட்களில் ஒருநாள் இரவு வேளையில், ஹஸ்ரத் ரஸூல் கரீம் (ஸல்) அவர்கள் 'யாராவது இருக்கிறார்களா?' என வினவினார்கள். நான் இருக்கிறேன் என ஒரு நபித்தோழர் பதில் கூறினார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். நீர் அல்ல; பின்னர் சற்று நேரத்திற்குப் பிறகு கூப்பிட்டார்கள். நான் இருக்கிறேன் ஹுஸூர் என அந்த சஹாபி பதில் கூற, நீர் அல்ல; வேறு யாராவது இருக்கிறாரா என்று நபி (ஸல்) அவர்கள் கேட்டார்கள். பிறகு சிறிது நேரம் மவுனமாக இருந்து பின்னர், யாராவது இருக்கிறாரா? எனக் கேட்டார்கள். அப்போதும் அதே நபித் தோழர்தான் பதில் கூறினார். அப்போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், எதிரிகள் விரட்டியடிக்கப்பட்டார்கள் என இறைவன் எனக்கு அறிவித்துள்ளான். அவர்களின் நிலைமை என்ன என்று நீங்கள் சென்று பாருங்கள் எனக் கூறினார்கள். அந்த நபித் தோழர் சென்று பார்த்த போது போர்க்களம் வெற்றிடமாகக் கிடந்ததையும், பகைவர்கள் வெருண்டோடி விட்டதையும் கண்டார். சில நபித் தோழர்கள் நாங்கள் அந்த நேரத்தில் விழித்துக் கொண்டு தானிருந்தோம்; எனினும் கடும் குளிர் காரணமாக பேச முடியாமல் இருந்தோம் என்று கூறுகிறார்கள்.





இப்போது வெளிப்படையாகப் பார்க்கும் போது எதிரிகள் வெருண்டோடுவதற்கான எந்தக் காரணமும் தென்படவில்லை. அப்போது நபித் தோழர்களும் ஆச்சரியமடைந்தார்கள். ஆனால் பிற்காலத்தில் இஸ்லாத்தைத் தழுவிய சில மக்களிடமிருந்து தெரிவதைப் போன்று, அதற்கும் காரணங்கள் இருந்தன. அவை மறைவானவையாக இருந்தன. அது என்னவென்றால், பகைவர்கள் இரவில் நன்றாக உறங்கிக் கொண்டிருந்தார்கள். இதற்குள் ஒரு கூட்டத்தினரின் தலைவருடைய விளக்கு அணைந்து விட்டது. எவருடைய விளக்கு அணைந்து விட்டதோ அவருக்கு துன்பமும் கஷ்டங்களும் வரும் என்று அரபு நாட்டில் நம்பப்பட்டு வந்தது. இப்போது என்ன செய்வது? என்று அந்த கூட்டத்தினரின் தலைவர் ஆலோசனை கேட்டார். கடைசியில், நாம் நமது கூடாரத்தை எடுத்து கொஞ்ச தூரம் சென்று கூடார மடிப்போம். நாளை படைகளுடன் வந்து சேர்ந்து கொள்வோம் என முடிவாயிற்று. இவ்வாறு, ஒரு பரிகாரத்தைத் தேடியவர்களாய் அவர்கள் பின்னால் செல்லும் போது அதனைப் பார்த்துவிட்ட இரண்டாவது கூட்டத்தினரும் அதனைப் பார்த்து மூன்றாவது கூட்டத்தினரும் இடத்தைக் காலி செய்து [illegible] எல்லோருமே திரும்பிச் செல்லத் துவங்கி விட்டார்கள்.

جُنُوْدًا لَّمْ تَرَوْهَا ط

[illegible] ல் தாக்கி விட்டார்கள் என்றே ஒவ்வொருவரும் நினைத்து வெருண்டோட ஆரம்பித்து விட்டனர். எதுவரையென்றால் படைக்கு தலைவராயிருந்த அபூ சுஃப்யான் நிலை தடுமாறியவாறு கட்டப்பட்டிருந்த ஒட்டகத்தின் மீது ஏறி அதனை ஓட்டுவதற்காக அடிக்க ஆரம்பித்தார். எல்லோரும் வெருண்டோடிய பின் ஒருவர் மற்றவரைக் காரணம் கேட்ட போதுதான் எந்த காரணமுமின்றி வீணாக ஓடிவந்திருப்பது தெரியவந்தது.

சுருக்கமாக, படைகள் ஓடி வந்ததற்குக் காரணம் இருந்தபோதிலும் அவை தென்பட வில்லை; மறைவானதாக இருந்தது. (ஜுனூதன் ய் லம்தரவ்ஹா)

- அப்போது நாம் அவர்களுக்கெதிராக படைகளை அனுப்பினோம்; அப்படைகளை நீங்கள் பார்க்கவில்லை; ஏனெனில் அவை மறைவானதாயிருந்தன என்றே திருக்குர்ஆனிலும் வந்துள்ளது. *(பார்க்க 33:10)*

அங்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நீர் வேண்டாம்; வேறு யாராவது இருக்கிறார்களா? என மீண்டும் மீண்டும் ஏன் கேட்டார்கள்? அதற்குக் காரணம், உங்களுக்கு வெற்றியைத் தருவது இறைவனே ஆவான். இல்லையெனில் உங்களுடைய நிலைமையோ ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் உங்களை அழைக்கின்றார்கள். நீங்கள் அவருடைய குரலுக்கு பதிலளிக்க முடியாத அளவுக்கு உங்கள் நாவுகள் வரண்டு விட்டன. அதே சமயத்தில் இங்கு இறைவனின் வல்லமையைப் பாருங்கள்! அவன் உங்களுடைய இவ்வளவு அதிகமான எதிரிகளைக் கூட விரட்டியடித்து விட்டான் என்பதை முஸ்லிம்களுக்கு எடுத்துக் கூறுவதற்காகத்தான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மேற்கண்டவாறு பலமுறை கேள்வி கேட்டார்கள்.

### காரணிகளின்றி வெளியாகும் சிறப்பு விதி

காரணிகளுடன் கூடிய சிறப்பு விதியைத் தவிர காரணிகள் இல்லாமலேயே வெளிப்படக் கூடிய இன்னொரு சிறப்பு விதியும் உண்டு. அதுவும் இருவகைப்படும்.

1. உண்மையில் இவை காரணிகளின்றியே வெளியாகின்றன வென்றாலும் ஒரு குறிப்பிட்ட தத்துவத்தின் அடிப்படையில் அல்லாஹ் அத்துடன் காரணிகளையும் இணைத்து விடுகின்றான்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு வந்த இல்ஹாமை இதற்கு உதாரணமாகக் கூறலாம். அஹ்மதிகளுக்குப் பொதுவாக பிளேக் நோய் ஏற்படாது என அந்த இல்ஹாமில் கூறப்பட்டிருந்தாலும், காலுறை அணிய வேண்டும் என்றும், மாலைக்குப் பிறகு வெளியே செல்ல வேண்டாம் என்றும், கொய்னா (Quinine) மருந்தை உபயோகிக்க வேண்டும் என்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அஹ்மதிகளுக்குக் கூறியிருந்தார்கள். இவையெல்லாம் காரணிகள் தான் என்றாலும் (அஹ்மதிகள் பிளேக் நோயிலிருந்து காப்பாற்றப் படுவார்கள் என்ற) இந்த தக்தீர் (விதி) காரணிகளின்றி ஏற்படக் கூடியதாகவே இருந்தது. எப்படியெனில், அஹ்மதியல்லாத மற்றவர்களும் அதிகமாக காலுறைகள், கையுறைகள் ஆகியவற்றை அணிந்திருந்தார்கள். பிளேக் நோயிலிருந்து பாதுகாப்பாக





இருப்பதற்கு அஹ்மதிகளிடம் அதிக காரணிகள், மூலப்பொருள்கள் இருக்கவில்லை. உண்மை என்னவென்றால் அஹ்மதிகளின் உடலில் நுழைய வேண்டாம் என பிளேக் நோயை உண்டாக்கும் கிருமிகளுக்கு கட்டளையிடப்பட்டது. அத்துடன் இந்நோயிலிருந்து தப்பிப்பதற்கான வழிமுறைகளை கையாளுங்கள் என அஹ்மதிகளுக்கும் கட்டளையிடப்பட்டது. காரணம் என்னவென்றால், இந்தக் கட்டளை எதிரிகளின் முன்னாலும் செல்ல இருந்தது. பிறகு ஈமான் மற்றும் ஈமான் இல்லாத நிலை ஆகிய இரண்டிற்குமிடையே எவ்வித வித்தியாசமும் இல்லாமற் போய்விடும். காரணிகளைப் பயன்படுத்தாமலேயே அஹ்மதிகள் பிளேக் நோயினால் பாதிக்கப்படாமல் இருந்திருந்தால் அல்லது இந்த கட்டளையில் விதிவிலக்கே இல்லாமலிருந்தால் எல்லாருமே அஹ்மதிகளாக மாறியிருப்பார்கள். அப்போது இந்த ஈமான் மறைவானவற்றின் மீது கொண்ட ஈமான் ஆக இருக்கவே முடியாது.

2. இந்த விதியின் இரண்டாம் வகை, காரணிகள் இல்லாமலேயே வெளியாகின்றன; மேலும் அக்காரணிகள் அத்துடன் சேர்க்கப்படு வதுமில்லை.

இவ்வகை விதி (தக்தீர்) நபிமார்கள் மற்றும் முஃமின்கள் (நம்பிக்கை கொண்டவர்கள்) ஆகியோரின் முன் வெளியாகுமேயன்றி மற்றவர்களின் முன் வெளியாவதில்லை. ஏனெனில் மற்றவர்களின் முன் இவை வெளியானால் அவர்கள் மறைவானவற்றின் மீது நம்பிக்கை கொள்வதனால் கிடைக்கும் நற்கூலியை இழந்து விடுவார்கள். ஆனால் மறைவானவற்றின்மீது நம்பிக்கை கொண்டிருக்கும் முஃமின்களுக்கு (நம்பிக்கையாளர் களுக்கு) இவ்வகை தக்தீரின் மூலம் வெளிப்படையான ஈமான் வழங்கப்படுகிறது. மேலும் அவர்கள் அவற்றின் மூலம் குறிப்பாக ஈமானில் முன்னேறுகிறார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாழ்வில் அவர்களுடைய சட்டையில் சிவப்புத் துளிகள் விழுந்ததை இந்த தக்தீருக்கு உதாரணமாக கூறலாம். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒரு ருஃயாவில் (ஆன்மீகக் காட்சியில்) தாம் சில தாள்களை இறைவனிடம் எடுத்துச் செல்வதாகவும், இறைவன் அதில் கையெழுத்திடுவதற்காகப்

பேனாவைத் தெளித்தபோது மைத்துளிகள் தமது ஆடைகளில் விழுந்ததாகவும் கண்டார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு இந்த கஷ்ஃப் தோன்றியபோது அவர்களின் கால்களை மவ்லவி அப்துல்லாஹ் சாஹிப் சனோரி அமுக்கிக் கொண்டிருந்தார்கள். அன்னாரின் முழங்காலில் சிவப்பு நிறத் துளி விழுந்ததைக் கண்ட அவர்கள் அதனைத் தொட்டுப் பார்த்தார்கள். அது ஈரமாக இருந்தது. இது என்ன? என்று அவர் ஆச்சரியமடைந்தார்.

இந்தத் துளிகள் அசாதாரணமானவை அல்ல; மாறாக, ஏதோ வெளிக் காரணியினால் ஏற்பட்டதாகும் என உங்களுக்குத் தோன்றவில்லையா என நான் அவரிடம் கேட்டிருக்கிறேன். அவர் கூறினார்: எனக்குத் தோன்றியதுதான். நான் இங்குமங்கும் பார்த்தேன். ஒருவேளை பல்லியின் வால் துண்டிக்கப்பட்டு அதிலிருந்து ரத்தம் வழிந்திருக்குமோ என நினைத்து மேலே பார்த்தேன். அந்த சிவப்புத் துளிக்கான அடையாளம் ஏதும் தென்பட வில்லை. ஆகவே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் விழித்தவுடன் நான் அவர்களிடம் கேட்டேன். முதலில் அவர்கள் தயங்கி பின்னர் நடந்த உண்மையைக் கூறிவிட்டார்கள்.

இவ்வாறு இறைவன் சிறப்பு விதியை எவ்வித காரணியுமின்றி ஒரு நபி மற்றும் அவரைப் பின்பற்றியவரான மவ்லவி அப்துல்லாஹ் சாஹிப் அவர்களின் முன்னிலையில் வெளிப்படுத்தினான். ஏனெனில் மறைவானவற்றின் மீது நம்பிக்கை கொண்டிருந்த அவர்களுக்கு ஈமான் பிஷ் ஷஹாதத் எனும் கண்ணால் கண்டு ஈமான் கொள்ளும் வாய்ப்பை வழங்குவது அதன் நோக்கமாக இருந்தது.

சுருக்கமாக முஃமின்களின் நம்பிக்கையைப் புதுப்பிப்பதற் காகவும் இறைவல்லமைக்கான அத்தாட்சி அவர்களுக்குக் கிடைப் பதற்காகவும் அல்லாஹ் சில நேரங்களில் காரணிகளின்றியும் தக்தீரை வெளிப்படுத்துகிறான். ஆனால் காஃபிருக்கு இவ்விதமான காட்சி காட்டப்படுவதற்கான தகுதி இல்லை.

எல்லா நபிமார்களுக்கும் தலைவரான ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களின் வாழ்விலும் இதற்கான பல உதாரணங்கள் காணப்படுகின்றன. அவர்கள் ஹிஜ்ரத் செய்து மதீனா செல்லும்





போது மக்கத்து காஃபிர்கள் அன்னாரைப் பின் தொடர்ந்து, அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுடன் மறைந்திருந்த ஸவ்ர் குகை வரை சென்றுவிட்டனர். காஃபிர்களுடனிருந்த துப்பறிபவர், இதுவரை தான் வந்துள்ளனர்; இதற்கப்பால் செல்லவில்லை என ஆணித்தரமாகக் கூறிய போதிலும் கீழே குனிந்து உட்பக்கம் பார்க்கக் கூடிய வாய்ப்பு அவர்களில் எவருக்கும் கிடைக்கவில்லை. ஆனால் உண்மையில் மூன்று மைல் வரை பின் தொடர்ந்து வந்து, தேடித்தேடி மலையின் மீது ஏறிய அவர்களுக்கு, இதுவரை வந்து விட்டோமே! குனிந்து பார்ப்போம். ஒருவேளை உள்ளே இருக்கலாம் என்று அவர்களின் மனதில் தோன்றியிருக்க வேண்டும். ஆனால் குறித்த இடத்தை எட்டியிருந்தும் கூட எவரும் தலையைக் குனிந்து குகையின் உள்ளே பார்க்கவில்லை. ‘அவர்கள் குனிந்து பார்த்தால் எங்களைப் பார்க்க முடிந்திருக்கும். அந்த அளவுக்கு குகையின் வாயில் அகலமாக இருந்தது’ என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். ஆகவே, வெளிப்படையான முறையில் எவ்வித காரணியும் இல்லாதிருந்தும் அவர்களின் உள்ளத்தை இறைவல்லமை ஆட்கொண்டிருந்தது.

இவ்வகையான தக்தீர் மிகக் குறைவாக வெளியாகின்றது. மேலும் இது குறித்து முஃமின்களுக்கு மட்டுமே அறிவிக்கப் படுகிறது. அப்போதுதான் அவர்களின் ஈமான் அதிகரிக்கும். ஸவ்ர் குகையின் சம்பவத்திலும் கூட காஃபிர்கள் அங்கு இருந்தார்கள் என்றாலும் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் அங்கு இருக்கிறார்கள் என்பதை அவர்களால் அறிய முடியவில்லை. இதனை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் மட்டுமே அறிந்திருந்தார்கள்.

ஒரு முறை ஹஸ்ரத் ரஸூல் கரீம் (ஸல்) அவர்கள் தண்ணீரை அதிகப்படுத்தியதும் இவ்விதமான தக்தீரின் வகையைச் சார்ந்ததாகும். இன்றைய மக்கள் இந்த அடையாளத்தை மறுத்தாலும் மறுக்கலாம். ஆனால் ஹதீஸ்களில் இது பற்றி எந்த அளவுக்கு ஏராளமான அறிவிப்புகள் வந்துள்ளன வென்றால் எந்தவொரு முஸ்லிமும் இதனை மறுக்க முடியாது. ஆயினும் இந்த அடையாளம் முஸ்லிம்களின் முன்னால் மட்டுமே நிகழ்ந்தது. காரணம், காஃபிர்களின் முன்னால் இவ்வாறான அடையாளம் வெளிப்பட்டால்

அவர்களுக்கு மறைவானவற்றின் மீது நம்பிக்கை கொள்ளும் பாக்கியம் கிடைக்காது போய்விடும் அல்லது அப்படிப்பட்ட தெளிவான அடையாளத்தைக் கண்டும், மந்திரவாதி - மாயக்காரர் என்றெல்லாம் கூறி விரைவில் சூழ்ந்து கொள்ளும் இறை தண்டனைக்கு ஆளாகியிருப்பார்கள். இது 'ரஹ்மானிய்யத்' எனும் இறைபண்பிற்கு மாற்றமானது.

## மனித செயல்களுடன் தக்தீரின் தொடர்பு

தக்தீர் என்பதன் பொருள் பொது மக்கள் கருதுகின்ற, தத்துவவாதிகள் நம்பிக் கொண்டிருக்கின்ற அதே பொருள் அல்ல என்பது நான் இதுவரை கூறியதிலிருந்து தெரிய வருகிறது. அதாவது எதைச் செய்தாலும் அது மனிதன் செய்வதுதான் என்பதோ அல்லது செய்வதெல்லாம் இறைவன் செய்ய வைப்பவைதான்; நமக்கு அதில் எவ்வித தொடர்பும் இல்லை என்பதோ தக்தீர் (இறை நியதி) ஆகாது. மாறாக, தக்தீர் என்பது இவ்விரண்டுக்கும் இடைப்பட்ட ஒரு வழியாகும். அதுதான் சரியானதும், இஸ்லாமிய போதனைக்கு ஏற்றதுமாகும். இப்போது நான் தக்தீருக்கும் மனித செயல்களுக்கும் என்ன தொடர்பு என்பதைப் பற்றி சிறிது விளக்கமாகக் கூறுகிறேன்.

நான் முதலில் கூறியுள்ளதைப் போன்று, தக்தீர் பலவகைப்படும் என்பதை நன்றாக நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். அதாவது, சாதாரண இயற்கை விதி, சிறப்பான இயற்கை விதி, சாதாரண மார்க்க விதி, சிறப்பான மார்க்க விதி ஆகியவை. இவற்றில் சாதாரண இயற்கை விதி மட்டுமே எல்லா மனிதர்களுடனும் தொடர்புடையது. இறைவன் சில சட்டங்களை ஏற்படுத்தியுள்ளான். அவற்றின்படியே முழு உலகமும் இயங்குகிறது. அதாவது ஒவ்வொன்றிலும் சில குறிப்பிட்ட தன்மைகளைப் படைத்துள்ளான். அவை தமக்குரிய அப்பணியை தன் வட்டத்திற்குள்ளேயே நிறைவேற்றுகின்றன.

உதாரணமாக, தீயில் எரியக் கூடிய ஆற்றல் வைக்கப்பட்டுள்ளது. எனவே எரியும் தன்மை கொண்ட பொருளைத் தீ பற்றிக் கொண்டால் அத் தீ அப்பொருளை எரித்துவிடும். அப்பொருள் எரிவது தக்தீரின் (விதி) கீழ் நிகழக் கூடியதாகும். ஆனால் இன்ன மனிதர் இன்னார் வீட்டைக் கொளுத்த





வேண்டும் என இறைவன் விதிக்கவில்லை. பொருட்களின் தன்மையைப் படைத்தது இறைவன் என்றாலும் அவற்றைப் பயன்படுத்துமாறு யாரையும் அல்லாஹ் வற்புறுத்துவதில்லை.

திருடன் திருடும் போது, அவன் பிறருடைய பொருளை எடுக்கும்போது அப்பொருள் அவனிடம் வந்து விடுவது தக்தீர் (விதி) தான். ஆயினும் ஸய்த் என்பவன் பக்ர் என்பவரின் பொருளைத் திருட வேண்டும் என்று இறைவன் விதிக்கவில்லை. ஸய்துக்கு அப்பொருளை எடுப்பதற்கான அல்லது எடுக்கா திருப்பதற்கான ஆற்றல் இருந்தது.

அல்லது உதாரணமாக மழை பெய்கிறது. அது ஒரு பொதுவான விதியின்படி ஏற்படுகிறது. இன்ன இடத்தில் இன்ன நேரத்தில் மழை வரவேண்டும் என மழை குறித்து அல்லாஹ்வின் குறிப்பான கட்டளை ஏதும் இல்லை. ஆகவே மழை பெய்வது ஒரு விதி (தக்தீர்) ஆகும். ஆனால் குறிப்பிட்ட விதியல்ல. பொதுவான ஒரு விதியை இறைவன் நியமித்துள்ளான். அந்த நியதியின்படி மழை வருகிறது. சூழ்நிலைகளுக்கேற்றவாறு மழை பொழிகிறது.

ஆனால் நான் கூறியது போன்று இந்த சாதாரண தக்தீரைத் தவிர வேறு தக்தீர்களும் உள்ளன. அவற்றில் அல்லாஹ்வின் சிறப்பான கட்டளைகள் இறங்குகின்றன. அவ்வாறு சிறப்பான கட்டளைகள் இறங்கும்போது சாதாரண விதிகள் சிறப்புக் கட்டளைகளுக் கேற்றவாறு மாற்றியமைக்கப்படுகின்றன. அல்லது சாதாரண விதியின் விதிமுறைகள் முறியடிக்கப்படுகின்றன. ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களை நெருப்பில் இட்ட போது இவ்வாறே நடந்தது. எனினும் இந்த விதி எல்லாருக்கும், எல்லா நாளும் இறங்குவதில்லை. மாறாக, இவ்விதிகள் குறிப்பிட்ட அடியார்களுக்காக மட்டுமே வெளியாகின்றன. அவை அவர்களின் உதவிக்காக அல்லது அவர்களின் எதிரிகளின் அழிவுக்காக வெளியாகின்றன. ஏனெனில் சிறப்பானவர்களுடன்தான் சிறப்பான முறையில் நடந்து கொள்ளப்படுகிறது.

ஒரு மனிதனின் இரக்கமான நிலைமையும் இந்த மாதிரியான சிறப்புவிதி இறங்குவதற்குக் காரணமாக அமையக் கூடும் - அம்மனிதர் அவ்வளவு நல்லவராக இல்லாவிடினும் சரியே!

அவருடைய நிலைமை குறிப்பாக இரக்கம் காட்டப்பட வேண்டியதாக இருக்கும் சமயத்திலும் இறைவனின் ரஹ்மானிய்யத் (கருணை) எனும் பண்பும் அவனுடைய காதிரிய்யத் (வல்லமை) என்ற பண்பைத் தூண்டிவிடுகிறது. மேலும் அது அந்த அப்பாவியானவரின் துன்பத்தைப் போக்குகிறது; அல்லது அந்த அப்பாவியின் மீது அநீதி இழைத்தவருக்குத் தண்டனை கொடுக்கிறது. இப்படி இறங்கும் சிறப்புவிதி சிலவேளை மனித உறுப்புகளின் மீதும் இறங்குகிறது. அதாவது மனிதனைக் கட்டாயப்படுத்தி அவனால் ஒரு வேலை செய்ய வைக்கப்படுகிறது. உதாரணமாக, ஒரு குறிப்பிட்ட சொல்லைக் கூற வேண்டுமென்று நாவிற்கு கட்டளையிடப்படுகிறது. சொல்பவரின் மனம் விரும்பி னாலும் விரும்பாவிட்டாலும் அவருக்கு அச்சொற்களைக் கூற வேண்டியுள்ளது. அதனைத் தடுக்க அவரால் முடியாது.

அல்லது சில நேரத்தில் கைக்கு ஒரு கட்டளையிடப்படுகிறது; இன்னும் சில வேளை முழு உடலுக்கும் ஏதாவதொரு கட்டளையிடப்படுகிறது. அப்போது மனிதன் தன் கையையோ, முழு உடலையோ கட்டுப்படுத்தவே முடியாது. அவை இறைவனுடைய அதிகாரத்தில் இருக்கும்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு நேர்ந்த ஒரு சம்பவம் இவ்வாறு கூறப்பட்டுள்ளது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தம் கிலாஃபத்தின் காலக்கட்டத்தில் மேடையில் நின்று குத்பா கொடுத்துக் கொண்டிருந் தார்கள். தன்னையுமறியாமல் அவர்களின் நாவில், "يَا سَارِيَةَ الْجَبَلَ .يَا سَارِيَةَ الْجَبَلَ" 'யா சாரியத்தல் ஜபல்; யா சாரியத்தல் ஜபல்' (பொருள் : சாரியா அவர்களே! மலையின் மேல் ஏறிவிடுங்கள். சாரியாவே! மலையின் மேல் ஏறுங்கள்) என்ற சொற்கள் வெளியாயின. இந்த சொற்கள் குத்பாவோடு சம்பந்தமில்லாதவையாக இருந்ததால் நீங்கள் 'என்ன அப்படிச் சொன்னீர்கள்?' என மக்கள் வினவினார்கள். அதற்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், 'இஸ்லாமிய படைத் தளபதியான சாரியா ஓரிடத்தில் நின்று கொண்டிருக்கிறார்கள். எதிரிகள் அவருடைய பின்பக்கத்திலிருந்து தாக்க முனைகின்றனர். இஸ்லாமிய படை அழிந்து விடுமளவுக்கு தாக்க முயற்சித்தனர். அப்போது அருகிலேயே ஒரு மலை இருந்ததைக் கண்டேன். அதன் மேல் ஏறி





எதிரிகளின் தாக்குதலிலிருந்து தப்பித்து விடலாம் எனத் தோன்றியது. எனவே நீங்கள் அந்த மலையில் ஏறிக் கொள்ளுங்கள் என்று நான் குரல் கொடுத்தேன்' என்று பதிலளித்தார்கள்.

இன்னும் அதிக நாள் ஏதும் கழிந்திருக்க வில்லை. சாரியாவிடமிருந்தும் இதே போன்ற ஒரு தகவல் கிடைத்தது. 'அப்போது ஒரு குரல் தோன்றியது. அக்குரல் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் குரலை ஒத்திருந்தது. அதுவே அபாயத்தைப் பற்றி எங்களுக்கு அறிவித்தது. எனவே நாங்கள் மலைமேல் ஏறி எதிரிகளின் தாக்குதலிலிருந்து தப்பித்தோம் என சாரியா அவர்கள் அதில் எழுதியிருந்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் நாவு தம் கட்டுப்பாட்டிற்குள் இல்லாமலிருந்தது என்பதும் தூரம், தொலைவு ஆகியவை ஒரு பொருட்டாக இல்லாத அந்த ஆற்றல் மிக்க இறைவனின் பிடியில் இருந்தது என்பதும் இதிலிருந்து தெரிகிறது.

சுருங்கக் கூறின், தக்தீர் சிலவேளை உடலுறுப்புகளின் மீதும் வெளிப்படுகிறது. அல்லாஹ் கட்டாயமாக வேலையைச் செய்ய வைக்கின்றான் என்று சிலர் நம்புவதைப் போன்றே அவன் மனிதனிடமிருந்து பலவந்தமாக வேலை வாங்குகிறான். அதில் மனிதனுக்கு எந்த தொடர்பும் இல்லை. அவன் ஒரு கருவியைப் போன்றோ அல்லது தானாகவே அசையக் கூடிய சக்தியில்லாத இறந்தவனைப் போன்றோ ஆகிவிடுகிறான். அவன் உயிருடன் இருக்கின்ற ஒருவனின் பிடியில் இருக்கின்றான். அவன் தான் விரும்புவதை அவன் மூலம் செய்ய வைக்கிறான். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் இந்த சம்பவமும் இவ்வாறான தக்தீரின் கீழ் நடந்ததுதான். இதற்கும் அவர்களுக்கும் எந்த சம்பந்தமுமில்லை. இல்லையெனில், இவ்வளவு தொலைவு வரை தம் குரலை எட்ட வைக்க அவர்களுக்கு எங்கே ஆற்றல் இருந்தது?

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அனைத்து முஃஜிஸாக்களின் (அற்புதங்களின்) உறைவிடமாவார்கள். இவ்வகையான தக்தீரின் உதாரணம் அவர்களின் வாழ்க்கையிலும் காணப்படுகிறது. அவர்கள் ஒருமுறை போரிலிருந்து திரும்பும்போது வழியில் ஒரு காட்டில் பகல் வேளையில் ஓய்வெடுப்பதற்காகத் தங்கினார்கள். எல்லா நபித்தோழர்களும்

இங்குமங்கும் தனித் தனியாக உறங்கச் சென்றார்கள். எவ்விதமான அபாயமும் இல்லாதிருந்தபடியால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களும் ஓரிடத்தில் படுத்துவிட்டார்கள். திடீரென்று கண்விழித்ததும், ஒரு காட்டரபியின் கையில் தமது வாளைக் கண்டார்கள். அவன் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் முன்னால் வாளேந்தி, இப்போது உம்மை யார் காப்பாற்றுவார்? எனக் கேட்டான். 'அல்லாஹ்' என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். இதைக் கூறி முடிப்பதற்குள் காட்டரபியின் கையிலிருந்து வாள் கீழே விழுந்துவிட்டது. அந்த நேரத்தில் அவனுடைய கையிலிருந்து வாள் கீழே விழக் கூடாது என முழு உலகமும் சேர்ந்து முயற்சித்தாலும் எதுவும் செய்ய முடியாது. ஏனெனில் மனிதன் அங்குவரை சென்றடைவதற்கு நேரமாகி விடும். இறைவனைத் தவிர வேறு யாராலும் எதுவும் செய்ய முடியாது. அவ்வாறான குறிப்பிட்ட காலகட்டத்தில் அல்லாஹ்வின் குறிப்பிட்ட அடியாருக்காக குறிப்பிட்ட தக்தீர் (விதி) வெளியாகின்றது.

மூளை சரியாக இருந்தவரும், இறைத் தூதரைக் கொல்ல வேண்டும் என எண்ணியவருமான அந்த காட்டரபியின் கை அசையக் கூடாது என்று இறை தக்தீர் இறங்கியது. எனவே அது அசையவில்லை. இது ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஒரு குறிப்பிட்ட ஒருவரின் உடலுறுப்பின் மீது இறங்கிய ஒரு தக்தீர் (விதி) ஆகும்.

இத்தகைய விதிகள் இருக்கும்போது மனிதன் கட்டாயத்திற்குள்ளாக்கப்பட்டவன் என்று ஒருவர் கூற முடியுமா? என்றால் இல்லை. ஏனெனில் இவை இருந்த போதிலும் மனிதன் கட்டாயத்திற்குள்ளாக்கப்படவில்லை; மாறாக, அது குறித்து விசாரிக்கப்படுவான். ஏனென்றால் இந்த விதி எல்லா நேரமும் வெளியாவதில்லை. குறிப்பிட்ட நிலைமைகளிலேயே வெளியாகின்றன. மனிதன் கட்டாயத்திற்குள்ளாகக் கூடிய, நற்கூலி தண்டனை ஆகியவற்றின் வட்டத்தை விட்டு அவனை வெளியேற்றக் கூடிய எந்த வொரு தக்தீரும் வெளியாவதில்லை.

இந்த மாதிரியான தக்தீர் ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களின் காலத்தில் நிழந்ததாக இன்னும் பல சம்பவங்களை உதாரணமாகக் கூறலாம்.





அஹ்ஸாப் போரில் அரபிகள் எல்லாரும் சேர்ந்து மொத்தமாக முஸ்லிம்களைத் தாக்கினார்கள். மதீனாவை எதிரிகள் தாக்கினால் மதீனாவிலுள்ள முஸ்லிம்களும் யூதர்களும் சேர்ந்து அவர்களோடு போரிடுவோம் என ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் யூதர்களுடன் உடன்படிக்கை செய்திருந்தார்கள். எனவே அச்சமயத்தில் முஸ்லிம்களுக்கு உதவி செய்வது யூதர்களின் கடமையாகும். ஆனால் யூதர்கள் இந்த உடன்படிக்கைக்கு நேர் மாறாக, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் எதிரிகளிடம், 'நீங்கள் வெளியே ஆண்களைத் தாக்குங்கள்; நாங்கள் நகரத்தில் உள்ள பெண்களையும் குழந்தைகளையும் கொன்று விடுகிறோம் என சதித் திட்டம் போட்டார்கள்.

ஹஸ்ரத் ரஸூல் கரீம் (ஸல்) அவர்கள் வெளியே போரிடுவதற்காகச் சென்றபோது நிராகரிப்பவர்கள் போரிடவில்லை! ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் திரும்பி வந்து யூதர்களிடம் 'இப்போது கூறுங்கள். உங்களோடு எவ்வாறு நடந்து கொள்வது? உங்களுக்கு என்ன தண்டனை கொடுக்க வேண்டும் எனக் கேட்டார்கள். கருணையுள்ளம் கொண்ட ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் அந்த யூதர்களுக்குத் தண்டனை கொடுத்திருந்தால், لَا تَثْرِيبَ عَلَيْكُمُ الْيَوْمَ 'இன்று உங்கள் மீது எந்த பலவந்தமும் இல்லை' என்று கூறி மக்கத்தினருக்கு வழங்கிய அதே (மன்னித்து, விட்டுவிடும்) தண்டனையைத் தான் கொடுத்திருப்பார்கள். அதாவது அவர்களை மன்னித்திருப்பார்கள். ஆனால் (யூதர்களாகிய) அவர்களோ, நாங்கள் உங்கள் தீர்ப்பை ஏற்க மாட்டோம் எனக் கூறிவிட்டார்கள்.

இதை இறைவனே அந்த யூதர்களின் வாயால் சொல்ல வைத்திருக்கிறான் என்றே கூறவேண்டும். ஏனெனில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது பகைவர்களுடன் மென்மையாக நடந்து கொண்டதாகத்தான் அந்த யூதர்கள் பல ஆண்டுகளாக அனுபவத்தால் கண்டு வந்திருந்தார்கள். அவ்வாறிருந்தும், நாங்கள் உங்கள் தீர்ப்பை ஏற்கமாட்டோம் என்றனர். பின்னர் யார் தீர்ப்பை ஏற்பீர்கள் என்று வினவப்பட்டபோது அந்த யூதர்கள் ஹஸ்ரத் ஸஅத் (ரலி) அவர்களின் பெயரைச் சொன்னார்கள். இவர்களுக்கு என்ன தண்டனை கொடுப்பது என்று

ஸஅத் (ரலி) அவர்களிடம் கேட்ட போது, இவர்களில் வாளேந்தியிருக்கும் இளைஞர்கள் அனைவரும் கொல்லப்பட வேண்டும் எனத் தீர்ப்பளித்தார்கள். அவ்வாறே செய்யப் பட்டது.

யூதர்களின் நாவின் மூலமாக இந்த தக்தீர் (விதி) ஏன் வெளிப்பட்டது? ஏனென்றால் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் கருணை மற்றும் அன்னாரின் அந்தஸ்தின் காரணமாக இந்த தக்தீர் அன்னாரின் நாவின் மூலமாக வெளிப்படுவது சாத்தியமில்லாததாக இருந்தது. அவ்வாறு வெளிப்பட்டால் அன்னாரின் உள்ளம் மிகக் கடினமானது என்றாகிவிடும். ஆனால் காஃபிர்களின் நாவில் வெளிப்படலாம். ஏனெனில் அவர்களின் உள்ளங்கள் ஏற்கனவே கடினமாயிருந்தது.

ஆகவே நாங்கள் உங்கள் பேச்சைக் கேட்க மாட்டோம்; இன்னாரின் பேச்சைத்தான் கேட்போம் என யூதர்கள் கூறுவதன் மூலம் இந்த தக்தீர் அவர்களின் வாயிலிருந்தே வெளியானது.

செயல்கள், நாக்கு ஆகியவற்றின் மீது வெளியாகும் இவ்விரு தக்தீர்களும் மார்க்க ரீதியிலான செயல்களில் நிகழ்வதில்லை என்பததை நினைவிற் கொள்ள வேண்டும். காரணம், மார்க்க ரீதியான செயல்கள் குறித்து மறுமைநாளில் கேள்வி கணக்குக் கேட்கப்படும். எனவேதான் இறைவன் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை வலுக்கட்டாயமாகத் தொழ வைக்கவில்லை; வலுக்கட்டாயமாகச் செய்தான் என்றால் அது 'சாரியாவே! நீர் மலையின் மீது ஏறிக் கொள்ளும்' என்று நாவில் வெளிப்படுத்தியதுதான்.

அவ்வாறே இறைவன் யூதர்களை வலுக்கட்டாயமாக தொழுகையிலிருந்து தடுக்கவோ அல்லது முஹம்மது (ஸல்) அவர்களின் மீது ஈமான் கொள்ளாதிருக்கவோ செய்யவில்லை. மாறாக யூதர்கள் தம் செயலுக்கேற்ற பலனைப் பெறவேண்டும் என்ற விதியை இறக்கினான்; இந்த தக்தீர் மார்க்க சட்டரீதியான செயல்களின் மீது இறங்குவதில்லை. மார்க்க சட்டத்தின் படி தண்டனைக்கு ஆளாகாத செயல்களிலேயே இவ்வகையான தக்தீர் இறங்கும். ஏனெனில் மார்க்க செயல்களின் விஷயத்தில் விதி விதிக்கப்பட்டிருந்தால் அதாவது பலவந்தமாக திருடச் செய்ய வைத்தால் அல்லது வலுக்கட்டாயமாக தொழ வேண்டும் என





வற்புறுத்தப்பட்டால் அதன் மூலமாக நற்கூலியோ தண்டனையோ கிடைப்பதற்குக் காரணமில்லாமற் போய்விடுகிறது. அதுமட்டுமன்று; அவ்வாறான சூழ்நிலையில் தண்டனை வழங்குவது அநீதியாகி விடும். இறைவன் அநீதியிழைப்பதிலிருந்து தூய்மையானவன்.

## தக்தீர் வெளியாகும் போது காரணிகளை பயன்படுத்துவது ஆகுமானதா இல்லையா?

தக்தீர் (இறைநியதி) வெளிப்படும்போது காரணியைக் கையாள்வதற்கான ஆற்றல் மனிதனுக்கு இருக்குமா இல்லையா? ஆற்றல் இருக்குமென்றால் அந்த காரணிகளை பயன் படுத்துவதற்கான அனுமதி இருக்கிறதா இல்லையா? என்பது குறித்து தற்போது நான் கூறுகிறேன்.

உடல் உறுப்புகளின் மீது வெளிப்படும் தக்தீருக்கு எதிராக காரணிகளைக் கையாளும் ஆற்றல் மனிதனுக்கு இல்லை என்பதை நினைவிற் கொள்ள வேண்டும், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் நாவுக்கு ஒரு குறிப்பிட்ட சொற்களை சொல்லும்படியாக கட்டளை யிடப்பட்டதும், உலகில் ஏதாவதொரு பொருளை உபயோகித்து அதன்மூலம் இந்த சொற்களைச் சொல்வதிலிருந்து தம் நாவை தடுத்து நிறுத்தும் ஆற்றல் அவர்களுக்கு இருந்ததில்லை.

அவ்வாறே காஃபிரின் கையிலிருந்தும் வாள் நழுவி விழ வேண்டும் என்றும், அவனால் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மீது தாக்குதல் செய்ய முடியாது என்றும் இறைநியதி வெளியான போது அதற்கு எதிராகச் செய்ய அந்தக் காஃபிரால் முடிந்ததில்லை.

இதே போன்று உள்ளத்தில் இறை நியதி தோன்றும்போது அதற்கு எதிராக - மாற்றமாக மனிதனால் எதுவும் செய்ய இயலாது. ஆனால் எந்த தக்தீர் மனிதனின் உடலுறுப்புகளின் மீது வெளியாகாமல் மற்ற இடங்களில் வெளியாகின்றதோ அல்லது மனிதனின் சிந்தனைக்குட்படாது இயற்கை யாகவே வேலை செய்து கொண்டிருக்கும் மனித உடலுறுப்பு ஏதாவதொன்றில் தக்தீர் வெளியாகின்றதோ அப்போது காரணிகளை உபயோகிக்கும் ஆற்றல் கிடைக்கிறது.

இவ்விதமான நிலைமையில் இரண்டு நிலைகள் உள்ளன. 1. இறைவன் புறமிருந்து தக்தீர் இறங்கியுள்ளது என்பது அவருக்குத் தெரிந்து விடுகிறது. 2. இறைவன் புறமிருந்து ஏதாவதொரு தக்தீர் இறங்கியுள்ளது என்பது அவருக்குத் தெரியாமலிருக்கிறது. தக்தீர் வெளியாகியுள்ளது என்பதே தெரியாதிருக்கும் நிலையில் அவர் காரணிகளை உபயோகிக்கிறார் எனில் அது அவருக்கு பாவமாகாது. ஆனால் இறைவன் இந்த தக்தீரை இறக்கியிருக்கிறான் என்பது அவருக்குத் தெரியும்போது அதற்கும் இரு நிலைகள் உள்ளன:

1. சில காரணிகளை அல்லது எல்லா வகையான காரணிகளையும் கையாள வேண்டும் என இறைவனிடமிருந்தே அவருக்குக் கட்டளை இறங்குகிறது. அதாவது, தக்தீர் ஏற்படுகிறதென்றாலும் அது காரணிகளைச் சார்ந்திருக்கிறது. உதாரணமாக, ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் வெற்றி பெறுவது விதிக்கப்பட்ட ஒன்றாகும். ஆனால் அவ்வெற்றி 'புனிதப் போர்' எனும் காரணிகளைச் சார்ந்திருந்தது. எனவே அப்படிப்பட்ட நேரத்தில் காரணிகளை பயன் படுத்துவதும் கட்டயமானதாகி விடுகின்றது.

2. காரணிகளைச் சாராத தக்தீர். சில நேரங்களில் காரணிகளை பயன்படுத்தக் கூடாது எனவும் அப்படி பயன் படுத்தினால் அவருக்கு நஷ்டம் ஏற்படும் எனவும் இறைவனிடமிருந்து கட்டளை இறங்குகிறது. அப்போது காரணிகளைக் கையாளாமல் இருப்பது அடியாருக்குக் கடமையாகிவிடுகிறது. அப்போது காரணிகளைக் கையாள்வராயின் நஷ்டத்திற்குள்ளாவது மட்டுமல்லாது இறை கோபத்திற்கும் ஆளாவார். இதன் முக்கிய நோக்கம், காரணிகளின்றியும் இறைவனால் காரியத்தைச் செய்ய முடியும் என்று அடியாருக்கு உணர்த்துவதேயாகும்.

இதற்கு எடுத்துக்காட்டாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஒரு சம்பவத்தை நான் முன் வைக்கிறேன். ஒருமுறை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு கடும் இருமலாக இருந்தது. அப்போது தன் மகன் முபாரக் அஹ்மதுக்குச் சிகிச்சை நடைபெற்றதால் முழு இரவும் அவர்கள் விழித்துக் கொண்டிருந்தார்கள். நான் கூட அந்நாட்களில் இரவு 12 மணிக்கு உறங்கி அதிகாலையில் சீக்கிரமே விழித்து





விடுவேன். ஆனால் நான் உறங்கச் செல்லும் போது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை விழித்திருக்கக் கண்டேன். நான் தூங்கி எழுந்த போதும் அவர்களை விழித்திருந்தவாறே கண்டிருக்கிறேன். இந்த அளவுக்கு உழைத்ததால் அவர்களுக்கு கடுமையான இருமல் வந்து விட்டது.

அந்நாட்களில் நான்தான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு மருந்துகளெல்லாம் குடிக்கக் கொடுத்து வந்தேன். மருந்து கொடுப்பது என் பொறுப்பாக இருந்ததால் மருத்துவர்களின் ஆலோசனையின்படி இருமலுக்கு ஒவ்வாத பொருள்களைத் தின்பதிலிருந்து அவர்களை தடுத்தும் வந்தேன்.

ஒருநாள் ஒருவர் அன்னாருக்காக வாழைப்பழத்தை அன்பளிப்பாகக் கொடுத்தார். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) வாழைப்பழத்தைச் சாப்பிட விரும்பினார்கள். ஆனால், உங்களுக்கு இருமல் இருக்கிறதே. நீங்கள் ஏன் வாழைப்பழம் சாப்பிடுகிறீர்கள் என்று கூறி நான் தடுத்ததும், அவர்கள் புன்சிரித்து வைத்து விட்டார்கள். சுருக்கமாக நான் டாக்டர்களின் ஆலோசனைப்படி செயல்படச் சொன்னேன்; எனவே அவர்கள் என் பேச்சைக் கேட்டார்கள்.

இதே நாட்களில் டாக்டர் கலீபா ரஷீதுத்தீன் சாஹிப் ஹஸ்ரத் சாஹிபுக்காக பிரான்ஸில் உள்ள ஆப்பிள் கொண்டு வந்தார்கள். அது எந்த அளவுக்கு புளிப்பாக இருந்ததென்றால் இருமல் இல்லாதவர் களுக்கும் இருமல் வந்து விடும் போலும். ஹஸ்ரத் சாஹிப் அதனை வெட்டி சாப்பிட ஆரம்பித்தார்கள். நான் தடுத்தும் கேட்காமல் சாப்பிட்டுக் கொண்டே யிருந்தார்கள். இந்த அளவுக்கு உங்களுக்கு இருமல் இருந்தும் நீங்கள் புளிப்பான ஆப்பிளை சாப்பிடு கின்றீர்களே என நான் அங்கலாய்த்துக் கொண்டேன். ஆனால் அவர்களோ பொருட்படுத்தவேயில்லை. ஆப்பிளை வெட்டி வெட்டி சாப்பிட்டுக் கொண்டே சென்றார்கள்; அத்துடன் புன்சிரித்துக் கொண்டுமிருந்தார்கள். ஆப்பிளைத் தின்று விட்ட பிறகு கூறினார்கள்: இருமல் சரியாகிவிட்டது. இப்போது எந்தவிதமான பத்தியமும் இருக்கத் தேவையில்லை என்று எனக்கு இல்ஹாம் இறங்கியுள்ளது உனக்குத் தெரியாது. அல்லாஹ்வின் வார்த்தைக்கு மதிப்பளித்தவனாய் நான் ஆப்பிளை அது புளிப்பாக

இருந்தபோதிலும் சாப்பிட்டு விட்டேன் என்றார்கள். அவ்வாறே இதற்குப் பிறகு அவர்களுடைய இருமல் சரியாகிவிட்டது. எவ்வித தொல்லையும் ஏற்படவில்லை.

**சில நேரங்களில் காரணிகள் உபயோகிக்கப்படுவது ஏன்?**

சிலநேரங்களில் அடியார்கள் மூலமாகக் காரணிகள் ஏன் உபயோகம் செய்ய வைக்கப்படுகிறது? காரணிகளின்றியே ஏன் வேலைகள் நடைபெறுவதில்லை என்றொரு கேள்வி இங்கு எழுகிறது.

இதுபற்றி நினைவில் வைத்துக் கொள்ள வேண்டியவை என்னவெனில்:

1. காரணிகளின்றியே எப்பொழுதும் வேலை நடைபெறுவதென்றால் நற்கூலியைப் பெறுவதற்கு கட்டாயத் தேவையாக இருக்கின்ற மறைவானவற்றின் மீதான நம்பிக்கை என்பது வீணாகிவிடும். அதுமட்டுமின்றி அடியாரின் செயலும் இறை கருணையை ஈர்க்கக் கூடியதாக இருக்கிறது. எனவே 'விதியும்' இருக்கிறது; அத்துடன் இறை கருணையை ஈர்ப்பதற்காக இறைவன் காரணிகளையும் உபயோகிக்க வைக்கிறான்.

தக்தீரின் பாதையில் காரணிகள் ஒரு தடையாக இருக்கவும் முடியாது; இருப்பதுமில்லை. எனினும் அடியாரின் பலவீனம் மற்றும் இயலாமை இறை கருணையை ஈர்ப்பதற்கு ஒரு வழிகோலாக இருக்கிறது.

2. காரணிகளைக் கையாளுமாறு இட்ட கட்டளையின் ஒரு நோக்கம் அடியாருக்கு தன் முயற்சியின் பலவீனங்களைத் தெரியப் படுத்துவதுமாகும். காரணிகளின்றியே வேலை நடைபெற்றால், நான் இந்த வேலையைச் செய்தால் எப்படிச் செய்திருப்பேனோ? தெரியவில்லையே என மனிதன் பலமுறை யோசிப்பான்.

ஆனால் அவன் கூடவே செயல்படவும் செய்யும்போது தன் முயற்சி மிக பலவீனமானது என்பதும் அதற்கு எதிராக அல்லாஹ்வின் அருள் எந்த அளவுக்கு வேலை செய்துள்ளது என்பதும் அவனுக்குத் தெரியவரும்.





சுருக்கமாக, முயற்சி மனிதனுடைய ஈமானை வலுப்படுத்துகிறது. இந்த வேலை நம் பொறுப்பில் மட்டும் இருந்தால் நமது முயற்சி இதுவரைதான் எட்டியிருக்கும்; கடைசியில் நான் தோல்வியைக் காண நேர்ந்திருக்கும் என மனிதன் பார்த்துக் கொண்டே செல்வான். இல்லையெனில் தக்தீர் என்பது அவனுக்கு சாதாரணமாக நடக்கும் ஒரு நிகழ்ச்சியாகத் தோன்றும்; அத்துடன் சோம்பேறித்தனமும் அதிகமாகி விடும்.

காரணப் பொருள்களைப் பயன்படுத்துதல் என்பது பற்றி நான் ஓர் உதாரணத்தின் மூலம் விளக்குகிறேன். ஹஸ்ரத் ரஸூல் கரீம் (ஸல்) அவர்கள் வெற்றி பெறுவார்கள்; அவர்களின் விரோதிகள் தோல்வியடைவார்கள் என்று தக்தீர் இறங்கியிருந்தது. எந்தவொரு காரணியும் இன்றி மக்கள் தத்தமது வீடுகளில் உட்கார்ந்து கொண்டே நோய்வாய்ப்பட்டு மரணித்திருந்தால் இது தற்செயலாக நிகழ்ந்த ஒன்று; மக்களாகப் பிறந்தவர்கள் இறக்கத்தான் செய்வார்கள் என்று அனைவரும் கூறிவிடுவர். ஆனால் இறைவனோ (அவ்வாறு கூற வழியில்லாத வகையில்) இந்த தக்தீரை (விதியை) காரணிகளின் மூலம் வெளிப்படுத்தி தன் வல்லமைக்கு சிறந்த சான்றினை வழங்கியுள்ளான்.

பத்ர் போரில் நடந்த ஒரு சம்பவம் இந்த விஷயத்தைத் தெளிவுபடுத்துகிறது. அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) கூறுகின்றார்கள்: இன்று எதிரிகளை எதிர்த்துப் போரிட்டு வெல்ல வேண்டும் என என் மனம் விரும்பியது. (ஏனெனில் காஃபிர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே நடைபெறுகின்ற முதல் போராகும் அது. அதில் ஒருபுறம் முஸ்லிம்களின் பரம விரோதியான அபூஜஹிலும் மறுபுறம் இறைவனும், அவனது தூதரும் இருந்தார்கள். முஸ்லிம்களுக்கு காஃபிர்கள் செய்த அநியாயங்கள் ஒவ்வொன்றாக நினைவிற்கு வந்தன). போரில் வலப்புறமும் இடப்புறமும் ஆற்றல் மிக்க போர் வீரர்கள் இருந்தால் தான் ஒரு போராளியால் நன்கு போரிடமுடியும் என்பது எல்லாரும் அறிந்ததே.

நானும் எனது வலப்புறத்தையும் இடப்புறத்தையும் பார்த்தேன். எனது மன வேதனைக்கு அளவேயில்லை. ஏனெனில் நான் என் இருபக்கத்திலும் 14-15 வயதினைக் கொண்ட அன்சார்

மக்களின் இரு சிறுவர்களைக் கண்டேன். அவர்களைப் பார்த்ததுமே இன்று நாம் என்ன போரிடப் போகிறோம்? என என் உள்ளத்தில் தோன்றியது. இந்த எண்ணம் என் மனத்தில் தோன்றியதுதான் தாமதம். அவ்விரு சிறுவர்களில் ஒருவன் என்னை முழங்கையால் இடித்தான். அடுத்தவன் கேட்டு விடக் கூடாதே என்பதற்காக என் காதில் மிக மெதுவாகக் கேட்டான் சித்தப்பாவே! அபூஜஹல் என்பவன் யார்? அவனைக் கொன்று விடவேண்டும் என மனம் நாடுகிறது. ஏனெனில் அவன் அல்லாஹ்வின் தூதருக்கு மாபெரும் கொடுமையிழைத்துள்ளான் என்றான்.

அவனுடைய இப்பேச்சைக் கேட்டு நான் வியப்படைந்தேன். ஏனெனில் இந்த எண்ணம் எனக்கு கூடத் தோன்றவில்லை. அச்சிறுவனின் இந்த பேச்சை நான் கேட்டு முடிப்பதற்குள் இன்னொரு சிறுவன் மறுபுறம் முழங்கையால் என்னை இடித்தான். அடுத்தவன் கேட்டுவிடக் கூடாதே என்பதற்காக அவனும் 'சித்தப்பாவே! அபூஜஹில் யார்? அவன் ரஸூல் கரீம் (ஸல்) அவர்கள் மீது அதிகமாக அநீதியிழைத்துள்ளான் என கேள்விப்பட்டிருக்கிறேன்' என்று கூறினான். இதனைக் கேட்ட பிறகு நான் இன்னும் அதிக வியற்பிற்காளானேன்.

நான் அபூஜஹிலின் பக்கம் சுட்டிக் காட்டியதும் அவனைச் சுற்றி மாபெரும் வீரம் மிக்க போர் வீரர்கள் நின்று கொண்டிருந் ததையும் அவ்விரு சிறுவர்கள் அதனையும் பொருட்படுத்தாது பாய்ந்து சென்று அபூஜஹிலின் மீது தாக்குதல் புரிந்தனர். நாலாப் புறத்திலுமுள்ள வாளின் தாக்குதலிலிருந்து தம்மைக் காத்துக் கொண்டவர்களாய் அபூஜஹிலை அடைந்தே விட்டார்கள். மேலும் அவனைக் காயப்படுத்தி கீழே தள்ளிவிட்டார்கள்.

காஃபிர்களை அழித்தொழிப்பதற்காக போரை ஏற்படுத்தியதும், அவர்களை எதிர்த்து முஸ்லிம்கள் போரிடுவதும் ஒரு காரணியாக இருந்தது என்பது இச்சம்பவத்திலிருந்து தெரிய வருகிறது. ஆயினும் இந்த முயற்சியின் பலவீனமே ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களுக்காக இறைவன் வெளிப்படுத்திய அந்த தக்தீரின் மகிமையை எடுத்துக் காட்டுகிறது.

ஆனால் இந்த முயற்சி இல்லாமலிருந்தால் இந்த தக்தீரின் மகத்துவமும் இந்த அளவுக்கு வெளிப்பட்டிருக்காது. மேலும் நபித்





தோழர்களுக்கு தமது பலவீனம் மற்றும் அல்லாஹ்வின் மகிமை பற்றி இப்போது தெரிந்து கொண்டது போன்று தெரிந்திருக்க முடியாது. உண்மையில் அவர்கள் தமது வாள்களிலேயே இறைவனுடைய பளிச்சிடும் வாளைக் கண்டு கொண்டார்கள். 13,14 வயது சிறுவர்களால் எவ்வாறு அபூஜஹிலைக் கொல்ல முடியும்? ஆனால் அவர்கள் கொன்றனர். இந்தப் போரில் கொல்லப்பட்ட மற்றவர்களின் நிலையும் இதுவேயாகும். இந்தக் காரணத்தாலேயே இந்தப் போரைப் பற்றி, فَلَمْ تَقْتُلُوهُمْ وَلَٰكِنَّ اللَّهَ قَتَلَهُمْ 'எனவே அவர்களை நீங்கள் கொல்லவில்லை; மாறாக அல்லாஹ்வே அவர்களைக் கொன்றான்' என்று இறைவன் கூறியுள்ளான். *(திருக்குர்ஆன் 8:18)*

பின்னர் ஹஸ்ரத் ரஸூல் கரீம் (ஸல்) அவர்களைக் குறித்து இவ்வாறு கூறினான்:

وَمَا رَمَيْتَ إِذْ رَمَيْتَ وَلَٰكِنَّ اللَّهَ رَمَىٰ

'நீர் எறிந்தபோது நீர் எறிய வில்லை: மாறாக அல்லாஹ்வே எறிந்தான்''. (8:18)

காஃபிர்களின் மீது கற்களை எறிந்தது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தான் என்றாலும் அப்போது காற்றை வேகமாக அடிக்கச் செய்தது இறைவனே; அவன்தான் எதிரிகளைப் போர் செய்ய முடியாதவாறு ஆக்கிவிட்டான். ஆகவே அந்தச் செயல் இறைவன் செய்ததாகவே குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே தக்தீர் (இறைநியதி) வெளியாகும்போது சில சமயங்களில் காரணிகள் ஏதும் இல்லை என்பதை வெளிப்படுத்துவதற்காகவே காரணிகள் வைக்கப்படுகின்றன.

3. மூன்றாவது, தக்தீர் (விதி) விதிக்கப்பட்டிருந்தாலும் அத்துடன் காரணிகளைப் பயன்படுத்துவதற்கும் கட்டளை இடப்படுகிறது. மனிதனுக்கு உழைப்பு, முயற்சி ஆகியவற்றிற்கான கூலி கொடுப்பதற்காக அவ்வாறு செய்யப்படுகிறது. உதாரணமாக, நபித் தோழர்களின் வெற்றியை போர் எனும் காரணிகளுடன் சம்பந்தப்படுத்தியதனால் அவர்களுக்கு போர் செய்ததற்கான நற்கூலியும் கிடைத்தது. போர் செய்யாமலேயே வெற்றி கிடைத்திருந்தால் இந்த நற்கூலி எங்கிருந்து கிடைத்திருக்கும்?

(நபித் தோழர்கள் வெற்றி பெறுவார்கள் என்ற) இந்த தக்தீருக்கு அந்த நபித் தோழர்களுடைய வாளின் தேவை இல்லையென் றாலும் அந்த தக்தீருடன் செயல்படுவதற்கான தேவை சஹாபாக்களுக்கு இருந்தது. அப்போதுதான் நற்கூலி அவர்களுக்குக் கிடைக்க முடியும்.

இவையே தக்தீருடன் காரணிகளைக் கையாள்வதற்கான முப்பெரும் காரணங் களாகும்.

இப்போது எழும் கேள்வி என்னவென்றால், தக்தீரில் சில நேரங்களில் காரணிகளைக் கையாள்வது தடுக்கப்படுகிறதே? அது ஏன்? என்பதாகும்.

இது தொடர்பாக நினைவில் வைத்துகொள்ள வேண்டியது என்னவெனில், இறைவன் சில நேரத்தில் எவ்வித காரணிகளும் இன்றி தக்தீரை (இறை நியதியை) வெளிப்படுத்தி அதன் மூலம் அவன் நம்பிக்கை கொண்டவர்களுக்கு தன் மகிமையையும் மகத்துவத்தையும் காட்ட விரும்புகின்றான். அவனது ஆற்றலுக்கு முன்னால் அனைத்து காரணிகளும் வீணானவை; இறைவன், தான் விருப்பியதைச் செய்து காட்டுகிறான் என்பதை உணர்ந்து கொள்வதற்காகவே அவன் அவ்வாறு செய்கிறான்.

### விதி மாறுமா?

விதி மாறுமா? என்பதற்கு நான் தற்போது விடையளிக்கிறேன். ஆம் விதி மாறலாம் என்பதே இதற்குரிய சுருக்கமான விடையாகும்.

தக்தீர் என்றால் 'தீர்ப்பு' என்று பொருள். மேலும் எவர் தீர்ப்பு வழங்குகிறாரோ அவரால் அந்தத் தீர்ப்பை மாற்றவும் முடியும். தீர்ப்பு வழங்கியபின் அதனை மாற்ற முடியாமலிருப்பது பலவீனத்தின் அறிகுறியாகும். அது இறைவனிடத்தில் இருக்க முடியாது.

### விதி எவ்வாறு நீங்குகிறது?

தக்தீர் (இறைநியதி) எவ்வாறு நீங்க முடியும் என்பது பற்றி நான் இப்போது கூறுகிறேன்.

முதலில், சாதாரண இயற்கை விதி, மற்றொரு சாதாரண இயற்கை விதியினால் நீங்கி விடக் கூடும். உதாரணமாக, தீ பட்டால்





துணி எரிந்து விடும் என்பது சாதாரண இயற்கை விதி. அப்போது ஒரு துணியை எரிப்பதால் அது எரிகிறது என்றால், சாதாரண இயற்கை விதி அதில் ஏற்பட்டு விட்டது என்று கூறப்படும். ஆனால் அதே சமயத்தில் இன்னொரு 'விதி'யும் உண்டு. அதாவது, நெருப்பின் மீது நீரைக் ஊற்றி விட்டால் அது அந்த நெருப்பை அணைத்து விடுகிறது. இவ்வாறு ஒரு சாதாரண இயற்கை விதி இன்னொரு சாதாரண இயற்கை விதியை அகற்றி விடுகிறது.

ஆகவே, சாதாரண விதி நீங்க முடியும். அதுவும் அந்த சாதாரண விதிக்கு நேர் எதிராக மற்றொரு விதியை ஏற்படுத்தி அதனை அழித்து விடுவதன் மூலம் நீங்கலாம்.

நீங்கள் கொடுத்த உதாரணத்தின் மூலம் தத்பீர் (முயற்சி) தக்தீரை (விதியை) மாற்றியுள்ளது என்பதுதான் தெரியவருகிறதே தவிர ஒரு தக்தீர் இன்னொரு தக்தீரை மாற்றியதாக வரவில்லையே? ஏனெனில் நீரை மனிதன்தானே ஊற்றுகிறான் என்று எவராவது கூறுவாரேயானால், நீரை மனிதன் ஊற்றுகிறான் என்றால், நெருப்பையும்தான் சில நேரங்களில் மனிதன் அறிந்தோ அறியாமலோ மூட்டி விடுகிறான். எனவே முதலில் உள்ள செயலை 'தக்தீர்' (நியதி) என்று கூறுவதைப் போலவே இரண்டாவது செயலையும் தக்தீர் என்று கூறுகிறோம்.

இன்னொரு விஷயம் என்னவெனில், ஏற்கனவே குறிப்பிட்டது போன்று மனிதனுடைய செயல் தக்தீர் ஆகவே முடியாது. (நாம் குறிப்பிட்டுள்ள சில சூழ்நிலைகளிலேயே தவிர). நெருப்பு எரிதல், மற்றும் நெருப்பு அணைதல் என்று நாம் கூறியதன் கருத்து அதனை மனித செயலின் பக்கம் சுட்டிக் காட்டுவதன்று. மாறாக, எரிதல் மற்றும் அணைதல் என்ற தன்மையை சுட்டிக் காட்டுவதாகும். (அதாவது நெருப்பினால் எரிப்பதும், நீரினால் அணைப்பதும் மனிதன்தான் என்றாலும் அந்த தன்மையை அதில் உருவாக்கியது மனிதன் அல்லன்.) ஆகவே ஒரு தக்தீர் (இறை நியதி) இன்னொரு தக்தீரை (இறை நியதியை) மாற்றிவிட்டது என்று கூறுவதே சரியானது. அவ்வாறில்லாமல் இறைவன் எரியக் கூடிய தன்மையை நெருப்பில் வைக்காவிட்டால் ஒரு பொருளை யாரால்தான் எரித்து விட முடியும்? அவ்வாறே நீரில், அணைக்கும் தன்மையை இறைவன் வைத்திருக்காவிட்டால், அதன்

மூலம் யார் நெருப்பை அணைத்து விட முடியும்?

இதே போன்று இன்னொரு உதாரணத் தைப் பாருங்கள். ஒருவர் அதிகமாக மிளகாய் சாப்பிட்டு விட்டார். அது அவரது குடலைத் தின்று விடுகிறது. குடலில் எரிச்சலை உருவாக்கிவிடுகிறது. இது தக்தீர் ஆகும்.

இதற்கு எதிராக அவர் இன்னொரு தக்தீரின் (இறைநியதியின்) மூலம் பலன் பெறுகிறார். அதாவது, நெய் அல்லது வேறு ஏதாவது கொழுப்புப் பொருட்களை உட்கொள்கிறார். அதனால் அரிப்பு நீங்கி, சுகம் பெறுகிறார். இது முதல் தக்தீரை அழித்து விடுகிறது.

இதைவிட மேலான ஓர் உதாரணம் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்தில் நிகழ்ந்த ஒரு சம்பவமாகும். அப்போது இஸ்லாமிய படையில் பிளேக் நோய் பரவியது. அந்தப் படையின் தளபதியான ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் (ரலி) அவர்கள் நோய்கள் இறைவனுடைய விதியின்படியே வருகின்றன எனக் கருதினார்கள். இதனால் அந்நோயிலிருந்து தப்பிப்பதற்கான வழி முறைகளைக் கையாள்வதையும் அவர்கள் அவ்வளவு முக்கியமானதாகக் கருதவில்லை. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அப்படையை நோக்கிச் சென்றதும், முஹாஜிரீன் மற்றும் அன்சார் சகோதரர்களின் ஆலோசனையின்படி அவர் களைத் திரும்பி விடுமாறு கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்கள், أَفِرَارٌ مِّنْ قَدْرِ اللّٰهِ؟ (அஃபிராரும் மின் கத்ரில்லாஹ்) என்று கேட்டார்கள். அதாவது உமர் அவர்களே! தாங்கள் அல்லாஹ்வின் தக்தீரிலிருந்து வெருண்டோடுகின்றீர்களா? எனக் கேட்டார் கள். அதற்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், نَعَمْ، نَفِرُّ مِنْ قَدْرِ اللّٰهِ إِلٰى قَدْرِ اللّٰهِ (நஅம். நஃபிர்ரு மின் கத்ரில்லாஹி இலா கத்ரில்லாஹ்) ‘ஆம்! நாம் இறைவனுடைய தக்தீரிலிருந்து வெருண் டோடி இறை தக்தீரின் பக்கமே செல்கின்றோம்’ என்று பதிலளித்தார்கள். இது முஸ்லிம்களுக்கு ஒரு துஆவில் கற்றுக் கொடுக்கப்பட்ட அதே கருத்துதான். இந்த துஆவை ஒவ்வொரு முஸ்லிமும் தூங்குவதற்கு முன்னர் ஓதவேண்டும்; அதற்குப் பிறகு எதுவும் பேசக் கூடாது என்று ஒவ்வொரு முஸ்லிமிடமிருந்தும் எதிர்பார்க்கப்படுகிறது. அந்த துஆவில் வருவதாவது:





"لَا مَلْجَأَ وَلَا مَنْجَىٰ مِنْكَ إِلَّا إِلَيْكَ"

**(லா மல்ஜஅன் வலா மன்ஜா மின்க இல்லா இலைக)**

பொருள் : எங்கள் இறைவா! உன்னுடைய கோபத்திலிருந்து தப்பிப்பதற்கும், அதிலிருந்து அடைக்கலம் பெறுவதற்கும் உன்னுடைய சன்னிதானத்தைத் தவிர வேறெந்த இடமும் இல்லை.

ஒரு தக்தீரை விடுத்து மற்றொரு தக்தீரின் பக்கம் செல்வதன் உதாரணம், ஒரு கை வெறுமையாகவும் மற்றொரு கையில் உணவும் இருக்கின்ற ஒருவரைப் போன்றதாகும். அவர் வெறுமையான கையை விடுத்து மற்றொரு கையின் பக்கம் செல்லும்போது நீங்கள் இந்தக் கையிலிருந்து வெருண்டோடுகின்றீர்களா? என்று ஒருவர் அவரிடம் கேட்டால், நான் இதிலிருந்து ஓடவில்லை; மாறாக, மற்றொரு கையின் பக்கம் கவனம் செலுத்தினேன் என்றுதான் பதில் கூறுவார்.

(2) சாதாரண இயற்கை விதி இன்னொரு சாதாரண இயற்கை விதியால் நீக்கப்படுவதைப் போன்றே சாதாரண இயற்கை விதியை சிறப்பான இயற்கை விதியைக் கொண்டும் நீக்க முடியும்.

ஒருவருக்கெதிராக உலகியல் காரணிகள் ஒன்று சேர்கின்றன. அவரால் அதனைச் சமாளிக்க முடியாது என்றாலும் அந்த மனிதர் இறைவனுடைய அருளைக் கவர்ந்து இறைவனின் சிறப்பான விதியின் மூலம் அதனைச் சமாளித்து நீக்கி விடமுடியும். எடுத்துக் காட்டு, ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களின் சம்பவம். நெருப்பு, எரிக்க வேண்டும் என்பதுதான் சாதாரண விதி. ஆனால் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களுக்காக சிறப்பு தக்தீர் (விதி) வெளியானது. எனவே நெருப்பால் அவர்களை எரித்து விட முடியவில்லை; நெருப்பின் தீங்கிலிருந்து அவர் காப்பாற்றப்பட்டார்.

அவ்வாறே கொலையுண்டு போகும் தன்மை மனிதனுக்கு இருக்கிறது. இது சாதாரண விதியாகும். எனினும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி இறைவன், وَاللّٰهُ يَعْصِمُكَ مِنَ النَّاسِ ‘மேலும் அல்லாஹ் உம்மை மனிதர்களிடமிருந்து காப்பாற்றுவான்’ என்று கூறியுள்ளான். (5:68) எனவே அவர்களை உலகத்தால் கொலை செய்யவே முடியாது.

ஏனெனில் சாதாரண விதியை சிறப்பு விதி மாற்றி விட்டது. இவ்வாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடனும் நடந்தது.

(3) சாதாரண இயற்கை விதி மற்றொரு சாதாரண இயற்கை விதியாலும், சிறப்பான இயற்கை விதியாலும் நீங்குவதைப் போன்றே சிறப்பான இயற்கை விதி மற்றொரு சிறப்பான இயற்கை விதியால் நீங்கலாம். எவ்வாறென்றால், ஒருவருடைய சில குறிப்பிட்ட நிலைமைகளுக்கேற்ப அவருக்கு குறிப்பிட்ட ஒரு கட்டளையிடப்படுகிறது. பின்னர் அவர் தன்னிடம் ஒரு மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்கிறார். அதனால் அந்த கட்டளையும் மாற்றப்படுகிறது.

உதாரணமாக, ஒருவர் அல்லாஹ்வின் மார்க்க வழியில் குறிப்பாக தடையாக நிற்கிறார். மேலும் மக்களை வழி கெடுக்கிறார். அவருக்கு மரணத்தைக் கொடுக்க வேண்டுமென அல்லாஹ்வின் புறமிருந்து கட்டளையிடப்படுகிறது. ஆனால் சில நேரத்தில் அந்த மனிதர் அக்கட்டளை செயல்படுவதற்கு முன்னரே பாவ மன்னிப்புத் தேடுகிறார். அல்லது ஓரளவு சீர்திருத்தம் செய்து கொள்கிறார் என்றால் அல்லாஹ்வின் புறமிருந்தும் முதலில் இடப்பட்ட கட்டளை ரத்து செய்யப்பட வேண்டுமென்ற கட்டளை கிடைத்து விடுகிறது.

சிறப்பான தக்தீர் பிறிதொரு சிறப்பான தக்தீரால் மாறி விடுவதற்கான உதாரணம், பாதிரி அப்துல்லாஹ் ஆத்தமின் சம்பவமாகும். அவர் புத்தகத்திலும் வாய்வழியாகவும் ஹஸ்ரத் ரஸூல் கரீம் (ஸல்) அவர்களை அவமானப்படுத்த விரும்பினார். மேலும் அவர்களை 'தஜ்ஜால்' என்று கூறினார். (நவூதுபில்லாஹ்). அதிலேயே பிடிவாதமாயிருந்தார். நபி கரீம் (ஸல்) அவர்களின் பிரதிநிதியும் இறைவனால் நியமிக்கப்பட்டவருமான ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களோடு விவாதம் செய்தார். அப்போது, 'அவர் உண்மையின் பக்கம் திரும்பாவிட்டால் 15 மாதத்திற்குள் அழிவுக்காளாவார்' என்ற இறைவனின் தக்தீர் (விதி) வெளியானது. இது சிறப்பு விதியாகும். ஆனால் அவர் பயந்து விட்டார். நான் முஹம்மது (ஸல்) அவர்களைப் பற்றி அவ்வாறான வார்த்தையை உபயோகிக்கவில்லை என்று பகிரங்கமாக கூறியது





மட்டுமல்லாது, தீய சொற்களை விட்டுவிட்டு அமைதியாக வாய் மூடியிருந்தார். எனவே இந்த தக்தீர் நீங்கிவிட்டது.

ஒருவர் வாளேந்தி இன்னொருவரைத் தாக்க, மற்றொருவர் நீ என்னோடு சண்டையிடுகிறாய். எனவே நானும் உன்னைக் கொல்லப் போகிறேன் என்று கூற, இதனைக் கேட்ட முதலாமவர் தன் வாளை கீழே தாழ்த்தி விட்டால் அது அவர் சண்டையிலிருந்து திரும்பி விட்டார் என்றே கருதப்படும். அந்த முதலாமவர் சண்டையை விட்டதோடு நில்லாமல் மற்றவரைக் கட்டி அரவணைக்கவும் வேண்டும் என்பது கட்டாயமில்லை.

ஆத்தமைப் பற்றி 'அவர் உண்மையின் பக்கம் திரும்ப வேண்டும்' என்பது நிபந்தனையாக இருந்தது; அதன் பொருள் அவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதேயாகும் என நம்மை எதிர்ப்பவர்கள் கூறுகின்றனர். நாம் கூறுகிறோம்: உண்மையின் பக்கம் திரும்புதலில் ஹஸ்ரத் ரஸூல் கரீம் (ஸல்) அவர்களின் மகிமையும் வந்து விடுகிறது. மனிதன் தவறான வழியை விட்டு விட்டு, நேரான வழியின் பக்கம் வருதல் என்பது மட்டும் அதற்குப் பொருளல்ல. உண்மையின் பக்கம் மீண்டும் மீண்டும் கவனம் செலுத்துவதும் உண்மையின் பக்கம் திரும்புதலேயாகும். அப்படியிருக்கும்போது உண்மையின் பக்கம் திரும்புதல் என்பதற்கு, 'அப்துல்லாஹ் ஆத்தம் நபிமார்களின் அந்தஸ்தைப் பெற வேண்டும். அதன் பிறகுதான் அவனை மன்னிக்க வேண்டும்' என்றா பொருள் கொடுப்பது?

உண்மையில் 'உண்மையின் பக்கம் திரும்புதல்' என்பதற்கு முஸ்லிமாகி விடுதல், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொள்ளுதல், இறைவழியில் உயிர் துறந்த தியாகி களுள் உள்ளவராக மாறுதல், சித்தீக் (உண்மையாளர்) ஆக மாறுதல் போன்ற பல படித்தரங்கள் உள்ளன. அத்துடன் ஹஸ்ரத் ரஸூல் கரீம் (ஸல்) அவர்களை ஏசுகின்ற ஒருவர் அதிலிருந்து விலகி விடுவதும் உண்மையின் பக்கம் திரும்புதலேயாகும். இவ்வகையான திருப்பம் ஆத்தமிற்கு ஏற்பட்டது. எனவே அவர் அதன் பலனைப் பெற்றார்.

அவர் குறித்து வெளியான சிறப்பு விதியை இன்னொரு சிறப்பு விதி நீக்கி விட்டது. மேலும் இறைவனுடைய கருணை எனும் பண்பு தன் மிகைப்புத் தன்மையை நிரூபித்துக் காட்டி விட்டது.

## முன்னறிவிப்பும் விதி நீங்குவதும்

நபித்துவத்தின் உண்மைக்கு முன்னறிவிப்புகளுடன் அதிக தொடர்பு உண்டு. மேலும் முன்னறிவிப்புகள் நீங்குவதனால் நபிமார்களின் எதிரிகளுக்கு கூச்சலிடக் கூடிய வாய்ப்பு கிடைக்கின்றது. மேலும் முன்னறிவிப்புகள் என்பது தக்தீர் என்ற விவகாரத்தின் ஒரு கிளையேயாகும். எனவே தக்தீருக்கும் முன்னறிவிப்புகளுக்கும் என்ன தொடர்பு என்பதையும் நான் எடுத்துக் கூறி விடுகின்றேன்.

முன்னறிவிப்புகள் இரு வகைப்படும். ஒன்று, இறைஞானத்தை வெளிப்படுத்துவது; இன்னொன்று இறை வல்லமையை வெளிப்படுத்துவது. தக்தீரின் இவ்விரு அம்சங்களையும் புரிந்து கொள்ளாத காரணத்தாலேயே முஸ்லிம்கள் இவ்விஷயத்தில் பெரும் ஏமாற்றத்திற்குள்ளாகியிருக்கிறார்கள்.

இந்துக்களிடத்தில் மறுபிறவிக் கொள்கை உருவானதும் தக்தீரின் இந்த அம்சத்தைப் புரியாததனாலேயேயாகும். இந்துக்கள் கேட்கின்றனர்: ஒரு குழந்தை ஏன் குருடாகப் பிறக்கிறது? அது தனது முற்பிறவியில் செய்த செயலுக்கு தண்டனையாகவே அவ்வாறு குருடாகப் பிறக்கிறது என்கின்றனர்.

ஆனால் உண்மை என்னவென்றால் இறை நியதி இரு வகைப்படும் 1. இயற்கை விதி, 2. மார்க்க சட்ட விதி.

இந்துக்கள் கேட்கின்றனர்: ஒரு குழந்தை ஏன் நொண்டியாகக் பிறக்கிறது? குற்றமில்லாமல் அதனை ஊனமுற்றதாகப் படைத்ததற்கு இறைவன் அநியாயக்காரனா என்ன? எனவே அது தனது முற்பிறவியில் சில தீமைகளைச் செய்திருக்கவேண்டும். அதற்குத் தண்டனை யாகத்தான் அது அவ்வாறு படைக்கப்பட்டுள்ளது என்று அவர்கள் முடிவெடுக்கின்றனர். ஆனால் அவர்களுக்கு இந்த ஏமாற்றம் இரண்டு தவறுகளின் காரணமாக ஏற்பட்டிருக்கின்றன.

ஆனால் உண்மை என்னவென்றால் இறை நியதி இருவகைப்படும் 1. இயற்கை விதி 2. மார்க்க சட்டவிதி.

இந்துக்கள் கேட்கின்றனர்: ஒரு குழந்தை ஏன் நொண்டியாகப்





பிறக்கிறது? குற்றமில்லாமல் அதனை ஊனமுற்றதாகப் படைப்பதற்கு இறைவன் அநியாயக்காரனா என்ன? எனவே அது தனது முற்பிறவியில் சில தீமைகளைச் செய்திருக்க வேண்டும். அதற்குத் தண்டனையாகத்தான் அது அவ்வாறு படைக்கப்பட்டுள்ளது என்று அவர்கள் முடிவெடுக்கின்றனர். ஆனால் அவர்களுக்கு இந்த ஏமாற்றம் இரண்டு தவறுகளின் காரணமாக ஏற்பட்டிருக்கின்றன. 1. ஒன்று அவர்கள் விதிகளின் வகைகளைப் புரிந்துக் கொள்ளவில்லை. நான் முன்னரே விளக்கியதைப்போன்று 'தக்தீர்' (இறைநியதி) என்பது இயற்கை விதி, மார்க்க சட்டவிதி என இருவகைப்படும்.

மார்க்க சட்ட விதியானது மார்க்க சட்டங்களைப் பேணுவதால் அல்லது அவற்றை முறிப்பதால் வெளிப்படுகின்றது. மேலும் இயற்கை விதிக்குரிய பின்விளைவு அதன் சட்டங்களைப் பேணுவதால் அல்லது அவற்றை முறிப்பதால் வெளியாகின்றது. குழந்தை குருடாகவோ ஊனமுற்றதாகவோ பிறப்பது மார்க்க விதியின்படியல்ல; மாறாக இயற்கை விதிகள் முறிவதால் குருடாகவோ, ஊனமுற்ற தாகவோ பிறக்கிறது. பெற்றோர்களின் கவனக் குறைவினாலும் பல பக்கவிளைவுகள் ஏற்பட்டு அவை குழந்தையை பாதிக்கின்றன என்று மருத்துவ ரீதியாக நாம் அறிகிறோம். சில பெண்களின் கருப்பை பலவீனமானதாக இருக்கிறது. அதனால் அவர்களின் குழந்தைகள் ஊனமாகப் பிறக்கின்றன. ஆகவே குழந்தை குறைபாடுள்ளதாகப் பிறப்பது கடந்த காலத்தில் செய்த பாவங்களினால் அன்று; மாறாக அதன் பெற்றோர்களின் உடற்கூறில் உள்ள ஏதாவதொரு குறைவினால் ஆகும். குழந்தை தாய் தந்தையரின் உடற்கூறிலிருந்தே வெளியாவதால் அது தனது பெற்றோர்களின் உடலளவிலான நிறைகுறைகளைக் கொண்டு பிறப்பது கண்டிப்பான ஒன்றாகும். ஒருவருடைய செயலின் விளைவு இன்னொருவரின்மீது ஏற்படக் கூடாது என இறைவன் இயற்கை சட்டத்தை மாற்றியமைத்தாலேயொழிய தாய் தந்தையரின் குணத்தால் குழந்தைகள் பாதிக்கப்படாமல் இருக்கமுடியாது. மேலும் (ஒருவருடைய செயலின் விளைவு இன்னொருவரின் மீது ஏற்படுகிறது என்ற) இந்த இயற்கை விதியை மாற்றியமைத்தால் இன்றைய உலகமே சின்னாபின்னமாகிவிடும் என்பதைப் புரிந்து

கொள்ளுங்கள். ஏனெனில் உலகம் எனும் தொழிற்சாலை இயங்குவதே 'ஒன்று மற்றொன்றின் நல்ல - தீய விளைவுகளை உட்கிரகித்துக் கொள்கிறது' என்ற இச்சட்டத்தால்தான்.

2. இந்துக்கள் விதியைப் புரிந்து கொள்வதில் ஏற்பட்ட தவற்றிற்கு இன்னொரு காரணம், ரூஹ் (ஆவிகள்) ஓரிடத்தில் சேமித்து வைக்கப்பட்டுள்ளன வென்றும் இறைவன் அவற்றைப் பிடித்து பெண்களின் கர்ப்பப்பைகளில் இடுகின்றான் என்றும் அவர்கள் நம்புவதுதான். ஆனால் இதைவிட மூடத்தனமான கொள்கை வேறு ஏதும் இருக்க முடியாது. ஏனெனில் இக்கொள்கையை ஏற்றுக் கொண்டாலும் கூட மனிதனின் செயல்களை இறைவனே செய்ய வைக்கிறான் என்று நம்ப வேண்டிவரும். ஏனெனில் உடலில் ரூஹ் (ஆவி) நுழைய வேண்டிய நேரம் வந்திருக்கும்போது படைக்கப்பட விரும்புபவர் எங்காவது பயணத்தில் சென்றிருந்தால் அல்லது அவர் திருமணமே செய்யாமல் இருந்திருந்தால் அந்த ரூஹ் எவ்வாறு உடலில் நுழைய முடியும்? எனவே இக்கொள்கையை நம்புவதன் மூலம் மனிதனின் எல்லா செயல்களையும் அல்லாஹ்வே செய்ய வைக்கின்றான் என்று நம்ப வேண்டியது வரும். உலகில் உள்ள எல்லா செயல்களையும் இறை கட்டளையினால் வற்புறுத்தப்பட்டு அதனைச் செய்ய வேண்டிவருகிறது என நம்ப வேண்டிவரும். மேலும் இதன்மூலம் ஒரு மனிதன், எதன் காரணமாக நற்கூலிக்கோ, தண்டனைக்கோ உரியவனாகின்றானோ அந்த செயலுக்கான சுதந்திரம் நாசமாகி விடுகின்றது.

இக்கொள்கையை நம்புவதால் இன்னொரு குறைபாடும் உண்டாகிறது. அதாவது கண்டறியப்பட்ட விஷயங்களையும் மறுக்க வேண்டியது கட்டாயமாகிவிடும். உண்மையில் ரூஹ் என்பது விந்தணு கருப்பையில் பெறும் மாறுதலின் விளைவாகும். அம்மாறுதலில் ஏற்படும் குறைபாடுகளின் காரணமாக குழந்தை உயிரில்லாமல் இருப்பதையும் அல்லது உயிர் வந்தாலும் பின்னர் கருப்பையிலேயே வெளியேறி விடுவதையும் நாம் காண்கிறோம். ஆன்மாக்களை இறைவன் ஒன்று சேர்த்து வைத்துள்ளான் என்ற இந்த கொள்கையை ஏற்றுக் கொள்வதனால் இதனையும் நாம் மறுக்க வேண்டியதாகிவிடும். கண்டறியப்பட்ட உண்மைகளை





மறுப்பதென்பது ஓர் அறிவாளியால் முடியாத ஒன்று. (இவ்விஷயத்தைப் பற்றிய விளக்கத்தை அறிய ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நூலாகிய பராஹீனே அஹ்மதிய்யா ஐந்தாம் பாகத்தைக் கண்டிப்பாக படிக்க வேண்டும்).

முன்னறிவிப்புகளைப் புரிந்து கொள்வதில் முஸ்லிம்களும் இவ்வாறே ஏமாற்றமடைந்துள்ளனர். இயற்கை விதி, மார்க்கவிதி ஆகியவற்றின் வித்தியாசங்களைப் புரியாத காரணத்தால் இவ்விஷயத்தில் இந்துக்கள் ஏமாற்றமடைந்துள்ளனர் என்றால், முஸ்லிம்கள் இறைவனின் அறிவு மற்றும் இறை நியதி ஆகியவற்றின் வித்தியாசங்களைப் புரியாத காரணத்தால் இவ்விஷயத்தில் ஏமாற்றமடைந் துள்ளனர்.

ஏனெனில் நான் கூறியதுபோன்று விதிகள் இரண்டு வகையாக இருப்பதைப் போன்றே முன்னறிவிப்புகளும் இருவகைப்படும். 1. ஒன்று, இறைவனுடைய நிரந்தர அறிவை வெளிப்படுத்துபவை. 2. இரண்டாவது, இறைவல்லமையை வெளிப்படுத்துபவை. இறைவனின் நிரந்தர அறிவை வெளிப்படுத்தக் கூடிய முன்னறிவிப்பு ஒருபோதும் நீங்குவதில்லை. (நிறைவேறாமல் இருப்பதில்லை). ஏனெனில் அவை நீங்கிவிட்டால் இறைவனின் அறிவு குறைபாடுள்ளது என்று பொருளாகி விடும். ஆனால் இறைவனின் ஆற்றலையும் வல்லமையையும் வெளிப்படுத்தும் முன்னறிவிப்புகள் சிலநேரங்களில் நீங்கியும் விடுகின்றன. இறைவனின் 'கதீர்' (ஆற்றல் பெற்றவன்) என்ற பண்பின் கீழ் வெளியாகும் முன்னவிப்பு கள் மட்டுமே நீங்கிவிடுகின்றன. அலீம் (மிக அறிந்தவன்) என்ற பண்பின் கீழ் உள்ளவை ஒருபோதும் நீங்குவதில்லை.

## முன்னறிவிப்புகள் ஏன் நீங்குகின்றன?

நீங்கக் கூடிய முன்னறிவிப்புகள் பலவகைப்படும்.

1. தான் கடந்து செல்லும் நிலைமைகளின் விளைவு பற்றி மனிதனுக்கு அறிவிக்கப்பப்படுகிறது.

அதாவது சாதாரண விதியின் கீழ் என்ன விளைவுகள் ஏற்படவிருக்கின்றனவோ அவற்றை தெரிவித்தல். உதாரணமாக

பிளேக் நோய்க் கிருமிகள் இருக்கின்ற ஓரிடத்திற்கு ஒருவர் போகின்றார். அந்நோய்க் கிருமிகள் தொற்றிக் கொள்ளும் வகையில் அவரது உடலமைப்பும் உள்ளது. அதன் தீய விளைவுகளிலிருந்து காத்துக் கொள்ள ஒருபொருளும் அவருக்கு இல்லாதிருக்கிறது என வைத்துக் கொள்வோம். அப்போது அவருக்கு பிளேக் நோய் ஏற்பட்டுவிட்டதாக இறைவன் அவருக்குக் (கனவில்) காட்டுவான். அதனால் அவர் இக்காட்சியைக் கண்ட பிறகு பிளேக் நோய் பரவியுள்ள இடத்திற்கு செல்லவிருந்ததை கைவிட்டு விடுவார். அல்லது அந்த இடத்தில் இருந்தாலும் கூட நோயிலிருந்து தவிர்ந்து கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வார். அவர் அப்படிச் செய்தால் பிளேகிலிருந்து தப்பித்து விடுவார். மேலும் அவருடைய ருஃயா (ஆன்மீகக் காட்சி) பொய்யானதாகிவிடாது; முற்றிலும் உண்மையானதாகவே இருக்கும்.

2. இவ்வாறும் நடக்கலாம்: மனிதனின் ஆன்மீக, நல்லொழுக்க நிலைமைகளுக்கேற்ப வெளிப்படவிருக்கும் சிறப்புவிதி குறித்து அறிவிக்கப்படுகிறது.

3. தக்தீரே முப்ரம் எனும் நீங்காத விதி குறித்து அறிவிக்கப்படுதல்.

இம்மூன்றில் முதல் இருவகை தக்தீரும் பெருமளவில் மாறிவிடுகின்றன. ஆனால் மூன்றாவது வகை மாறுவதில்லை. ஆயினும் எப்போதாவது சில குறிப்பிட்ட நிலைமைகளில் அதுவும் மாறிவிடுகிறது.

முதல்வகை தக்தீர் ஏன் மாறுகிறது? எவ்வாறு மாறுகிறது? என்று இப்போது நான் கூறுகிறேன். இறை நியதி வெளிப்படுவதற்குப் பெயர்தான் முன்னறிவிப்பு என்பதை நினைவிற் கொள்ள வேண்டும். வேறு வகையில் கூறுவதாயின் ஒருவருடைய இயற்கை நிலைமை, மார்க்க நிலைமை ஆகியவற்றிற்கேற்ப அவருடன் நடந்து கொள்ளும் பரிமாற்றத்தை வெளிப்படுத்துவதையே முன்னறிவிப்பு என்கிறோம். இவ்வுண்மையைக் கருத்திற்கொண்டு இப்போது முதல்வகை முன்னவிப்பைப் பாருங்கள். அதாவது, ஒருவருக்கு அவருடைய இயற்கை நிலைமைகளின் முடிவை எடுத்துக் கூறுவது.





உதாரணமாக, இப்போதைய அவருடைய உடல்நிலைமையைப் பொருத்தவரை அதன் முடிவு மரணம்தான். இதுபற்றி அவருக்கு அறிவிக்கப்பட்டு, அதனால் அவர் தன் உடல் ஆரோக்கியத்தைப் பற்றி கவலைப்பட்டு பேணுதலாக நடக்கத் தொடங்கி விட்டால் அதன் பின்விளைவிலிருந்து தப்பித்துக் கொள்வாரா இல்லையா? கண்டிப்பாகத் தப்பித்துக் கொள்வார்.

பொதுவான விதியின் கீழ் நடக்கவிருக்கும் சம்பவங்கள் சிறப்பு விதியினாலும் மாறிவிடுகின்றன. ஆகவே பொதுவிதிக்கேற்ப அறிவிக்கப்பட்ட முன்னறிவிப்பு சிறப்பு விதியினாலும் நீங்கிவிடக் கூடும்.

உதாரணமாக உங்கள் வீட்டில் மரணம் ஏற்படும் என ஒருவருக்கு அறிவிக்கப்படுகிறது. ஆனால் அவர் குறிப்பாகவும் சிறப்பாகவும் சதகா (தானதருமங்கள்) மற்றும் துஆ செய்கிறார் எனில் அந்த மரணம் ஒத்தி போடப்படும்.

இப்படிப்பட்ட முன்னறிவிப்புகளுக்கு உதாரணம் பழக்கமில்லாத குண்டும் குழியுமாக உள்ள ஓரிடத்தில் இருளில் செல்லும் ஒருவரைப் போன்றதாகும். எதிரே படுகுழி ஒன்று இருக்கிறது. அவர் நேராக தொடர்ந்து சென்று கொண்டிருந்தால் அக்குழியில் விழுவது நிச்சயம். ஆனால் விஷயம் தெரிந்த ஒருவர் அவரிடம், ஐயா! எங்கு செல்கிறீர்கள்? கீழே விழுந்து விடுவீர்கள் என்றோ அல்லது உங்களுக்கு மரணம் வந்து விட்டது என்றோ கூறிவிடுகிறார். இதனைக் கேட்ட அவர் பள்ளம் வரை சென்று திரும்பி வந்து எச்சரித்தவரிடம் ‘நீங்கள் பொய் சொன்னீர்கள். நான் விழவில்லையே, மரணிக்கவில்லையே என்று கூறினால் அதற்கு எச்சரித்தவர், ‘நீங்கள் சென்றிருந்தால் விழுந்திருப்பீர்கள்; நீங்கள் செல்லவே இல்லையென்றால் எப்படி விழுவீர்கள்? என்றே பதில் கூறுவார். மற்றவர்களும் அவரிடம், ‘நீ எச்சரித்தவரை பொய்யர் என்கிறாயா? உன் உயிரைக் காப்பாற்றியதால் பழியை அவர்மீது சுமத்துகிறாயா?’ என்றே தூற்றுவார்கள். இதுதான் சாதாரணவிதி இன்னொரு சாதாரணவிதியால் மாறிவிடுவதற்கான உதாரணமாகும்.

சிறப்பு விதிக்கு உதாரணம், அங்கே செல்லாதே; நீ விழுந்து விடுவாய் அல்லது மரணித்து விடுவாய் என எச்சரித்தவரிடம்

இரண்டாமவர், 'நான் அவசியம் போக வேண்டும். தயவு செய்து ஏதாவது உதவி செய்ய முடியுமானால் செய்யுங்கள்' என்று கூறுகிறார். உடனே எச்சரித்தவர் ஒரு பெரிய மரப்பலகையை அக்குழியில் வைத்து விடுகிறார். அந்த நபர் அதனால் அதனைக் கடந்து செல்கிறார். இப்போது எச்சரித்தவரை நோக்கி, நீர் பொய் சொன்னீர்; இந்த மனிதர் குழியில் விழாமல் சுகமாக கடந்து சென்று விட்டார் என்று எவராவது கூறமுடியுமா? கூறமுடியாது. ஏனெனில் அம்மனிதர் எச்சரிக்க வில்லையென்றால் இருட்டில் பள்ளத்தில் விழுந்து நாசமாகியிருப்பார் என்பதில் சந்தேகமில்லை; மேலும் அவர் உதவி செய்யவில்லையெனில் அம்மனிதரால் பள்ளத்தைக் கடந்து சென்றிருக்க முடியாது.

இதைப் போன்றே அல்லாஹ்வும் சில நேரங்களில் இன்னாருக்கு இன்ன கஷ்டங்கள் வரப்போகிறது என்று அறிவிக்கிறான். அவருடைய தற்போதைய நிலைமைக்கு இன்ன விளைவு ஏற்படப் போகிறது என சம்பந்தப்பட்ட வரை எச்சரிப்பதே அதன் நோக்கம். அவர்கள் அந்நிலைமையை மாற்றிவிட்டால் அல்லது அதனை மாற்றுமாறு அல்லாஹ்விடம் பணிந்து துஆச் செய்தால் அந்த கஷ்டங்கள் நீங்கிவிடுகின்றன. அதனால் அந்த முன்னறிவிப்பு பொய்யானது என எந்த அறிவாளியும் கூறமாட்டார். இறைவன் மீது பொய்யையும் சாற்றமாட்டார்.

இன்னொரு முன்னறிவிப்பு எப்படிப்பட்ட தென்றால் அதில் சிறப்பு விதியைப் பற்றி ஓர் அடியாருக்கு அறிவிக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக, ஒரு மனிதர் அளவுக்கு மீறி தீங்கு செய்கிறார். மக்கள் அவரது தீங்குகளினால் அவதிக்குள்ளாகிறார்கள். அவரது தீங்குகளுக்குரிய தண்டனை அவருக்கு இவ்வுலகிலேயே கிடைக்க வேண்டும் என விரும்பிய இறைவன் அவருடைய உயிர், பொருளுக்கு நாசத்தை உண்டாக்குமாறு அல்லது அவரது மதிப்பு மரியாதையை அழித்துவிடுமாறு வானவர்களுக்குக் கட்டளை இடுகிறான். இக்கட்டளை குறித்து இறைவன் சிலவேளை தனது ஏதாவதொரு அடியாருக்கும் கொடுத்து விடுகிறான்.

இந்தச் செய்தியைக் கேட்டு அந்த துஷ்டமான மனிதர் தன் உள்ளத்தில் ஒரு மூலையில் இறையச்சம் எனும் நெருப்பு பாவங்கள் எனும் சாம்பலுக்குக் கீழே இருந்ததால் பயந்து தன் நிலைமைகளை





நோட்டமிடுகிறார். அப்போது அவர் நெருப்பின் வெப்பத்தை உணர்கிறார். மேலும் அதனை அவர் சாம்பலின் கீழிருந்து வெளியிலெடுத்துப் பார்க்கின்றார். அந்த நெருப்பு சாம்பலிலிருந்து வெளிப்பட்டு வெளிச்சத்தையும் சூட்டையும் அதிகரிக்கிறது. அந்த மனிதனுடைய உள்ளத்திற்கு புத்துயிரூட்டுகிறது. சில நாட்களுக்கு முன் துஷ்டமானவராகவும் குழப்பக்காரனாகவும் இருந்த அவர் தன்னகத்தே அன்பு மற்றும் இறையச்சத்தின் சூட்டை உணரத் தலைப்படுகிறார். மேலும் தனது சென்ற கால செயல்களுக்காக வருந்தி இறைவன் முன்னிலையில் சிரம் தாழ்த்தி விடுகிறார். வெட்கம் எனும் கண்ணீரினால் அதனை கழுவுகின்றார். அளவிலா கருணை காட்டுபவனும் மேன்மேலும் அருள் செய்பவனுமாகிய இறைவனுக்கு அந்த மனிதரின் இந்நிலைமையைக் கண்டு இரக்கம் வருமா? வராதா? அந்த மனிதனின் முதல் நிலைமைக்கு அவசியமாயிருந்த அந்த தீர்ப்பை தற்போதைய புதிய நிலைமைக்கேற்ப மாற்றமாட்டானா இல்லையா? அவன்மீது கருணை கொண்டு அவனுக்கு தண்டனை வழங்கவேண்டும் என்ற கட்டளையை மாற்றுவானா? அல்லது நான் என் தீர்ப்பை என் அடியாருக்கு அறிவித்து விட்டேன். எனவே இவர் இனி எவ்வளவுதான் பாவமன்னிப்புக் கோரினாலும் நான் அந்தக் கட்டளையை மாற்ற மாட்டேன் என்று கூறுவானா?

இறைவன் தனது தீர்ப்பை வெளியிடாமலிருந்தால் இஸ்லாமிய போதனையின்படி அந்த தீர்ப்பை மாற்ற முடியாதா என்ன? அவன் தன் சுன்னத்தின் படி (நடைமுறையின்படி) அதனை மாற்றிவிடு கிறான் அல்லவா? ஆக, அவன் தீர்மானம் செய்து அதுபற்றி வானவர்களுக்கு அறிவுறுத்திய போதிலும் அவன் தன் தீர்மானத்தை மாற்ற முடியும்; மாற்றுகிறான். அப்படியிருக்கும்போது அவன் தன் தீர்மானத்தை வானவர்களுக்கு மட்டுமில்லாது ஒரு மனிதனுக்கு தெரிவித்து விட்டான். மேலும் அவர் மூலம் மற்ற மக்களுக்கும் செய்தி கிடைத்து விட்டது என்ற ஒரே காரணத்திற்காக இரக்கம் காட்டாது விட்டு விடுவானா?

இறைவன் தன் தீர்ப்பை மாற்றி விட்டால் அவன் பொய் கூறினான் (நவூது பில்லாஹ்) என்று எந்த முட்டாளாவது கூறமுடியுமா? வேலைக்காரனின் தவற்றை கண்ட முதலாளி, நான்

உன்னை அடிப்பேன் என்று கூறுகிறார். இதனைக் கேட்ட வேலைக்காரன் மிகவும் வெட்கமடைகிறான்; மன்னிப்புக் கோருகிறான். இனி திருந்தி விடுவேன் என வாக்குறுதி அளிக்கிறான். இதனால் அந்த முதலாளி அவனை மன்னித்து அடிக்கவில்லை என்பதால் அந்த முதலாளி பொய் சொன்னார்; வாக்குத் தவறிவிட்டார் என அறிவுள்ள ஒருவர் கூறுவாரா?

முதல் வகை முன்னறிவிப்புகள் - அதாவது பொதுவான இறைநியதியின் அடிப்படையில் ஏற்படவிருக்கும் விளைவுகள் குறித்து அறிவிக்கப்படும் முன்னறிவிப்புகள் பெரும்பாலும் நம்பிக்கையாளர்களுக்கே ஏற்படுகின்றன. அல்லாஹ் அவர்களை எச்சரித்து பூமியில் நிகழவிருக்கும் ஆபத்துகளிலிருந்து அவர்களைக் காப்பாற்றி அவர்கள் மீது தன் கருணையை முழுமைப் படுத்துவதற்காகவுமே அல்லாஹ் அவ்வாறு (முன்னறிவிப்பு) செய்கிறான். ஏனெனில் இறைநம்பிக்கையாளர் இயற்கை விதிகளின் பின்விளைவுக்கு அப்பாற்பட்டவரல்லர். அறியாமையினால் பலமுறை அதில் சிக்குண்டு போகிறார். மேலும் இயற்கைச் சட்டங்களை முறிப்பதால் கஷ்டங்களில் சிக்கிக் கொள்கிறார். அப்போது இறைவன் தீமை பயக்கும் விளைவுகள் ஏற்படுவதற்கு முன்னரே அவருக்கோ அல்லது வேறொரு நம்பிக்கையாளருக்கோ உண்மை நிலையினை அறிவித்து விடுகிறான். அதனால் அவர் இயற்கை சட்டத்தின் மூலமாகவே அல்லது துஆ மற்றும் சதகா (தானதருமங்கள்) மூலமாக அதிலிருந்து தற்காத்துக் கொள்கிறார்.

இரண்டாம் வகை முன்னறிவிப்புகள் அதாவது சிறப்பு விதியின் மூலமாக ஒருவரைப் பற்றி கட்டளை பிறப்பிக்கப்படுகிறது. இவை குறிப்பிட்ட வரம்பு மீறியவர்கள், குழப்பவாதிகளுக்கு ஏற்படுகிறது. அதற்குக் காரணம் என்னவென்றால், அந்த விதியின் மூலமாக வெளியாகும் நீங்கிவிடக்கூடிய முன்னறிவிப்பு எப்பொழுதும் தண்டனை பற்றியதாக இருக்கும். ஏனெனில் தண்டனை பற்றிய முன்னறிவிப்புதான் எப்பொழுதும் நீங்கக் கூடியதாக இருக்கிறதே தவிர வாக்குறுதியைப் பற்றிய முன்னறிவிப்பு நீங்கக் கூடியதல்ல. தண்டனை பற்றிய முன்னறிவிப்பு நீங்குவது கருணையினால் ஆகும். மேலும் அதனால் இறைவனின் மகிமை வெளிப்படுகிறது.





ஆனால் நம்பிக்கையாளர்களுக்காக வெளிப்படும் சிறப்பு விதி வாக்குறுதியாக இருப்பதால் அவை மாறுவதில்லை. காரணம் அவை மாறுவதால் இறை மகிமை வெளிப்படுவதில்லை. இதற்கு இன்னொரு காரணம் எச்சரிக்கை முன்னறிவிப்பு எப்பொழுதும் ஏதாவதொரு காரணத்தால் ஏற்படுகிறது. அந்தக் காரணம் மாறினால் முன்னறிவிப்பும் மாறிவிடும். மேலும் வாக்குறுதி வகையிலான முன்னறிவிப்பு சில நேரத்தில் காரணமின்றியும் ஏற்படுகிறது. எனவே அது நீங்குவதில்லை. ஏனெனில் எச் செயலுமின்றி தானாகவே மனமுவந்து கொடுப்பதாக வாக்குறுதி கொடுக்கப்பட்டதை இன்னொரு காரணத்தினால் தடுத்துவிடுதல் என்பது இறைவனின் மகிமைக்கு எதிரானதாகும்.

## தக்தீரே முப்ரம்

தக்தீரே முப்ரம் (நீங்காத விதி) என்பது குறிப்பிட்ட நிலைமைகளினாலேயே தவிர நீங்குவதில்லை என நான் முன்னரே குறிப்பிட்டேன். தக்தீரே முப்ரம் நீங்குதல் என்றால் என்ன பொருள் என்பதைப் பற்றி நான் இப்போது கூறுகிறேன். தக்தீரே முப்ரம் நீங்குதல் என்றால் அது உண்மையிலேயே முற்றிலுமாக நீங்கிவிடுகிறது என்று பொருளல்ல. மாறாக அதன் நிலை மாறிவிடுகிறது; அது வேறொரு வகையில் மாற்றப்படுகிறது என்பதே அதற்குப் பொருள். இந்த தக்தீர் நுட்பத்திலும் நுட்பமான இரகசியங்களின் அடிப்படையில் இறங்குகிறது. அது மாறி விடுவதால் சிலநேரத்தில் இன்னும் பல சட்டங்களின்மீது அது தாக்கத்தை ஏற்படுத்தி விடுகிறது. ஆகவே இந்த தக்தீர் அல்லாஹ்வின் சிறப்பு ஹிக்மத்தின் அடிப்படையில் முழுவதுமாக நீக்கப்படுவதில்லை. நீங்குகிறதென்றால் பரிந்துரையினால் நீங்குகிறது; அதுவும் சில குறிப்பிட்ட நிலைமைகளில் மட்டும்தான். உலகம் தோன்றிய நாள் முதல் மிகச் சில தடவைகள்தான் இறைவன் இந்நிலைமைகளில் தன் அடியார்களை நிலைபெறச் செய்துள்ளான்.

இந்த தக்தீர் ஓரளவு நீங்கிவிடுவதற்கு ஹஸ்ரத் அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) அவர்களின் ஒரு சம்பவத்தை உதாரணமாகக் கூறலாம். ஹஸ்ரத் அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) அவர்களுக்கு ஒரு முரீது இருந்தார். அவரோடு அன்னார் மிகவும் நேசம் கொண்டிருந்தார்.

அவர் கண்டிப்பாக கற்பழிப்பு செய்வார் என அவரைப் பற்றி அன்னாருக்கு (இறைவனிடமிருந்து) செய்தி கிடைத்தது. இது 'தக்தீரே முப்ரம்' ஆகும். எனவே ஹஸ்ரத் அவர்கள் இதைப் பற்றி தொடர்ந்து துஆச் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். நீண்ட காலத்திற்குப் பிறகு நாம் நமது வாக்குறுதியையும் நிறைவேற்றி விட்டோம்; உங்கள் துஆவையும் கேட்டுக் கொண்டோம் என பதில் கிடைத்தது. என்ன நடந்தது என்று அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) அவர்கள் ஆச்சரியப்பட்டார்கள். அவருடைய முரீது சந்திக்க வந்தபோது, உம்மைப் பற்றி இந்த மாதிரி எனக்கு அறிவிக்கப்பட்டது. நான் உம்மிடம் கூறவில்லை. துஆச் செய்து கொண்டிருந்தேன் போன்ற விபரங்களைக் கூறி இப்போது இவ்வாறு செய்தி கிடைத்துள்ளது. என்ன விஷயம்? எனக் கேட்டார்கள். அப்போது முரீது கூறினார்: நான் ஒரு பெண்ணைக் காதலித்தேன். அவளைத் திருமணம் செய்ய முயற்சித்தேன். ஆனால் தோல்வியுற்றேன். கடைசியில் என்ன வந்தாலும் அவளோடு உடலுறவு கொள்வேன் என தீர்மானித்தேன். இம்முயற்சியில் இருக்கும் போது ஒருநாள் இரவு ருஃயாவில் (ஆன்மீகக் காட்சியில்) அவளைக் கண்டேன். அவளோடு நான் உடலுறவு கொண்டேன். விழித்ததும் அவளுடன் எனக்கிருந்த அன்பு முழுவதும் வெளியேறிவிட்டது. என் நிலைமை மாறியது.

அந்த மனிதனின் செயல்களின் விளைவாக வெளியாகவிருந்த தக்தீர் நீங்க முடியாத நிலையில் இருந்தது. இறைவன் அதனை வேறொரு விதத்தில் முழுமை செய்து அம்மனிதனை பாவத்திலிருந்து காப்பாற்றி விட்டான் என்பதை ஹஸ்ரத் அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) அவர்கள் உணர்ந்து கொண்டார்கள். மேலும் ஹஸ்ரத் அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) அவர்களின் துஆவை இறைவன் அம்மனிதனின் விஷயத்தில் ஏற்றுக் கொண்டு தனது சிறப்பான ஆற்றலின் மூலம் அம்மனிதனை அவனது தீய செயல்களின் தீய விளைவுகளிலிருந்து காப்பாற்றிவிட்டான்.

## தக்தீர் நீங்குவதால் குறைபாடு ஏற்படுமா?

தக்தீர் அகன்றுவிடுவதால் இறைவனின் மகத்துவத்தில் ஏதும் பாதிப்பு ஏற்படாதா என்றொரு கேள்வி பிறக்கிறது. பாதிப்பு ஏற்படாது





என்பதே அதற்குரிய பதிலாகும். ஏனெனில் தக்தீர் அகன்று விடுவதால் பல நன்மைகள் ஏற்படுகின்றன. முதலில் தக்தீரை எடுத்துரைத்து பின்னர் அதனை நீக்கிவிடுவ தால் அல்லாஹ்வின் கருணை பண்பு வெளியாகின்றது. ஏனெனில் வரக் கூடிய துன்பத்தைப் பற்றி அடியாருக்கு முன்னறிவிப்பதால் அந்த அடியார் எச்சரிக்கையாகி விடுகிறார். மேலும் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முயல்கிறார். இவ்வாறு அல்லாஹ்வின் அருளால் அவர் அந்த துன்பத்திலிருந்து தப்பித்து விடுகிறார். ஆகவே தக்தீரைப் பற்றி அது நடப்பதற்கு முன்னரே அறிவிப்பதும் அல்லாஹ்வின் இரக்க குணத்தைக் காட்டுகிறது; பிறகு அதனை நீக்கி விடுவதும் அவனது கருணைப் பண்பினை சுட்டிக் காட்டுகிறது. இதில் எந்த குறையும் இல்லை; இதில் பலன்கள்தான் உள்ளன.

பொதுவான தக்தீரின் விளைவினால் அல்லாமல் ஆன்மீக நிலைமைகளை மாற்றிக் கொள்வதால் இறங்குகின்ற சிறப்பு விதியை நீக்குவதில் இன்னொரு பலனும் உண்டு. அது அல்லாஹ்வின் வல்லமை வெளிப்படுவதாகும். நன்கு சிந்தித்துப் பார்த்தால் சிறப்பு விதியை அகற்றாமல் அல்லாஹ்வின் முழுமையான ஆற்றல் வெளிப்படுவதில்லை.

உதாரணமாக ஒருவர் நபிமார்களை எதிர்க்கிறார். உண்மை மார்க்கம் பரவுவதில் தடையாக இருக்கிறார். அவருக்குத் தண்டனை கொடுப்பது அவசியமாகிறது. அவர் அழிவுக்காளாவார் என இறைவன் புறமிருந்து இறைதூதருக்கு செய்தி கிடைக்கிறது. பிறகு அந்த மனிதர் பாவமன்னிப்புத் தேடியும் அழிவுக்காளாகி விட்டால் அதனால் இறைவன் காதிர் (ஆற்றல் உடையவன்) என்பது மறைவான ஒன்றாகிவிடும். இறைவன் அலீம் (மிக அறிந்தவன்) என்பது மட்டுமே அதிகபட்சமாக நிரூபணமாகலாம். ஆனால் அவன் ஆற்றல் மிக்கவனாக ஆகாதவரை வெறும் அறிந்தவனாக இருப்பதில் யாதொரு சிறப்பும் இல்லை. அவன் ஆற்றல் உள்ளவனாக இருப்பதே மனிதனிடமுள்ள அன்பை தன்னளவில் ஈர்க்க முடியும்.

ஆகவே, ஒரு செய்தியைத் தெரிவித்த பின்னர் அதனை மாற்றாது இருப்பது வெறும் மறைவானவற்றைப் பற்றிய ஞானத்தை மட்டும் எடுத்துக்காட்டுமே தவிர அவனது வல்லமையை -

ஆற்றலை எடுத்துக் காட்டாது. மறைவான செய்தியை எடுத்துரைக்கும் நபிக்கு அந்த மறைவான விஷயங்களை தெரிந்துக் கொள்ளக் கூடிய யுத்தி தெரிந்திருக்கிறது என்று மக்களுக்கு சந்தேகம் ஏற்படவும் வாய்ப்பிருக்கிறது. ஆனால் ஒரு கட்டளை குறிப்பிட்ட நிலைமைகள் மாறுவதால் நீங்கிவிடுமென்றால் காலத்திற் கேற்றவாறு கட்டளையிடும் ஒரு ஆற்றல் மிக்கவனிடமிருந்து அந்த கட்டளை பிறந்தது என்பதும், மனிதன் தன் நிலைமையை மாற்றிக் கொள்வதைப் பொருத்து இறைவனும் தனது தக்தீரை மனிதனுக்காக மாற்றிக் கொள்கிறான் என்பதும் தெளிவாக நிரூபணமாகி விடுகிறது.

மேலும் அதனால் இறைவனது மகிமை மற்றும் மகத்துவம் ஆகியவை வெளிப்படுகின்றன. பிறகு அடியானின் நம்பிக்கையும் வலுப்பெறுகிறது. இறைவன் பிடிக்கின்றான் என்றால் மன்னித்தும் விடுகிறான். ஓர் இயந்திரத்தைப் போல் அல்ல என மனிதன் நம்புகிறான். நியாய உணர்வுடன் பார்க்கப் போனால், எச்சரிக்கை வகையிலான முன்னறிவிப்பு நீங்காவிட்டால் இறைவன் ஆற்றல் உடையவன் என்பது நிரூபணமாகாமல் போய்விடும் என்பதை எல்லாராலும் புரிந்து கொள்ளலாம். மேலும் இறைவன் ஓர் இயந்திரத்தைப் போன்றவன். அதில் கரும்பை இட்டாலும் அதனைப் பிழிந்து விடுகிறது. அதில் முதலாளியின் கை பட்டாலும் அதனையும், அது பிழிந்து விடுகிறது என்றாகிவிடும். ஒருவர் எவ்வளவுதான் பாவமன்னிப்புக் கோரினாலும் அவனது கட்டளை மாறாதது; நீங்காதது. அதில் எந்த வித்தியாசமும் ஏற்படுவதில்லை. அவனது பகைமையை விட்டுவிட்டு அவனோடு நட்பு கொள்வதில் எந்தப் பயனும் இல்லை என்றாகிவிடும்.

இவ்விதமாக முன்னறிவிப்புகள் மாறிவிட்டால் அவை உண்மை என்பதற்கு என்ன ஆதாரம் இருக்க முடியும்? இவையனைத்தும் வெறும் அநுமானங்கள்தான் என்று ஏன் கூறக்கூடாது? என்ற சந்தேகம் எவருக்காவது இங்கு எழக்கூடும். இதற்குரிய விடையாவது, முதலில் முன்னறிவிப்புகள் மறைமுகமான காரணிகளை சுட்டிக் காட்டுபவையாக இருக்கின்றன. அதாவது அது நிகழ்வதற்கான காரணிகள் வெளிப்படையான முறையில் தென்படுவதில்லை. எவற்றிற்கான காரணிகள்





வெளிப்படையில் காணப்படுமோ அவற்றையே யூகம், அநுமானம் என்று கூறுகிறோம்.

உதாரணமாக, ஒருவர் நோயாளியாக இருக்கிறார். அவரைப்பற்றி, அவர் இறந்துவிடுவார் எனக் கூறினால் அதில் அநுமானத்திற்கு இடமுண்டு. ஆனால் காரணிகளே இல்லாதவற்றைப் பற்றி முன்னறிவித்து, அவை வெளிப்படத் தொடங்கினால் பின்னர் அவை அகன்று விட்டாலும் கூட அதனை அநுமானத்தின் அடிப்படையில் கிடைத்த செய்தியாகக் கூற முடியாது. ஏனென்றால் அச்செய்தியின் ஒருபகுதி இன்னொரு பகுதியின் உண்மை தன்மைக்கு சாட்சி முத்திரையாக இருக்கிறது. எனவே முன்னறிவிப்புகள் நீங்கினாலும் அவற்றின் உண்மை தன்மையில் சந்தேகம் தோன்ற முடியாது. அப்படி நீங்கினாலும் உலகத்தின் நேர்வழிக்கு அவை போதுமானவையாக இருக்கின்றன.

இந்த சந்தேகத்திற்குரிய இரண்டாவது பதில் என்னவென்றால், எச்சரிக்கை முன்னறிவிப்புகள் அநேகமாக எதிரிகளுக்காக ஏற்படுகின்றன. எதிரிகளோ பொதுவாக பிடிவாதம் கொண்டவர்களாகவும் தமது சர்ச்சையில் கிண்டலடிக்கக் கூடியவர்களாகவும் இருக்கின் றனர். எனவே முன்னரே எச்சரிக்கை செய்தாலும் மிகக் குறைவாகவே பலன் பெறுகிறார். எச்சரிக்கை வகை முன்னறிவிப்பினால் பலன் பெற்று அவற்றின் மூலமாக ஆக்கினை அவர்களை விட்டு அகன்றது மிகச் சிலருக்குத் தான். வாக்குறுதி வகையிலான அனைத்து முன்னறிவிப்புகளும் எச்சரிக்கை வகையிலான முன்னறிவிப்புகளில் கூட 90% அல்லது 95% முன்னறிவிப்புகளும் முழுமையாக நிறைவேறி முன்னறிவிப்பு செய்பவரின் உண்மையை பறைசாற்றிக் கொண்டிருக்கும்போது 5% அல்லது 10% எச்சரிக்கை வகையிலான முன்னறிவிப்புகள் அகன்று விடுவதால் (நிறைவேறாமல் நீங்கிப் போவதால்) எவ்வாறு சந்தேகத்தைத் தோற்றுவிக்க முடியும்?

இதற்குரிய மூன்றாவது பதில் என்னவென்றால் சிறப்பு விதியின் கீழ் வெளியிடப்படும் செய்திகள் குறித்துதான் எதிரிகளுக்கு அதிகம் சந்தேகம் எழுகிறது. இவை இயற்கை விதிமுறைகளின் விளைவாக ஏற்படுவதில்லை. மாறாக ஆன்மீகத்தின் விளைவாக ஏற்படுகிறது.

உதாரணமாக, லேக்ராம் குறித்து, அவர் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை அவமதித்ததற்குத் தண்டனையாக கொல்லப் படுவார் என்றோ அல்லது அப்துல்லாஹ் ஆத்தம் குறித்து அவர் நபி (ஸல்) அவர்களை அவமதித்ததற்குத் தண்டனையாக அழிவுக்கு ஆளாவார் என்றோ அல்லது அஹ்மது பேக் மற்றும் அவருடைய மருமகன் குறித்து அவர்கள் மரணித்துவிடுவார்கள் என்றோ முன்னறிவிக்கப் பட்டது. ஆனால் இத்தண்டனைகளில் எவையும் எந்தவொரு இயற்கையின் விளைவாக நடைபெறவில்லை. லேக்ராம் யாரையாவது கொலை செய்திருந்து லேக்ராமும் கொலை செய்யப்படுவார் என கூறப்பட்டிருப்பின் விஷயம் வேறாக இருந்திருக்கும். அதுபோலவே ஆத்தம் மற்றும் அஹ்மது பேக் ஆகியோரைப் பற்றி அவர்கள் செய்த செயலுக்கு ஏற்பட்ட இயற்கை விளைவாக இருந்தால் ஆட்சேபிப்பதில் அர்த்தமிருக்கிறது. ஆனால் எந்த குற்றங்களுக்கு பிரதிபலனாக தண்டனைகள் நியமிக்கப் பட்டனவோ அக்குற்றங்கள் ஆன்மீகமானவை. அப்படிப்பட்ட தண்டனைகள் பற்றிய முன்னறிவிப்புகளில் சில முன்னறிவிப்புகள் நிறைவேறி விட்டாலும் அவற்றை அறிவித்தது இறைவன்தான் என்பதற்கு அவை சான்றாக அமையும். அவ்வாறில்லாதிருப்பின் வெளிப்படையான காரணங்கள் இல்லாத நிகழ்ச்சிகளை எவ்வாறு ஒருவரால் முன்னறிவிக்க முடியும்? ஆன்மீக பாவங்களுக்கான தண்டனையைப் பற்றி இறைவனால் மட்டுமே முன்னறிவிக்க முடியும். ஆன்மீக விஷயத்தில் பாவியாக இருக்கும் ஒருவரைப் பற்றி அவருக்கு தண்டனை எவ்விதத்தில் கிடைக்கும் என்பதை பிறரால் எவ்வாறு கூறமுடியும்?

முன்னறிவிக்கப்படும் செய்திகளில் அதிகமாக அப்போதைய நிலைமைகள் எடுத்துரைக்கப்படுகின்றன என நீங்கள் கூறுகிறீர்கள். அதாவது, இப்போது இவர் எந்த நிலைமைகளில் இருக்கின்றாரோ அதன் விளைவு இதுவாக இருக்கும் என அம்முன்னறிவிப்பில் கூறப்படுகிறது என்கிறீர்கள். அப்படியானால் உங்களுடைய அல்லது இன்னாருடைய தற்போதைய நிலைமைக்கு இன்ன விளைவுதான் ஏற்படும் என ஏன் தெள்ளத் தெளிவாக கூறப்படுவதில்லை. அப்போதுதானே மக்களுக்கு கனவுகள், இறையறிவிப்புகள் மீது சந்தேகம் தோன்றாது என்று வினவினால் அதற்குரிய பதில், முதலில் எவர்களின் உள்ளத்தில் நோய்





இருக்குமோ அவர்கள் எந்நிலையிலும் சந்தேகித்துக் கொண்டேயிருப்பார்கள். ஏனென்றால் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களின் முன்னறிவிப்புகளில் தெளிவான முறையில் நிபந்தனைகள் கூறப்பட்டிருந்தும் அவற்றை மக்கள் ஆட்சேபிக்கின்றனர்.

உதாரணமாக பிளேக் நோய் பற்றிய முன்னறிவிப்புகளில் மற்ற கிராமங்களுக்கு ஏற்படும் அழிவைப் போன்று காதியானில் பிளேக் நோய் ஏற்படாது என முன்னறிவிப்புகளில் தெளிவான முறையில் கூறப்பட்டிருந்தது. ஆனால் அப்படியிருந்தும் காதியானில் ஒருவர் கூட அழிந்திருக்கக் கூடாது என்று மக்கள் ஆட்சேபிக்கின்றனர். இம்முறையை மேற்கொள்வதில் இன்னொரு பயனும் உண்டு. எந்த நோக்கத்திற்காக கனவு அல்லது முன்னறிவிப்பு செய்யப்பட்டதோ அந்த நோக்கம் நன்றாக நிறைவேறி விடுகிறது. உண்மை என்னவெனில் வருங்காலத்தைப் பற்றிய செய்திகள் கூறப்பட்ட எச்சரிக்கை வகையிலான கனவுகள் அல்லது இல்ஹாம் ஆகியவற்றில் உள்ள வேறு பல நோக்கங்களில் அந்த கனவு, இல்ஹாமில் எவரைப் பற்றி செய்தி கூறப்பட்டுள்ளதோ அவர் அதனை உணர்ந்து தன்னை சீர்திருத்திக் கொள்ள வேண்டும் என்பதும் ஒரு நோக்கமாகும். மேலும் அவர் சீர்திருந்தாவிடில் அவர் மீது சான்று நிலை நாட்டப்பட்டு விடும். பிறகு அவருக்கு தண்டனை வழங்கலாம். அல்லாஹ் கூறுவதாவது:

رُسُلًا مُّبَشِّرِينَ وَمُنذِرِينَ لِئَلَّا يَكُونَ لِلنَّاسِ عَلَى اللَّهِ
حُجَّةٌۢ بَعْدَ الرُّسُلِ

‘‘இத்தூதர்களுக்குப் பின்னர் மக்கள் அல்லாஹ்வுக்கு எதிராக வாதாடாமலிருக்க, நற்செய்தியாளர்களும் எச்சரிக்கை செய்பவர் களுமான தூதர்களை அனுப்பினோம்.’’ (4:166)

சுருக்கமாக, எச்சரிக்கை வகையிலான முன்னறிவிப்புகள் ஆட்சேபணை செய்யாமலிருக்கும் வகையில் அவர் மீது சான்றை முழுமைப்படுத்துவதற்காக ஏற்படுகின்றன. மேலும் அவற்றின் மூலம் எச்சரிக்கப்பட்டவருக்கு சீர்திருந்துவதற்கான கடைசி சந்தர்ப்பம் கொடுக்கப்படுகிறது. சீர்திருந்தாவிட்டால் சான்று

நிலைநாட்டப் பட்டுவிடும். (பிறகு தண்டனைதான் கிடைக்கும்).

உதாரணமாக, நீ இருக்கும் நிலைமையில் உனக்கு காய்ச்சல் வரக்கூடும் என்று ஒருவரிடம் இன்னொருவர் மூலமாக கூறப்படுவதை விட தன் நிலைமை குறித்து அவருக்கே நேரடியாகக் கனவில் காட்டப்பட்டு காய்ச்சலின் கஷ்டத்தைக் கண்டுவிட்டால் அவருக்கு ஏற்படும் விளைவே தனி. இதே போன்று தன்னுடைய செயல்களின் காரணமாக தண்டனை விதிக்கப்பட்டிருக்கும் ஒருவரிடம் உனக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது என்று இன்னொருவர் கூறுவதை விட, அவருடைய மார்க்கத்திற்கு முரணான செயலின் காரணமாக தண்டனை கிடைக்கக் கூடும் என்று அவரிடமே நேரடியாகக் கூறுவதன் விளைவே தனி.

கடைசியாக நிகழும் விஷயத்தையே இறைவன் குறிப்பிடலாமல்லவா? ஏன் அப்படிச் செய்வதில்லை? மக்களை சந்தேகத்திற்குள்ளாக்கும் இடைப்பட்ட நிலைமையை ஏன் குறிப்பிடுகிறான் என்று சந்தேகம் தோன்றுமானால் அதற்குரிய விடையாவது, ஒன்று நான் ஏற்கனவே கூறியது போன்று முன்னறிவித்தலின் நோக்கம் சீர்திருத்துவது தான். ஆகவே விதியின் மாறக் கூடிய அந்த அம்சத்தையே குறிப்பிடாவிட்டால் மக்களை எதன் மூலம் சீர்திருத்துவது? உண்மையில் இவ்வகையான தக்தீர் முன்னறிவிக்கப்படுவதால் ஆயிரக்கணக்கான மனிதர்களின் உயிர்கள் தப்பித்து விடுகின்றன. மேலும் இறைவனுடைய 'இரக்கம்' எனும் பண்பே அதனை தூண்டுகிறது.

இரண்டாவது, நான் முன்னரே கூறி வந்திருப்பதைப் போன்று அல்லாஹ்விற்கு இரண்டு பண்புகள் உள்ளன. ஒன்று அலீம் (நன்கு அறிந்தவன்); இன்னொன்று காதிர் (ஆற்றல் மிக்கவன்). விதியில் மாறாதிருக்கும் பகுதி மட்டுமே முன்னறிவிக்கப்பட்டால் அதனால் இறைவன் 'அலீம்' (நன்கு அறிந்தவன்) ஆக இருக்கிறான் என்பது வேண்டுமானால் நிரூபணமாகலாம். ஆனால் அவன் 'காதிர்' (ஆற்றல் மிக்கவன்) ஆக இருக்கிறான் என்பது நிரூபணமாகாது. எனவே தற்போதைய நிலைமைக்கேற்ப வெளியாகும் தனது தக்தீரை (நியதியை) வெளிப்படுத்துவது இறைவனின் வல்லமை வெளிப்படுவதற்கு மிக அவசியமாகும். இல்லையென்றால் அவனுடைய முழுமையான ஆற்றல் மனிதனுக்குத் தெரியாமற்





போய்விடும். ஆகவே மனிதனுடைய ஆன்மீக நிலைமைக்கேற்ப அல்லாஹ்விடமிருந்து ஒரு கட்டளை பிறப்பிப்பதும் மனிதன் அதே நிலைமையில் நிலைத்திருந்தால் அக்கட்டளைக்கேற்பவே அவனோடு அல்லாஹ் நடந்து கொள்வதும், மனிதனின் நிலைமை மாறி விட்டால் அவனோடு நடந்து கொள்ளும் இறைவனின் விதமும் மாறி விடுவதுமாகிய இந்த ஒரு வழியின் மூலமாகத்தான் இறைவல்லமை மனிதனுக்கு வெளிப்படமுடியும்.

இவ்வாறான முன்னறிவிப்புகளினால் மக்களுக்கு சோதனைகள் வருகின்றன. இவ்வாறான செய்திகள் தெரிவிக்கப் படாமலிருப்பதே சிறந்ததாக இருந்திருக்குமே என்று கூறப்பட்டால், அதற்குரிய விடையாவது, தீயவர்கள், குழப்பக்காரர்கள் ஆகியோரின் தீங்குகளுக்குப் பயந்து அல்லாஹ் உண்மையை தெரிவிக்காமல் விட்டுவிட மாட்டான். அல்லாஹ்வின் கருணைப் பண்பு வெளிப் படுவதும் அவனது வல்லமைக்கு ஆதாரமாகத் திகழ்வதும் ஆகிய இவ்விஷயங்கள் - அவன் தீர்க்கமான எண்ணத்தின்படியே செய்கிறான் என்பதை உண்மைப்படுத்தக் கூடியவையாக இருக்கும்போது தீயவர்கள், குழப்பக்காரர்கள் ஆட்சேபிப்பார்களே என்பதற்காக அவற்றை எவ்வாறு இறைவனால் விட்டு விட முடியும்? எதிர்க்க வேண்டும் என்ற எண்ணம் கொண்ட மக்களின் கூக்குரலைத் தவிர இவ்வகையான செய்திகளைக் கொடுப்பதற்கு வேறு எது தடையாக இருக்க முடியும்? அவர்களின் கூக்குரலைப் பற்றி இறைவனே கூறுகிறான்:

مَا مَنَعَنَآ أَنْ نُّرْسِلَ بِالْاٰيٰتِ إِلَّآ أَنْ كَذَّبَ بِهَا الْأَوَّلُوْنَ ؕ

(அதன் கருத்து வருமாறு:) ''முற்காலத்தில் தீயவர்கள் நமது அடையாளங்களைப் பொய்ப்படுத்தினர் என்பதற்காக அடையாளங்கள் அனுப்புவதை நாம் நிறுத்தி விடுவோமா?'' (ஒருபோதும் நிறுத்திவிட மாட்டோம்). *திருக்குர்ஆன் 17:60 காண்க.*

சிந்தித்து உணர்பவர்களுக்கு இறைவனின் கருணையையும் அவனது வல்லமையையும் வெளிப்படுத்தக் கூடியவற்றை - அவற்றால் தீயவர்களுக்கு தடுமாற்றம் ஏற்பட்டு விடுகின்றது என்பதற்காக விட்டு விடுவது அல்லாஹ் வின் மகத்துவத்தன்மைக்கு எதிரானதாகும். தீயவர்களுக்கு அவை என்ன தடுமாற்றத்தை

ஏற்படுத்தப்போகிறது? அவர்கள்தான் ஏற்கனவே தடுமாற்றம் அடைந்து விட்டார்களே! எனவே அதற்காக நம்பிக்கையாளர்கள் பயனடை வதிலிருந்து ஏன் தடுக்கப்பட வேண்டும்?

முஸ்லிம்கள் என்று கூறிக்கொண்டும் இப்படிப்பட்ட முன்னறிவிப்புகளை ஆட்சேபிக்கும் மக்களின் நேர்வழிக்காக இஸ்லாமிய வரலாற்றிலிருந்தே சில உதாரணங்களை இங்கு நான் குறிப்பிடுகிறேன். அவற்றில் இறைவன் கடைசியான – தீர்க்கமான விஷயத்தைக் கூறாது படிப்படியாக தன் விருப்பத்தை வெளிப்படுத்தியிருக்கிறான் அல்லது ஒவ்வொரு நிலைமைக்கேற்ற வாறும் ஏற்படும் முடிவைக் குறிப்பிட்டிருக்கிறான்.

முஸ்லிம்களில் ‘மிஃராஜ்’ என்ற பெயரில் பிரசித்தி பெற்றிருக்கும் மகத்தான சம்பவமே இதற்கு ஓர் உதாரணமாகத் திகழ்கிறது. இஸ்லாமிய அடிப்படை விஷயத்துடன் அதற்கு இருக்கும் தொடர்பை அறிவுள்ள எந்த முஸ்லிமும் புறக்கணித்து விடமுடியாது.

மிஃராஜ் பற்றி ஹஸ்ரத் ரஸூல் கரீம் (ஸல்) அவர்கள் கூறுவதாவது, முதலில் 50 நேரத் தொழுகை கடமையாக்கப்பட்டது. பிறகு ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் ஆலோசனையின் பேரில் அவர்கள் மீண்டும் மீண்டும் எடுத்துக் கூறி 5 நேரத் தொழுகையாக குறைத்துக் கொண்டார்கள். ஹஸ்ரத் மூஸா (அலை) இவ்வாறு கூறுவார் என்பதும் அவரது ஆலோசனையின்படி முஹம்மது (ஸல்) தன்னிடம் குறைக்குமாறு வேண்டுவார்கள் என்பதும் முன்னரே அல்லாஹ்வுக்குத் தெரிந்ததுதான். அப்போது ஏன் இறைவன் ஆரம்பத்தில் 50 நேரத் தொழுகை என கட்டளையிட்டு பின்னர் அதனை 5 ஆக மாற்றிவிட்டான்? (குறைத்து விட்டான்). ஆரம்பத்திலேயே 5 நேரத் தொழுகைக்கு கட்டளை இட்டிருக்கலாமல்லவா? ஏன் செய்யவில்லை? இதற்குரிய பதில்தான் (எச்சரிக்கை வகையிலான) அப்படிப்பட்ட முன்னறிவிப்புகள் மாறுவது குறித்து நமது பதிலும்.

இதற்குரிய மற்றோர் உதாரணம் பிரசித்தி பெற்ற ஒரு ஹதீஸில் கூறப்பட்டிருப்பதாகும். அதில் கூறப்பட்டிருப்பதாவது, எல்லாரைவிட கடைசியாக நரகத்தில் ஒருவர் எஞ்சியிருப்பார்.





அவருடைய ஆசைக்கேற்ப அல்லாஹ் அவரை நரகத்திலிருந்து வெளியேற்றி விடுவான். பிறகு அவர் ஒரு மரத்தைக் கண்டதும் அதன் நிழலில் நிற்பதற்கு விருப்பப்படுவார். இனி வேறு எதுவும் கேட்கக் கூடாது என்று அவரிடம் இறைவன் வாக்குறுதி வாங்கிய பின்னர் அவரை அவ்விடத்தில் நிற்க வைப்பான். அதன் பிறகு அதனைவிட பசுமையான இன்னொரு மரத்தைக் கண்டு இறைவனிடம் வேண்டுவார். இறைவன் அவரது வாக்குறுதியை நினைவூட்டி பின்னர் புதிதாக வாக்குறுதி வாங்கிவிட்டு அம்மரத்தின் கீழ் நிற்க அனுமதியளிப்பான். இவ்வாறாக கடைசியில் அவர் சுவர்க்கத்தில் நுழைய விரும்புவார். அல்லாஹ் புன்னகைத்துவிட்டு அவரை சுவர்க்கத்தில் நுழையச் செய்வான்.

அல்லாஹ் எவ்வாறு ஒவ்வொரு சந்தர்ப்பத்திற்கும் ஏற்ப செய்தியை அறிவிக்கிறான் என்பதை இச்சம்பவத்திலிருந்து அறிந்து கொள்ளலாம். இனி நீ வேறு எதற்கும் ஆசைப்படக் கூடாது என அல்லாஹ் வாக்குறுதி வாங்கியதிலிருந்து அவன் அவரை சுவர்க்கத்தில் நுழையச் செய்ய விரும்ப வில்லை என்றே கருதப்பட்டது. ஆனால் அது தவறான கருத்தாகும். அல்லாஹ் அவரை சுவர்க்கத்தில் நுழையச் செய்ய விரும்பினான்.

படிப்படியாக அவரை சுவர்க்கத்தற்கு கொண்டு செல்வதிலிருந்தே ஏன் அவன் ஒரே தடவையில் சுவர்க்கத்தில் நுழையச் செய்ய வில்லை என்ற ஆட்சேபணைக்கு விடை கிடைத்து விடுகிறது. இந்த ஆட்சேபணைக்கு என்ன பதில் இருக்குமோ அதுவே எச்சரிக்கை வகையிலான முன்னறிவிப்புகள் ஏன் மாறுகிறது என்ற கேள்விக்கும் பதிலாகும்.

கடைசியில் திரும்பவும் நான் கூறிக் கொள்வதாவது ‘இறைநியதி’யினை வெளிப்படுத்துவதற்குப் பெயர்தான் முன்னறிவிப்பு என்பது. இறை நியதி நீங்கியும் விடுகிறது என்பது முஸ்லிம்களால் ஒப்புக் கொள்ளப்பட்ட ஒன்று. எனவே ‘இறை நியதி’ முன்னறிவிப்பின் மூலமாக எடுத்துரைக்கப்பட்டு விட்டது என்ற ஒரே காரணத்திற்காக அந்நியதி நீங்கி விடுவதால் மனிதனுக்கு நன்மை ஏற்படுவதாக இருந்தும் அதிலிருந்து அவனை தடுத்து நிறுத்துவது ஏற்புடையதாகாது.

சுருக்கமாக, இறை நியதி மற்றும் முயற்சி இவ்விரண்டும் ஒரே நேரத்தில் நடக்கின்றன. எனினும் இறை நியதி வெவ்வேறு விதத்தில் இறைவன் புறமிருந்து வெளிப்படுகின்றது. அத்துடன் அடியாரின் முயற்சியும் சேர்ந்து மனிதனின் செயல் முழுமை பெறுகிறது.

இன்னொரு இறை நியதி இருக்கிறது. அதற்கு மனித செயலுடன் எந்தத் தொடர்பும் இல்லை. ஆனால் மேற்கூறப்பட்ட இறை நியதி செயல்களின் பிரதி பலனாக வெளிப்படுகிறது. மேலும் எப்போதாவது செயல்களைப் பற்றி இறை நியதி வெளிப்பட்டால் (இவர் இன்ன செயலைச் செய்ய வேண்டும் என்று வெளிப்பட்டால்) அப்படிப்பட்ட செயல்களைப் பற்றி மனிதனிடம் கேள்வி கணக்கு கேட்கப்பட மாட்டாது. ஆனால் அச்செயல்கள் வேறு சில செயல்களின் விளைவாகவோ, பிரதி பலனாகவோ இருக்கக் கூடாது.

தொழுகை, நோன்பு, ஸகாத், ஹஜ் ஆகியவையும் பொய், கற்பழிப்பு, திருட்டு ஆகிய இவையனைத்தும் மனிதனுடைய செயல்களாகும். இவற்றை முயற்சியின்பேரில் மனிதன் தன் விருப்பத்தின்கீழ் செய்கிறான். எனவே அவற்றிற்கான நற்பலன் அல்லது தண்டனைக்கு அவன் உரிமை பெற்றவனாகின்றான்.

உண்மை இவ்வாறிருக்க இறைவன் என்னைத் திருட வைக்கிறான் அல்லது கற்பழிக்க வைக்கிறான் என்று மூடர்கள் கூறுகிறார்கள். இறைநியதி தீமைகளைச் செய்வதற்காக தோன்றுவதில்லை என்பதை அவர்கள் அறிவதில்லை. இறைவன் தூய்மையானவனாக இருப்பதால் அவன் தூய்மையானவற்றையே செய்ய வைப்பான். இறை நியதி (வலுக்கட்டாயமாகச்) செயல் பட்டிருக்குமென்றால், ஒவ்வொரு மனிதனிடமிருந்தும் அது நல்ல வேலைகளையே செய்ய வைத்திருக்கும் திருக்குர் ஆனில் இறைவன் கூறுவதாவது:

وَلَوْ شِئْنَا لَآتَيْنَا كُلَّ نَفْسٍ هُدَاهَا

''நாம் (கட்டாயமாக) நாடியிருந்தால், ஒவ்வொருவருக்கும் அவரவருக்கேற்ப நேர்வழியினை வழங்கியிருப்போம்.'' (32:14)

எனவே மனிதன் மீது இறைவனின் பலவந்தம் இருக்கிறதென்றால் அது எல்லாரையும் நன்மையை மட்டுமே





செய்ய வைத்திருக்கும். ஆனால் மனிதன் தனது தீய செயல்களை இறைவன்மீது சாற்றுவது வியப்பிற்குரியது. இறைவனே என்மூலம் திருட்டை செய்ய வைத்தான். எனக்கு இதில் என்ன தொடர்பிருக்கிறது? என்று மனிதன் கூறுகிறான். ஆனால் அந்த அசுத்தமான நியதியை மனிதன் தானாகவே தன்மீது வெளிப்படுத்த வைக்கிறான் என்பதே உண்மையாகும். ஆகவே மனிதன் தீய செயல்களைச் செய்ய வேண்டும் என்பதற்காக இறைவனே தீய விதியை தோற்றுவிக்கிறான் என்பது தவறாகும்.

எனினும் தீய விதி ஒன்று கண்டிப்பாக இருக்கிறது. அதை ஷய்த்தான் உருவாக்குகிறான். அதன் மூலம் அவன் தனது சூழ்ச்சி களைக் கையாள்கிறான். எவர் ஷய்த்தானோடு நட்பு கொள்கிறாரோ அவர்மீதுதான் ஷய்த்தானுக்கு அதிகாரம் இருக்கும் என இறைவன் திருக்குர்ஆனில் கூறுகிறான். அப்படிப்பட்டவர்கள் இறைவனை விட்டு விட்டு ஷய்த்தானைப் பின்பற்றுகிறார்கள். எனவே இறைவனும் அவர்களை விட்டு விடுகிறான். மேலும் ஷய்த்தான் அவர்கள் மீது தனது விதியை புகுத்த ஆரம்பித்து விடுகிறான்.

ஆகவே தீய செயல்களைச் செய்து விட்டு இதனை இறைவனே என்னைச் செய்ய வைத்தான் என்று கூறுபவர் இறைவனை கடுமையான முறையில் அவமதிப்பவராவார். ஒருவர் தீயதைச் செய்து விட்டால் என் தலைவிதி அப்படி. நான் என்ன செய்ய முடியும்? என்று கூறும் வழக்கம் நம் நாட்டில் இருக்கிறது. இது இறைவனுக்குச் செய்யும் அவமரியாதையும் அவமதிப்புமாகும். ஏனென்றால் தீய வேலைகளுக்காக இறைவனுடைய விதி செயல்படுகிறது என்பதே தவறு.

எனினும் ஷய்த்தானுக்கு அடிமையாகிவிடுகின்றவர்களுக்கு ஷய்த்தானிடமிருந்து தீய விதி செயல்படுகிறது. அவர்கள் விரும்பி னாலும் ஷய்த்தானின் பிடியிலிருந்து அவர்களால் சுலபமாக வெளியேற முடியாத அளவுக்குள்ள ஒருகாலம் அவர்களுக்கு வருகிறது. அதாவது அவர்கள் ஒரு பாவத்தை விட்டு விட விரும்புகிறார்கள். ஆனால் அதனை விட்டுவிடுவது அவர்களுக்கு கடினமாகி விடுகிறது. பின்னர் ஷய்த்தானின் பிடியிலிருந்து தப்பிக்கவே விரும்பாமல் அவனோடு சேர்ந்துவிடும் நிலைமை அவர்களுக்கு ஏற்பட்டு விடுகிறது.

தக்தீர் (இறைநியதி)ன் மீது ஈமான் கொள்ளவில்லையென்றால், இறைவனிடமிருந்து தக்தீர் வெளிப்பட வில்லையென்றால் என்ன பாதிப்புகள் ஏற்படும்? அதன்மீது நம்பிக்கை கொள்வதால் என்ன நன்மைகள் என்பனவற்றைப் பற்றி நான் இப்போது கூறுகிறேன்.

இது ஒரு முக்கியமான கேள்வியாகும். இது பற்றி நாம் சிந்திக்க வேண்டியது அவசியம். ஆனால் வெளிப்படையான சூஃபிகள், முல்லாக்கள் இதுபற்றி சிந்திக்கவேயில்லை.*

*(நேரம் அதிகமாகிவிட்டிருந்தது; மேலும் குளிரும் கடுமையாக இருந்தது; இன்னும் அதிகமான விஷயங்கள் சொல்லவேண்டியதிருந்ததால், இதன் மறுப்பகுதியை அடுத்த நாள் சொல்வதென்று முடிவாகி மாநாட்டு நிகழ்ச்சி இத்துடன் முடிந்தது. மறுநாள் ஆற்றப்பட்ட சொற்பொழிவின் மறுபகுதி கீழே தரப்படுகிறது)*

**தக்தீர் தொடர்பான சில சந்தேகங்களின் நிவர்த்தி**

தக்தீர் பற்றி விரிவாக எடுத்துரைத்த பிறகு அதன் மீது நம்பிக்கை கொள்வதனால் ஏற்படும் பயன்கள் பற்றி உங்களுக்கு விளக்கிக் கூறவேண்டும் என்பது என் நோக்கமாக இருந்தது. மேலும் இந்தக் கருத்தையே இன்று நான் ஆரம்பிக்க எண்ணியிருந்தேன். ஆனால் இன்று ஒருவர் சில கேள்விகளை எழுதி அனுப்பியுள்ளார். ஆகவே முதலில் சுருக்கமான முறையில் அதற்கான விடையைக் கூறுகின்றேன்.

*அடிக்குறிப்பு: *அப்போது, ஈமான் பில் கத்ரி கய்ரிஹீ வஷர்ரிஹீ (நன்மை, தீமைகளின் நியதியின் மீது நம்பிக்கை கொள்ளுதல்) என்பதற்கு என்ன பொருள் என்று ஒருவர் கேட்டார். அதற்கு, நன்மையின் நற்கூலியும் அல்லாஹ்விடமிருந்தே கிடைக்கின்றன; தீமையின் தண்டனையும் இறைவனிடமிருந்தே கிடைக்கின்றன என நம்பிக்கை கொள்ளுதல் என்பதே இதற்குப் பொருள் என்று கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் பதிலளித்தார்கள். மேலும் 'வினை செய்தவன் வினையறுப்பான்' என்ற கொள்கையை ஏற்று இறைவன் மீது பழி சுமத்தாமல் இருப்பதே நன்மை, தீமைகளின் நியதியின் மீது ஈமான் கொள்வதன் நோக்கமாகும் என்றும் விளக்கமளித்தார்கள்.*





ஷய்த்தானுக்கு வழிக்கெடுக்கின்ற ஆற்றல் எங்கிருந்து கிடைத்தது? என இந்த நபர் கேட்கிறார். மனிதன் தனது எண்ணங்களை ஷய்த்தானுக்குரியதாக ஆக்கும்போது அவனுக்கு ஷய்த்தானுடன் நெருக்கம் ஏற்பட்டு விடுகிறது என்று நான் நேற்று கூறியிருந்தேன். அப்போது ஷய்த்தானும் அவனோடு தொடர்பை ஏற்படுத்திக் கொள்கிறான். மேலும் அவன் மனிதனை வழி கெடுக்க ஆரம்பித்து விடுகிறான். எனவே இந்த வழிகெடுப்பு உண்மையில் மனிதனுடைய நஃப்ஸினாலேயே உருவாகிறது.

நான் இதற்கு ஓர் உதாரணத்தை கூறுகிறேன். உதாரணமாக, ஒரு குடிகாரன் இன்னொரு குடிகாரனைத் தன்னுடன் கூட்டிச் செல்கிறான். அந்தக் குடிகாரன் எங்கெல்லாம் மது அருந்துவதற்காகச் செல்கின்றானோ அங்கெல்லாம் இவனும் செல்கின்றான் என்றால் நான் அவனைப் பின்பற்றும் நிலையில் இருக்கிறேன். அவன் எங்கு விரும்புகிறானோ என்னை அழைத்துச் செல்கிறான் என்று அவன் கூறினாலும் உண்மையில் அவனும் குடிகாரனின் கருத்தையே கொண்டிருக்கிறான். அவனுக்கும் குடிப்பதில் விருப்பம் உண்டு. எனவேதான் அவன் குடிகாரனுடன் செல்கிறான்.

இவ்விருவருக்குமிடையே உள்ள தொடர்பை மஸ்னவி (ரஹ்) அவர்கள் ஒரு நுட்பமாக உதாரணத்துடன் குறிப்பிட்டுள்ளார்கள். அவர்கள் கூறுவதாவது:

ஓர் எலி ஒட்டகத்தின் கயிற்றைப் பிடித்துக் கொண்டு தன் பின்னால் இழுத்துக் கொண்டே சென்றது. அப்போது ஒட்டகம் போன்ற உயரமான விலங்கைக் கூட இழுத்துச் செல்லும் ஆற்றல் எனக்குக் கிடைத்து விட்டது என்று எலி நினைத்துக் கொண்டது. எலிக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. இவ்வாறு சென்று கொண்டிருக்கும்போது வழியில் ஆறு வந்தது. ஒட்டகம் தண்ணீரில் செல்ல விரும்பாததால் எலி தண்ணீரின் பக்கம் சென்றபோது ஒட்டகம் நின்று விட்டது. எலி ஒட்டகத்தை இழுக்க ஆரம்பித்தது. ஆனால் முடியவில்லை. அப்போது எலி ஒட்டகத்திடம், 'ஒட்டகமே! இதுவரை நான் உன்னிடம் கூறியபடியே நீ என் சொல்லைக் கேட்டு என் பின்னால் வந்தாய். இப்போது நீ கேட்க மாட்டேன் என்கிறாயே? என்ன காரணம்?' என்று கேட்டது. அதற்கு ஒட்டகம் நான் விரும்பும்வரை உன் பின்னால் நடந்தேன். இப்போது எனக்கு விருப்பம் இல்லை; எனவே வரமாட்டேன்' என்றது.

அதாவது, எலி ஒட்டகத்தைக் கூட்டிச் சென்றபோது, எலியின் பின்னால் ஒட்டகம் செல்கிறது என்று வெளிப்படையாகப் பார்க்கும்போது தோன்றினாலும் உண்மை அதுவல்ல. எலி சென்று கொண்டிருக்கும் திசையை நோக்கியே ஒட்டகமும் தற்செயலாக தன் விருப்பப்படி சென்று கொண்டிருந்தது. இதே போன்று, ஷய்த்தானுக்கு மனிதனின் மீது அதிகாரம் இருக்கிறது என வெளிப்படையாகத் தோன்றினாலும் உண்மையில் அவனுக்கு அதிகாரமில்லை. மாறாக, மனிதன்தான் தனது கயிற்றை ஷய்த்தானின் கையில் கொடுத்துவிட்டு, தானே விரும்பி அவன் பின்னால் செல்கிறான்.

சில மனிதர்கள் ஷய்த்தானிடமிருந்து தன்னை விடுவிக்க விரும்பும்போது அவனைப் பின்பற்றுவதற்கு கடுமையான முறையில் மறுத்து விடுகிறார்கள். அப்போது ஷய்த்தானும் பயந்து அவர்களை விட்டு ஓடி விடுகின்றான்.

இன்னொரு கேள்வி திருக்குர்ஆனில் இவ்வாறு வருகிறது:

وَمَا تَشَآءُونَ إِلَّآ أَنْ يَّشَآءَ اللّٰهُ

‘அல்லாஹ் விரும்புவதையேயன்றி நீங்கள் வேறு எதனையும் விரும்புவதில்லை.’(81:30) மனித செயல்கள் அல்லாஹ்வின் விருப்பத்தின்கீழ் உள்ளன என்பது இதிலிருந்து தெரிகிறதே?

பதில் : இந்த வசனத்திற்கு கேள்வி கேட்டவரின் உள்ளத்தில் இருக்கும் அந்தப் பொருளன்று. இதற்கு முன்னுள்ள வசனங்களில் இவ்வாறு வருகிறது:

فَأَيْنَ تَذْهَبُونَ ۝ إِنْ هُوَ إِلَّا ذِكْرٌ لِّلْعٰلَمِينَ ۝ لِمَنْ
شَآءَ مِنْكُمْ أَنْ يَسْتَقِيمَ ۝ وَمَا تَشَآءُونَ إِلَّآ أَنْ
يَّشَآءَ اللّٰهُ رَبُّ الْعَالَمِينَ ۝

‘நீங்கள் எங்கே செல்கின்றீர்கள்? இந்தக் குர்ஆன் இறைவனிடமிருந்து வந்த அறிவுரையும் போதனையுமன்றி வேறில்லை. (அதுவும் குறிப்பாக) உங்களுள் எவர் நேரான வழியில்





செல்ல வேண்டும் என விரும்புகிறார்களோ அவர்களுக்காக’. (திருக்குர்ஆன் 81: 27-30)

இதற்குப் பிறகுதான் ‘வமா தஷாவூன இல்லா அன்யஷா அல்லாஹுஂ ரப்புல் ஆலமீன்’ என்று கூறுகிறான். அதாவது நேரான வழியில் செல்ல வேண்டும் என்ற உங்களின் இந்த முயற்சி கூட இறைவனின் நாட்டத்திற்கேற்ப உங்கள் நாட்டம் இருந்தால்தான் வெற்றி பெற முடியும். அதாவது உங்களின் செயல்கள் மார்க்கச் சட்டத்திற்கேற்ப அமைந்திருக்க வேண்டும். உங்களின் கொள்கைகளும் மார்க்கச் சட்டத்திற்கேற்ப அமைந்திருக்க வேண்டும். எவற்றின் மீது ஈமான் கொள்ள இறைவன் கட்டளையிட்டானோ அவற்றின் மீது ஈமான் கொள்ள வேண்டும். நல்ல செயல்களான தொழுகை, நோன்பு, ஸகாத்து, ஹஜ் முதலிய கட்டளைகளை ஏற்று நடக்க வேண்டும். இப்படி நீங்கள் செய்தால் திருக்குர்ஆனின் நல்ல விளைவுகளை உணர்வீர்கள். இல்லையெனில் உணர முடியாது. இவ்வாறு கூறுவது ‘நீங்கள் எமது விருப்பத்திற்கேற்றவாறு வேலை செய்தால்தான் நாங்கள் உங்களைப் பற்றி மகிழ்ச்சியடைவோம்’ என்று ஒருவரிடம் கூறுவது போன்றதாகும். எனவே இந்த வசனத்திலிருந்து, அனைத்து மனித செயல்களையும் இறைவனே செய்ய வைக்கிறான். மனிதனுக்கு எந்த தொடர்பும் இல்லை என்று நிரூபணமாகவில்லை.

إِنَّ اللّٰهَ يُضِلُّ مَنْ يَّشَآءُ

‘அல்லாஹ்தான் விரும்புபவரை வழி தவறிச் செல்ல விடுகிறான்’ (13:28) என்ற வசனத்தைப் பொருத்தவரை, அது குறித்து இப்போது கேள்வி கேட்க வேண்டிய தேவையில்லை. இது பற்றி நம் ஜமாஅத்தில் அதிகமாக எழுதப்பட்டுள்ளது. வழி தவறுபவர்களையே இறைவன் வழி தவறச் செய்கிறான் என்று இறைவனே இதற்கு விளக்கமளித்துள்ளான். அல்லாஹ் கூறுவதாவது:

كَذٰلِكَ يُضِلُّ اللّٰهُ مَنْ هُوَ مُسْرِفٌ مُّرْتَابٌ ۝

‘ஐயம் கொள்பவர்களையும் வரம்பு மீறுபவர்களையுமே இறைவன் வழி கேட்டில் விட்டு விடுகிறான். (40:35)

அவ்வாறே இன்னோரிடத்தில் கூறுவதாவது:

وَمَا يُضِلُّ بِهِ إِلَّا الْفَاسِقِينَ ٥

'அல்லாஹ் இதன்மூலம் கட்டுப்படாதவர்களையே வழிதவறச் செய்கின்றான். (2:27)

மேலும் அவன் கூறுவதாவது:

وَمَا كَانَ اللَّهُ لِيُضِلَّ قَوْمًا بَعْدَ إِذْ هَدٰهُمْ

(வமாகானல்லாஹு லியுலிள்ள கவ்மன் பஅத இத் ஹதாஹும்)

பொருள் : அல்லாஹ் தானாகவே நேர்வழியை அனுப்பி பின்னர் தனாகவே சில மனிதர்களை எப்படி வழி தவறச் செய்வான்? (13:28).

ஆகவே தாமாகவே வழி தவறிச் செல்பவரைத்தான் இறைவனும் வழி தவறச் செய்கிறான். கண்களை மூடி வைத்திருப்பவர் என்றாவது ஒருநாள் குருடனாகவே ஆகிவிடுவார் என்பது உண்மையே. அதே போன்று ஆன்மீக கண்களினால் பயன் பெறாதவரும் ஆன்மீகக் குருடராக ஆகிவிடுகிறார். இந்தச் சட்டத்தை ஏற்படுத்தியவன் இறைவனாக இருப்பதால் அதன் விளைவும் இறைவன் பக்கமே சாற்றிக் கூறப்படுகிறது.

இப்போது நான் ஒரு முக்கியமான சந்தேகத்தைப் பற்றிக் கூறுகிறேன். இறைநியதியைப் பற்றிய இந்த சந்தேம் கல்வியறிவு பெற்றவர்களிடம் பரவலாகக் காணப்படுகிறது. இன்று மக்களிடத்தில் ஆய்வு செய்யும் பண்பு அதிகமாகிவிட்ட அதே சமயத்தில் ஒவ்வொரு விஷயத்தை பற்றியும் அது ஏன் ஏற்பட்டது என்று அறிய விரும்புகின்றனர்.

உதாரணமாக, விதை முளைக்கிறதென்றால் அது ஏன் முளைக்கிறது என்று ஆய்வு செய்யப்படுகிறது. முன்னேயெல்லாம் விதை பூமியில் தூவப்பட்டால் வானவர்கள் பூமியிலிருந்து வெளியே இழுத்து முளையச் செய்கின்றனர் என்று கருதப்பட்டு வந்தது. ஆனால் இன்று இவ்விதமான பேச்சை யாரும் கேட்கத் தயாரில்லை. ஏன் முளைக்கிறது? அதற்குக் காரணம் என்ன போன்றவற்றை அறிய விழைகின்றனர்.





இதே போன்று இன்ன பொருள் எங்கிருந்து வந்தது என்ற ஆய்வுகளும் செய்யப்படுகின்றன. உதாரணமாக, முதலில் வெயில் அடிக்கிறது. பிறகு திடீரென்று மேகம் வந்து விடுகிறது. இது எங்கிருந்து வருகிறது எனக் கேட்கின்றனர். தற்காலத்தைய அறிவை ஏற்றுக் கொள்பவர்கள், மேகம் பல நாட்களாக உருவாகிறது என்கின்றனர். மேலும் அது (மேகம்) எங்கோ தூரத்திலிருந்து வந்த நீராவி குளிர்ந்து இங்கு மேகமாக மாறியுள்ளது என்று அவர்கள் கூறுகின்றனர்.

மழைக்காக துஆச் செய்யப்பட்டது. எனவே மேகம் கூடியது என்று இப்படிப்பட்டவர்களிடம் கூறப்பட்டால் அதனைக் கேட்டு அவர்கள் சிரிப்பார்கள். மேலும் துஆ இப்போதுதானே செய்யப்பட்டது. ஆனால் மேகமோ இதற்கு பல நாட்கள் முன்னரே ஒன்றுகூடி இங்கே வந்திருக்கிறது. அப்படியிருக்கும்போது மழை வருவது துஆவின் விளைவினால் எப்படியிருக்க முடியும்? எனக்கேட்கின்றனர். இந்த மாதிரியான கேள்விகள் இன்றைய காலத்தில் கேட்கப்படுகிறது. ஆனால் இக் கேள்விகள் அனைத்தும் அபத்தமானவை.

மேகம் கூடுவதற்கான காரணிகள் இருக்கின்றன என்பதை நாம் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் கேள்வி என்னவென்றால், 10 இலட்ச வருடங்களுக்கு முன்பு அல்லது 10 கோடி வருடங்களுக்கு முன்பு அல்லது எந்த நேரம் நியமிக்கப்பட்டாலும் அதற்கு முன்பே இன்ன நேரத்தில் இன்ன சந்தர்ப்பத்தில் என்னுடைய இன்ன அடியார் துஆச் செய்வார் என்பது இறைவனுக்குத் தெரிந்திருக்குமா இல்லையா? அச்சமயத்தில் நான் அந்த அடியாருக்கு உதவி செய்ய வேண்டும் என்ற செய்தியும் அவனுக்குத் தெரியுமா? தெரியாதா? தெரியும் என்றால் எவ்வளவு காலத்திற்கு முன்னால் கூடியிருந்தாலும் அது அந்த அடியாருக்காகவே தயாரானது. அந்த நேரத்தில் அவனுடைய ஓர் அடியார் துஆச் செய்ய விருந்தார். இறைவனுடைய கருணைப் பண்பும் அச்சமயத்தில் அந்த மேகத்தை அங்கு அனுப்பவிருந்தது. உண்மை இவ்வாறிருக்கும்போது, இவ்விதமான ஆட்சேபனைகள் அபத்தமானவை.

ஏனெனில் ஒரு விஷயம் நடப்பதற்கான காரணம் ஏற்கனவே இருக்கும் என்றால் பின்னால் தோன்றிய ஒன்று அதற்குக் காரணமாக

ஆகி விடாது. விருந்தினர் வருவதற்கு முன்பே வெகுதொலைவிலிருந்து வரவழைக்க வேண்டிய பொருள்களை நாம் வாங்கி வைப்பதில்லையா? அப்போது அந்தப் பொருள்களை விருந்தினர் வருவதற்கு முன்பே வாங்கி வைத்திருப்பதால் அவை அவர்களுக்காக வாங்கப்பட்டவையல்ல என்றாகிவிடுமா? அப்படி ஆகிவிடாது. இதேபோன்று இறைவன் மறைவானவற்றை அறியக் கூடியவனாக இருக்கின்றான். என் அடியார் இன்ன நேரத்தில் மழைக்காக துஆச் செய்வார் என்பதை இறைவன் அறிந்திருந்தான். எனவே அந்த அடியாரின் ஆசை நிறைவேறும் பொருட்டு, அவன் ஆரம்பத்திலிருந்தே கட்டளையிட்டிருந்தான் எனலாம். ஆகையால் அந்த மழை பெய்வது 'பொது விதி' யின் திரையில் வெளிப்பட்ட ஒரு 'சிறப்பு விதி'யின் விளைவாக இருந்தது.

அவ்வாறு நிகழ்வதற்கு தக்தீரே தூண்டுகோலாக இருந்தது. பொதுவான இயற்கைக் காரணிகளால் அவ்வாறு நிகழவில்லை என்பது எப்படித் தெரிந்தது என்று இங்கு ஒரு கேள்வி எழுகிறது.

இதனைத் தெரிந்து கொள்வதற்கு, உலகில் சாதாரணமாகக் காணவியலாத இந்த மாதிரியான சம்பவங்கள் - அவை தற்செயலாக நடந்தன என்று கூற முடியாத வகையில் - தொடர்ச்சியாக நடைபெறுகின்றனவா இல்லையா என்பதைப் பார்க்க வேண்டும். அவ்வாறு பொதுவாக நடைபெறுவதில்லை என்பது நிரூபணமாகிவிட்டால் அவை குறித்து 'சிறப்பு விதி' வெளிப்பட்டது என்று தெரிந்து கொள்ளலாம்.

உதாரணமாக, துஆக்கள் செய்யப்பட்டதும் மேகம் கூடியதுமாகிய இந்நிகழ்ச்சி கள் பலமுறை ஏற்பட்டிருந்தால் அதனை 'தற்செயல்' என்று கூறிவிட முடியாது. மாறாக அதற்கு ஏதாவது ஒரு காரணமுண்டு எனக் கொள்ள வேண்டும்.

இம்மாதிரியான சம்பவங்களில் ஒரு தொடர்ச்சி காணப்படுவதாலும் இவற்றை 'தற்செயலாக நிகழ்ந்த சம்பவம்' என்று கூறவியலாது. நூறு ஆண்டுகளுக்குப்பின் நூறு ஆண்டுகளுக்கிடைப்பட்ட காலத்தில் மார்க்க சான்றோர்களின் துஆக்களுக்கு விடையாக இவ்வாறான பரிமாற்றங்கள் நடந்து வந்திருக்கின்றன. ஆகையால் இதனை 'தற்செயல்' என்று கூறிவிட முடியாது.





மேலும் ( சிறப்பு விதியாகிய) இவற்றை 'தற்செயல்' என்று கூறுபவர்களே 'தற்செயல்' என்று ஒன்று இல்லவே இல்லை. மாறாக ஒவ்வொன்றிற்கும் ஏதாவதொரு காரணம் இருக்கிறது என எழுதுகின்றார்கள்.

தற்செயல் குறித்து பேசுவதற்குத் தற்போது நேரமில்லை. இல்லையென்றால் 'தற்செயல்' பற்றி அவர்கள் என்ன கருதுகிறார்கள் என்பதையும் எடுத்துரைப்பேன். உலகம் சம்பந்தமான எந்த விவகாரத்தைப் பற்றியும் அது 'தற்செயல்' என ஏற்க மறுக்கும் அவர்கள் தமது கொள்கைக்கு எதிரான விஷயங்களை மட்டும் 'தற்செயல்' என்று ஏன் கூறுகின்றார்கள்?

சுருக்கமாக, காரணிகள் ஏற்கனவே இருந்தாலும் 'தக்தீர்' (இறைநியதி) இறைவனிடமிருந்து வெளிப்படுகின்றது என்பதையும், அதற்காக அது தக்தீர் அல்ல என்று கூறிவிட முடியாது என்பதையும் நன்றாக நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

## தக்தீர் விவகாரத்தைத் தவறாகப் புரிந்ததால் ஏற்பட்ட பாதிப்பு

இந்த விவகாரத்தைப் புரிந்து கொள்ளாததால் மக்கள் பெறும் நஷ்டங்கள் பற்றி இப்போது நான் மிகவும் வருத்தத்துடன் குறிப்பிடுகிறேன்.

'தக்தீர்' என்பது மனிதனுக்கு உயிரூட்டக் கூடிய மேலான படித்தரத்தைக் கொண்ட ஒன்றாக இருந்தது. ஆனால் அதன் மதிப்பு உணரப்படவில்லை என்பதே வருத்தத்திற்குரியது. திருக்குர்ஆனோடு நடந்து கொள்ளப்பட்டது போன்றே இதனுடனும் நடந்து கொள்ளப்பட்டிருக்கிறது. திருக்குர் ஆனோடு நடந்து கொள்ளப்பட்டது பற்றி இறைவன் கூறுகின்றான். மறுமையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறைவனிடம் இவ்வாறு கூறுவார்கள்:

يَا رَبِّ إِنَّ قَوْمِي اتَّخَذُوا هَٰذَا الْقُرْآنَ مَهْجُورًا○

''என் இறைவா! என் சமுதாயத்தினர் இந்தக் குர்ஆனை முதுகுக்கு பின்னால் தூக்கி எறிந்து விட்டனர்.'' (25:31)

ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் காலத்தில் வாழ்ந்த - அவர்களை ஏற்றுக் கொள்ளாத மக்களையும் இது குறிக்கும். ஆனால் முஸ்லிம்களையும் குறிக்கும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மையான சமுதாயம் இவர்கள்தான்.

இவர்களின் நேர்வழிக்காக வந்த இந்தக் குர்ஆன் - மனிதனை உயர்விலும் உயர்வான படித்தரம் வரை கொண்டு செல்ல வைக்க வந்த இந்தக் குர்ஆன் இன்று எவ்வாறு உபயோகப் படுத்தப்படுகிறது? ஒன்று வாழ்நாள் முழுவதும் திருக்குர்ஆனின் ஒரு சொல் கூட இவர்கள் காதில் படுவதில்லை. ஆனால் ஒருவர் மரணித்து விட்டால் அவருக்காக திருக்குர்ஆன் ஓதப்படுகிறது. ஆனால் மரணத்திற்குப் பிறகு, 'நீங்கள் இந்தக் குர்ஆனின் படி எந்த அளவுக்கு செயல்பட்டீர்கள்' என்று கேள்வி எழுமே தவிர மரணத்திற்குப் பிறகு எத்தனை முறை உங்கள் பேரில் குர்ஆன் ஓதி முடிக்கப்பட்டது என்று கேள்வி எழாது.

பிறகு முஸ்லிம்களின் பழக்கத்தில் உள்ள திருக்குர்ஆனின் இரண்டாவது 'உபயோகம், அறை அணாவிற்காக குர்ஆன்மீது பொய் சத்தியம் செய்யப்படுகிறது. இவ்விதமாக பிறருடைய உரிமைகளைப் பறிக்கும் கருவியாக குர்ஆன் பயன்படுத்தப்படுகிறது.

மூன்றாவது, முல்லாக்கள் திருக்குர்ஆனின் மூலமாக பலன் பெறுகிறார்கள். எப்படியெனில், யாராவது இறந்து விட்டால் அவரது பாவங்களை மன்னிக்கச் செய்வதற்காக அவரது வாரிசுகள் திருக்குர்ஆனைக் கொண்டு வருகின்றனர். முல்லா அவர்களை வட்டமாக உட்காரச் செய்கிறார்கள். குர்ஆனை ஒருவர் இன்னொருவருக்குக் கொடுத்தவராய் இதனை நான் உமக்காகக் கொடுத்தேன் என்பார்கள். அப்படிச் செய்வதால் மரணித்தவரின் பாவங்கள் நீங்கிவிடும் என்று கருதுகின்றனர். ஆனால் மரணித்தவரின் பாவங்கள் எங்கிருந்து அழியப்போகிறது? அந்த முல்லாக்களின் ஈமான், மரணித்தவருடைய வாரிசுகளின் 'ஈமான்' தான் அழிந்து விடுகிறது.

இன்னும் சிலர் இவ்வாறும் பயன்(?) பெறுகிறார்கள்: எட்டு அணாவிற்காக குர்ஆனை முல்லாக்கள் கொண்டு வருகின்றனர்.





எவர் வீட்டிலாவது ஒருவர் இறந்து விட்டால் உடனே அவ்வீட்டிலுள்ளவர் குர்ஆன் வாங்க வருகிறார். அப்போது அவருக்கு அதிக விலையை முல்லாக்கள் கூறிவிடுகிறார்கள். இது ஒரு ரூபாயை விட குறைந்த விலைதானே என்று அவர் கூற, 'குர்ஆன் குறைந்த விலையில் விற்க முடியுமா? குறைந்த விலையில் அதனை விற்பது தடுக்கப்பட்டதாயிற்றே?

وَلَا تَشْتَرُوْا بِآيَاتِيْ ثَمَنًا قَلِيلًا 'லா தஷ்தரூ பி ஆயாத்தீ ஸமனன் கலீலா' (2:42) குறைந்த விலையில் திருக்குர்ஆனை வாங்காதீர்கள் என்று குர்ஆனிலேயே வருகிறதே? எனவே இதற்கு குறைந்த விலை வாங்க முடியாது' என்று முல்லா கூறிவிடுகிறார். ஆனால்

مَتَاعُ الدُّنْيَا قَلِيلٌ 'உலகத்தின் எல்லா செல்வங்களும் குறைவானது' (4:78) என்றும்கூட திருக்குர்ஆன் கூறுகிறதே என்று அந்த அறிவிலிகளுக்குத் தெரிவதில்லை. 'சமனன் கலீலா' என்பதன் பொருள் இதனை உலகத்திற்குப் பகரமாக விற்காதீர்கள்' என்பதாகும்.

பிறகு, திருக்குர்ஆனை நல்ல உறைகளில் சுற்றி சுவற்றில் தொங்க விடுகின்றார்கள். அல்லது புத்தகப்பையில் போட்டு அதனை கழுத்தில் தொங்க விட்டு விடுகின்றார்கள் இவர் பெரியவர்; நல்லடியார்; எல்லா நேரமும் குர்ஆனை தன்னோடு வைத்துள்ளார் என மக்கள் நினைக்க வேண்டும் என்பதற்காக.

திருக்குர்ஆனை தவறாக உபயோகித்து அதிலிருந்து பயன் பெறாததைப் போன்றே 'தக்தீர்' பிரச்னை குறித்தும் அவர்கள் நடந்து கொள்கிறார்கள். தமது வெட்கத்தை மறைப்பதற்காக 'விதி'யை அவர்கள் சாக்காகக் கொள்கின்றனர். உதாரணமாக ஏதோ ஒரு வேலையாக செல்கிறார். வேலை நடைபெறவில்லை. உடனே நீர் பெரிதாக வாதம் புரிந்தீரே. ஆனால் இந்த வேலையை உம்மால் செய்ய முடியவில்லையே என்று மக்கள் கேட்பார்களே என பயந்து தமது வெட்கத்தை மறைப்பதற்காக, என் தலைவிதி அப்படி. நான் என்ன செய்ய முடியும்? என்று கூறிவிடுகின்றனர். எங்கெல்லாம் அவர்களுக்கு இழிவும் அவமானமும் ஏற்படுகிறதோ அங்கெல்லாம் அவர்கள் 'தலைவிதி'யின் மீது பழியை சுமத்தி விடுகிறார்கள். ஆனால் 'தக்தீர்' (இறைநியதி) என்பது, வெட்கத்தில் மூழ்கி

விடுவதற்காக ஏற்படுத்தப்படவில்லை. மாறாக, முன்னேற்றங்களை வழங்குவதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ளது. அடுத்து எவர் நஷ்டமடைகின்றாரோ அவர் தக்தீரின் மூலம் பயன் பெறாததனாலேயே அவ்வாறு நஷ்டமடைகின்றார்.

பிறகு, அவநம்பிக்கையை வெளிப்படுத்தும் போதும் மக்கள் ‘விதி’யை நினைத்துப் பார்க்கிறார்கள். உதாரணமாக, வேலை செய்து கொண்டிருக்கும்போது இடையில் மனிதன் தைரியத்தை இழந்து விட்டால் அது அவனுக்கு மிக மோசமான நிலைமையாகி விடுகிறது. ஏனெனில் அவநம்பிக்கையை வெளிப்படுத்துவது மிக மோசமான கோழைத்தனத்தையும், இழிவையும் எடுத்துக் காட்டும். நேர்மையான மனிதன் இவற்றைத் தவிர்க்கிறான். எனவே அச்சமயத்தில் ‘நமது தலையெழுத்தில் இல்லை’ என்று கூறி தமது அவநம்பிக்கையை வெளிப்படுத்துகிறார்கள். அதாவது, நாங்கள் வானத்தையே துளையிட்டிருப்போம்; ஆனால் அல்லாஹ்வின் விருப்பம் இல்லாததால் நாங்கள் எங்கள் முயற்சியை கைவிட்டு விட்டோம் என்கின்றனர். இவ்விதமாக தமது கோழைத்தனத்தை ‘இறை நியதி’யின் திரையில் மறைக்க முயலுகின்றனர். இறை நியதியை எப்படி விமர்சிக்கிறோம் என்பது பற்றி வெட்கப்படுவதேயில்லை. இறைவனுடைய நியதி இப்படித்தான் இருந்தது என்பது அவர்களுக்கு எப்படித் தெரிந்தது என்பதைக் கூட அவர்கள் எண்ணிப் பார்ப்பதில்லை. அவர்கள் இறைவனுக்கு நெருக்கமானவர்களாக எப்போது மாறினார்கள் - அவர்களுக்கு இறைவன் தனது நியதிகளை வெளிப்படுத்துவதற்கு?

அடுத்து தமது சோம்பேறித்தனத்தை மறைப்பதற்காக இந்த பிரச்சனையை கையாள்கிறார்கள். இவர்களைக் காட்டிலும் அந்த நரி நல்லதைச் செய்தது! திராட்சைப் பழச் செடியில் திராட்சைப் பழங்கள் உள்ளன என்பதைக் கண்ட அந்த நரியாவது பழங்களை சாப்பிடுவதற்காக துள்ளியது; குதித்தது. ஆனால் அவை எட்ட முடியாத அளவுக்கு உயரமாக இருந்தன. உடனே இந்தத் திராட்சை புளிப்பானவை என்று கூறி நரி சென்றுவிட்டது. ஆக, பழங்களைப் பெற முடியாது என்பதற்காக நரி அவற்றை விட்டு விடவில்லை. மாறாக அவை புளிப்பாக இருப்பதால் விட்டுவிட்டது. ஆனால் இவர்களோ இதைவிட மோசமான முன்மாதிரியைக் காட்டுகிறார்கள்.





முயற்சி செய்யாமலேயே நம் தலையெழுத்தில் இருக்குமானால் நமக்குக் கிடைத்தே தீரும் என்று கூறி, தமது சோம்பேறித்தனத்தைத் திரையிட்டு மறைத்துவிடுகிறார்கள். அல்லாஹ் தனது சட்டத்தை மாற்றி நமது வாழ்விற்குத் தேவையானவற்றை அமைத்துக் கொடுக்கும் வகையில் நமக்காக ஒரு சிறப்பான நியதியை ஏற்படுத்தும் அளவுக்கு நாம் எப்போது தகுதியுடையவரானோம் என்பதைப் பற்றி இந்த அறிவிலிகள் சிந்திப்பதே யில்லை. அதுவும் எல்லா வேலைகளையும் விட்டு விட்டாலாவது அதில் கொஞ்சமாவது நியாயமிருக்கும். ஆனால் அப்படி விட்டு விடுவதில்லை. எந்த வேலையைச் செய்யாமல் வாழ முடியாதோ அதனை ஓடி ஓடிச் செய்கின்றார்கள். அல்லது அதிக உழைப்போ, தியாகமோ செய்யத் தேவையில்லாத வேலைகளைச் செய்யும்போது சாக்கு சொல்வதில்லை. தலைவிதியின் மீதே உங்களுக்கு நம்பிக்கையிருக்குமாயின் பின்னர் சின்னச் சின்ன வேலைகளை ஏன் செய்கின்றீர்கள்?

உண்மையில் இவர்களின் செயல் அந்த நரியின் செயலைவிடவும் மிக மோசமான தாகும். இதற்குக் காரணம் நரியாவது முயற்சி செய்தபிறகு விட்டது; இவர்கள் முயற்சி செய்யாமலேயே விட்டு விடுகின்றார்கள். அதுமட்டுமல்லாமல் நரியாவது தன் முயற்சியை விட்டு விட்டதற்கு திராட்சை புளிப்பாக இருந்ததை சாக்காகக் கொண்டது; ஆனால் இவர்களோ இறைவனை சாக்காகக் கொள்கின்றார்கள்.

இவர்களே சோம்பேறிகளாக இருக்கின்றனர்; வேலை செய்ய மனமில்லை. உழைப்பைக் கண்டு மனம் பதறுகிறார்கள். மேலும் அதனை மரணத்தைக் காட்டிலும் மோசமானதாகக் கொள்கின்றனர். ஆனால் முன்னேற்றப் பாதைகளில் காலெடுத்து வைக்குமாறு அவர்களிடம் கூறப்படும்போது, அந்த பொருள் கிடைக்க வேண்டும் என்று தலையெழுத்தில் இருந்தால் தானாகவே கிடைக்கும். நமது முயற்சியால் என்ன கிடைக்கப் போகிறது என்று கூறிவிடுகின்றனர். இவ்வாறு தமது பலவீனத்தை தக்தீரின் போர்வையில் மறைக்கின்றனர்.

அடுத்து ‘விதியை’ பழிச் சொல்லாக பயன்படுத்துகின்றார்கள். அதாவது எவரையாவது பழிக்க வேண்டுமென்றால் ‘போடா

துரதிரஷ்டவாதி!' என்று கூறுகிறார்கள். ஆக, மற்ற கெட்ட வார்த்தைகளைப் போன்றே 'விதி' என்ற வார்த்தையும் இருக்கிறது. அவர்களைப் பொருத்தவரை, இறைவனுடைய இந்த அருளை உபயோகப்படுத்துவது என்பது இதன் மூலம் தம் நாவை அசுத்தப் படுத்துவதுதான். ஆனால் மனிதன் தக்தீரின் மூலம் தன்னை தூய்மையாக்கிக் கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் இறைவன் அதனை ஏற்படுத்தினான்.

இறைவனை ஏசுவதற்காகவும் 'விதி' உபயோகப்படுத்தப் படுகிறது. இறைவனோடு மனிதனுக்குள்ள தொடர்பு வலுப்பெற வேண்டும் என்பதற்காகவே இறைவன் 'இறை நியதி' யை உருவாக்கியுள்ளான். ஆனால் மனிதன் அதனை தலைகீழாக உபயோகப்படுத்துகிறான். சிலர் வீட்டில் மரணம் ஏற்பட்டுவிட்டால் எடுத்துக்காட்டாக, ஒரு குழந்தை மரணித்துவிட்டால், 'இறைவனே! உன் மகன் இறந்தால் உனக்குத் தெரியும் எவ்வளவு துக்கம் ஏற்படுகிறதென்று!' என்று கூறுகிறார்கள். (நவூது பில்லாஹி மின் தாலிக) அதாவது இறைவன் அவர்கள் மீது மாபெரும் அநியாயம் செய்துவிட்டானாம். இறைவன் மீதும் அவ்வாறே அநியாயம் ஏற்பட வேண்டும் என அவர்கள் விரும்புகின்றனர்.

இங்கு ஒருவர் இருந்தார். அவர் பிற்காலத்தில் நல்ல மனத்தூய்மையைக் கொண்ட அஹ்மதியாகி விட்டார். அவர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். ஆனால் அவர் அஹ்மதியாவதற்கு முன் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அவர் மீது இருபது வருடங்களாக கோபம் கொண்டிருந்தார்கள். காரணம் ஒரு விஷயத்தில் அன்னாருக்கு அந்த நபர் மீது கடுமையான மனத்தாங்கல் இருந்தது.

எப்படியென்றால், அவருடைய மகன் இறந்து விட்டான். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது சகோதரருடன் அவரை துக்கம் விசாரிக்கச் சென்றார்கள். அதிக நட்புறவு கொண்ட பெரியவர் துக்கம் விசாரிக்க வந்தால் அவரைக் கட்டியணைத்து அழுது புலம்புவது அவர்கள் சம்பிரதாயமாக இருந்தது. இதன்படி அவர் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின்





அண்ணனைக் கட்டியணைத்து, 'இறைவன் என்மீது மாபெரும் அநியாயம் செய்துவிட்டான்' என்று புலம்பிக் கொண்டே கூறினார். இதனைக் கேட்டதும் அவருடைய முகத்தைக் கூட பார்க்க விரும்பாத அளவுக்கு ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்கு அந்த மனிதர் மீது வெறுப்பு ஏற்பட்டது. பிற்காலத்தில் இறைவன் அவருக்கு வாய்ப்பு வழங்கினான். அவர் இந்த மாதிரியான அறிவீனத்திலிருந்து வெளியேறினார்.

சுருக்கமாக, இறை நியதியை தவறாகப் புரிந்து கொண்டதன் விளைவாக, இறைவன் எங்கள் மீது இந்த அநியாயத்தைச் செய்தான்; அந்த அநியாயத்தைச செய்தான் என்றெல்லாம் மக்கள் கூறுகின்றனர். இப்படி இறைவனை மிக மோசமான வார்த்தைகளால் திட்டுவதற்கும் அவர்கள் தயங்குவதில்லை.

இவர்கள் செய்யும் இச்செயல்களுக்கான குற்றம், 'எல்லாம் இறைவனே செய்கின்றான்' என்ற கருத்தை இவர்களின் உள்ளங்களில் பதியச் செய்தவர்களையே சாரும். இந்த கருத்தை வைத்துக் கொண்டுதான் அவர்களுக்கு ஏதாவது சோதனை வந்தால் இறைவன் நம்மீது இந்த அநியாயத்தைச் செய்தான் என்று கூறத் துவங்கி விடுகிறார்கள்.

## இறை நியதியின் மீது நம்பிக்கை கொள்வதன் அவசியம்

இறைநியதியின் மீது நம்பிக்கை கொள்வதற்கு என்ன அவசியம் என்பது பற்றி இப்போது கூறுகிறேன். இறை பண்புகள் வெளிப்படுத்துவதற்குப் பெயர்தான் கத்ர் (இறை நியதி) என்று நான் முன்பே கூறியுள்ளேன். ஆகவே ஒரு மனிதன் அதன்மீது நம்பிக்கை கொள்ளாதவரை அவரது நம்பிக்கை முழுமை பெற முடியாது. இறைநியதி, நம்பிக்கையை வலுப்படுத்தக் கூடிய - அதனை முழுமைப் படுத்தக் கூடிய ஊடகமாகும். இது இல்லை யென்றால் நம்பிக்கை முழுமையடையாது போய்விடும் என்பது முதல் குறையாகும்.

## இறைநியதி ஏற்படாவிட்டால் உண்டாகும் இழப்புகள்

இறைநியதி செயல்படவில்லையாயின், மனிதன் உலக விஷயத்திலோ மார்க்க விஷயத்திலோ நல்லதைப் பெற முடியாது என்பதே அதனால் ஏற்படும் முதல் இழப்பாகும்.

நெருப்பு பிறிதொன்றினை எரிப்பது ஒரு இறைநியதி என நான் குறிப்பிட்டிருந்தேன். இதேபோன்றுதான் தண்ணீர் தாகத்தைக் தணிப்பதும். அதாவது பொருள்களிடத்து வைக்கப்பட்டிருக்கும் சிறப்புத் தன்மைகளிலிருந்து பலன் பெறுவதன் மூலமே உலகம் இன்று நிலைபெற்றுள்ளது.

ஒரு விவசாயி வீட்டிலிருந்து விதைகளை எடுத்து வந்து நிலத்தில் தூவுகின்றார். அதாவது வெளிப்படையாகப் பார்க்கும்போது விதைகளை அவர் வீணாக்குகிறார். எதற்காக? எதற்கென்றால், அது முளைத்து ஒவ்வொரு விதையும் பல தானியங்களாக வளரும் என்று அவர் நம்புவதால்தான். ஆனால் அவருக்கு இந்த நம்பிக்கையும் உறுதிப்பாடும் எங்கிருந்து கிடைத்தது? இவருடைய தந்தை, பாட்டன், முப்பாட்டன் ஆகியோர் அப்படிச் செய்தபோதெல்லாம் அவ்வாறே நிகழ்ந்தது என்பதனால்தான்.

மேலும் ஒருவிதை நிலத்தில் தூவப்பட்டால் அது முளைத்து பல தானியங்களாக உருவாகி விடுகின்றன. இது இறைவன் ஏற்படுத்திய சட்டமாகும். இவ்வாறு ஒரு விதி நியமிக்கப்படாவிட்டால் கோதுமை தேவைப் பட்டதால் ஒரு விவசாயி கோதுமை விதையைத் தூவ, அதிலிருந்து சில நேரத்தில் கோதுமையும் இன்னும் சில நேரத்தில் கள்ளி மரமோ அல்லது திராட்சைச் செடியோ முளை விடத் துவங்கினால் சில காலத்திற்குப் பிறகு விவசாயி விதை தூவும் இச்செயலை வீணான ஒன்றாகக் கருதி அதனை விட்டு விடுவார். மேலும் தமது உழைப்பை வீணானதாகக் கருதுவார்.

இதே போன்று தங்கத்தை நெருப்பில் இட்டால் அது உருகும் என்றும் அதிலிருந்து நான் விரும்பும் நகைகளை உருவாக்குவேன் என்றும் ஒரு பொற்கொல்லனுக்கு நம்பிக்கை இருக்கிறது. ஆனால் அப்படி நடக்காமல் வளையல் செய்வதற்காக பொற்கொல்லனிடம் ஒருவர் தங்கத்தைக் கொடுக்க அதனை பொற்கொல்லன் உருக்கியதும் அது வெள்ளியாகவோ, பித்தளையாகவோ மாறிவிட்டால் (இயற்கை விதி இல்லையென்றால் இப்படித்தான் நடக்கும்) என்ன நிலைமை ஏற்படும்? அவர் அந்த வேலையை





விட்டு தவ்பா (பாவ மன்னிப்பு) செய்யுமளவுக்கு மக்கள் அவரை அடித்து நொறுக்கி விடுவார்கள்.

அவ்வாறே கொல்லன் இரும்பை சூடாக்கி அதனை நீட்டுவதற்காக சுத்தியலால் அடிக்கும் போது அது இரும்புக் கவசமாகவோ அல்லது உலக்கையாகவோ மாறிவிடும். அவன் கோடாரி உருவாக்க நினைத்தால் அது வாளாக உருவாகும். உடனே போலீஸ் வந்து ஆயுதங்கள் தயாரிப்பதற்கு உனக்கு யார் அனுமதி கொடுத்தார்கள் எனக் கேட்டு அவனைப் பிடித்துச் சென்று விடுவர்.

அதுபோலவே காய்ச்சல் குணமாக மருத்துவர் மருந்து கொடுக்க, அதனால் இருமலும் வந்து விட்டால் மருத்துவர் பேச்சை யார் கேட்பார்கள்? இருமல் இருந்தால் அவருக்கு பனஃப்ஷா (தடுமல் இருமல் முதலியவற்றிற்காக உபயோகிக்கும் ஒரு வகை மூலிகை) வை கொடுங்கள் என்று ஒரு விவசாயி கூட தற்போது கூறுகிறார். ஏனெனில் அது இருமலைக் குணப்படுத்தும் என்பது அனுபவத்தால் கிடைத்த உண்மை. இந்த விதி நியமிக்கப்பட்டிருக்காவிட்டால் - அதாவது - பனஃப்ஷா மருந்தைக் கொடுப்பதால் சில நேரத்தில் இருமலும் வேறு சில நேரத்தில் காய்ச்சல் அதிகமாவதும், இன்னும் சிலவேளையில் மலச்சிக்கலும் உண்டாகிவிட்டால், சில நேரத்தில் வயிற்றுப் போக்கும் பசியின்மையும், பசி அதிகரித்து விடுவதும் ஏற்பட்டால் யார் அந்த மருந்தைக் கொடுப்பார்கள்? அம்மருந்தால் குறிப்பிட்ட இருமலுக்கு பலனுண்டு என இறைவன் நியமித்திருப்பதால் தான் பனஃப்ஷா கொடுக்கப்படுகிறது.

இதேபோன்று கோதுமையினால் கோதுமை விளையும் என்று விவசாயிக்கு நம்பிக்கையிருப்பதால் தான் தானியங்களை வீட்டிலிருந்து வெளியே கொணர்ந்து தூவுகின்றார். அவருக்கு அப்படி நம்பிக்கை இல்லாதிருக்குமென்றால் தானியங்களை வெளியே கொண்டு வரவே மாட்டார். என்ன விளையுமோ தெரியவில்லையே? நான் ஏன் இந்த தானிங்களையும் வீணாக்க வேண்டும் எனக் கூறுவார்.

ஆனால் இன்று நிலத்தில் கோதுமை விதைகளை அவர் புதைக்கின்றார் என்றால், கோதுமை விதைத்தால் கோதுமை

முளைக்க வேண்டும் என்று இறைவன் 'பொது விதி'யை ஏற்படுத்தியிருப்பதால்தான்.

அவ்வாறே ரொட்டி தின்பதால் வயிறு நிறைகிறது. ஆனால் அப்படி இல்லாமல், சிலவேளை ஒரு வாய் சாப்பாடு தின்பதாலேயே வயிறு நிறைவதும் இன்னும் சிலவேளையில் நாள் முழுக்க தின்றும் வயிறு நிறையாமலும் இருந்தால் யார் சாப்பிடுவார்கள்? அப்படி சாப்பிட்டு அவர் ஏன் பைசாவை வீணடிப்பார்? அல்லது தீ பற்ற வைப்பதால் வீட்டில் சமையல் ஆயத்தமாகிறது. ஆனால் சிலவேளை நாள் முழுக்க ரொட்டியை வாணலியில் இட்டு நெருப்பு எரிந்து கொண்டிருந்தும் வேகாமலேயே இருந்தால் அல்லது போட்ட உடனேயே கரிந்து விட்டால் அல்லது தடித்து இரட்டை ரொட்டியாகி விட்டால் ரொட்டி சுட யாருக்கு தைரியம் வரும்?

இதேபோன்று கீரை சிலவேளை வெந்தும் சிலவேளை வேகாமலும் போனால் யார் கீரை சமைப்பார்கள்? சர்க்கரை இடுவதால் சிலவேளை இனிப்பாகவும் சிலவேளை கசப்பாகவும், உவர்ப்பாகவும், வேறு சில நேரங்களில் புளிப்பாகவோ அல்லது வேறு ஏதாவதொரு ருசியாகவோ மாறி விட்டால் யாராவது சர்க்கரையை உபயோகிக்க முடியுமா?

இந்த உலகில் நடைபெறுவதெல்லாம் ஓரே காரணத்தினால் நடைபெறுகிறது. அதுதான் 'இறை நியதி' என்பது. இனிப்பு இனிப்புச் சுவையைக் கொடுக்க வேண்டும் என்பதும், கசப்பு கசப்புச் சுவையைக் கொடுக்க வேண்டும் என்பதும் நெருப்பினால் உணவு வேக வேண்டும் என்பதும், உணவினால் வயிறு நிரம்ப வேண்டும் என்பதுமாகிய இவையனைத்தும் இறைவன் விதித்ததுதான். இவற்றை மக்கள் அனுபவத்தால் அறிந்திருக்கிறார்கள். எனவேதான் இவற்றிக்காக அவர்கள் பணத்தை செலவழிக்கிறார்கள்; உழைப்பை தாங்கிக் கொள்கிறார்கள்.

சுருக்கமாக உலகில் ஏற்படும் எல்லா செயல்களும் முன்னேற்றங்களும் 'இறை நியதி' (தக்தீர்) நியமிக்கப் பட்டிருப்பதனாலேயே என்பதும் அது இல்லையென்றால் உலகமே செயல்பட முடியாது என்பதும் தெளிவாகிறது. ஆகவே மனித வாழ்க்கை 'இறைநியதி'யினாலேயே நிலை பெற்றிருக்கிறது எனலாம். ஏனெனில் சாப்பிடுதல் மற்றும் மற்ற பிற அத்தியாவசியப்





பொருள்கள் முழுமை பெறுவதனாலேயே உயிர் வாழ முடியும். மேலும் அந்த அத்தியாவசியப் பொருள்களை முழுமைப்படுத்துவதற்காக மனிதனும் முயற்சி செய்கின்றான். என் முயற்சிகளுக்கு ஏதாவது நல்ல பலன் கிடைக்கும் என்று அறிந்ததனால் தான் அப்படிச் செய்கிறான். இவ்விதமாக ஒரு 'விதி' நியமிக்கப்படவில்லையென்றால் அவன் உழைக்கவுமாட்டான்; உயிரோடிருக்கவும் மாட்டான்.

இவை இறைவனின் 'பொது விதி' என்பது இல்லாவிட்டால் ஏற்படும் நஷ்டங்களாகும். இனி 'சிறப்பு விதி' இல்லாவிட்டால் ஏற்படும் நஷ்டங்கள் குறித்துக் கூறுகிறேன்.

## 'சிறப்பு விதி' இல்லாவிட்டால் ஏற்படும் நஷ்டங்கள்

உலகம் நிலைபெற்றிருப்பதும், அதன் முன்னேற்றமும் பொதுவான இயற்கை விதியுடன் சம்பந்தப்பட்டிருப்பதைப் போன்றே ஆன்மீகம் நிலைபெற்றிருப்பதும் அதன் முன்னேற்றமும் 'சிறப்பு விதி'யுடன் சம்பந்தப்பட்டிருக்கிறது. மேலும் 'பொது விதி' இல்லையென்றால் உலகம் வீணாகி விடுவதைப் போன்றே 'சிறப்பு விதி' இல்லையென்றால் ஆன்மீகம் வீணாகி விடும்.

இதன் முதல் நஷ்டம் என்னவென்றால், இது இல்லாமல் மனிதன் இறைவன் மீது நம்பிக்கை கொள்ள முடியாது. காரணம் இறைவன் மீது நம்பிக்கை வைப்பதற்கான மாபெரும் ஆதாரம் இந்த உலகமாகும். இவ்வளவு பெரிய செயலரங்கைப் படைத்தவன் ஒருவன் இருக்க வேண்டும் என்ற நம்பிக்கையாகும்.

ஒரு தத்துவஞானி ஒரு கிராம வாசியிடம், 'இறைவன் இருக்கின்றான் என்பதற்கு உன்னிடம் என்ன ஆதாரம் இருக்கிறது' எனக் கேட்டார். அதற்கு அந்த கிராமவாசி, ஆட்டின் புழுக்கையைக் கண்டு இவ்விடத்திலிருந்து ஆடு சென்றுள்ளது என்றும் அல்லது ஒட்டகத்தின் மலத்தைப் பார்த்து இங்கிருந்து ஏதோ ஒட்டகம் சென்றுள்ளது என்றும் அல்லது காலடியின் அடையாளத்தைப் பார்த்து இவ்வழியாக மனிதன் கடந்து சென்றிருக்கிறான் என்றும் நான் அறிந்து கொள்கிறேன். அப்படியிருக்கும்போது இவ்வளவு பெரிய உலகத்தைப் பார்த்து இறைவன் இருக்கிறான் என்று என்னால் உணர்ந்து கொள்ள முடியாதா என்ன? என்று கூறினார்.

ஆயினும் இந்த சான்று முழுமையானதல்ல. ஏனென்றால் இதிலிருந்து இறைவன் என்று ஒருவன் இருக்க வேண்டும் என்றுதான் நிரூபமாகின்றதே தவிர 'இறைவன் இருக்கின்றான்' என்று நிரூபணமாகவில்லை. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இது குறித்து 'பராஹீனே அஹ்மதிய்யா' எனும் தமது நூலில் மிக நன்றாக விளக்கி எழுதியுள்ளார்கள்.

பின்னர் இறைவன் இருக்கிறான் என்பதை எப்படி தெரிந்து கொள்வது என்றொரு கேள்வி எழுகிறது. இறைவன் உண்மையிலேயே இருக்கிறான் என்று உறுதி கொள்ளும் வண்ணம் அந்த இறைவன் தன் வல்லமைக்கு ஏதாவதொரு முன் மாதிரியைக் காட்ட வேண்டும். இவ்விதமாகத்தான் நாம் இறைவன் இருக்கிறான் என்பதைத் தெரிந்து கொள்ள முடியும்.

இந்த வேலை மனிதனுடைய ஆற்றலுக்கு அப்பாற்பட்டது என்று மக்கள் கருதும்போது அது நடப்பதற்கு சில காலம் முன்பே ஒருவர் அதுபற்றி முன்னறிவித்திருந்து அது வழக்கத்திற்கு மாற்றமான விதத்தில் நடந்தும் விட்டால் இறைவன்தான் இதனைச் செய்திருக்கிறான் என்று அம்மக்களால் நம்ப முடியும்.

இச்சமயத்தில் நான் இன்னொரு விஷயத்தையும் எடுத்துரைக்க நாடுகின்றேன். அதாவது இறைவன் இருக்கிறான் என்பது இல்ஹாமின் (இறையறிவிப்பின்) மூலமாக நிரூபணமாகிறது என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எழுதியுள்ளார்கள். ஆனால் நீங்களோ தக்தீரின் (இறை நியதியின்) மூலமாக நிரூபணமாகிறது என்கிறீர்களே என்று கேட்கப் படலாம்.

உண்மையில் இரண்டு கூற்றுகளும் சரியானவையே என்பதை நினைவில் கொள்ள வேண்டும். எவ்வாறெனில், எந்த இறையறிவிப்பில் (இல்ஹாமில்) இறைநியதி (தக்தீர்) வெளிப்படுத்தப்படுகிறதோ அந்த இறையறிவிப்பின் மூலமாகவே 'இறைவன் இருக்கிறான்' என்பது நிரூபணமாகிறது. அவ்வாறல்லாமல் 'நான் இருக்கிறேன்' என்று மட்டும் இறைவன் புறமிருந்து இல்ஹாம் இறங்கினால், 'இது இல்ஹாம் வருகிறது என்று கூறும் வாதியின் சுய எண்ணமாகும் என மக்கள்





கூறிவிடலாம். இதிலிருந்து 'இறை இருப்பு' நிரூபணமாகாது. சுய எண்ணத்தின் அடிப்படையிலும் பலமுறை இல்ஹாம் ஏற்பட்டு விடுகிறது என மக்கள் கூறி விடலாம்.

இங்கு ஒருவர் வந்திருந்தார். 'நீர் மஹ்தியாக இருக்கிறீர்' என்று எனக்குக் குரல் வருகிறது என்று அவர் கூறிக் கொண்டிருந்தார். விருந்தினர் இல்லத்தில் அவர் தங்கியிருந்தார். மவ்லவி குலாம் ரஸூல் ராஜ்கீ அவர்களும் அங்குதான் தங்கியிருந்தார். அவர் அந்த நபரைக் கூப்பிட்டு விளக்கினார்கள். ஒருவர், மவ்லவி சாஹிப்! மவ்லவி சாஹிப் என்று கூப்பிட்டால் உம்மைத்தான் அவர் கூப்பிடுகிறார் என்று கருதுவீர்களா? எனக் கேட்டார்கள். அதற்கு அவர், 'இல்லை' என்று பதிலளித்தார். ஹகீம் சாஹிப்! டாக்டர் சாஹிப்! என்று குரல் வந்தால் நீங்கள் என்ன நினைப்பீர்கள்? என மவ்லவி குலாம் ரஸூல் ராஜ்கீ சாஹிப் அவரைத் திருப்பிக் கேட்டார். அதற்கு அந்த மனிதர், 'வேறு எந்த ஹகீமையோ டாக்டரையோ கூப்பிடுகிறார். நாமும் அந்தக் குரலைக் கேட்டு விட்டோம் என்றுதான் கருதுவேன் எனக் கூறினார். உடனே மவ்லவி குலாம் ரஸூல் ராஜ்கீ (ரலி) அவர்கள் அவரிடம், டாக்டர் சாஹிப், ஹகீம் சாஹிப் என்ற குரலைக் கேட்டு ஒருவர் நம்மைக் கூப்பிடுகிறார் என்று கருதாத நீங்கள் மஹ்தீ, மஸீஹ் என்ற குரலைக் கேட்டு உங்களை நீங்களே மஹ்தி என்றும் மஸீஹ் என்றும் எப்படி நினைக்கிறீர்கள்? எனக் கேட்டார்கள்.

இதே போன்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலத்தில் ஒருவர் வந்து, 'என்னை சில நேரத்தில் முஹம்மத் என்றும் சொல்லப்படுகிறது, 'சில நேரத்தில் ஈசா என்றும் மூஸா என்றும் இப்ராஹீம் என்றும் சொல்லப்படுகிறது. மேலும் நான் சில நேரத்தில் அர்ஷுக்கு சென்று விடுகிறேன்' என்று கூறினார். அதற்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், உம்மை மூஸா எனக் கூறப்படும்போது மூஸாவைப் போன்ற அற்புதமும் கொடுக்கப்படுகின்றதா? எனக் கேட்டார்கள். இல்லை என அவர் பதிலளித்தார். ஈசா என்று கூறப்படும்போது உமக்கு ஈசாவைப் போன்ற அடையாளங்களும் கொடுக்கப் படுகின்றனவா? என வினவ, இல்லை என்று அவர் கூறினார். பிறகு கேட்டார்கள். உம்மை முஹம்மத் என்று கூறப்பட்டிருக்கும்போது முஹம்மத்

(ஸல்) அவர்களின் சக்திகளும் உமக்குக் கொடுக்கப்பட்டுள்ளனவா? இதற்கும் அவர் 'இல்லை' என்றார். அர்ஷ் வரை சென்றபோது இறைவனுடைய கம்பீரமான அடையாளங்களும் காட்டப்பட்டனவா எனக் கேட்டதற்கு அதற்கும் அவர் 'இல்லை' என்றார். இதனைக் கேட்ட ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், 'ஒருவர் இன்னொருவரிடம் எடுத்துக் கொள்' என்று கூறுகிறார். மற்றவர் அதனை எடுப்பதற்காக கையை நீட்டும்போது எதுவும் கொடுக்கவில்லை யென்றால் அவருடைய இந்தச் செயலிலிருந்து, அவர் மற்றவரை எள்ளி நகையாடுகிறார் என்றோ அல்லது அவர் சோதிக்கப்படுகிறார் என்றோ தெரிவதில்லையா? இதே போன்று நீர் செய்த பாவங்களின் காரணமாக உம்மோடு இவ்வாறு எள்ளி நகையாடப்படுகிறது. எனவே நீங்கள் அதிகமாக பாவ மன்னிப்புத் தேடுங்கள் என்று கூறினார்கள்.

சுருக்கமாக இல்ஹாம் என்பது சுய எண்ணம், சந்தேகம், நோய், ஷய்த்தானின் தூண்டுதல் ஆகியவற்றின் விளைவாகவும் இருக்கலாம். எனவேதான் வெறும் இல்ஹாமினால் இது ஷய்த்தானுடையதாக இருந்து விடக் கூடாதே, நோயாக இருக்கக் கூடாதே என்று சந்தேகம் கொள்ள இடமுண்டு. ஆனால் அத்துடன் இறை வல்லமையும் இருக்கும்போது இது ஒரு வல்லமை மிக்கவனிடமிருந்து வந்ததாகும் என்று தெரிந்து விடும்.

எனவே **இல்ஹாம்தான்** இறைவனைப் பற்றிய உறுதி நம்பிக்கையின் படித்தரத்தில் நம்மை கொண்டு சேர்க்கிறது என்பதும், **இறை நியதியின் வெளிப்பாடுதான்** 'இறைவன் இருக்கிறான்' என்ற நிலை வரை நம்மை சென்றடைய வைக்கிறது என்பதும் ஆகிய இவ்விரு கூற்றுகளும் சரியானவையே. இறைநியதி இல்லையென்றால் இறைவன் மீது நம்பிக்கையும் இருக்காது. உலகத்தைப் பார்த்து விட்டு, இது தானாகவே உருவாகிவிட்டது என்றும் கூறிவிட முடியும். ஆனால் இறைவனுடைய சக்தியையும் வல்லமையையும் மனிதன் பார்க்கும் போது 'இறைவன் இருக்கிறான்' என்பது அவனுக்குத் தெரிந்து விடுகிறது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) ஒரு கவிதையில் கூறுவதாவது:

'தன் வல்லமையினால் அவன் தன் இருப்புக்கு சான்று கொடுக்கின்றான். அதுதான் வெளிப்பார்வையில் அடையாள மில்லாத அவனுடைய முகம் என்பது'.





இக்கவிதையில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இறைவன் தன் வல்லமையினால் தன் இருப்பிற்கான அடையாளத்தைக் காட்டுகின்றான். அவன் தானாக தன் வல்லமையை வெளிப்படுத்தாத வரை அவனது இறைமை நிரூபணமாவதில்லை எனக் குறிப்பிட்டுள்ளார்கள்.

இறைவல்லமையைக் காணாதவர்கள், இறைவனை யார் படைத்தார், அவனை நம்புவதற்கு? எனக் கூறிவிடுகிறார்கள். ஆனால் அவர்கள் இறைவல்லமையைக் கண்டுவிட்டால் இறைவன் இருக்கிறான் என்பது அவர்களுக்கும் நிரூபணமாகிவிடும்.

ஆக, தக்தீர் இல்லையென்றால் இறைவன் மீது நம்பிக்கையும் எஞ்சியிருக்காது. இறைவன் மீது நம்பிக்கை அப்படியே ஏற்பட்டு விட்டாலும் 'இறை நியதி' இன்றி அன்பும் ஆழ்ந்த தொடர்பும் ஏற்பட முடியாது.

உதாரணமாக, அரசர் இருக்கிறார். அவருக்குக் கடிதம் எழுத வேண்டும் என எவருக்கும் மனத்தில் தோன்றுவதில்லை என்று வைத்துக் கொள்வோம். காரணம், அவரோடு சொந்த தொடர்பு ஏதும் இல்லை. ஆனால் எவர்களுடன் நமக்குத் சொந்த தொடர்பு இருக்கின்றதோ அவர்களுக்குக் கடிதம் எழுத பல முறை நாம் எண்ணுகிறோம். இதேபோன்று சாதாரண விஷயமானால் அதற்குள்ள ரசனை வேறு. ஆனால் அதுவே தன்னோடு சம்பந்தப்பட்ட விஷயமென்றால் அதன் ரசனையே தனி.

மன்னரின் பொதுவான அறிவிப்பாக இருந்தால் அதனால் யாதொரு குறிப்பான ரசனையும் ஏற்படுவதில்லை. ஆனால் அதுவே ஒரு குறிப்பிட்ட நபருக்காக மன்னர் கடிதம் எழுதினால் அவர் அதனை தனக்குப் பெருமையாகக் கருதுகிறார். ஆகவே இறைவனுடன் அன்பு, நேசம் இருக்க வேண்டுமென்றால், அந்த இறைவனுடன் மனிதனுக்கு சொந்த தொடர்பு இருக்கவேண்டும். அந்தத் தொடர்பு தக்தீர் (இறை நியதி) மூலமாக நிலைபெற முடியும்.

இறை நியதி இல்லையென்றால் ஏற்படும் மூன்றாவது நஷ்டம் அநேகமாக முழு மனித குலத்திற்கும் ஈடேற்றம் கிடைக்க முடியாது என்பதாகும். எவ்வாறென்றால், அதிகமானோர் ஆரம்பத்தில் பாவம்

செய்கின்றார்கள். அவர்களுக்கு புரிந்ததும் பாவங்களை விட்டுவிடுகின்றனர். அப்போது 'தக்தீர்' (இறைநியதி) இல்லாமல் தத்பீர் (முயற்சி) மட்டும் இருந்தால் மனிதன் செய்துவிட்ட செயல்களுக்கேற்ப அவனுக்குக் கூலி கிடைக்கும். ஏனெனில் தான் செய்ததற்கேற்பவே அவனுக்குக் கிடைக்க வேண்டியிருந்தது; இறைவன் ஏதும் கொடுக்க வேண்டியதில்லை. அப்போது எண்பது வருடமாக பாவங்கள் செய்த ஒருவர் எண்பத்தி ஒன்றாவது வயதில் தொழவும் நல்ல செயல்களைச் செய்யவும் ஆரம்பித்து விட்டார் எனில் அவர் இவ்வளவு முயன்றும் கடைசியில் அது அவரை நரகத்திற்கே கொண்டு செல்லும். ஆனால் இச்சமயத்தில் இறைநியதி வேலை செய்தால் அது அவரைக் காப்பாற்றிவிடும். ஏனெனில் அடியார் தமது பாவங்களை விட்டும் பாவமன்னிப்புக் கோரினால் அந்த பாவங்கள் அழிக்கப்பட்டுவிடும் என்பதே இறைவன் விதித்த நியதி. இறைவன் கூறுவதாவது:

إِنَّ الْحَسَنَاتِ يُذْهِبْنَ السَّيِّئَاتِ

நிச்சயமாக நற்செயல்கள் தீய செயல்களை அழித்து விடுகின்றன. (11:115)

ஆனால் இந்த விதி இல்லாதிருப்பின் மக்களுக்கு ஈடேற்றம் கிடைப்பது கடினமாகிவிடும். தக்தீர் இல்லையென்றால் பாவமன்னிப்பு என்ற பேச்சுக்கே இடமில்லாது போய்விடும். பாவ மன்னிப்பு இல்லையென்றால் மனிதனுடைய பாவங்கள் மன்னிக்கப்படவும் முடியாது; அவன் ஈடேற்றம் பெறவும் முடியாது.

ஆனால் மனிதன் பாவமன்னிப்பு கோரினால் பாவங்கள் அதனால் மன்னிக்கப்பட வேண்டும் என்று இறைவன் விதித்துள்ளான். இதனால்தான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், 'மனிதன் மரணப்படுக்கைக்கு முன் எந்த நேரம் பாவ மன்னிப்புக் கோரினாலும் அவனது தவ்பா (பாவமன்னிப்புக் கோரிக்கை) ஏற்றுக்கொள்ளப்படும் என்று கூறினார்கள். கடைசி காலத்திய இந்த நன்மை வாழ்நாள் முழுக்க அவன் செய்த தீமைகளை அழித்துவிடும்.

தக்தீர் இருப்பதனால்தான் மனிதன் அழிவிலிருந்து பாதுகாப்படைகிறான். ஒருவர் பாவங்கள் செய்வதிலேயே பிடிவாதமாக இருப்பதைக் கண்டேன். பாவங்கள் செய்வதை





விட்டுவிடுங்கள் என நான் அவருக்கு அறிவுரை கூறினேன். அதற்கு அந்த மனிதர் நான் இவ்வளவு பாவங்கள் செய்துவிட்டேன். இனி நான் நரகத்திற்குத் தான் போகப்போகிறேன். பின்னர் பாவங்களை விட்டு விடுவதால் என்ன பலன்? எனத் திருப்பிக் கேட்டார்.

இதனைக் கேட்டு நான் அவரிடம், இது தவறான எண்ணமாகும். மனிதன் பாவமன்னிப்புத் தேடினால் இறைவன் பாவங்களை மன்னித்து விடுகிறான் என்று விளக்கினேன். அவர் அறிவாளியாக இருந்ததால் அவருக்குப் புரிந்துவிட்டது. அவர் பாவங்களை விட்டு விட்டார். தக்தீர் இல்லையெனில் பாவமன்னிப்பும் இருக்காது. பாவமன்னிப்பு இல்லை யென்றால் - அதாவது இறைவன் தன் அடியார்களின் பக்கம் திரும்பவில்லை யென்றால் - அவர்களின் தீமைகளை அழிக்கவில்லையென்றால் மனிதன் அழிவுக்காளாகி விடுவான்.

## சிறப்பு விதியின் முக்கியத்துவமும் அதன் அவசியமும்

சிறப்பு விதியின் முக்கியத்துவம் யாது? அதன் அவசியம் என்ன? என்பது பற்றி இப்போது கூறுகிறேன்.

ஒவ்வொன்றிற்கும் ஒரு குறிப்பிட்ட விதிகளை இறைவன் நியமித்துள்ளான்; அதன் அடிப்படையில் மனிதன் வேலை செய்ய வேண்டும் என்பதில் சந்தேகமில்லை. எனினும் சில நேரங்களில் 'பொது விதி' பயன்படாமலும் போய் விடக் கூடும். உதாரணமாக, ஒரு மனிதன் காட்டில் இருக்கிறான். அவனுக்குத் தண்ணீர் தேவை. ஆனால் அங்கு எந்த கிணறும் கிடையாது; நீரோடையும் இல்லை. இந்த சூழ்நிலையில் தண்ணீர் கிடைப்பதற்கு என்ன 'விதி' இருக்கிறது? கிணறு வெட்டி தண்ணீர் எடுக்க வேண்டும் என்பதுதானே? ஆனால் அவன் காட்டில் கிணறு வெட்டத் துவங்கினால் தண்ணீர் கிடைப்பதற்குள் அவன் இறந்து விடுவான். அவ்வாறான நேரத்திற்காகத்தான் இறைவன் 'சிறப்பு விதி'யை நியமித்துள்ளான். அது வெளிப்படுவதால் மனிதன் அழிவிலிருந்து தப்பித்து விட முடியும். சிறப்பு விதி அப்போது வெளிப்படாவிட்டால் அவன் அழிந்து விடுவான் என்பதில் சந்தேகமில்லை.

அந்த சிறப்பு விதியாவது, அவர் இறைவன் முன்னிலையில் துஆச் செய்வதும் இறைவனும் அவருக்குத் தண்ணீர் கிடைப்பதற்கான ஏற்பாட்டைச் செய்து விடுவதுமாகும். ஒரு நபித்தோழருக்கு நிகழ்ந்த சம்பவத்தை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறுகிறேன்.

அந்த நபித் தோழரை ரோமப் படை வீரர்கள் கைது செய்தார்கள். அவரைக் கைது செய்ததில் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்கள். மன்னர் அவருக்குக் கடும் தண்டனை கொடுக்க விரும்பினார். இவருடைய மார்க்கத்தில் பன்றி இறைச்சி சாப்பிடுவது ஹராமாகும்; அதை சமைத்து இவருக்குக் கொடுக்க வேண்டும் என ஒருவன் ஆலோசனை கூறினான். எனவே பன்றி இறைச்சி சமைத்து அந்த நபித் தோழர் முன்னால் வைக்கப்பட்டது. ஆனால் அவர் சாப்பிட மறுத்துவிட்டார். மேன்மேலும் கூறியும் அவர் சாப்பிடவில்லை. கடைசியில் பசியால் அவர் நிலைமை மிகவும் மோசமானது. இந்தச் சூழ்நிலையில் தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள அவரால் எதுவும் வழிவகையும் செய்ய முடியாது. காரணம் அவர் பிறருடைய கையில் சிக்கிக் கொண்டுள்ளார். இந்த சந்தர்ப்பத்தில் இறைவனாகவே பார்த்து ஏதாவது செய்தால்தான் உண்டு. எல்லா சந்தர்ப்பத்திலும் காரணிகளின் மூலமாகவே வேலை நடக்க வேண்டும் என்று இறைவன் தீர்மானித்திருந்தால் அந்த நபித் தோழரைக் காப்பாற்றுவதற்கு வழியே இருந்திருக்காது. சிறப்பு விதியையும் இறைவன் ஏற்படுத்தியிருப்பதால் அவரைக் காப்பாற்ற வழி ஏற்பட்டது.

எப்படியென்றால், நான்கைந்து நாட்களாக நபித்தோழர் பசியாக இருந்ததால் ரோம் நாட்டு மன்னருக்கு இறைவன் கடுமையான தலைவலியை ஏற்படுத்திவிட்டான். இருந்த மருந்தையெல்லாம் உபயோகித்தார். பலன் இல்லை. நீங்கள் ஒருவரை கைது செய்துள்ளீர்களே அந்த பாவம் தான் உங்களை வாட்டுகிறதோ என்னவோ என ஒருவர் கூற, அதுதான் காரணமாக இருப்பதாகத் தெரிகிறது என்று மன்னர் கூறினார். அந்த நபித்தோழரை அழைத்து அவரைக் கட்டியணைத்தார் மன்னர். மேலும் மன்னர் தம் தலைவலி குறித்து ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு எழுதினார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஒரு பழைய தொப்பியை மன்னருக்கு அனுப்பி





இதனை அணிந்து கொள்ளுங்கள். தலைவலி போய்விடும் என்று எழுதினார்கள். அத்துடன் எங்களுடைய ஒரு சகோதரர் உங்களிடம் கைதியாயிருக்கிறார். அவரை மதிப்போடும், மரியாதையோடும் விட்டு விடுங்கள் என்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) குறிப்பிட்டார்கள். மன்னர் அப்படியே செய்தார். தொப்பியை அணிந்ததால் அவருடைய தலைவலியும் போய்விட்டது.

சுருக்கமாக இறைவன் அந்த நபித்தோழரை 'சிறப்புவிதி'யின் மூலமாகக் காப்பாற்றினான். 'பொது விதி'யின் மூலம் அந்த நபித்தோழரின் கஷ்டம் தீர்க்க முடியாததாக இருந்தது. ஆகவே இறைவன் மன்னரின் கழுத்தைப் பிடித்து அவரிடமிருந்து நபித்தோழரை விடுவித்தான்.

இன்னொன்று ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுக்கு நேர்ந்த சம்பவமாகும். இந்த நாட்டிற்கு செல்லுங்கள் என இறைவனிடமிருந்து கட்டளை வந்தது. ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் தமது தோழர்களுடன் சென்றபோது வழியில் தண்ணீரில்லாத காடு வந்தது. பாறைகள் நிறைந்த நிலமாக இருந்ததால் அங்கு கிணறும் இருந்ததில்லை. அச்சமயத்தில் அவரால் என்ன செய்யமுடியும்? இங்குமில்லாமல், அங்குமில்லாமல் திரும்பவும் முடியாமல், தொடர்ந்து செல்லவும் முடியாமல் இருந்தார்கள். இறைவன் கருணை காட்டாவிட்டால் அவரால் என்ன செய்திருக்கமுடியும்? இதற்கு ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. அல்லாஹ் அவருக்காக 'சிறப்புவிதி'யை ஏற்படுத்துவதே அது. உடனே ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள், இறைவா! நாங்கள் தாகத்தால் மரணிக்கிறோம். எங்களுக்குத் தண்ணீர் கிடைக்க நீயே ஒரு ஏற்பாட்டை செய்தருள்வாயாக! என்று இறைவனை வேண்டினார்கள். இதைக்கேட்ட இறைவன், 'இன்ன இடத்தில் சென்று உமது கைத்தடியால் அடிப்பீராக' எனக் கூறினான். அவ்விடத்தில் சென்று தடியால் அடித்ததும் அங்கிருந்து நீரூற்று வெளியானது. அவர்களுக்குத் தண்ணீர் கிடைத்து விட்டது.

அந்த இடத்தில் நீரூற்று ஏற்கனவே இருந்தது. ஏன் இருந்தது? ஒரு நாள் மூஸா அந்த இடத்திற்கு வருவார். அவருக்கு எங்கேயும் தண்ணீர் கிடைக்காது. அப்போது இங்கிருந்து தண்ணீர் கொடுக்க வேண்டும் என்பதற்காகத்தான்.

ஆகவே, காரணிகள் பலன் படாதபோது அழிவிலிருந்து தப்பிக்க வழி இருக்கிறதென்றால் அது 'சிறப்புவிதி'யின் மூலமாகத்தான். பின்னர் சிறப்புவிதி இல்லையென்றால் பின்வரும் நஷ்டங்கள் ஏற்படும்:

1. அல்லாஹ்வின் மீது நம்பிக்கை ஏற்படமுடியாது.

2. இறைவனோடு மனிதனுக்குள்ள தொடர்பு வலுப்பெற முடியாது.

3. பாவமன்னிப்புக் கோரி பாவங்களிலிருந்து தப்பிப்பதற்கான வாய்ப்பு கிடைக்காது.

4. காரணிகள் ஒன்றுகூட முடியாத சந்தர்ப்பங்களில் அழிவிலிருந்து மனிதன் தப்பிக்க முடியாது.

**இறை நியதி இல்லாவிட்டால் உண்டாகும் இன்னொரு நஷ்டம்**

இறை நியதி இல்லையென்றால் முழு உலகமும் ஷிர்கில் (இறைவனுக்கு இணை வைப்பதில்) மூழ்கிவிடும். எவ்வாறெனில் ஷரீஅத் எனும் மார்க்க சட்டத்தைக் கொண்டு வந்து தமது ஜமாஅத்தினை நிலைநாட்டும் நபிமார்கள் அனைவரும் வசதி வாய்ப்புகள் இல்லாமலேயே வருகிறார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவில் சிலைகளை ஒழித்தபோது அவர்களுக்கு எவ்வித வசதி வாய்ப்பும் இருந்தததில்லை. சிலைகளினாலேயே வாழ்க்கையை ஓட்டி வந்த மக்கத்தினர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைக் கொன்றுவிட விரும்பினர். அம்மக்களை எதிர்த்துப் போரிடுவதற்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் படை பலமோ, பண பலமோ இருந்ததில்லை.

வெளிப்படையான வசதி வாய்ப்புகளே வெற்றிக்குக் காரணமாக இருந்திருப்பின் அது நிராகரிப்பவர்களுக்கு கிடைத்திருக்கும். அவர்கள் ஹஸ்ரத் ரஸுலே கரீம் (ஸல்) அவர்களை வெற்றிகொண்டு அவர்களைத் தீர்த்துக் கட்டியிருப்பார்கள். அன்னாரின் மரணத்தால் உலகம் இருளிலும் வழி கேட்டிலுமே இருந்திருக்கும்.





இதே போன்று ஹஸ்ரத் மூஸா (அலை) ஹஸ்ரத் ஈசா (அலை) ஆகியோருக்கும் எவ்வித பௌதீக வசதி வாய்ப்புகள் இருந்ததில்லை. சக்திக்கேற்ற பலனும், பொதுவிதியும் மட்டுமே இருக்குமென்றால் எந்த நபி வந்தாலும் அவர் தீர்த்துக் கட்டப்படுவார். மேலும் நபிமார்களின் இயக்கமே உலகில் இயங்க முடியாது போய்விடும். ஏனெனில் நபிமார்களின் எதிரிகள் சக்தியுடையவர்கள். அவர்களிடம் வசதி வாய்ப்புகள் இருக்கின்றன. ஆனால் இறைவன் 'சிறப்பு விதி'யை இறக்கி நபிமார்களுக்கு உதவி புரிகிறான். மேலும் அவர்களுக்கு வெற்றியை வழங்குகிறான். இல்லையென்றால் அவர்கள் உயிரோடிருக்க முடியாது. உலகிலிருந்து 'ஷிர்க்'-ஐ ஒழிக்க முடியாது.

நபியை இறைவன் உருவாக்குகிறானா அல்லது மனிதன் உருவாக்குகிறானா? இறைவன் உருவாக்குகிறான் என்றால் அவன் முஹம்மது போன்ற வசதி வாய்ப்பில்லாதவரை உருவாக்க மாட்டானே! கைசர் போன்ற மகத்தான அரசரை நபியாக்கியிருப்பானே என்று யாராவது கூறலாம். ஆக இறைவன் பலவீனமானவர்களை நபியாக ஆக்குவதற்குப் பதிலாக பெரும் பெரும் அரசர்களை நபியாக்கியிருக்கலாமே!! அப்போது இந்த மாதிரி 'சிறப்புவிதி'களை ஏற்படுத்த வேண்டியிராதே என்றும் வினவலாம்.

ஆனால் அப்படிச் செய்தால் இறைவனுக்கு அடியார்கள் தேவைப் படுகிறார்கள். அடியார்களுக்கு இறைவன் தேவைப்படமாட்டான் என்றாகிவிடும். ஏனெனில் நாங்கள்தான் எங்கள் வலிமையினால் இறைவனை ஏற்க வைத்தோம். இல்லையென்றால் அவனை யார் நம்புவது? என்று அவர்கள் கூறுவார்கள். அதாவது இறைவன்மீது அவர்களின் அருள் இருப்பது போன்றாகிவிடும். (எனவே அவ்வாறு நடப்பதில்லை.)

எவர்கள் எல்லா நேரமும் தங்கள் மீது இறைவன் அருள் புரிகின்றான்; இறைவனின் கருணை தம்மீது இருக்கிறது எனக் கண்டு அவனுக்கு நன்றியுள்ளவர்களாக இருக்கின்றார்களோ அவர்களையே இறைவன் நபியாக தேர்ந்தெடுக்கிறான்.

ஹஸ்ரத் தாவூது நபி (அலை), ஹஸ்ரத் சுலைமான் நபி (அலை) ஆகியோர் மன்னர்களாகவும் இருந்தார்களே என்று இங்கு

யாரும் நினைக்க வேண்டாம். ஏனெனில் இந்த இரண்டு நபிமார்களும் புதிதாக ஜமாஅத்தை உருவாக்கத் தோன்றவில்லை. புதிதாக ஜமாஅத்தை உருவாக்கத் தோன்றாத அத்தகைய நபிமார்கள் தலைவர்கள் மன்னர்கள் முதலானோரில் ஒருவராக இருக்கலாம். ஆனால் புதிதாக உலகத்தை நிலைநாட்டுவதற்காகவும் இறந்து விட்ட சமுதாயத்தை உயிர்ப்பிப்பதற்காகவும் தோன்றக் கூடிய நபிமார்கள் ஏழை எளியோர்களிலிருந்தே உருவாகின்றார்கள்.

## இறை நியதியின் மீது நம்பிக்கை கொள்வதால் கிடைக்கும் ஏழு ஆன்மீகப் படித்தரங்கள்

இறைநியதியின் மீது நம்பிக்கை கொள்வதால் என்ன பயன்கள் என்பது பற்றி இப்போது விளக்குகிறேன்.

### முதல் படித்தரம்

சாதாரண இயற்கை விதியை நம்புவதால் ஏற்படும் முதல் பயன், இதன்மூலம் உலக முன்னேற்றங்கள் கிடைக்கின்றன என்பதாகும். இறைநியதி (விதி)யின் மீது நம்பிக்கை கொள்ளவில்லையென்றால் எந்த வேலையும் நடக்காது. ஏனெனில் மனிதன் இயற்கையின் சில விதிமுறைகளின் மீது நம்பிக்கை கொள்கிறான் என்ற அடிப்படையில்தான் உலகமே இன்று இயங்குகிறது.

உதாரணமாக நெருப்பு எரிக்கிறது; தண்ணீர் அணைக்கிறது. பொருள்களுக்கு இருக்கும் இந்த சிறப்புத் தன்மையின் மீது நம்பிக்கை இல்லையென்றால் மனிதன் அனைத்து முயற்சிகளையும் விட்டு விடுவான்; உலகமே செயலிழந்து விடும்.

'இறை நியதி'யினால் உண்மை நிலைபெற்றிருப்பது, ஈமான்கிடைப்பது ஆகியவை இதன் ஆன்மீக பயன்களாகும்.

எவ்வாறெனில், கோதுமை விதைப்பதால் கோதுமையே விளையும் என்பதைக் கண்டு ஒரு விவசாயி கோதுமை விதைகளை விதைக்கிறார். இதேபோன்று ஷரீஅத்தின் கட்டளைகளின்படி நடப்பதனால் ஏற்படும் நல்ல விளைவுகளைக் கண்டு அவர்களுக்கும் அதன்படி நடக்கவேண்டும் என்ற தைரியமும் துடிப்பும் ஏற்படுகிறது. மேலும் ஈமானை பெற்றுக் கொள்ள





வேண்டுமென்ற தூண்டுதலும் உருவாகிறது. இல்லையென்றால், நபியை நம்புவதால் எந்த நன்மையும் இல்லாதிருக்கும்போது நாம் ஏன் அவர்களை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கூறி மக்கள் அவரை வெளியேற்றி விடுவார்கள்.

முஹம்மது (ஸல்) அவர்களை மக்கள் ஏன் ஏற்றுக் கொண்டார்கள்? ஏனென்றால், அவர்களின் போதனைகளின்படி செயல்படுவதால் மனிதனுடைய ஆன்மீக, ஒழுக்க நிலைமைகள் மாறிவிடுகின்றன. அவர்களை ஏற்றுக் கொண்டவர்களுக்கு இறையுதவியும் இறைவன்புறமிருந்து ஆதரவும் கிடைக்கின்றன. எனவே நாமும் இந்த 'இறை நியதி'யிலிருந்து பலன் பெறுவோம்; இறைவனின் அருளை நமக்காகவும் நம் குடும்பத்தினருக்காகவும் ஈர்த்துக் கொள்வோம் என்ற உணர்வு அம்மாக்களின் உள்ளத்திலும் தோன்றியது.

### இரண்டாம் படித்தரம்

பொதுவான மார்க்க விதியினால் பிறருக்கு ஒரு முன்மாதிரி – உதாரணம் கிடைத்துவிடுகிறது. எனவே அவர்கள் அதிலிருந்து தானும் பலன் பெற வேண்டும் என்பதன் பக்கம் கவனம் செலுத்துகிறார்கள். அப்போது அவர்களுக்காக 'சிறப்பு விதி' வெளிப்படுகிறது. அவ்விதியின் கீழ் அவர்கள் மேலும் முன்னேற்றமடைந்து இரண்டாம் படித்தரத்தை எட்டுகிறார்கள்.

அதாவது தக்தீரின் மீது அவர்களுக்கு இருக்கும் நம்பிக்கை அவர்களை பொறுமை மற்றும் எதிலும் திருப்தி கொள்ளுதல் ஆகிய அந்தஸ்து வரை கொண்டு சென்று விடுகிறது. உண்மை என்னவென்றால், தம் அடியார்களை சோதனைக்கு ஆளாக்குவதை இறைவன் நடைமுறையாகக் கொண்டுள் ளான். நம்பிக்கை கொண்டவர்கள் சோதனைக்குள்ளாக்கப்படுகிறார்கள். அல்லாஹ் இவ்வாறு கூறுகிறான்:

أَحَسِبَ النَّاسُ أَنْ يُتْرَكُوْآ أَنْ يَقُوْلُوْآ اٰمَنَّا وَهُمْ لَا
يُفْتَنُوْنَ○ وَلَقَدْ فَتَنَّا الَّذِيْنَ مِنْ قَبْلِهِمْ فَلَيَعْلَمَنَّ اللّٰهُ
الَّذِيْنَ صَدَقُوْا وَلَيَعْلَمَنَّ الْكٰذِبِيْنَ○

''நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம் என்று கூறுவதனால் அவர்கள் விட்டு விடப்படுவார்களென்றும் அவர்கள் சோதனைக்கு ஆளாக்கப்பட மாட்டார்களென்றும் மக்கள் எண்ணுகின்றனரா?

அவர்களுக்கு முன்னிருந்தவர்களை நாம் சோதித்தோம். எனவே (இப்பொழுதும்) நிச்சயமாக அல்லாஹ் உண்மையாளர்களை வெளிப்படுத்துவான். மேலும் பொய்யர்களையும் நிச்சயமாக அவன் வெளிப்படுத்துவான்''. (29:3,4)

ஒருவர் ஈமான் கொண்டால் இறைவன் புறமிருந்து அவருக்கு சோதனைகள் வருகின்றன. அவற்றில் சில சோதனைகள் தமது பலவீனத்தால் ஏற்படுகின்றன. இன்னும் சில சோதனைகள் இறைவன் புறமிருந்து தோன்றுகின்றன. உதாரணமாக, ஒருவருக்குக் குழந்தை பிறக்கிறது. பிறகு இறந்து விடுகிறது. அவரை சோதனைக்கு ஆளாக்க வேண்டும் என்பதற்காகத்தான் அவருக்குக் குழந்தை பிறந்தது.

ஒருவருடைய வீடு இடிந்து விழுவதும் அல்லது ஒரு விரோதி அவருக்கு தீங்கிழைப்பதும் இதே போன்றுதான். முயற்சி மட்டும்தான்; வேறு எதுவுமில்லை என்றிருக்குமென்றால், மனிதன் பொறுமையில் நிலைத்திருக்கத் தேவையில்லை. மேலும் தனது எதிரிகளுக்கு எதிராக எந்தத் திட்டத்தையும் மேற்கொள்ளாமல் அமைதியாக இருக்க வேண்டிய தேவையேயில்லையே. நாம் சோதிக்கப்படுகிறோம் என அவனுக்குத் தெரிந்தால்தான் பொறுமையில் அவன் நிலைத்திருக்க முடியும். அவ்வாறில்லாமல் முயற்சி மட்டும்தான் என்று இருந்திருந்தால் அப்படிப்பட்ட நேரங்களில் அவன் மேலும் அதிகமாக ஆவேசத்தைக் காட்டுவான்.

எங்களுக்கு அனுமதியளித்தால் எதிரிகள் எங்கள் மீது செய்த கொடுமைகளின் காரணத்தால் நாங்கள் அவர்களின் மீது வழக்குத் தொடுக்கிறோம் என்று நம் ஜமாஅத் சகோதரர்கள் பலமுறை இமாம் மஹ்தி (அலை) அவர்களிடம் கேட்டார்கள். எனினும் இமாம் மஹ்தி (அலை) அவர்கள், நாம் பொறுமை செய்ய வேண்டும் என்றே பதிலளித்தார்கள்.

எதிரிகளின் கொடுமைகளைத் தடுத்து நிறுத்துவதற்காக வழக்குத் தொடுப்பது செய்யக் கூடாத ஒன்றல்ல. அப்படியிருந்தும்





ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அதனைத் தடுத்ததற்குக் காரணம், சில நேரத்தில் முஃமின்களுக்கு சோதனைகள் இறைவனிடமிருந்து வருகின்றன. அப்போது பொறுமை காட்ட வேண்டிய அவசியமாகிறது. ஆக, ஆன்மீகப் படித்தரங்களில் ஒரு படித்தரமான இறைவனிடத்தில் எந்நிலையிலும் திருப்தி கொண்டிருத்தல், பொறுமை ஆகியவை 'இறை நியதி'யின் மீது நம்பிக்கை கொள்வதனாலேயே ஏற்படுகிறது.

ஏனெனில் இந்த நம்பிக்கையின் விளைவாக எனக்கு இந்த சோதனை இறைவன் புறமிருந்து வந்துள்ளது எனக் கருதி மனிதன் அதனைப் பொறுத்துக் கொள்கிறான். மேலும் எது வந்தாலும் அது இறைவன் புறமிருந்து வந்தது என்றும், நல்லதுதான் என்றும் நம்பக் கூடிய நிலைமையை அவன் பெற்று விடுகிறான். அவன் சோதனைகளின் ஒரு பகுதியில் அல்லாஹ்வின் கட்டளைக் கேற்ப முயற்சியை மேற்கொள்கிறான் என்றாலும் இன்னொரு பகுதியில் பொறுமை மற்றும் இறை திருப்தியை மட்டும் மேற்கொள்கிறான். இந்த படித்தரத்தை எட்டும் போதுதான் மக்கள் துன்பங்கள், கஷ்டங்களின்போது உண்மையான முறையில் إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَO 'இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்' (நாம் அல்லாஹ்விற்கே உரியவர்கள்; நாம் அவன் பக்கமே திரும்புபவர்களாவோம்) என்று கூறுகிறார்கள்.

தக்தீர் (இறை நியதி) மூலமாகத்தான் மனிதன் இந்த அந்தஸ்துகளைப் பெறுகிறான். இறை நியதி இல்லாதிருந்து மனிதன் பொறுமை செய்கிறான் என்றால் அது அவனுடைய கோழைத்தனமாகும். அதே போன்று இறை திருப்தி (யைப் பெறுவது நோக்கமாக) இல்லாதிருந்து அவன் பொறுமை செய்கிறான் என்றால் அது அவனது தன்மான உணர்வின்மையைக் காட்டும். ஆனால் இறை நியதியின் மீது நம்பிக்கைகொண்டு தாம் முற்றிலும் சோதனையெனக் கருதும் சில கஷ்டங்களை சகித்துக் கொள்கிறார் எனில் அவரது அந்த சகிப்புத் தன்மை போற்றுதற்குரியதாகும். மேலும் சில சோதனைகளை இறைவனது செயலாக எண்ணி அதில் தனது திருப்தியை வெளிப்படுத்துகிறார் எனில் அப்போது அவரது அந்த திருப்தி பாராட்டத் தக்கதாகும்.

மனிதனிடம் சக்தி இருந்தும் அவன் பொறுமை செய்வதுதான் மிகச் சிறந்த பொறுமையாகும். மனிதன் சக்தியே இல்லாதிருக்கும் நிலையில் பொறுமை செய்வது ஒன்றும் அவ்வளவு உயர்தரமான பொறுமையன்று.

இதே போன்று இது இறைவனிடமிருந்து வந்துள்ள சோதனையாகும் என்று நம்பி, மனிதன் சில சோதனைகளின்போதும் தன் உள்ளத்தில் திருப்தியைப் பெறுவதுதான் உண்மையான திருப்தியாகும்.

அந்த நம்பிக்கை இல்லாதிருக்கு மென்றால் அதனை தன்மான உணர்வின்மை என்றுதான் கூற முடியும். இவ்விரண்டையும் பிரித்தறிவது எப்படியென்றால், இறை விருப்பத்தில் திருப்தி யடைந்த மனிதன் தமது பிற வேலைகளில் மிகவும் சுறுசுறுப்பான வராகவும் தைரியமாக நிலை நிற்கக் கூடியவராகவும் விடா முயற்சி யுடையவராகவும் இருப்பார். அவருடைய தைரியம் மற்றவர்களை விட அசாதாரணமான முறையில் அதிகமாக இருக்கும்.

'திருப்தி' என்ற சொல் எனக்கு ஒரு சம்பவத்தை நினைவூட்டுகிறது. அச்சம்பவம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இறப்பதற்கு முந்தைய நாளில் நடந்தது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தங்கியிருந்த வீட்டிற்கு லாதர் வியாபாரி மலக் முபாரக் அலி சாஹிப் நாள்தோறும் மாலையில் வருவது வழக்கம். ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் வெளியே உலாவச் செல்லும் போது அவரும் தம் குதிரை வண்டியில் அவர்களுடன் கிளம்பிச் செல்வார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எனக்காக ஒரு குதிரையை வாங்கினார்கள். அதில் சவாரி செய்து செல்வேன். குதிரை வண்டியுடன் என் குதிரையையும் ஓட்டிக் கொண்டே செல்வேன். வழியில் பேசிக் கொண்டே செல்வோம்.

எந்த இரவில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இறைவனடி சேர்ந்தார்களோ அதற்கு முந்தைய நாளில் என் உள்ளத்தில் சுமை போன்ற ஓர் உணர்வு ஏற்பட்டதால் நான் குதிரையில் சவாரி செய்யவில்லை. என் வண்டியிலேயே ஏறிக் கொள்ளுங்கள் என்று மலக் சாஹிப் கூறவே நான் அவருடன் ஏறிக்





கொண்டேன். ஆனால் ஏறியதுமே என் உள்ளம் துக்கமடைந்தது. என்னையுமறியாமல் என் நாவில் இந்த கவிதை வரிகள் வெளிப்பட்டன.

'ராஸீ ஹேன் ஹம் உஸீமேன் ஜிஸ்மே தேரீ ரிஸா ஹோ'

பொருள் : (இறைவா!) எதில் உனக்கு திருப்தியோ அதிலேயே நாங்களும் திருப்தியடைகிறோம்.

மலக் சாஹிப் அவர்கள் என்னுடன் பேசிக் கொண்டே வந்தார்கள். ஒன்றிரண்டு பேச்சிற்கு பதில் கொடுத்து விட்டு மீண்டும் நான் அதே சிந்தனையில் மூழ்கி விட்டேன். அன்று இரவு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நோய் அதிகமாகி விட்டது. மறுநாள் காலை அவர்கள் இறைவனடி சேர்ந்தார்கள்.

சகிக்க முடியாத இந்த துக்கத்தைத் சகித்துக் கொள்வதற்காக என்னை ஆயத்தப்படுத்திய 'சிறப்பு விதி' தான் இது.

இதேபோன்று சூஃபிகளைப் பற்றி எழுதப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு துன்பம் வரும்போது-அதுவும் அத்துன்பம் சோதிப் பதற்காகவே வந்துள்ளது எனத் தெரிந்துவிட்டால் அத்துன்பத்தினை விலக்குவதற்கு மக்கள் முயற்சி செய்த போதும் அவர்கள் தடுத்துவிட்டார்கள். மேலும் அந்த துன்ப நிலையிலேயே இன்பத்தை உணர்ந்தார்கள்.

சோதனைகள் ஏன் வருகின்றன என்பது பற்றி இப்போது நான் கூறுகிறேன். மனிதனுடைய நம்பிக்கை உறுதியாக வேண்டும் என்பதற்காகத் தான் பொதுவாக சோதனைகள் வருகின்றன என்பதை மனதிற் கொள்ள வேண்டும். அதுவும் மனிதனுடைய நம்பிக்கை பற்றி இறைவனுக்குத் தெரியாது என்பதனால் அல்ல; மாறாக, தன்னுடைய நம்பிக்கை எந்த நிலையில் உள்ளது என்பது மனிதனுக்கே தெரியாது என்பதனால் தான்.

இதனை உறுதிப்படுத்தும் கதை ஒன்று இருக்கிறது. ஒரு பெண்ணிற்கு மெஹ்த்தி என்ற பெயர் கொண்ட ஒரு மகள் இருந்தாள். அவளுக்கு ஒருநாள் கடும் காய்ச்சல் ஏற்பட்டது. தன் மகளுக்கு இருக்கும் காய்ச்சல் தனக்கு வரட்டும்; நான்

வேண்டுமானால் இறந்து விடுகிறேன். மகளுக்கு நீண்ட ஆயுளைக் கொடு என்று அந்தப் பெண் நாள்தோறும் துஆச் செய்து வந்தார். ஒரு நாள் இரவு பசுவின் முகம் ஒரு குறுகலான பாத்திரத்தில் சிக்கிக் கொண்டது. பசுவால் தன் முகத்தை வெளியே எடுக்க முடியவில்லை. மிகவும் பயந்து இங்குமங்கும் பசு ஓடத் துவங்கியது. இதற்குள் அந்தப் பெண் விழித்துக் கொண்டார். கண் விழித்ததும் ஒரு நூதனமான உருவத்தை தன் முன்னால் கண்டு, உயிரைப் பறிக்கக் கூடிய 'மலகுல் மவ்த்' தான் உயிரைப் பறிப்பதற்காக வந்து விட்டார் என பயந்து, 'மலகுல் மவ்த்! நான் மெஹ்த்தி இல்லை. நான் ஒரு ஏழையான கிழவியாவேன். என் மகள் மெஹ்த்தி அங்கே படுத்துக் கொண்டிருக்கிறாள். அவளுடைய உயிரைப் பறி' என்று தன் மகளின் பக்கம் கையைக் காட்டிக் கூறினாள்.

எனக்கு என் மகளுடன் அன்பு இருக்கிறது என்று அந்தப் பெண் கருதினாள். ஆனால் உயிரைப் பறிப்பவர் வந்த போது தன் மகளுக்காக உயிரைக் கொடுக்கும் அளவுக்கு மகள் மீது தனக்கு அன்பு இல்லை என்பது வெளிப்பட்டு விட்டது.

இது ஒரு கதை என்றாலும், இந்த மாதிரி பல சம்பவங்கள் நடக்கின்றன. சில நேரத்தில் மனிதனால் தன் எண்ணங்களைக் கூட சரியான முறையில் கணிக்க முடிவதில்லை. அவனுக்கு சோதனைகள் வரும்போதுதான் ஒரு பொருளின் மீது அன்பு கொண்டிருக்கிறேன் என்ற அவனது வாதம் எதுவரை சரியானது என்பது தெரிய வருகிறது.

அவ்வாறே ஒருவரை சோதனைக்கு உட்படுத்துவதற்குக் காரணமும் அவருடைய நம்பிக்கை எப்படிப்பட்டது என்று மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதுதான். இல்லையெனில் ஒருவரின் ஈமான் (நம்பிக்கை) உறுதியானதா? இல்லையா? என்பதை பிறரால் எப்படித் தெரிந்து கொள்ளமுடியும்? எனவேதான், ஒரு மனிதன் எந்த அளவுக்கு பெரியவனாக இருக்கிறானோ அந்த அளவுக்கு பெரிய சோதனைகள் வருகின்றன என்று ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள். மேலும் எல்லாரையும் விட நபிமார்களுக்குத்தான் மாபெரும் சோதனைகள் வருகின்றன.





ஹஸ்ரத் இமாம் மஹ்தி (அலை) அவர்கள் தம்மைப் பற்றி ஒரு பாரசீகக் கவிதையில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

**''கர்பலா ஈஸ்த் சேர் ஹர் ஆனம்**

**சத் ஹுஸய்ன் அஸ்த் தர் கரே பானம்''**

பொருள் : ''நான் எப்போதும் கர்பலா களத்திலே இருக்கிறேன். ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி) அவர்களைப் போன்று நூற்றுக்கணக்கான கஷ்டங்களில் சிக்குண்டிருக்கிறேன்''.

இமாம் மஹ்தி (அலை) இக்கவிதையின் மூலம் ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி) அவர்களை அவமதித்து விட்டார்கள் என மக்கள் ஆட்சேபிக்கின்றனர். ஆனால் அந்த அறிவிலிகள் உண்மையை உணர்ந்து கொள்ளவில்லை. இமாம் மஹ்தி (அலை) அவர்கள் கூறுவதாவது, இமாம் ஹுஸைன் (ரலி) ஒரே ஒருமுறைதான் கொல்லப்பட்டார்கள். ஆனால் எதிரிகள் என்னை எல்லா நேரமும் கொல்ல முனைந்து கொண்டிருக்கிறார்கள். மேலும் எப்போதும் தொல்லை கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். எனவே நான் எப்போதுமே கர்பலா களத்தில் இருப்பதாக உணர்கிறேன்.

சிலுவையில் ஒருமுறை அறையப்பட்டு இறத்தல் என்பது, எப்போதும் சோதனை களில் மூழ்கியிருக்கும் அளவுக்கு அப்படி ஒன்றும் பெரிய விஷயமல்ல. இயேசு சிலுவையில் ஏறி மரணித்ததால் அவரை இறைமகனாக ஏற்றுக்கொள்ளுங்கள் என்று கிறித்தவர்கள் கூறுகின்றனர். நாம் கேட்கிறோம்: அப்படியென்றால் எப்போதும் சிலுவையில் ஏற்றப்படுகின்றவரை எப்படிப்பட்டவராக ஏற்றுக்கொள்ள வேண்டும்?

எல்லா நபிமார்களுக்கும் இதே நிலைமைதான் ஏற்படுகின்றது. அப்போது அவர்களுக்கு உறுதியான ஈமான் (நம்பிக்கை) இருக்கிறது என்பதை மக்களே கண்டு கொள்கின்றனர்.

الْاِسْتِقَامَةُ فَوْقَ الْكَرَامَةِ

(அல் இஸ்திகாமத்து ஃபவ்கல் கராமத்) எனக் கூறுவார்கள். (உறுதியாக நிலைநிற்றல் என்பது அற்புதத்தை விட மேலானது).

எதிரிகளும் மேன்மையை மறுக்காது ஒப்புக்கொள்வதுதான் மிகப் பெரிய அற்புதம்.

பாருங்கள், எதிரிகள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மீது மாபெரும் ஆட்சேபணைகளைச் செய்தனர். ஆயினும், மற்றவர்கள் இருக்கட்டும். ஆனால் முஹம்மது (ஸல்) அவர்கள் தம் வேலையை மிகவும் உறுதிப்பாட்டுணர்வுடன் செய்து காட்டினார். உறுதியான நம்பிக்கை இல்லாதவரை எவராலும் அப்படிச் செய்து காட்டியிருக்க முடியாது. எனவே முஹம்மது பொய்யராக இருக்க மாட்டார் என எதிரிகளே எழுதும் கட்டாயத்திற்குள்ளாயினர்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சம்பவங்களை அறிவுப் பூர்வமான முறையில் அலசி ஆராய்ந்த ஐரோப்பிய எழுத்தாளர்கள் முஹம்மது மிகவும் உறுதியுடன் செயல்பட்டார்; ஒரு பொய்யரால் அவ்வாறு செயல்பட்டிருக்க முடியாது என்பதை ஒப்புக்கொண்டார்கள்.

ஆக, மேன்மைகளை எதிரிகளும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காகக்கூட சோதனைகள் வருகின்றன.

ஈமான் (நம்பிக்கை) முன்னேற்றமடைய வேண்டும்; உறுதிபெற வேண்டும் என்பதற்காக சோதனைகள் வருகின்றன; நன்கு பயிற்சி பெற வேண்டும் என்பதற்காக மேன்மேலும் சோதனைகள் வருகின்றன.

கொல்லன் இரும்பை சம்மட்டியால் அடிக்கும்போதுதான் அவன் செய்ய விரும்பும் பொருள் உருவாகிறது. ஆனால் இன்னொருவர் சம்மட்டியால் ஒன்றை அடித்தால் அது சரியாக விழாது. நான் சிறுவனாக இருக்கும்போது உளியால் மரக்கட்டையை அடிப்பது எளிது எனக்கருதி உளியால் மரக்கட்டையை அடித்தேன். ஆனால் என் கையில் அடித்துவிட்டேன். பயிற்சி இல்லாத வேலையைச் செய்தால் மனிதன் ஒன்றும் செய்ய முடியாது.

ராணுவ வீரர்களை பல மைல்கள் ஓட வைக்கின்றார்கள். அவர்களுக்கு கஷ்டத்தைக் கொடுக்க வேண்டும் என்பதற்காக அல்ல. மாறாக ஓடுவதற்கான பயிற்சி அவர்களுக்குக் கிடைக்க வேண்டும்; அவர்கள் உறுதியானவர்களாக ஆக வேண்டும் என்பதற்காகத்தான். அப்போது தான் ஓட வேண்டிய சந்தர்ப்பத்தில்





அவர்களால் நன்கு விரைவாக ஓடமுடியும். இதைப்போலவே மனிதனுடைய ஒழுக்கத்தை மேலானதும் உறுதி வாய்ந்ததுமாக ஆக்குவதற்கு பயிற்சியளிக்க வேண்டும் என்பதற்காக இறைவன் சோதனைகளில் ஆழ்த்துகிறான்.

உதாரணமாக, ஒருவர் ஏசினால் பொறுமையாக அதனை சகித்துக் கொண்டு, தானும் ஏசாமல் இருப்பது ஒரு சிறந்த பண்பாகும். ஆனால் இந்தப் பண்பு எவ்வாறு உருவாக முடியும்? ஒருவர் இன்னொருவரை ஏசும்போதுதானே இரண்டாமவர் பொறுமையை கற்றுக் கொள்ள முடியும்? (முதலாமவர்) ஏசாமலிருந்தால் (இரண்டாமவருக்கு) பொறுமை என்ற பண்பை வெளிப்படுத்துவதற்கு வாய்ப்பே இருக்காது. மேலும் எப்போதாவது வாய்ப்பு கிடைத்தால் அதனை முழுமையாக மனிதனால் செயல்படுத்த முடியாமற் போய்விடும். ஆகவே ஒழுக்கம் மேம்படுவதற்கு சோதனைகள் வருவதும், அப்படிச் சோதனைகள் வரும்போது பொறுமை செய்யும் பழக்கத்தை ஏற்படுத்துவதும் மிக அவசியம். அப்போதுதான் நம்பிக்கை முழுமை பெறும்.

எவர் மூலமாக ஏசப்படுகிறதோ அவர் அப்படி ஏசுமாறு வற்புறுத்தபடுவாரே என எவராது கூறலாம். ஆனால் அது சரியல்ல. ஒரு நல்லவர் மூலமாகவோ, சான்றோர் மூலமாகவோ ஏசப்படுவதில்லை; ஏசுமாறு எந்த தீயவரும் வற்புறுத்தப்படுவது மில்லை. ஒரு நல்லவருக்கு எதிராக தீயவர் ஏற்கனவே இருக்கிறார். அந்தத் தீயவர் மற்றவர்களோடு தீய முறையில் நடந்து கொள்வதைப் போன்றே அந்த நல்லவரோடும் நடந்து கொள்கிறார். மற்றபடி அவர் வற்புறுத்தப்படுவதில்லை.

**மூன்றாம் படித்தரம்**

இறை நியதியின் மீது நம்பிக்கை கொள்வதால் கிடைக்கும் மூன்றாம் படித்தரம் 'தவக்குல்' (எனும் இறைவன் மீதுள்ள அசாதாரண நம்பிக்கை) ஆகும். இது உயர்ந்த படித்தரமாகும்.

தவக்குல் என்றால் தன்னைத்தானே அர்ப்பணித்தல் என்று பொருள். தவக்குல் இருவகைப்படும்.

(1) முதல்வகை, சிறப்பு விதி வெளிப்படுத்தத் தேவையில்லாதது. அதாவது மனிதன் செயல்பாட்டில் ஈடுபட்டு

காரணிகளையும் பயன்படுத்துகிறான். அதே சமயத்தில் தனது உழைப்பை இறைவன் வீணாக்கி விடமாட்டான். அவன் அசாதாரணமான நிகழ்ச்சிகளி லிருந்து அதனைப் பாதுகாப்பான் என்று மனிதன் நம்புகிறான். இந்த மாதிரியான தவக்குலில் அசாதாரணமான சம்பவங்களிலிருந்து இறைவனே அதனைப் பாதுகாத்து, தானாகவே அடியாரின் வேலைச் செய்து கொடுப்பான்; நமது செயல்களுக்கான நல்ல விளைவுகளை இறைவன் ஏற்படுத்துவான் என மனிதன் நம்புகின்ற அதே வேளையில் காரணிகளை அம்மனிதன் கைவிட்டு விடுவதில்லை.

(2) 'தவக்குல்' என்பதன் இரண்டாம் வகை, மனிதன் காரணிகளைக் கையாள்வதையும் விட்டுவிடுகிறான். ஆனால் இவ்வகை 'தவக்குல்' மார்க்க சட்ட விஷயங்களில் மேற்கொள்ள முடியாது. அதாவது, தொழுகை, நோன்பு, ஸக்காத், ஹஜ் ஆகியவற்றை இறைவனிடம் ஒப்படைத்து விட்டு, இறைவன் சொன்னால் நான் தொழுவேன் அல்லது நோன்பு வைப்பேன் என்றால் அது சரியாகாது. மாறாக இவ்வகை 'தவக்குல்' பௌதீக செயல்களில் மட்டுமே இருக்க முடியும். ஷரீஅத் விஷயங்களில் அப்படிக் கூறுபவர் பொய் கூறுகிறார். இவர்கள் இபாஹத் வகையைச் சார்ந்தவர்கள். (கடமைகளைச் செய்யக் கூடிய ஆற்றலோ, பாவங்களிலிருந்து விலகி நிற்கும் சக்தியோ மனிதன் வாய்க்கப் பெற்றிருக்கவில்லை என்று நம்பும் ஒரு பிரிவினர்) அவர்கள் ஷரீஅத்தின் கட்டளைகளிலிருந்து தப்பிப்பதற்காக பலவிதமான சாக்குப் போக்குகளை தேடுகின்றனர். ஷரீஅத்தின் கட்டளைகளின்படி செயலாற்றுவது என்பது தண்ணீரைக் கடந்து செல்வதற்காக கப்பலில் ஏறுவதைப் போன்றதாகும். எனவே எப்பொழுதும் கப்பலிலேயே மனிதன் உட்கார்ந்திருப்பது அறிவுடைமையா? கரை வந்த பிறகும் - இறைவன் கிடைத்த பிறகும் ஏன் கப்பலிலேயே உட்கார்ந்திருக்க வேண்டும்? என்று அவர்கள் கூறுகின்றனர்.

ஆனால் இந்த உதாரணம் ஏற்புடையதல்ல. ஏனெனில் இறைவனை அடைவதென்பது ஒரு எல்லைக்குட்பட்ட நிலையில் இருப்பதல்ல - அங்கு சென்றதும் இறங்கிவிடுவதற்கு. அல்லாஹ் எல்லையற்றவன். அவனை அடைவதற்கு பல படித்தரங்கள்





உள்ளன. எனவே இடையில் இறங்கிவிடுவதற்கு உதாரணம், ஒரு கடலைச் சுற்றி ஆயிரக்கணக்கான - இலட்சக்கணக்கான நகரங்கள் இருக்கும்போது ஒருவர் அவ்வனைத்து நகரத்தையும் சுற்றிப் பார்க்கச் செய்வது போன்றதாகும். முதல் நகரத்திற்குச் சென்றதும் கப்பலிலிருந்து இறங்கி விடுவார் என்றால் அவர் முட்டாளாவார். ஏனெனில் அவர் இறங்கிவிட்டால் அடுத்துள்ள ஊர்களுக்கு செல்வது அவரால் முடியாததாகி விடும்.

சுருக்கமாக, தவக்குல் என்பது இறைவன் எப்படி விரும்புகிறானோ அப்படியே அவன் தனது 'சிறப்பு விதி'யினை தம் அடியாருக்காக வெளிப்படுத்தட்டும் எனக் கருதி தன்னை இறைவனுக்காக அர்ப்பணித்துவிடும் நிலையைக் குறிக்கும். ஆயினும் இந்த 'தவக்குல்' உலக செயல்களில் ஏற்படுமேயன்றி மார்க்க செயல்களில் ஏற்படாது.

எனவே நான் எனது தொழுகையை இறைவனிடம் ஒப்படைத்து விட்டேன். ஆகவே நான் இனி தொழ வேண்டியதில்லை என்று ஒருவர் கூறினால் அவர் முஸ்லிமாக இருக்க முடியாது; மாறாக அவர் காஃபிராகி விடுவார். ஏனெனில் தொழுகையைப் பற்றி ஒருமுறை இறைவன் கட்டளையிட்டு விட்டான். அப்படிப்பட்ட தொழுகையை எவர் இறைவனிடம் ஒப்படைப்பாரோ அவர் தொழுகையை திருடுபவர் ஆவார். எந்த கட்டளை ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மூலமாக ஒருவருக்கு கிடைத்திருக்கிறதோ அது அவருக்குப் போதுமானதில்லையா என்ன? அவர் இன்னொரு கட்டளையை எதிர்பாக்க வேண்டுமா?

ஆகுமானதாக இருக்கும் வேலைகளில் தான் 'தவக்குல்' செய்ய முடியும். குறிப்பிட்ட கட்டளை இறங்கப் பெற்றிராத விஷயங்களில்தான் 'தவக்குல்' செய்ய முடியும். மேலும் அவை உலக பௌதீக சம்பந்தமான விஷயங்களேயாகும். அந்த உலக விஷயங்களை ஓர் அடியார் இறைவனிடம் ஒப்படைக்கின்றார் என்றால், இறைவா! நான் மார்க்க வேலைகளைச் செய்வதற்காகவும், உன்னை வணங்குவதற்காகவும், உன் வழியில் முயற்சி செய்வதற்காகவும் என் வேலையை நீ செய்து கொடுப்பாயாக என இறைவனிடம் அவர் வேண்டுகிறார் என்றே அதற்குப் பொருள்.

எனவே இந்த 'தவக்குல்' உண்மையில் இறைவணக்கத்தை நிலைநாட்டுவதற்காக வாகும். ஆனால் தக்தீர் இல்லை எனில் இந்த நிலை ஒருபோதும் ஏற்பட முடியாது. ஏனென்றால் இறைவன் எதுவுமே செய்யப் போவதில்லை என்றால் அவனிடம் தன் வேலைகளை ஒப்படைத்துவிடுதல் என்பதற்கு என்ன பொருள்? ஒருவருக்கு இறை நியதியின் மீது ஈமான் இல்லையென்றால், அவருக்கும் இந்த அந்தஸ்து கிடைக்க முடியாது. காரணம், இறைவனும் மனிதனுடைய வேலைகளில் சம்பந்தப்பட முடியும் என்பதை அவர் நம்பாதபோது தம் வேலைகளை இறைவனிடம் எவ்வாறு அவர் ஒப்படைப்பார்?

ஆகவே 'தவக்குல்' என்ற அந்தஸ்தைப் பெற வேண்டுமானால் 'இறைநியதி'யின் மீது ஈமான் கொள்வது மிக அவசியம். மனிதன் இந்த அந்தஸ்தைப் பெறும்போது இறைவணக்கத்திலும் மார்க்க சேவையிலும் எத்தகைய ஓர் இன்பத்தைப் பெறுகிறார் என்றால் இதன் விளைவாக அவர் தமது உலக விஷயங்களில் செய்யும் உழைப்புகளைக் குறைத்துக் கொள்கிறார். மேலும் தமது உலக சம்பந்தமான வேலைகளை அல்லாஹ்விடம் ஒப்படைத்து விடுகிறார். இறைவன் அவற்றை முழுமைப்படுத்தி விடுவான் என்றும் மார்க்க சேவைக்காக தமக்கு அவகாசம் கொடுப்பான் என்றும் உளமாற நம்புகிறார்.

'தவக்குல்' என்ற இந்தப் படித்தரத்தை விட மேலான படித்தரம் ஒன்று இருக்கிறது. அதில் வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களைப் பெறுவதற்காக உழைப்பதை மனிதன் முற்றிலும் விட்டு விடுகிறான். தன் முழு நேரத்தையும் அல்லாஹ்வுக்காக அர்ப்பணித்து விடுகிறான். உலகத்திலிருந்து தன்னை முழுவதுமாக விடுவித்துக் கொள்கிறான்.

இதற்கும் மேலான இன்னொரு படித்தரம் இருக்கிறது. அப்போது மனிதன் சில நேரத்தில் அத்தியாவசியப் பொருள்களை உபயோகிப்பதையும் விட்டு விடுகின்றான். அதற்காக, அவன் பசியால் மரணித்துப் போகிறான் என்பதல்ல; மாறாக இறைவ னுடைய கட்டளையின்றி எந்த வேலையும் செய்வதில்லை. ஹஸ்ரத் அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) அவர்கள் எழுதுகின்றார்கள்:





எனக்கு சில நேரங்களில் எப்படிப்பட்ட நிலைமை ஏற்படுகிறதென்றால் அப்போது இறைவன், 'என்மீது ஆணையாக! நீ சாப்பிடு' என்று கூறாத வரை நான் சாப்பிடுவதில்லை. இறைவன் சொன்னால்தான் சாப்பிடுவேன். என் மீது ஆணையாக ! நீர் குடிப்பீராக என்று இறைவன் கூறாத வரை நான் குடிப்பதில்லை. அதே போல 'என்மீது ஆணையாக! நீர் ஆடை அணிவீராக' என்று இறைவன் கூறாத வரை நான் அணிவதில்லை.

ஆயிரம் தீனார் விலை மதிப்புள்ள ஆடையை அணிவது ஹஸ்ரத் அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) அவர்களின் வழக்கமாக இருந்தது. மக்கள் ஆட்சேபித்தபோது, இந்த அறிவற்றவர்கள் அறிய மாட்டார்கள். இவ்வளவு விலையுயர்ந்த ஆடையையே அணிய வேண்டும் என இறைவன் என்னிடம் கூறும்போது நான் என்ன செய்வேன்? என்று அவர்கள் கூறினார்கள்.

இப்படிப்பட்டவர்களை இறைவனே பராமரிக்கின்றான். மேலும் இந்த நிலைக்குப் பெயர்தான் ஃபனா (தன்னை இறைவனிடம் மாய்த்துக் கொள்ளுதல்) என்பதாகும். இன்றைய மூடர்கள் சான்றோர்களிடமிருந்து கேட்டு இதுவும் 'ஒரு அந்தஸ்து' தான் என்பதை அறிவார்கள். ஆனால் அது எப்படிப்பட்டது என்பதை அவர்கள் அறியமாட்டார்கள்.

இந்த அந்தஸ்தினை எட்டியவர்களுக்கு உதாரணம் சாராயம் குடித்துவிட்டு முற்றிலும் சுயநிலையை இழந்தவரைப் போன்றதாகும். இதேபோன்று இறைவனிடம் தன்னை மாய்த்துக் கொண்டவர்களும் இறையன்பில் மெய்மறந்து உலகத்தைப் பற்றியே மறந்து விட்டவர்களாகி விடுகின் றனர். அவர்களின் நிலை இவ்வாறாகிவிடும் போது இறைவன் அவர்களுடைய எல்லா வேலைகளையும் செய்து விடுகிறான்.

போதையேறிய இந்நிலையில் அவ்லியா வுல்லாஹ் தாம் விரும்பியதைச் சொல்லி விடுகின்றார்கள் என்றும், ஷரீஅத்திற்கு மாற்றமான விஷயங்களும் அவர்களின் வாயிலிருந்து வெளியேறி விடுகின்றன என்றும் அறிவிலிகள் கூறுகின்றனர். இன்னும் சிலரோ தானே உருவாக்கிய இந்தக் கருத்தை சாக்காகக் கொண்டு, மிர்ஸா சாஹிபும் இந்த அந்தஸ்தை எட்டிய பிறகு ஏமாற்றமடைந்து விட்டார் என்றும், ஷரீஅத்திற்கு மாற்றமான சில வாதங்களைச் செய்து

விட்டார்; ஆகையால் அவரது அந்த வாதங்கள் ஏற்கத்தக்கவையல்ல என்றும் கூறி விடுகின்றனர். ஆனால் இறைவனால் ஊட்டப்பட்ட மது உலக விஷயங்களிலிருந்து அவர்களை விடுவிக்கும் அதே சமயத்தில் மூளையை பாதிப்பதில்லை; மார்க்க விஷயங்களில் மயக்குவதுமில்லை என்பதை அந்த அறிவிலிகள் அறிய மாட்டார்கள்.

இந்த மதுவைக் குடிப்பதால் மார்க்கக் கண் மேலும் கூர்மையான பார்வையைப் பெறுகிறது. மேலும் இந்த மதுவைக் குடிப்பதனால் இறையச்சமும் பரிசுத்தமும் அதிகமாகி விடுகிறது. ஆனால் இந்த மக்கள் இறையன்பு எனும் மதுவை கோதுமை மற்றும் வெல்லத்தை அழுகவைத்து தயாரிக்கும் அந்த மதுவோடு ஒப்பிட்டுப் பார்க்கிறார்கள்.

ஆனால் உண்மையில் இறைவனால் ஊட்டப்படும் மது என்பதன் பொருள், அவன் தன் சான்றோர்களுக்குப் பருகக் கொடுக்கும் அன்பு எனும் பானம் ஆகும். அந்த ‘பானம்’ ஒருபுறம் அடியாரின் உள்ளத்திலிருந்து உலக எண்ணங்களை அழித்து விடுகிறதென்றால் மறுபுறம் அல்லாஹ் மற்றும் அவனது மகிமையின் அச்சை அடியாரின் உள்ளத்தில் மேலும் ஆழமாகப் பதித்து விடுகிறது.

**நான்காம் படித்தரம்**

இறை நியதியின் மீது கொண்ட நம்பிக்கை இதன் பிறகு மனிதனை மேலும் மேலோங்கச் செய்கிறது. அதனால் மனிதன் அப்து (இறையடியான்) என்ற அந்தஸ்தைப் பெறுகிறான். இந்த படித்தரத்திற்கு உதாரணம், பல பாட்டல்கள் மதுவை உட்கொண்டும் போதை வராத ஒரு பழக்கப்பட்ட குடிகாரனின் நிலை போன்றதாகும்.

இந்தப் படித்தரத்தை எட்டிய மனிதனும் அல்லாஹ்வின் மீதுள்ள அன்பு எனும் மதுவை அதிகமாகக் குடித்து அதற்கு அடிமையாகி விடுகிறார். அப்போது அவர் சென்ற படித்தரத்தில் கிடைத்த நிலையை விட மேலான நிலையினை அடைகின்றார். இப்போது அவர் தான் முன்னர் பெற்றிருந்த ‘ஃபனா’ (இறைவனிடம் தன்னை மாய்த்துக் கொள்ளுதல்) என்ற நிலையையும் கடந்து





விடுகிறார். மெய்மறந்த நிலை மாறிவிடுகிறது. உணர்வுகள் கூர்மையடைகின்றன. அவர் தன்னை ‘உபூதிய்யத்’ (தன்னை இறைவனுக்குரிய அடியாராக முற்றிலுமாக மாற்றிக் கொள்ளுதல்) என்ற நிலையில் நிற்பதாகக் காண்கிறார்.

அதாவது, அவர் அல்லாஹ்வின் மகிமையை இன்னொரு கோணத்தில் பார்க்கத் துவங்கி விடுகிறார். பிறகு, தான் அடிமை என்பதன் பக்கம் அவரது கவனம் திரும்புகிறது. மேலும் அவர் தம் மனதிடம் நான் இறை அடியார் ஆவேன்; அடிமை ஆவேன். என்னுடைய எஜமானனுக்கு என்னை நானே அர்ப்பணித்து (விட்டு எதுவும் செய்யாமல்) இருப்பதற்கு எனக்கு என்ன உரிமை இருக்கிறது? என நினைத்து அவர் மீண்டும் ‘தத்பீர்’ (முயற்சி) எனும் பொது நியதியின் பக்கம் திரும்புகிறார்.

கடந்த படித்தரம் பொது நியதி (தக்தீரே ஆம்) என்பதிலிருந்து ஆரம்பித்தது போன்றே, ஆன்மீக இயக்கத்தின் இந்த புதிய படித்தரமும் ஆரம்பிக்கிறது என்றாலும், இந்த படித்தரத்தை எட்டியதும் அடியார் இறைவனால் ஏற்படுத்தப்பட்ட காரணிகளை மிகவும் மரியாதையுடன் கையாளத் துவங்கி விடுகிறார். ஏனெனில் அவற்றை அவர் அல்லாஹ்வின் புறமிருந்து வந்தவையாகக் கருதுகிறார். மேலும் தேவைப்படும் எல்லா சந்தர்ப்பங்களிலும் நன்றாகக் காரணிகளைப் பயன்படுத்துகின்றார்.

மிர்ஸா சாஹிப் முயற்சிகளை மேற்கொண்டார் என அறிவற்றவர்கள் இன்று ஆட்சேபணை செய்கின்றனர். ஆனால் எந்த மனிதர் ‘உபூதிய்யத்’ (தன்னை இறைவனுக்குரிய அடியாராக முற்றிலுமாக மாற்றிக் கொள்ளுதல்) என்ற நிலையை எட்டி விடுகிறாரோ அல்லது அந்நிலையிலிருந்து மேலும் முன்னேறிச் செல்கிறாரோ அப்போது அவர் காரணிகளைப் பயன்படுத்துவது சில நேரத்தில் கட்டாயமாகி விடுகிறது. அவர் காரணிகளைப் பயன்படுத்தவில்லை என்றால் அது பாவமாகும்.

எனவே ‘உபூதிய்யத்’ (தன்னை முழுக்க முழுக்க இறைடியாராக மாற்றிக் கொள்ளுதல்) என்ற படித்தரத்தை எட்டிய மனிதன் எல்லா வேலைகளையும் செய்கிறான். மேலும் ஒவ்வொன்றிற்கும் நிர்ணயிக்கப்பட்ட காரணிகளையும் உபயோகப்படுத்திக் கொள்கிறான்.

சில நேரத்தில் அவனுக்கு எத்தகைய நிலை ஏற்படுகிறதென்றால் எந்த துஆக்களை வேண்டுவது அவனுக்கு கடமையாக்கப்பட்டுள்ளதோ அந்த துஆக்களைத் தவிர தானாகவே தனக்காக வேறு எந்த துஆவும் செய்வதில்லை. ஏனெனில் துஆச் செய்வது சிறப்பு விதியை வெளிப்படுத்துமாறு வேண்டுவதாகும். அவ்வாறு தன் எஜமானனை அழைப்பதற்கு ஓர் அடியாருக்கு என்ன உரிமையிருக்கிறது என்று அவர் கருதத் துவங்கி விடுகிறார்.

ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களை எதிரிகள் நெருப்பில் எறிந்த போது அவருக்கும் இதே நிலைதான் ஏற்பட்டது. அப்போது ஜிப்ராயீல் தோன்றி, 'இறைவனிடமிருந்து ஏதும் உதவி கேட்க வேண்டுமென்றால் என்னிடம் கூறுங்கள்' எனக் கேட்டபோது, 'நீர் ஏன் கூறவேண்டும்? இறைவனுக்குத் தெரியும்' என்று இப்ராஹீம் கூறினார்கள். அப்போது இறைவனிடம் நீங்களே நேரடியாகக் கேளுங்கள் என ஜிப்ரீல் கூற, அவன் பார்த்துக் கொண்டிருக்கிறான்; நான் அவனிடம் என்ன சொல்வது? என இப்ராஹீம் (அலை) பதிலளித்தார்கள்.

ஆக, இந்த படித்தரத்தை எட்டிய பிறகு மனிதன் 'உபூதிய்யத்' தில் மாய்ந்து, அல்லாஹ்வைப் பற்றிய திகில் உணர்வையும் மதிப்பையும் கண்டுணர்ந்து அவனை அந்த அடியார் ஏறெடுத்தும் பார்க்க முடிவதில்லை. ஏனெனில் அந்த நேரத்தில் அவரது கண்கள் அனைத்தையும் விட்டகன்று ஊபூதிய்யத்திலேயே நிலைகுத்தி நிற்கிறது.

**ஐந்தாம் படித்தரம்**

இதற்குப் பிறகு அடியார் மேலும் முன்னேறிச் செல்கின்றார். தான் ஓர் இறையடியார் என்பதை உணர்ந்து, 'தக்தீரே ஆம்' என்ற பொதுவான இயற்கை விதியை மேன்மேலும் பயன்படுத்தி தன் நஃப்ஸின் (மனதின்) பலவீனங்களை நன்றாகத் தெரிந்து கொள்கிறார். இறைவன் 'சிறப்பு விதி'யை எதற்காக ஏற்படுத்தியிருக்கிறான்? அவனுடைய அடியாராயிருக்கும் என்னிடம் பல பலவீனங்கள் இருக்கின்றன என்பதற்காகத் தானே? ஆகவே அந்த 'சிறப்பு விதி'யால் பயன் பெறாதிருப்பதும் ஒருவகையில் நன்றி கேடாகும் என்று எண்ணத் துவங்கி





விடுகிறார். உடனே அவர் சிறப்பு விதியால் பயன் பெற ஆரம்பித்து விடுகிறார். அதாவது துஆவின் மூலம் உதவி கேட்கிறார். இந்த படித்தரம் துஆச் செய்யும் படித்தரம் என்றழைக்கப்படுகிறது. எனவே அவர் இந்த நிலையை எட்டியதும் இறைவனிடம் துஆச் செய்ய ஆரம்பித்து விடுகிறார்.

எப்போதாவது தடைகள் வந்தால், இந்த மாதிரியான சந்தர்ப்பங்களில் 'சிறப்பு விதி'யின் மூலமாக பயன்பெற வேண்டும் என்பதற்காகத்தானே இறைவன் 'சிறப்பு விதியை' உருவாக்கியிருக்கிறான் என்று உணரத் துவங்கி விடுகிறார்.

அவருடைய உதாரணம், பழங்கள் நிறைந்த மரத்தின் கீழ் அமர்ந்திருக்கும் ஒருவரைப் போன்றதாகும். நீண்ட மூங்கில் கம்பு ஒன்றும் அவர் பக்கத்தில் இருக்கிறது; பசி எடுக்கும்போது மரத்திலிருந்து பழங்களைப் பறிப்பார். அதற்காக அவர் தாமே முயற்சி செய்கிறார் என்றாலும் மூங்கில் கம்பு அவருக்குக் கிடைத்து விடுகிறது.

இந்த நிலையை எய்திய மனிதன் உலகத்தை சீர்திருத்துவதற்காகவும், அதனை இறைவனின் பக்கம் கொண்டு வருவதற்காகவும் பாடுபடுகிறான். ஆனால் அதே சமயத்தில் அடிமையாயிருக்கும் என்னால் இந்த வேலைச் செய்ய முடியாது. எனவே, நம் எஜமானனுக்கே எழுத வேண்டும் என்று அறிகிறார். இதன்படி தேவை எனக் கருதும்போது அவர் தம் எஜமானனுக்கு எழுதுகிறார். அதாவது, இந்த வேலையில் எனக்கு உதவி செய்வாயாக என இறைவனிடம் துஆச் செய்கின்றார். இறைவனிடமிருந்து உதவியும் கிடைத்து விடுகிறது.

அந்த நேரத்தில் 'முயற்சி' என்பது அவர் பார்வையில் அற்பமாகி விடுகிறது. மேலும் அவர் தன்னை ஓர் எளிய அடிமையாகக் கருதுகிறார். அடிமை தன் எஜமானனின் உதவியின்றி எதுவும் செய்ய முடியாது என்பதையும் அவர் அறிந்து கொள்கிறார்.

மனிதன் இதற்குப் பிறகும் முன்னேறிச் செல்கிறான். ஆனால் மனிதன் எவ்வளவு முன்னேறிச் சென்றாலும் 'அப்து' (அடிமை) என்ற வட்டத்திற்குள்ளேயே இன்னும் பல்வேறு படித்தரங்களைச் சென்றடைகிறான். 'அப்து' (இறை அடிமை) என்ற வட்டத்திற்கு

மேலே எந்த படித்தரமும் இல்லை. எந்தவொரு மேலான படித்தரமும் 'அப்து' என்ற படித்தரத்தின் ஒரு கிளையேயாகும். இதைவிட்டு தனிப்பட்ட ஒன்றாக இருக்க முடியாது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைக் கூட இறைவன் 'அப்து' (அடிமை) என்றுதான் கூறுகிறான். ஆன்மீக முன்னேற்றத்தில் மிக உயர்ந்த பதவி 'அப்து' (இறையடிமை) ஆக இருப்பதுதான் என்பதில் ஷரீஅத்தின் ரகசியங்களை அறிந்த அறிஞர்கள் ஒன்றுபட்டிருக்கிறார்கள். இதையும் கடந்து 'இப்னுல்லாஹ்' (இறை மகன்) என்ற ஒரு பதவி உண்டு எனக் கூறுபவர்கள் பொய்யர்களே! மிகப் பெரிய பதவி 'உபூதிய்யத்' (தன்னை இறையடிமை எனக் கருதுதல்) என்பதுதான். துஆச் செய்தலும் இதே படித்தரத்தின் ஒரு உயர்ந்த கிளை தான்.

சுருக்கமாக துஆச் செய்யவேண்டும் என்ற நிலைக்கு மனிதன் எட்டியதும் தனக்கு ஏதாவது தடைகள் வந்தால் உடனே அவர் இறைவன் முன்னிலையில் வீழ்ந்து உதவி கோருகிறார். மேலும் அவனுடைய உதவியினால் அந்தத் தடையை அகற்றிவிடுகிறார்.

அஹ்ஸாப் போரில் ஒரு சம்பவம் நிகழ்ந்தது. நபித் தோழர்கள் அகழ் தோண்டிக் கொண்டிருந்த போது ஒரு கல் வெளிப்பட்டது. அதனை நபித் தோழர்கள் உடைக்க விரும்பினார்கள். ஆனால் அது உடையவில்லை. நபித்தோழர்கள் உடனே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் சென்றார்கள். நபித் தோழர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அடிமைகள் இல்லை யென்றாலும், இறைவன் அவர்களுக்கு வழங்கிய மேலான அந்தஸ்தைக் கருத்திற் கொண்டு அன்னாரின் தாசராக தாம் எண்ணப்படுவதில் நபித் தோழர்கள் பெருமை கொண்டார்கள். எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சென்று, 'நாங்கள் இப்போது என்ன செய்வது?' எனக் கேட்டார்கள்.

கோடாரியை என்னிடம் கொடுங்கள் என ஹஸ்ரத் நபி (ஸல்) வாங்கி கோடாரியால் ஓங்கி கல்லில் அடித்தார்கள். அப்போது அதிலிருந்து நெருப்பு தோன்றியதும் 'அல்லாஹு அக்பர்' எனக் கூறினார்கள். எல்லா நபித் தோழர்களும் 'அல்லாஹு அக்பர்' (அல்லாஹ் மிகப் பெரியவன்) எனக் கூறினார்கள். இரண்டாவது





முறை அடித்தபோது மீண்டும் நெருப்பு தோன்றியது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் 'அல்லாஹு அக்பர்' என்று கூறினார்கள். நபித்தோழர்களும் அல்லாஹு அக்பர் என்றனர். பிறகு மூன்றாவது முறை அடித்தபோது, மீண்டும் நெருப்பு தோன்றியது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அல்லாஹு அக்பர் என்று கூறினார்கள். நபித் தோழர்களும் அல்லாஹு அக்பர் எனக் கூறினர். மூன்றாவது முறை அடித்தபோது, கல் உடைந்து விட்டது.

அந்த சமயத்தில் நபித் தோழர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றித் தான் 'அல்லாஹு அக்பர்' என்று கூறிக் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) ஏன் அல்லாஹு அக்பர் என்று கூறுகிறார்கள் என்பது அவர்களுக்குத் தெரியாது. எனவே 'அல்லாஹு அக்பர்' என்று சொன்னதற்கு என்ன காரணம் என நபித் தோழர்கள் பின்னர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் வினவினார்கள். அதற்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், முதல் முறை தீப்பொறி தோன்றியபோது எனக்கு ஈரான் மன்னர் கிஸ்ரா மற்றும் ஹய்ராவின் கோட்டை காட்டப்பட்டது. மேலும் அவற்றை முஸ்லிம்கள் வெற்றி கொள்வார்கள் என அறிவிக்கப்பட்டது. இரண்டாம் முறை எனக்கு ஹுமைரின் கோட்டை காட்டப்பட்டது. மேலும் கய்ஸரின் இந்த ஆட்சியை முஸ்லிம்கள் கைப்பற்றுவார்கள் எனக் கூறப்பட்டது. மூன்றாம் முறை தீப்பொறியில் எனக்கு யமன் தேசத்துக் கோட்டை காட்டப்பட்டது. அந்த ஆட்சிகளை முஸ்லிம்கள் கைப்பற்றுவார்கள் என எனக்கு அறிவிக்கப்பட்டது என பதிலளித்தார்கள்.

சுருக்கமாக, ஓர் அடியாருக்கு ஒப்படைக்கப்பட்ட வேலையில் அவருக்கு தடையேதும் ஏற்பட்டால் அவர் தம் எஜமானரிடம் சென்று அவரிடமே உதவி கேட்பார். இதே போன்று 'உபூதிய்யத்' என்ற படித்தரத்தை எய்து விட்ட மனிதன் துஆச் செய்வதிலேயே குறிப்பாக மூழ்கியிருக்கிறார். மேலும் ஒவ்வொரு கஷ்ட நிலையிலும் இறைவனிடம் உதவி கோருகிறார். அவருடைய உதாரணம், தோட்டத்தில் இருந்து கொண்டு மூங்கில் கம்பினால், தான் விரும்பும் நேரத்தில் மரங்களை அசைத்து பழங்களை விழச் செய்யும் ஒருவரைப் போன்றதாகும்.

**ஆறாவது படித்தரம்**

இறை நியதியின்மீது கொண்டுள்ள நம்பிக்கை மேலும் வளர்ச்சியடையும்போது மனிதன் இந்த படித்தரத்தையும் கடந்து முன்னேறிச் செல்கிறான். துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படும் காட்சியைக் கண்டு இறைவனை மேலும் நெருங்க விரும்புகிறான். அதற்காக முயற்சியும் செய்கிறான். கடைசியில், அவன் முயற்சி செய்தாலும் முயற்சி செய்யாவிட்டாலும் அவனுக்காக அல்லாஹ்வின் நியதி வெளிப்படுகிறது.

அல்லாஹ்வுடன் அவருக்கு ஒருவகை பிணைப்பு ஏற்பட்டு விடுகிறது. இந்த படித்தரத்தைக் குறித்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறுவதாவது, அடியார் நஃபிலான வணக்கங்களின் மூலமாக அல்லாஹ்வை எந்த அளவுக்கு நெருங்கி விடுகிறார் என்றால் அவர்களைப் பற்றி இறைவன், ‘நான் அவர்கள் காதாகவும், கண்ணாகவும், கையாகவும், கால்களாக வும்ஆகிவிடுகிறேன்’ என்று கூறுகிறான்.

அதாவது அந்தப் படித்தரத்தை அடைந்த பிறகு அடியார் எந்த வேலையைச் செய்தாலும் அது அல்லாஹ்வின் வேலையேயாகும். அப்போது அவர் முற்றிலும் பரிசுத்தமாகிவிடுகிறார். இறைவ னுடைய கட்டளையின்றி எவரும் இந்த படித்தரத்தை அடைந்து விட்டதாக அறிவிக்க முடியாது.

இந்தப் படித்தரத்தில் நிலை கொண்டிருப்பது என்பது வேறு; இந்த படித்தரத்தின் நிலை எப்போதாவது ஏற்படுவது என்பது வேறு என்பதை நன்றாக நினைவில் கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு நம்பிக்கையாளரும் (முஃமின்) இறை அடியார் தான். அவர் ‘தவக்குல்’ செய்கிறார்; துஆச் செய்கிறார். ஆயினும் ஒவ்வொரு நம்பிக்கையாளருக்கும் இப்படிப்பட்ட நிலைமை ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஏற்படத்தான் செய்கிறது. அது ஓர் எல்லைக்குட்பட்ட நிலைமை ஆகும். ஆனால் இந்தப் படித்தரத்தில் நிலை கொண்டிருத்தல் என்றால் அதிக பட்ச நேரங்களில் மனிதன் அதில் நிலை பெற்றிருக்கிறான் என்பதாகும். அது ஒரு குறிப்பிட்ட காலத்தில் மட்டும் தோன்றி மறைவதில்லை.





இதற்குரிய உதாரணமாவது, ஒரு மனிதர் ஒருவருடைய வீட்டில் தங்கியிருக்கிறார். இன்னொருவர் சந்திப்பதற்காக சிறிது நேரத்தில் அந்த வீட்டிற்கு வந்து விட்டுப் போய்விடுகிறார். இவ்விருவருடைய அந்தஸ்தும் ஒரே மாதிரியானதல்ல.

அல்லாஹ் தமது அடியார்களின் ஆர்வத்தை அதிகரிப்பதற்காக சில நேரங்களில் மிக மேலான படித்தரங்களைச் சுற்றிக் காண்பிக்கிறான். ஆனால் சில அறிவற்றவர்கள் இந்த நிலைமையைக் கண்டு தவறுதலாக தற்பெருமை, கர்வம் கொள்ள ஆரம்பித்து விடுகின்றனர்.

இந்தப் படித்தரத்தை நபித் தோழர்கள் பெற்றார்கள். மேலும் இந்த நிலையைக் குறித்துத்தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் *இ∴மலூ மா ஷி∴த்தும்*’ (நீங்கள் விரும்பியதைச் செய்யுங்கள்) எனக் கூறினார்கள். அவர்கள் திருடினாலும் அது அவர்களுக்கு ஆகுமானதாகுமா? என அறிவற்றவர்கள் ஆட்சேபிக்கின்றனர். ஆனால் எவருக்கு இறைவன் கிடைத்து விட்டானோ அவரால் எப்படித் திருட முடியும்? என்பதை அவர்கள் அறிவதில்லை.

பாருங்கள், தட்டச்சு செய்ய பயிற்சி பெற்றவர்கள், கண்ணை மூடிக் கொண்டு தட்டச்சு செய்யும் அளவுக்கு பயிற்சி பெறுகிறார்கள். அதுபோலவே ஒரு விவசாயி குறிப்பிட்ட முறையில் பூமியில் விதை தூவுகிறார். பயிற்சி இல்லாதவர் அவ்வாறு விதையைத் தூவ முடியாது. அதேபோன்று ஒரு புக் பைண்டர் ஊசியை ஒரு குறிப்பிட்ட விதத்தில் குத்துகின்றார்.

இந்த வேலைகளில் பயிற்சி பெற்றவர்கள் தவறிழைப்பதில்லை. அதேபோன்று தக்வாவின் பாதைகளில் செல்லுவதற்கு மனிதன் பயிற்சி பெற்று, இறைவன் அவன் கண்ணாகவும், காதாகவும், கால்களாகவும், கைளாகவும் மாறிவிடும் அளவுக்கு மனிதன் முன்னேற்றமடைந்து விடும்போது அந்த மனிதனால் தவறு செய்ய முடியாது.

குருடர்கள் கூட தமது வீடுகளில் ஓடியாடிச் செல்வதைப் பார்க்கிறோம். எங்கள் வீட்டில் கண் பார்வையற்ற ஒரு பெண் இருந்தாள். பொருள்கள் இருக்கும் இடத்தில் சரியாக சென்று அந்தப்

பொருள்களை அவள் எடுத்து வருவாள். இந்த மாதிரியான குருடர்களைக் கண்டு சில அறிவிலிகள் அவர்கள் ஏமாற்றுகிறார்கள் எனக் கருதுகின்றனர். ஆனால் உண்மையில் அந்தக் கண் பார்வையற்றவர்கள் ஏமாற்றவில்லை. பயிற்சியினால் அவர்களுக்கு இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. மற்றப்படி அவர்கள் குருடர்கள் தான்.

கண் பார்வையற்றவரால் பயிற்சி பெற்று இந்த நிலைமையை எட்ட முடியும் என்றால், தம் கைகள் சரியான இடத்தில் செல்லவும், தவறிழைப்பதிலிருந்து பாதுகாக்கப்படவும் கூடிய நிலைமையை அறிவின் மூலமாக ஒருவர் பெற முடியாதா என்ன? அதுவும் குறிப்பாக இறைவன் அவருடைய கையாகவும் காலாகவும் ஆகிவிடும்போது அவ்வாறு நடப்பதில் எவ்வித வியப்பும் இல்லை.

இந்த படித்தரமும் இறை நியதியின் மீது நம்பிக்கை கொள்வதால் கிடைப்பதாகும். அவ்வாறல்லாமல் ‘இறை நியதி’ என்று ஒன்று இல்லாமலிருந்தால் மனிதன் சிறப்பு விதியின் மூலம் எவ்விதம் பலன் பெற முடியும்?

சுருங்கக் கூறின், சிறப்பு விதியை வெளிப்படுத்துவதற்கு ஒரு காரணம், மனிதன் இறைவனிடத்தில் ஒன்றி விடும் அளவுக்கு அவன் *‘உபூதிய்யத்’* என்ற படித்தரத்தை அடைய வேண்டும் என்பதுமாகும். அப்போது அவன் இறையடியனாக இருந்தபோதிலும் அல்லாஹ்வின் பண்புகளை வெளிப்படுத்தக் கூடியவனாக ஆகிவிடுகிறான். அது மட்டுமல்ல. இதற்கும் மேலே இன்னொரு படித்தரம் உண்டு. அந்தப் படித்தரத்தைக் கண்டு மனிதனின் கண்கள் வியக்கின்றன. அதுதான் *‘நுபுவ்வத்’* என்ற படித்தரம்.

இறைவன் ஒருவருடைய கை, கால், கண்ணாக மாறி விட்ட பிறகு இதற்கும் மேல் வேறு என்ன படித்தரம் இருக்க முடியும் என சிலர் கேட்கின்றனர். அவர்களின் நினைப்பு தவறாகும். இதற்கு மேலும் ஒரு படித்தரம் உண்டு. அதாவது, முதலில் இறைவன் அடியானின் கை, கால், காதாக ஆனான். அடுத்துள்ள படித்தரத்தில் அடியானின் கை, கால், காது ஆகியவை இறைவனுக்காக ஆகிவிடுகின்றன.





இந்த படித்தரத்தை அடைந்த பிறகுதான் மனிதன் உண்மையிலேயே தக்தீர் என்ற இறை நியதியின் உண்மை நிலையை முழுமையாக அறிய முடிகிறது. ஏனெனில் இந்த நிலையில் அவர் தக்தீரின் முழு வடிவமாக மாறிவிடுகிறார். தக்தீர் (இறை நியதி) தண்ணீர் என்றால், அந்த அடியார் அதனை ஓட வைக்கும் ஆறாக இருக்கிறார்.

இந்த நிலையை அடைந்த பின்னர் மனிதன் இறைவனுடைய இரகசியங்களில் கலந்து விடுகிறார். அடியாராக இருந்த போதிலும் அவரிடமிருந்து இறையடையாளங்கள் வெளிப்படுகின்றன. இதன் காரணமாகவே அறிவற்றவர்கள் அவரை இறைவன் எனக் கருதத் துவங்கி விடுகிறார்கள்.

இதற்கு முன்னால் அந்த அடியார் சிலநேரங்களில் இறைவனிடம் கேட்கக் கூடியவராக இருந்தார். ஆனால் இப்போதோ அவர் மீது ‘இறைநியதி’ மட்டுமே வெளிப்படுகின்றது. இந்த படித்தரத்தை அடைந்த மனிதன் செய்வதெல்லாம் இறைவன் செய்ய வைப்பது தான். எனவேதான் இறைவன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பற்றி,

مَا يَنْطِقُ عَنِ الْهَوٰىO إِنْ هُوَ إِلَّا وَحْيٌ يُوحٰىO ‘அவர் (தமது சொந்த) விருப்பத்தின்படி பேசவுமில்லை; இது (இறைவனிடமிருந்து) அறிவிக்கப் பெற்ற வஹியேயாகும்’ எனக் கூறுகிறான். (53:4-5)

இதேபோன்று, ‘வாருங்கள்! நாம் புதிய வானம், புதிய பூமியை, உருவாக்குவோம்!!’ என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறுவதாக ஹஸ்ரத் இமாம் மஹ்தி (அலை) ருஃயாவில் கண்டார்கள். இந்தச் சொற்கள் ஷிர்க் ஆகும் என அறிவற்றவர்கள் கூறுகின்றனர். ஆனால் உண்மை அதுவல்ல; இது ‘நுபுவ்வத்’ என்ற படித்தரத்தை சுட்டிக் காட்டுகிறது.

தமது முதல் படித்தரத்தின் பெயர் ‘கமர்’ (சந்திரன்) என்றும், இரண்டாம் படித்தரத்தின் பெயர் ‘ஷம்ஸ்’ (சூரியன்) என்றும் கூறினார்கள்.

அதாவது, இறைவன் மூலமாக மனிதனின் ஒளி வெளிப்படுவது முதல் படித்தரமாகும். மனிதன் மூலமாக இறைவனின் ஒளி வெளிப்படுவது இரண்டாம் படித்தரமாகும்.

*'யா ஷம்ஸு யா கமரு'* என்ற இல்ஹாமிற்கு (இறையறிவிப்புக்கு) இமாம் மஹ்தி (அலை) அவர்கள் அவ்வாறே பொருள் கொடுத்துள்ளார்கள். இதுதான் நுபுவ்வத் என்ற படித்தரமாகும். எவரை இறைவன் நுபுவ்வத் என்ற படித்தரத்தில் நியமிக்கிறானோ அவரைத் தவிர (அதாவது நபியைத் தவிர) வேறு எவருக்கும் அந்த படித்தரத்தைப் பற்றி முழு அறிவு கொடுக்கப்படவில்லை. இறைவனுடைய மகிமை, மகத்துவம் அந்த நபிமார்களின் மூலமாகத்தான் வெளிப்படு கிறது. மேலும் அவர்கள் இறைவனைப் பார்க்கும் ஜன்னலாக இருக்கிறார்கள். அதன் வழியாக இறைவனைப் பார்க்க விரும்பாதவர்கள் இறைவனைப் பார்க்க முடியாது.

## ஏழாம் படித்தரம்

இறைவனைக் காணாதவர்கள் அந்த இறையடியாரையும் காணவியலாது என்பதே முதல் நிலையாக - அதாவது ஆறாம் படித்தரமாக இருந்தது. இரண்டாம் நிலை - அதாவது ஏழாம் படித்தரமாவது, எவர் இந்த படித்தரத்தில் இருப்பவரைக் காண்பதில்லையோ அவர் இறைவனைக் காண முடியாது என்பதாகும்.

அதாவது, ஆறாம் படித்தரத்திலாவது, அந்த ஆறாம் படித்தரத்தில் இருப்பவரை ஒருவர் அடையாளம் கண்டு கொள்ளாமல் இருக்கும் அதே சமயத்தில் இறைவனை அடையாளம் கண்டு கொள்ள வாய்ப்பிருக்கிறது. ஆனால் ஏழாம் படித்தரம் எப்படிப் பட்டதென்றால், அதில் இருப்பவரை எவர் அடையாளம் கண்டு கொள்வதில்லையோ அவர் இறைவனையும், அடையாளம் கண்டு கொள்ள முடியாது. அதற்குப் பெயர்தான் 'குஃப்ர்'. ஏனெனில் அவர்கள் இறைவனுடைய கை, கால்களாக ஆகிவிடும்போது அவர்கள் எங்கு செல்வார்களோ அங்கு இறைவனும் செல்வான். எனவே அவர்களைக் காணாதவர்கள் இறைவனையும் காண முடியாது என்பது உறுதி. மேலும் இறைவனைக் காண முடியாதவர் காஃபிர் ஆவார்.





இந்த படித்தரம் ஒரு குறிப்பிட்ட நேரத்திற்கு மக்களுக்கும் கிடைக்கக் கூடும். ஆயினும், நபிமார்களைத் தவிர வேறு எவருக்கும் நிரந்தரமாகக் கிடைப்பதில்லை. மேலும் இது எல்லாவற்றையும் விட மிக மேலான படித்தரமாகும். அப்போது வெளிப்படும் இறை நியதியைப் புரிந்து கொள்வது எல்லா மனிதராலும் முடியாத ஒன்றாகும். எனினும் அறிவுள்ளவர்கள் புரிந்து கொள்கின்றனர்.

இந்த படித்தரத்தை எய்திய மனிதனிடம் இறை குணங்கள் ஏற்பட்டு விடுகின்றன. அந்த நேரம்தான் தக்தீர் (இறை நியதி) உண்மையான முறையில் வெளிப்படுகிறது. முஹம்மது (ஸல்) அவர்கள், இறைவனிடமே மறைவாக இருந்தார்கள். எனவே, அவர்களின் ஒவ்வொரு செயலும் உண்மையில் இறைவன் செயலாகவே இருந்தது.

ஆனால் நீங்கள் எதைச் செய்கின்றீர்களோ அது இறைவன் செய்ய வைப்பதல்ல. காரணம், நீங்கள் இறைவனுடைய கைகள் அல்ல. ஒருவர் தீய பார்வை பார்க்கிறார் என்றால் அது அவராகப் பார்ப்பதுதான்; திருடுகிறார் என்றால் அது அவராகவே திருடுகிறார். இறைவன் அவரை அப்படிச் செய்ய வைப்பதில்லை.

எவர்கள் இறைவனுடைய குணங்களை வெளிப்படுத்தக் கூடியவர்களாக இருக்கிறார்களோ - இறைவன் எவர்களுடைய கையாகவும், காலாகவும், கண்ணாகவும், காதாகவும் ஆகிவிடுகின்றானோ அல்லது எவர்கள் இறைவனுடைய கையாகவும், காலாகவும், கண்ணாகவும் காதாகவும் ஆகிவிடுகின்றனரோ அவர்களிடமிருந்தே இறைவன் செயல்களைச் செய்ய வைக்கிறான். அப்படிப்பட்டவர்களுக்கு மனிதன் என்ற முறையில் ஏற்பட்ட தவறுகளை எவராவது ஆட்சேபிப்பார்களாயின் அவர்கள் தண்டிக்கப்படுவார்கள். இதுவே மனிதனோடு தொடர்புள்ள தக்தீரே இலாஹி (இறை நியதி) க்கு இருக்கும் எல்லைக் கோடாகும்.

இறை நியதியின் மீது நம்பிக்கை கொள்வதன் பயன்கள் பற்றியும் தற்போது நான் கூறிவிட்டேன். இந்த விவகாரம் ஆன்மீகத்தை முழுமைப்படுத்த எந்த அளவு தேவையானது என்பதை இவற்றிலிருந்து தெரிந்து கொள்ளலாம். இதன்

காரணமாகவே இறை நியதியை நம்புவதை ஈமானின் (நம்பிக்கையின்) ஒரு நிபந்தனையாக இறைவன் குறிப்பிட்டுள்ளான்.

இதுதான் மக்கள் ஏமாற்றத்திற்குள்ளாகி யிருக்கும் விதி பற்றிய விவகாரமாகும். நாம் இதனை உரிய முறையில் தெரிந்து கொள்வதற்கும், அதிலிருந்து பயன் பெறுவதற்குமுள்ள நல்வாய்ப்பை இறைவன் நமக்குத் தந்தருள்வானாக! ஆமீன்!!

✸✸✸✸✸